தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஆறாவது சட்டமன்றப் பேரவையின் நான்காவது கூட்டத்தொடர்

1979, மார்ச் 24, 26, 27. 28 மற்றும் 30 ஆம் நாட்கள்.

(தொகுதி XXVIII—எண்கள் 1–5.)

உள்ளடக்கம்

	பக்கங்கள்
தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் அமைச்சர்களின் பேரவைச் செயலர்களும்	i—vi
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்	vii
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பெற்ற) பெயர்ப்பட்டியல் (தொகுதிகள் உட்பட)	viii—xvi
அரசினர் சட்ட முன்வடிவுகள்—	
நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு, 1979	71
நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு, 1979	71—72
வன (திருத்த) சட்ட முன்வடிவு, 1979	460
அரசினர் தனித் தீர்மானம்—	
விற்பனை வரி (மேல் வரி) சட்ட விஸ்தரிப்பு குறித்து	499—505
அரசினர் தீர்மானங்கள்—	
பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசியது குறித்து நடவடிக்கை	488
விதி 22-ஐ 29—3—1979-க்கு தளர்த்துவது குறித்து	489

பக்கங்கள்

அறிக்கைகள் அளித்தல்—

பொது கணக்குக் குழுவின் அறிக்கை 745

பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கை 495

மதிப்பீட்டுக் குழுவின் 8-வது அறிக்கை 499

வழக்கறிஞர்கள் போராட்டம் குறித்து 408—420

அறிவிப்புகள்—

பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசப் பெற்றது குறித்து 488

மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி குறித்து 25, 495

உரிமைப் பிரச்சினைகள்—

உணவுத் துறை அமைச்சர் மீது 203—209, 398—407

உள்ளாட்சி துறை அமைச்சர் மீது 194—197

காவல் துறை இன்ஸ்பெக்டர்-ஜெனரல் மீது 710—716

கிராமத் தொழில்கள் அமைச்சர்மீது 707—710

தொழிலாளர் நலத் துறை அமைச்சர் மீது 192—194, 420—427

மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மீது 198—103

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—

என்.ஜி.ஓ. வினரின் உண்ணாவிரதம் குறித்து 210—223

திருப்பரங்குன்றம் சம்பவம் குறித்து அரசு அறிவித்த முடிவுகளை வழக்கறிஞர்கள் நிராகரித்துள்ளது குறித்து 716—740

திருவண்ணாமலை அருகில் துரிஞ்சாபுரத்தில் தடியடிப் பிரயோகம் செய்யப்பெற்று விவசாயிகள் கைது செய்யப் பெற்றுள்ளது குறித்து 431—441

REPORTING SECTION

பக்கங்கள்

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—தொடர்ச்சி

தூத்துக்குடி துறைமுகத்திலுள்ள கூட்டுறவுப் பண்டகசாலை குறித்து 441—445

பொள்ளாச்சி குவாலிட்டி மில் வேலை நிறுத்தம் குறித்து 56—64

மாயவரத்தில் பல அரசியல் கட்சியைச் சார்ந்தவர்கள் கைது செய்யப்படுவது குறித்து 427—431

மின்வெட்டு காரணமாக விவசாயிகள் பாதிக்கப்பெறுவது குறித்து 445—454

வடாற்காடு தி. அ. மங்கலத்தில் மின் துண்டிப்பு வேண்டாம் என முறையிட்ட விவசாயிகள் கைது செய்யப்பெறுவது குறித்து 454—455

வழக்கறிஞர்களது வேலை நிறுத்தம் காரணமாக நீதித் துறை இயங்காமல் இருப்பது குறித்து 29—56

ஒழுங்குப் பிரச்னைகள்—

குறுகிய கால வினா எடுத்துக் கொள்ளப் பெறாதது குறித்து 159—162

பாளையங்கோட்டையில் நடைபெற்ற கால்நடை கண்காட்சி விழா குறித்து 746

கவன ஈர்ப்புகள்—

கிருஷ்ணகிரி நீர்த்தேக்க பாசன நிலங்களுக்கு அதிகமாக தண்ணீர்த் தீர்வை விதிக்கப்பெறுவது குறித்து 455—458

கிழக்கு முகவை மாவட்டம் நெட்டூர் கண்மாய் பழுதடைந்திருப்பதனால் விவசாயம் பாதிக்கப்பெற்றுள்ளது குறித்து 69—70

திருவில்லிபுத்தூர் நகரில் தாழ்த்தப்பட்ட மக்களின் குடிசைகள் தீ விபத்துக்குள்ளானது குறித்து 223—229

நீலகிரி மாவட்டம், இதளார் பகுதியில் ஏற்பட்ட வகுப்பு கலவரம் குறித்து 64—68

நீலகிரி மாவட்டம், கூக்கல் துறையில் உள்ள அரசு ஆஸ்பத்திரி டாக்டர்களுக்குச் சம்பளம் வழங்கப்படாமையும் அங்கே மருந்துகள் இல்லாமையும் குறித்து 459—460

பக்கங்கள்

கவன ஈர்ப்புகள்—தொடர்ச்சி

பல்லடம் தாலுக்காவில் பல விவசாயிகள்மீது பைப்லைன் வரி, மேல்வரி என அதிகமாக வரிகள் போட்டு வசூலிப்பது குறித்து 224—227

பூச்சிக்கொல்லி மருந்தினை விவசாயிகளுக்கு வழங்குவது குறித்து 740—743

முகவை மாவட்டத்தில் கைத்தறி கூட்டுறவு சங்கங்களுக்கு கூட்டுறவு நூற்பாலைகள் நூல் கொடுக்க மறுப்பது குறித்து 743—745

தகவல் கோரல்—

அவையில் எடுத்துக்கொள்ளப் பெற வேண்டியவைகள் குறித்து 496—499

அறிவிப்பு கொடுத்துள்ள உரிமைப் பிரச்னை குறித்து 72

உரிமைப் பிரச்னை எடுத்துக்கொள்வது குறித்து 28—29

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து 223—224, 229—230

முதலமைச்சர்மீது கொடுத்துள்ள உரிமைப் பிரச்சினையை எடுத்துக்கொள்வது குறித்து 197—198

முன்னாள் கல்வி அமைச்சர் திரு. நெடுஞ்செழியன்மீது எழுப்பப்பட்ட பிரச்னை குறித்து 209—210

பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுத 123
279
489—490
607
794—795

வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு—

கோரிக்கை எண் 17—கல்வி 230—278
230—232
233, 264
567—584

கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவு

கோரிக்கை எண் 23—கூட்டுறவு

கோரிக்கை எண் 57—பல்வகை மூலதனச் செலவு 72—123

பக்கங்கள்

வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

கோரிக்கை எண் 20—வேளாண்மை

கோரிக்கை எண் 36—பாசனம்

கோரிக்கை எண் 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு

கோரிக்கை எண் 52—பாசனம் குறித்த மூலதனச் செலவு

வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள் ... 1—27

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையை (Index)

பயன்படுத்தும் முறை

இவ்வட்டவணை அகர வரிசைப்படி அமைக்கப் பெறுகிறது. முக்கியத் தலைப்புகள் ஓரங்களிலிருந்து அச்சடிக்கப் பெறுகின்றன; துணைத் தலைப்புகள் முக்கியத் தலைப்புகளிலிருந்து சற்று உள்ளடங்க அசசிடப் பெறுகின்றன.

வினாக்கள் தவிர, மற்ற நடவடிக்கைகளைக் குறித்த பல்வேறு குறிப்புகள் யாவும், பெயர்கள் உள்ளிட்ட வெவ்வேறு முக்கியத் தலைப்பின்கீழ் சம்பந்தப் பட்ட பொருள் விளக்கத்தினை அடுத்து அடைப்புகளுக்குள் அச்சிடப்பெறு கின்றன. எடுத்துக்காட்டாக, (தீ) என்று போடுவது தீர்மானத்தையும், (க.ஈ.) என்று போடுவது கவன ஈர்ப்பையும், (ஒ.தீ.) என்று போடுவது ஒத்திவைப்புத் தீர்மானத்தையும், (அ) என்று போடுவது அறிக்கையையும் குறிக்கும்.

இத்தகைய குறிப்புகள் எதுவும் பெற்றிராத பொருள் விளக்கம் வினாக் களைச் சுட்டும் எனினும், சட்ட முன்வடிவுகள், நிதி அலுவல்களைப் பொறுத்த வரையில் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கமே அவற்றைத் தெளிவாக்கும்.

எல்லாச் சட்ட முன்வடிவுகளும் "சட்ட முன்வடிவு" என்ற முக்கியத் தலைப்பின்கீழ் அகர வரிசைப்படி முறைப்படுத்தப் பெறுகின்றன.

குழுக்கள், மன்றங்கள், வாரியங்கள், மாநகராட்சிகள் போன்ற அமைப் புக்கள் அனைத்தும், 'குழு(க்கள்)', 'மன்றம்(கள்)', 'மாநகராட்சி(கள்)' ஆகிய முக்கியத் தலைப்புகளின்கீழ் தொகுக்கப் பெறுகின்றன.

. பணிகள், கல்லூரிகள், மாநாடுகள், துறைமுகங்கள், ஆலயங்கள் குறித்து பல்வேறு விரிந்த பொருள்களும், அத்தகைய முக்கியத் தலைப்புகளின் கீழேயே அகர வரிசைப்படி காட்டப் பெறுகின்றன.

பேரவைமுன் வைக்கப் பெறுகின்ற ஏடுகளில் பக்கங்கள் 'ஏடுகள்' என்ற தலைப்பின் கீழ் கொடுக்கப்பெறுகின்றன.

தலைவர் மற்றும் துணைத் தலைவர், மாற்றுத் தலைவர் ஆகியோரின் தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும், "தலைவர்" என்ற தலைப்பின்கீழ் வரிசைப்படுத்தப் பெறுகின்றன.

அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையில் பயன்படுத்தப் பெற்றுள்ள சில சுருக்கங்களின் விளக்கப் பட்டியல் ஒன்று கீழே கொடுக்கப் பெற்றுள்ளது :—

அ. .. அறிக்கை

அறிவி. .. அறிவிப்பு

அ.வி. .. அரைமணி நேர விவாதம்

கு.வி. .. குறுகிய கால விவாதம்

பொ.வி. .. பொது விவாதம்

ஆ.உ. .. ஆளுநர் உரை

உ.பி. .. உரிமைப் பிரச்சினை

ஒ.பி. .. ஒழுங்குப் பிரச்சினை

க.ஈ. .. கவன ஈர்ப்பு

க.ஈ.அ. .. கவன ஈர்ப்பு அறிக்கை

ச.அ.நி. .. சட்ட முன்வடிவின் அறிமுக நிலை

ச.ஆ.நி. .. சட்ட முன்வடிவின் ஆய்வு நிலை—

இந்நிலையில்,

(1) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பெறும் தீர்மானம்,

(2) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டுமென்ற திருத்தம்,

(3) சுற்றுக்கு அனுப்பப்பெறுவதற்கான திருத்தம்.

(4) ஆய்வு/கூட்டாய்வுக் குழு அறிவித்தபடி ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கான தீர்மானம்,

(5) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவிற்கு மீண்டும் அனுப்புவதற்கான திருத்தம் முதலியன.

ச.பிரி.ஆ. .. சட்ட முன்வடிவு — பிரிவு வாரியாக ஆய்தல்

ச.பே. .. சட்டமன்றப் பேரவை

ச.மே. .. சட்டமன்ற மேலவை

த.கோ. .. தகவல் கோரல்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

த.வி.	..	தன்னிலை விளக்கம்
தீ.	..	தீர்மானம்
உ.தீ.	..	உரிமைத் தீர்மானம்
ஒ.தீ.	..	ஒத்திவைப்புத் தீர்மானம்
த.தீ.	..	தனித் தீர்மானம்
து.மா.கோ.	..	துணை மானியக் கோரிக்கை
மி.மா.கோ.	..	மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கை
பே.அ.	..	பேரவையின் அலுவல்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

தமிழ்நாடு ஆளுநர்

திரு. பிரபுதாஸ் பட்வாரி

அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: (முதலமைச்சர்) பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், பயண இசைவுச் சீட்டு, மதுவிலக்கு, இலஞ்ச ஒழிப்பு, பெருந் தொழில்கள், சுரங்கம்-கனிவளம்.

2. திரு. கி. மனோகரன்: (நிதி அமைச்சர்) நிதி, திட்டம், சட்டமன்றம், பொதுப்பணி (கட்டிடங்கள் மற்றும் பொதுப்பணித் துறை (நிறுவனம்) சம்பந்தப்பட்ட அலுவல்கள்.

3. திரு. ச. இராமச்சந்திரன்: (மின் துறை அமைச்சர்) மின்சாரம், இரும்பு-எஃகுக் கட்டுப்பாடு.

4. திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (கூட்டுறவுத் துறை அமைச்சர்) கூட்டுறவு, ஆவணப் பதிவுத் துறையும்.

5. திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (வருவாய்த் துறை அமைச்சர்) வருவாய், வணிக வரிகள், ஆயத் துறை.

6 திரு. க. உரா. எட்மண்ட்: (உணவுத் துறை அமைச்சர்) உணவு, மீன்வளம், இளைஞர் அணி, பிற்பட்ட வகுப்பினர், தேர்தல்கள், முன்னாள் இராணுவத்தினர், விலைவாசிக் கட்டுப்பாடு.

7. திரு. இராம. வீரப்பன்: (செய்தி, அறநிலையத் துறை அமைச்சர்) செய்தி, விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத்துறை, சிங்கோனா உட்பட வனங்கள்.

8. திரு. க. நாராயணசாமி முதலியார்: (சட்ட அமைச்சர்) சட்டம் நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள், அளவைகள் பற்றி சட்டம், இயற்றல், கடன் கொடுத்தல் சட்டம் இயற்றல் சீட்டுநிதிப்பற்றி சட்டம் இயற்றல், கம்பெனிகள் பதிவு.

9. திரு. செ. அரங்கநாயகம்: (கல்வி அமைச்சர்), தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி, வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

10. திரு. கா. காளிமுத்து : (உள்ளாட்சித் துறை அமைச்சர்) நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் நிவாரணம், பூமிதானம் கிராமதானம்.

11. திரு. எஸ். இராகவானந்தம் : (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) தொழிலாளர், வீட்டுவசதி, குடிசைமாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகரஅமைப்பு, இட வசதிக் கட்டுப்பாடு.

12. திரு. பெ. சௌந்தரபாண்டியன் : (அரிசன நலத் துறை அமைச்சர்) அரிசன நலம், எழுதுபொருள், அச்சுத் துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதம் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர்.

13. திரு. சி. பொன்னையன் : (போக்குவரத்துத்துறை அமைச்சர்) போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், நெடுஞ்சாலைகள், துறை முகங்கள்.

14. திரு. ப. குழந்தைவேலு : (வேளாண்மை நீர்ப் பாசனத் துறை அமைச்சர்) வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு, அக்ரோ பொறியியல் பிரிவு, வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், பாசனத் திட்டங்கள் (சிறு பாசனம் உள்ளிட்டது). வேளாண்மை பொறியியல்.

15. திரு. கா. இராசா முகமது : (ஊரகத் தொழில் துறை அமைச்சர்) கிராம குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பால், பால் பெருக்குத் திட்டம், வஃபு.

16. திரு. ஆர். சௌந்திரராஜன் : (மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்) மக்கள் நல்வாழ்வுத்துறை.

17. செல்வி பி. டி. சரஸ்வதி : (சமூக நலத்துறைஅமைச்சர்) மகளிர், குழந்தைகள் நலம்உள்ளிட்ட சமூகநலம், கால் நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

18. திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் : (கைத்தறி நெசவுத் துறை அமைச்சர்) கைத்தறி, கதர், நெசவாலைகள், நூல்.

அமைச்சர்களின் பேரவைச் செயலர்கள்

1. திரு. எம். வின்சென்ட்: நிதி அமைச்சரின் பேரவைச் செயலர்.

2. திரு. ஆனூர் ஜெகதீசன்: கூட்டுறவுத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.

3. திரு. பி. முசிரிபுத்தன்: வருவாய்த் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.

4. திரு. ஐசரி வேலன்: செய்தி, அறநிலையத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.

5. திரு. எம். ஏ. ஜெயவேலு: சட்ட அமைச்சரின் பேரவைச் செயலர்.

6. திரு. ஆ. வெள்ளைச்சாமி: கல்வி அமைச்சரின் பேரவைச் செயலர்.

7. திரு. ப. கோ. கிட்டு: போக்குவரத்துத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.

8. திரு. இரா. அருணாசலம்: மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

Governor of Tamil Nadu.

Thiru PRABHUDAS PATWARI

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. HON. THIRU M. G. RAMACHANDRAN (*Chief Minister*)—Public, General Administration, Indian Administrative Service Officers, District Revenue Officers, Deputy Collectors, Police, Passport, Prohibition, Prevention of Corruption, Large scale Industries, Mines and Minerals.

2. HON. THIRU K. MANOHARAN (*Minister for Finance*)—Finance, Planning, Legislature and Public Works (Buildings).

3. HON. THIRU S. RAMACHANDRAN (*Minister for Electricity*)—Electricity, Iron and Steel Control.

4. HON. THIRU K. A. KRISHNASWAMI (*Minister for Co-operation*)—Co-operation, Registration.

5. HON. THIRU S. D. SOMASUNDARAM (*Minister for Revenue*)—Revenue, Commercial Taxes and Excise.

6. HON. THIRU G. R. EDMUND (*Minister for food*)—Food, Fisheries, Youth Service Corps, Backward Classes, Elections, Ex-Servicemen and Price Control.

7. HON. THIRU R. M. VEERAPPAN (*Minister for Information and Hindu Religious Endowments*)—Information and Publicity, Film Technology, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forests and Cinchona.

8. HON. THIRU K. NARAYANASWAMI MUDALIAR (*Minister for Law*)—Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Legislation on Chits and Registration of Companies.

9. HON. THIRU C. ARANGANAYAGAM (*Minister for Education*)—Education including Technical Education, Official Language and Employment and Training.

10. HON. THIRU K. KALIMUTHU (*Minister for Local Administration*)—Municipal Administration, Community Development, Panchayats, Panchayats Unions, Rural indebtedness and Bhoodan and Gramdan.

11. Hon. Thiru S. RAGAVANANDAM (*Minister for Labour*)—Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water-Supply and Drainage Board, Town Planning, Accommodation Control.

12. Hon. Thiru P. SOUNDARAPANDIAN (*Minister for Harijan Welfare*)—Harijan Welfare, Stationery and Printing, Government Press, Newsprint Control, Hill Tribes and Bonded Labour.

13. Hon. Thiru C. PONNAIYAN (*Minister for Transport*)—Transport, Motor Vehicles Acts, Highways and Ports.

14. Hon. Thiru P. KOLANDAIVELU (*Minister for Agriculture and Irrigation*)—Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing, Agro-Service, Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Agro-Engineering.

15. Hon. Thiru K. RAJA MOHAMMED (*Minister for Rural Industries*)—Rural Industries including village, cottage and small industries, Milk and Dairy Development and Waqfs.

16. Hon. Thiru THIRUCHI R. SOUNDARARAJAN (*Minister for Health*)—Health.

17. Hon. Selvi P. T. SARASWATHI (*Minister for Social Welfare*)—Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggar Homes, Orphanages, Indians—Overseas, Refugees and Evacuees; Correctional Administration.

18. Hon. Thirumathi SUBBULAKSHMI JAGADEESAN (*Minister for Handlooms*)—Handlooms, Khadi, Textiles and Yarn.

TRUTH ALONE TRIUMPHS

PARLIAMENTARY SECRETARIES TO THE CABINET MINISTERS.

1. THIRU M. VINCENT—Parliamentary Secretary to Minister for Finance.

2. THIRU ANNOOR JAGADEESAN—Parliamentary Secretary to Minister for Co-operation.

3. THIRU P. MUSIRIPUTHAN—Parliamentary Secretary to Minister for Revenue.

4. THIRU ISARI VELAN—Parliamentary Secretary to Minister for Information and Hindu Religious Endowments.

5. THIRU M. A. JAYAVELU—Parliamentary Secretary to Minister for Law.

6. THIRU A. VELLAISAMY—Parliamentary Secretary to Minister for Education.

7. THIRU P. G. KITTU—Parliamentary Secretary to Minister for Transport.

8. THIRU R. ARUNACHALAM—Parliamentary Secretary to Minister for Health.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

பேரவைத் தலைவர்.

மாண்புமிகு திரு. முனு ஆதி.

பேரவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு, பி.ஏ., பி.எல்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. எஸ். ஜே. இராமசாமி
2. திரு. பி.எச். பாண்டியன்
3. திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா.
4. திரு. சோ. பாலகிருஷ்ணன்.
5. திரு. ரா. உமாநாத்.

சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி. எல்.,

துணைச் செயலாளர்கள்.

திரு. த இராதாகிருஷ்ணன்

திரு. கே. பாலகுரு, பி.ஏ.

குழு அலுவலர்.

திரு. ச. பாஷ்யம், பி. ஏ. (ஆனர்ஸ்)

சார்புச் செயலாளர்கள்.

திரு. வி. சீதாராமன், பி.காம்.

திரு. பி. எம். பத்மனுபன் நம்பியார், பி. ஏ.,

திரு. பெ. பள்ளிகொண்டபெருமாள், பி.ஏ., பி. எல்.

திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்.

திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.

திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம்.

திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி. ஏ. (எஸ்டேட் அலுவலர்.

தலைமை நிருபர்.

திரு. மா. சந்திரசேகரன்.

விவாதப் பதிப்பாளர்,

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி. லிட்.

12-2-1979 அன்று அறிவிக்கப்பெற்றது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பெற்ற) பெயர்ப் பட்டியல். (தொகுதிகள் உள்பட.)

தொடர் எண்ணும்	உறுப்பினர்கள் பெயரும்.	தொகுதி.
	(1)	*(2)*
1	அண்ணாமலை, திரு. எம். ..	அரூர் (செ.வ.).
2	அப்துல் ரசாக், திரு. கே. எம்.	ஆலந்தூர்.
3	அப்துல் லத்தீப், திரு. கி. ..	கடலூர்.
4	அப்புனு கவுண்டர், திரு. கா.	பென்னகரம்.
5	அம்பிகாபதி, திரு. மு. ..	மன்னார்குடி.
6	அமிர்தராஜ், திரு. இரா. ..	திருச்செந்தூர்.
7	அய்யாச்சாமி, திரு. ரா. ..	தாராபுரம் (செ.வ.)
8	அர்ச்சுனன், திரு. வீ.	ஆரணி.
9	அரங்கசாமி, திரு. க. ..	குன்னூர் (செ.வ.)
10	அரங்கநாதன், திரு. அ. க. ..	வேலூர்.
11	அரங்கநாதன், திரு. மு. ..	திருவல்லிக்கேணி, சென்னை.
12	அரங்கநாயகம், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்).	கோயம்புத்தூர்-மேற்கு.
13	அருணாசலம், திரு. இரா. (அமைச்சரின் பேரவைச் செயலர்.)	நாமக்கல் (செ.வ.).
14	அழகர்சாமி, திரு. சோ. ..	கோவில்பட்டி.
15	அன்பழகன், திரு. க. ..	புரசைவாக்கம், சென்னை.
16	அன்பழகன், திரு. தி. ..	நாட்ராம்பள்ளி.
17	ஆண்டி அம்பலம், திரு. மெ. ..	நத்தம்.
18	ஆதீசுவாமி, திரு. இரா. ..	குளச்சல்.
19	ஆறுமுகம், திரு. இல. ..	திருநாவலூர்.
20	ஆறுமுகம், திரு. எச். ஜி. ..	பர்கூர்.
21	ஆறுமுகம், திரு. சி.	மதுராந்தகம்.
22	ஆறுமுகம், திரு. த.	அரியலூர்.
23	ஆறுமுகம், திரு. சேலம் மு. ..	சேலம்-2.
24	இராசமாணிக்கம், திரு. இரெ.	குத்தாலம்.
25	இராசரத்தினம், திரு, து. ..	பூந்தமல்லி.
26	இராதா, திரு. எஸ். ஆர். ..	கும்பகோணம்.
27	இராமச்சந்திர ரெட்டி, திரு. .. என்.	ஹோசூர்.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)		தொகுதி (2)
28	இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. எம். ஜி. (முதலமைச்சர்.)	அருப்புக்கோட்டை.
29	இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். ஆர்.	சாத்தூர்.
30	இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்).	பண்ருட்டி.
31	இராமச்சந்திரன், திரு. செஞ்சி ந.	செஞ்சி.
32	இராமசாமி, திரு. எஸ். வி.	பெரம்பலூர் (செ.வ.).
33	இராமசாமி, திரு. எஸ்.ஜே. ..	சோளிங்கர்.
34	இராமசாமி, திரு. கே. என்.கே.	கோபிசெட்டிப்பாளையம்.
35	இராமசாமி, திரு. கொ.	சிவகாசி.
36	இராமசாமி, திரு. த. ..	இராமநாதபுரம்.
37	இராமசாமி, திரு. து. ..	வெள்ளக்கோவில்.
38	இராமலிங்கம், திரு. செ. ..	திருவிடைமருதூர்,
39	இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா.	தல்லி.
40	இராஜாராம் ரெட்டி, திரு. டி. ஆர்.	திண்டிவனம்.
41	இளங்கோவன், திரு. கோ. ..	திருவையாறு.
42	ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி.	அம்பாசமுத்திரம்.
43	உக்கிரபாண்டியன், திரு. க.	பரமக்குடி.
44	உச்சி, திரு. கே.	கூடலூர்.
45	உத்திராபதி, திரு. பொ. ..	திருத்துறைப்பூண்டி (செ.வ.).
46	உமாநாத், திரு. ரா.	நாகப்பட்டினம்.
47	உய்யக்கொண்டான், திரு. கே. ஜே.	ஆற்காடு.
48	எட்மண்ட், மாண்புமிகு திரு. க. உரொ. (அமைச்சர்).	திருநெல்வேலி.
49	எத்ராஜ், திரு. கி.	அச்சரபாக்கம் (செ.வ.).
50	ஏகாம்பர ரெட்டி, திரு. ..	பள்ளிப்பட்டு.
51	ஐசரி வேலன், திரு. (அமைச்சரின் பேரவைச் செயலர்.)	டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர், சென்னை.
52	கண்ணன், திரு. ம.	கண்டமங்கலம் (செ.வ.).

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)		தொகுதி. (2)
53	கணேசன், திரு. இ. ..	எடப்பாடி.
54	கணேசன்; திரு. எஸ். ..	பூம்புகார்.
55	கந்தசாமி, திரு. கா. வே. ..	கிணத்துக்கடவு.
56	கந்தசாமி, திரு. கே. ..	ஆண்டிப்பட்டி.
57	கபாலி, திரு, டி. கே. ..	மயிலாப்பூர்-சென்னை.
58	கரியமாணிக்கம் அம்பலம், திரு. கரு. ராம.	திருவாடானை.
59	கருணாநிதி, திரு. மு. ..	அண்ணாநகர், சென்னை.
60	கருணாநிதி, திரு. தாழை மு.	திருவாரூர் (செ. வ.)
61	கருணாமூர்த்தி, திரு. வெ. ..	ஜெயங்கொண்டான்.
62	கருப்பசாமி பாண்டியன் திரு.வீ.	ஆலங்குளம்.
63	கலியமூர்த்தி திரு. துரை. ..	சிதம்பரம்.
64	காத்தமுத்து, திரு. கி. பெ.	தொட்டியம்.
65	காளிமுத்து, மாண்புமிகு திரு கா. (அமைச்சர்)	திருப்பரங்குன்றம்.
66	காளியப்பன், திரு. இரா.	ஏற்காடு (ஆ. வா.)
67	காளியப்பன், திரு. பொ. ..	காரைக்குடி.
68	கிட்டப்பா, திரு. என். ..	மாயூரம்.
69	கிட்டு, திரு. ப. கோ. (அமைச்சரின் பேரவைச் செயலர்)	பல்லடம்.
70	கிருஷ்ணன், திரு. செ. ..	கன்னியாகுமரி.
71	கிருஷ்ணன், திரு. நா. ..	ஸ்ரீபெரும்புதூர் (செ. வ.)
72	கிருஷ்ணன், திரு. பி. ..	விழுப்புரம்.
73	கிருஷ்ணன், திரு. பி. எம். ..	பாலக்கோடு.
74	கிருஷ்ணன், திரு. ரா ..	வாசுதேவநல்லூர் (செ.வ..
75	குப்புசாமி, திரு. என். ..	மொரப்பூர்.
76	குருசாமி, திரு. ப.	ஆண்டியூர் (செ. வ.)
77	குழந்தைவேலு, மாண்புமிகு திரு. ப. (அமைச்சர்).	உடுமலைப்பேட்டை.
78	கோதண்டராமன், திரு. வி. கே.	குடியாத்தம்.
79	கோபாலன், திரு. போ. ..	உதகமண்டலம்.
80	கோவிந்தராசன், திரு. சி.	நெல்லிக்குப்பம்.
81	கோவிந்தன், புலவர் ..	கா.செய்யாறு.
82	கோவேந்தன், திரு. மு. ரெ.	பேராவூரணி.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.		தொகுதி.
	(1)	(2)
83	சங்கரய்யா, திரு. என். ..	மதுரை கிழக்கு,
84	சண்முகம், திரு. ஆர். ..	திருத்தணி.
85	சண்முகம், திரு. கா. ந. ..	லால்குடி.
86	சண்முகம், திரு. கூத்தக்குடி ச.	திருப்பத்தூர்.
87	சண்முகம், திரு. ப. உ. ..	திருவண்ணாமலை.
88	சதாசிவம், திரு. செ. ..	அரவக்குறிச்சி.
89	சந்திரசேகரன், திரு. ஆ. ..	கம்பம்.
90	சந்திரன், திரு. ப. ..	பெரணமல்லூர்.
91	சந்திரன் ஜெயபால், திரு. இரா. எ.	தியாகராய நகர், சென்னை.
92	சமரசம், டாக்டர், கே. ..	காவேரிப்பட்டிணம்.
93	சரஸ்வதி, மாண்புமிகு செல்வி பி. டி. (அமைச்சர்).	திருமங்கலம்.
94	சவுந்திரராஜன், திரு. ரெ. வீ.	பாபனாசம்
95	சாதிக்பாட்சா, திரு. எஸ். ஜே.	ஆயிரம்விளக்கு, சென்னை.
96	சாது செல்வராஜ், திரு. கோ.	ஸ்ரீவைகுண்டம்.
97	சாமிக்கண்ணு, திரு. தா. ..	செங்கம் (செ. வ.)
98	சிகாமணி, திரு. பொ. ..	திருவொற்றியூர்.
99	சிவசாமி, திரு. செ.	இளையாங்குடி
100	சிவபெருமாள், திரு. மு. ..	ஓமலூர்.
101	சின்னசாமி, திரு. வ. ..	சேந்தமங்கலம் (ஆ.வா.)
102	சின்னசாமி, திரு. வி. கொ. ..	பவானிசாகர்.
103	சின்னையா, திரு. வீ. ..	குளத்தூர் (செ.வ.)
104	சின்னராசு, திரு. க. இரா. ..	கிருஷ்ணகிரி.
105	சீனிவாச ரெட்டியார், திரு. போ. எ.	குளித்தலை.
106	சுந்தரம், திரு. ப.	திருப்பத்தூர்.
107	சுந்தரம், திரு. மு.	ரிஷிவந்தியம்.
108	சுந்தரராஜ், திரு. நா. ..	திருமயம்.
109	சுந்தரராஜன், திரு, மு. ..	விருதுநகர்.
110	சுப்பராயன், திரு. என். ..	பனைமரத்துப்பட்டி.
111	சுப்பிரமணியம், திரு. ஆ. சி. ..	கடலாடி.
112	சுப்பிரமணியம், திரு. கே. ஜே.	போளூர்.
113	சுப்பிரமணியம், திரு. டி. ..	ஆண்டிமடம்.

தொடர் எண்	உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதி (2)
114	சுப்பிரமணியம், பாக்கூர், திரு. சு. .	உத்திரமேரூர்.
115	சுப்பிரமணியன், திரு. ஓ. ..	சிவகங்கை.
116	சுப்பிரமணியன், திரு. மா. ..	சின்னசேலம்.
117	சுப்பிரமணியன், திரு. வ. மு.	மானாமதுரை (செ.வ.)
118	சுப்ரவேலு, திரு. கா. ..	சீர்காழி (செ.வ.)
119	சுப்பு, திரு. க.	வில்லிவாக்கம்.
120	சுப்புலட்சுமி ஜெகதீசன், மாண்புமிகு திருமதி (அமைச்சர்).	மொடக்குறிச்சி.
121	சுப்பையா, திரு. ச. ..	சங்கரநயினார் கோவில் (செ.வ.)
122	சுவாமிதாஸ், திரு. அ. ..	பத்மநாபபுரம்.
123	செங்கோட்டையன், திரு. கு. அ.	சத்தியமங்கலம்.
124	செங்கோடன், திரு. கா. ..	கபிலமலை.
125	செல்லப்பா, திரு. அ. ..	வலங்கைமான் (செ.வ.)
126	செல்வராசன், திரு. அ. ..	துறைமுகம், சென்னை.
127	செல்வராஜ், திரு. சீனி ..	சமயநல்லூர் (செ.வ.)
128	செல்வராஜ், திரு. மு. ..	குறிஞ்சிப்பாடி.
129	சொக்கலிங்கம், திரு. கெ. ..	திருப்போரூர் (செ.வ.)
130	சோமசுந்தரம், திரு. ஓ. ப. ..	பொள்ளாச்சி.
131	சௌந்தரபாண்டியன், மாண்புமிகு திரு. பெ. (அமைச்சர்).	கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
132	சௌந்திரராஜன், திரு. கே.	திருச்சிராப்பள்ளி-2.
133	சௌந்திரராஜன், மாண்புமிகு திரு. திருச்சி. ஆர். (அமைச்சர்)	ஸ்ரீரங்கம்.
134	சௌந்திரராஜன், திரு. மு. ரா.	பவானி.
135	ஞானசிகாமணி, திரு. தே. ..	விளவங்கோடு.
136	தங்கவேல், திரு. ர.ச. ..	வால்பாறை (செ.வ.)
137	தங்கவேலு கவுண்டர், திரு. பொ.	மேலமலையனூர்.
138	தண்டபாணி, திரு. ரா. க. சு.	காங்கேயம்.
139	தமிழரசன், திரு. இ. ..	பேரணாம்பட்டு (செ.வ.)

தொடர் எண்	உறுப்பினர்கள் பெயரும். (1)	தொகுதி. (2)
140	தனசேகரன், திரு. ந. ..	தூத்துக்குடி.
141	தனபால், திரு. ப. ..	சங்கரி (செ.வ.)
142	தனுஷ்கோடி, திரு. கோ. ..	ராஜபாளையம் (செ.வ.)
143	தாமரைக்கனி, திரு. இரா. ..	ஸ்ரீவில்லிபுத்தூர்.
144	திருநாவுக்கரசு, மாண்புமிகு திரு. எஸ். (பேரவைத் துணைத்தலைவர்).	அறந்தாங்கி.
145	திருவேங்கடம், திரு. பெ. சு.	கலசப்பாக்கம்.
146	துரை கோவிந்தராசன். திரு. (அரசாங்கத் தலைமைக் கொரடா).	திருவோணம்.
147	துரைசாமி, திரு. ப.	ராசிபுரம்.
148	துரை முத்துசாமி, திரு. ..	சங்கரபுரம்.
149	துரை முருகன், திரு. ..	இராணிப்பேட்டை.
150	துரைராஜ், திரு. சு. ம. ..	பொன்னேரி (செ வ.)
151	துலுக்காணம், திரு. வ. ..	உளுந்தூர்பேட்டை (செ.வ.)
152	தைலப்பன், திரு. டி. எம். ..	ஒரத்தநாடு.
153	நடராசன், திரு. ஆர். ..	பேரூர்.
154	நடராசன், திரு. எஸ். ..	தஞ்சாவூர்.
155	நல்லதம்பி, திரு. தீ. சு. ..	பார்க்டவுன், சென்னை.
156	நாச்சிமுத்து, திரு. க. ..	பொங்கலூர்.
157	நாச்சிமுத்து கவுண்டர், திரு. கே. பி.	மேட்டூர்.
158	நாராயணன், திரு. ரா. ..	தாரமங்கலம்.
159	பட்டாபிராமன், திரு. செ. ..	திருவள்ளூர்.
160	பண்ணை சேதுராம், திரு. கே.	பெரியகுளம்.
161	பரமசிவம், திரு. மொ. ..	வானூர் (செ.வ.).
162	பரமசிவன், திரு. ஏ. எம். ..	மேலூர்.
163	பழனிசாமி, திரு. சு. ..	மேட்டுப்பாளையம்.
164	பழனிசாமி, திரு. சொ. நா.	அவினாசி.
165	பழனிமுத்து, திரு. சி. ..	ஆத்தூர்.
166	பழனியப்பன், திரு. அ. ப. ..	ஒட்டன்சத்திரம்.
167	பழனிவேல், திரு. என். ..	பழனி (செ.வ.).
168	பாண்டியன், திரு. பி. எச். ..	சேரன்மாதேவி.

தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும்.		தொகுதி.
	(1)	(2)
169	பாலகிருஷ்ணன், திரு. சோ. . .	முதுகுளத்தூர்.
170	பாலகுரு, திரு. வெ. ..	சோழவந்தான்,
171	பாலன், திரு. சு.	பெரம்பூர், சென்னை.
172	பாலாஜி, திரு. க. ..	காஞ்சிபுரம்.
173	பாலுச்சாமி, திரு. அ. ..	நிலக்கோட்டை (செ.வ.).
174	புருஷோத்தமன், திரு. து. ..	சைதாப்பேட்டை, சென்னை.
175	புஸ்பராஜு, திரு. த.	ஆலங்குடி.
176	பெரியசாமி, திரு. டி. பி. எம்.	மதுரை மேற்கு.
177	பெரியசாமி, திரு. மொ. ..	மங்களூர் (செ. வ.)
178	பெரியசாமி, திரு. ரா. ..	உப்பிலியாபுரம்.
179	பெருமாள், திரு. என்.	வரகூர் (செ. வ.)
180	பெருமாள், திரு. ரா. கு. ..	விளாத்திகுளம்.
181	பொன்னுசாமி, டாக்டர் ஏ.	பெருந்துறை.
182	பொன்னுரங்கம், திரு. ப. ..	இராயபுரம், சென்னை.
183	பொன்னையன், மாண்புமிகு திரு. சி. (அமைச்சர்)	திருச்செங்கோடு.
184	மணிமாறன், திரு. ஆர். ..	திருப்பூர்.
185	மணிமாறன், திரு. மா. ..	நன்னிலம் (செ.வ.).
186	மணிமுடி, திரு. எஸ். ..	எழும்பூர், சென்னை. (செ. வ.)
187	மருதாசலம், திரு. க. ..	தொண்டாமுத்தூர்.
188	மனோகரன், மாண்புமிகு திரு. கி. (அமைச்சர்)	பாளையங்கோட்டை.
189	மாணிக்கம், திரு. சி... ..	திருச்சிராப்பள்ளி-1.
190	மார்க்கபந்து, திரு. ரா. ..	அணைக்கட்டு.
191	மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ் ..	(நியமன உறுப்பினர்).
192	மாரிமுத்து, திரு. ஏ. ஆர்.	பட்டுக்கோட்டை.
193	மீனாட்சிசுந்தரம், திரு. மா.	வேதாரண்யம்.
194	முசிரிபுத்தன், திரு. பி. (அமைச்சரின் பேரவைச் செயலர்).	முசிறி.
195	முத்துசாமி, திரு. பா. கா. சி.	தர்மபுரி.

தொடர் எண்ணும் உறுப்பினர்கள் பெயரும்.		தொகுதி.
	(1)	(2)
196	முத்துசாமி, திரு. சு. ..	ஈரோடு.
197	முத்துசாமி கரையாளர், திரு. சு.	தென்காசி.
198	முத்தையா, திரு. இரா. ..	சேடப்பட்டி.
199	முத்தையா, திரு. கே. கே. ..	மருங்காபுரி.
200	முருகேசன், திரு. கூ. ச. ..	திருவரம்பூர்.
201	முனிரத்தினம், திரு. இரா. ச.	கும்மிடிபூண்டி.
202	முனுஆதி, திரு. மாண்புமிகு (பேரவைத் தலைவர்) ..	தாம்பரம்.
203	முனுசாமி, திரு. பொ. ..	வந்தவாசி (செ.வ.).
204	மூக்கையா தேவர், திரு. பி. கே.	உசிலம்பட்டி.
205	யூசுப், திரு. யா. சை. மு. ..	ராதாபுரம்.
206	ரகுமான்கான், திரு. அ. ..	சேப்பாக்கம்-சென்னை,
207	ரகுராமன், திரு. வி. ..	புவனகிரி.
208	ரகோத்தமன், திரு. கோ. ..	முகையூர்.
209	ரசாக், திரு. எம். எம். ஏ. ..	கடையநல்லூர்.
210	ரமணி, திரு. கு.	கோயம்புத்தூர் கிழக்கு.
211	ராமதாஸ், திரு. பி. ..	போடிநாயக்கனூர்.
212	ராமநாதன், திரு. சி. ..	விருத்தாசலம்.
213	ராமலிங்கம், திரு. ஏ. ..	காட்டுமன்னார்கோவில் (செ. வ.).
214	ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு. ..	புதுக்கோட்டை.
215	ராஜு, திரு. செ. மெ. ..	தலைவாசல் (செ. வ.).
216	ராஜு, திரு. வி. கே. ..	அரக்கோணம் (செ.வ.).
217	லட்சுமிநாராயணன், திரு. என்.	மதுரை மத்திய தொகுதி.
218	லத்தீப், திரு. எம், ஏ. ..	வாணியம்பாடி.
219	வடிவேல், திரு. கு. ..	கரூர்.
220	வரதராஜன், திரு. என். ..	திண்டுக்கல்.
221	வரதராஜன், திரு. சௌ. வே.	சேலம்-1.
222	வாசன், திரு. சீ. மு. ..	வேடசந்தூர்.
223	வின்சென்ட், திரு. எம். (அமைச்சரின் பேரவைச் செயலர்). ..	நாகர்கோவில்.
224	விஜயராகவன், திரு. பொ.	கிள்ளியூர்.

தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும்.	தொகுதி
(1)	(2)
225 வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு, திரு. ரா.	சிங்காநல்லூர்.
226 வெள்ளைச்சாமி, திரு. ஆ. (அமைச்சரின் பேரவைச் செயலர்)	ஆத்தூர்.
227 வேங்கா கவுண்டர், திரு. பி...	வீரபாண்டி.
228 வேணுகோபால், திரு. த. ..	தண்டராம்பட்டு.
229 வேலுச்சாமி, திரு. ஒ. சோ.	ஒட்டப்பிடாரம் (செ.வ.)
230 ஜகதீசன், திரு. ஆனூர் பு. கோ. (அமைச்சரின் பேரவைச் செயலர்)	செங்கல்பட்டு.
231 ஜான் வின்சென்ட், திரு. மு.	நாங்குனேரி.
232 ஜெபமணி, திரு. ர. ..	சாத்தான்குளம்.
233 ஜெயராமன், திரு. வே. இரா.	தேனி.
234 ஜெயவேலு, திரு. எம். ஏ. (அமைச்சரின் பேரவைச் செயலர்)	காட்பாடி.
235 ஜேம்ஸ், திரு. ஜே. ..	திருவட்டாறு.

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

மாண்புமிகு அமைச்சர்கள்—

1 திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி.
2 திரு. எஸ். டி. சோமசுந்தரம்.
3 திரு. ஆர். எம். வீரப்பன்.
4 திரு. கே. நாராயணசாமி.
5 திரு. எஸ். இராகவானந்தம்.
6 திரு. கே. இராஜா முகமது.

தலைமை வழக்கறிஞர் —

திரு. வி. பி. இராமன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

சனிக்கிழமை, 1979 மார்ச் 24.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

குறுகிய கால வினா எண் 22.

அரிசன நலப்பணிகளுக்காக நில ஆர்ஜிதம்.

திரு. ரா. மார்க்கபந்து:
திரு. எம். பெரியசாமி:
திரு. இரா. தாமரைக்கனி:

மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரிசன மக்களின் நலம் கருதி வீட்டுமனை கையகப் படுத்தும் நில ஆர்ஜிதச் சட்டம் எந்த தேதியில் இச் சட்டமன்றத்தில் நிறைவேறியது?

(ஆ) குடியரசு தலைவரின் ஒப்புதல் எப்போது பெறப் பட்டது?

(இ) இன்னும் அமுல்படுத்தாமைக்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:

(அ) அரிசன மக்களின் நலம் கருதி வீடுமனை கையகப்படுத்தும் நில ஆர்ஜித சட்டம் இச்சட்டமன்றத்தில் 4—4—1978 அன்று நிறைவேற்றப்பட்டது.

(ஆ) இச்சட்டத்திற்கு குடியரசு தலைவரின் ஒப்புதல் 21—7—1978 அன்று பெறப்பட்டது.

[1979 மார்ச் 24

(இ) இச்சட்டத்திற்கு 21—7—1978-ல் குடியரசு தலைவரின் ஒப்புதல் பெற்ற பின்பு வருவாய் வாரியம், மற்றும் அரிசன நலம் மற்றும் ஆதிவாசிகள் நலன் இயக்குநரின் குறிப்புரைகள் 24—8—1978 அன்று கேட்கப்பட்டது. வருவாய் வாரியத்தின் குறிப்புரை 5—10—1978 அன்றும், அரிசன நலம் மற்றும் ஆதி வாசிகள் நல இயக்குநரின் குறிப்புரை 26—10—1978 அன்றும் அரசுக்கு கிடைக்கப்பெற்றது. வருவாய் வாரியத்தின் குறிப்புரை 5—10—1978 அன்று கிடைக்கப்பெற்றதும் இக்கோப்பு வருவாய்த் துறை, சட்டத்துறை, நீதித்துறையின் குறிப்புரைக்காக 3—11—78 அன்று அனுப்பப்பட்டது. இக்கோப்பு 6—12—1978 அன்று சட்டத்துறையின் குறிப்புரையுடன் திரும்பப் பெறப்பட்டது. சட்டத்துறையின் குறிப்புரைகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டு, இக்கோப்பு மறுபடியும் 20—12—1978 அன்று சட்டத்துறைக்கு அனுப்பப்பட்டது. இக்கோப்பில் மேலும் சில விளக்கங்கள் 6—2—1979 அன்று சட்டத்துறையினரால் கேட்கப்பட்டது. சட்டத்துறை கேட்ட விளக்கங்களுக்கு பதில் அளிக்கப்பட்டு இக் கோப்பு 15—2—1979 அன்று சட்டத்துறைக்கு மீண்டும் அனுப்பப்பட்டது. மேலும் சில விளக்கங்கள் 1—3—1979 அன்று சட்டத்துறையினரால் கேட்கப்பட்டது. சட்டத்துறை கேட்ட விளக்கங்களுக்கு பதில் அளிப்பதற்கு வேண்டிய மேலும் சில விவரங்கள் வருவாய் வாரியத்திலிருந்து பெறவேண்டியுள்ளது. இக்கோப்பு இத்துறையின் பரிசீலனையில் உள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, தாழ்த்தப் பட்டவர்களுக்காக வீடுகள் கட்ட நில ஆர்ஜிதம் செய்தாலும் சுடுகாட்டிற்கு நில ஆர்ஜிதம் செய்தாலும், அது தாத்தா காலத் தில் நில ஆர்ஜிதம் செய்தால், பேரன் காலத்தில் தான் கிடைக்கும் அளவில் இருக்கிறது. இதற்குக் காரணம் சட்டத்துறையில்தான் காலதாமதம் ஆகிறது என்று தெரிகிறது. ஆகவே, அதைத் துரிதப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர் களே, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, பேரன் காலத்தில் கிடைப்பதை இப்போது அப்பன் காலத்தில் கிடைப்பதற்கு மாற்றி இருக்கிறோம். அதுவும் தாமரைக்கனியைப் பொறுத்தவரையில் அவர்கள் காலத்தில் கிடைப்பதற்கு இந்த அரசு நிச்சயமாக ஏற்பாடு செய்யும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். சட்டத் துறையில் ஏற்படும் காலதாமதத்தைப் போக்க எடுத்த நடவடிக் கை என்ன என்று கேட்டார். நான் இரண்டு மூன்று முறை சட்டத் துறையோடு தொடர்பு கொண்டு, இது மிகவும் முக்கியமான பிரச்னை, துரிதமாக பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டு இருக்கிறேன். அவர்களும் துரிதமான நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்து கொண்டு இருக்கிறார்கள்.

1979 மார்ச் 24]

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இந்த அரிசனங்களுக்கு வீட்டுமனைக் கொடுப்பதில் அதிக காலதாமதம் ஆவதற்கு முக்கியமான காரணம் நில ஆர்ஜிதம் செய்வதில் ஏற்படும் தாமதம் தான். துரிதமாக ஆர்ஜிதம் செய்வதற்கு போன சட்டமன்றக் கூட்டத்திலேயே சட்டம் நிறைவேற்றப்பட்டது. காலதாமதத்திற்கான ஒரு காரணத்தை அமைச்சரவர்கள் சொன்னார்கள். மேலும் காலதாமதம் செய்யாமல் அந்தச் சட்டத்தை அமுல் படுத்தி, உரிய காலத்தில் வீட்டுமனை இல்லாத அத்தனை பேர்களுக்கும் ஒன்றிரண்டு ஆண்டுக்குள் வீட்டுமனை கொடுக்க துரித நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இது ஒரு சாதாரண அதிகாரம். இது அரசுக்கு இருப்பதை விட அந்தந்த மாவட்டத்தில் இருக்கிற ஆட்சித் தலைவருக்கு இருந்தால்தான் வீட்டுமனைகளை வேகமாகத் தர இயலும் என்ற நம்பிக்கையோடு இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டு, அரசுக்கு இருந்த அதிகாரம் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவருக்கு மாற்றப்பட இருக்கிறது. அதற்கு உரிய விதிமுறைகளை வகுக்கவேண்டும் என்பதற்காக சட்டத் துறை, வருவாய்த்துறை போன்ற துறைகளின் ஆலோசனை கேட்கப்பட்டு, தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்தச் சட்டத்திற்கு விதிமுறை வகுக்கப்பட்டு அங்கே செல்லுமானால் வீட்டுமனைகளை வேகமாக வழங்க துரித நடவடிக்கை எடுக்க முடியும்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, அரிசனங்களுக்கு வீட்டுமனைப்பட்டா, மற்ற நில வசதிகள் எல்லாம் செய்து கொடுக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் தாமதத்திற்கான காரணத்தைச் சொன்னார்கள். இவைகள் அன்னியில் வேறு சில நிர்வாக காரணங்களும் இருக்கின்றன. அதிலே தனி தாசில்தார்கள்—ஸ்பெஷல் தாசில்தார் ஃபார் அரிஜன்ஸ்—பெரிய பரப்புக்கு ஒருவர்தான் நியமிக்கப்பட்டிருக்கிறார். மாவட்டத்திற்கு இரண்டு அல்லது மூன்று பேர்களைத்தான் போட்டிருக்கிறார்கள். அவர்கள் செம்மையாக எல்லா இடங்களையும் பார்வையிட்டு விரைவாக நடவடிக்கை எடுக்க ஜீப் வசதி கூட கிடையாது. மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இந்த அதிகாரம் இருந்தால் மற்ற நிர்வாக பொறுப்போடு இதையும் தனியாகக் கவனிக்க அவர்களுக்கு நேரம் இல்லை. ஆகையால் இந்தத் துறையில் மேலும் பல தாசில்தார்களைப் போட்டு, அவர்களுக்கு ஜீப்கள் வழங்கி, இதற்கென்று தனி அதிகாரிகளையும் போட்டு காரியம் ஆற்றினால் சௌகரியமாக இருக்கும். அதை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனையைப் போல குடியரசுத் தலைவர் ஆட்சி காலத்திலே கூடுதலாக தனிதாசில்தார்கள் நியமிக்கப்பட வேண்டுமென்ற ஒரு முடிவு

எடுக்கப்பட்டு, 28 தாசில்தார்கள் பதவிக்கு அப்போது ஆணை யிட்டு வைத்திருந்தார்கள். இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு நிதித்துறை 15 தாசில்தார்களைப் போடலாம் என்ற ஒரு ஆலோசனையை கூறியது, அப்போது எடுத்த முடிவை மாற்றத் தேவையில்லை. அதை முழுமையாகப் போட வேண்டு மென்று நான் கருத்துத் தெரிவித்திருக்கிறேன். அது இப்போது ஒப்புதலுக்காகச் சென்றிருக்கிறது. வந்தபிறகு கூடுதலாக தாசில் தார்களை நியமிக்க ஆணையை இந்த அரசு பிறப்பிக்கும். தனி அதிகாரிகளை நியமிக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யோசனை சொன்னார்கள். அதைவிட இந்தத் துறைக்கு என்று நிரந்தரமான பணியாளர்களை நியமித்து, எல்லா அளவி லும் தனித்து இயங்குகின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டு மென்று இந்த அரசு தீவிரமாக பரிசீலனை செய்து கொண்டிருக் கிறது. ஜீப்பைப் பற்றிச் சொன்னார்கள். நிதி நிலைமையை அனுசரித்து அது பரிசீலனை செய்யப்படும்.

திரு. சி. ஆறுமுகம்: துணைத் தலைவரவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனை கொடுக்கின்ற சட்டத்தை மாநில அரசு நிறைவேற்றி மத்திய அரசும் நிறைவேற்றிக் கொடுத்து சட்டத் துறைக்கும், நிதித்துறைக்கும், வருவாய்த்துறைக்கும் போய், போய் வந்து கொண்டிருந்தால் இந்த ஆட்சியின் காலமே முடிந்துவிடும். அதற்கு நம்முடைய அமைச்சர் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: துரித நடவடிக்கை எடுக்க இருக்கிறது இந்த அரசு.

திரு. பொ. காளியப்பன்: தலைவரவர்களே, காரைக்குடியில் அரிசனங்களுக்கு வீட்டுமனை கொடுப்பதற்கு நில ஆர்ஜிதம் செய்து, கிட்டத்தட்ட ஓராண்டு ஆகிறது. அமைச்சரவர்களுக் கும் அது தெரியும். இன்னும் அந்த இடம் ஜாரி செய்து கொடுக் கப்படவில்லை. அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்ப தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர் களே, இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு கூடிய வரையில் காலதாமதம் இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் அவ்வப்போது ஒவ்வொருபகுதியிலும் பணியாற்றுகின்ற அரிசனநல தாசில் தார்கள், மாவட்ட நல அதிகாரிகள் போன்றவர்களுக்கு அறிவுரை வழங்கிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த பிரச்னை அரசின் தீவிர பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. விரைவில் ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1979 மார்ச் 24]

திரு. சு. ரமணி: தலைவரவர்களே, இந்த நிலங்களை ஆர்ஜிதம் செய்யும் வேலை மிகவும் தாமதமாகி, நிலச் சொந்தக்காரர்கள் நிலத்தை அவர்கள் கையில் கொடுக்காமல் இருக்க கோர்ட் நடவடிக்கை எடுப்பதற்கான சூழ்நிலை உருவாகி, படு மோசமாக நிலைமை இருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் கவனத்திற்குக் கொண்டுவந்து கோவை மாவட்டத்தில் இருக்கிற குறிச்சி பஞ்சாயத்தில் ஆத்தூர்பாலம் கிராமத்தில் அரிசனங்களின் வீடுகளை ஹைவேய்ஸ் இலாகா இடித்துத் தள்ளி ஆறு மாத காலமாகிவிட்டது. அந்த அரிசன மக்கள் கால்வாசி பணத்தைக் கட்டி 6 மாத காலமாகியும் இன்றுவரையில் அவர்களுக்கு நிலம் கிடைக்கவில்லை. ஜில்லா கோர்ட் ரிப்போர்ட்டும் வந்திருக்கிறது. ஆனால் இன்றுவரையில் காரியம் நடைபெறவில்லை. இப்படிப்பட்ட தாமதத்தை உடனே தவிர்க்க நிலத்தை உடனடியாக அரிசனங்கள் கையில் கொடுப்பதற்கான உறுதியான நடவடிக்கையை எந்தமுறையில் எடுக்கப்போகிறீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-10]

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தச் சட்டத்தின் விதிமுறைகள் வகுக்கப்படுகிறபோது இந்த அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு கிடைக்கிறது. முன்பு போல் பலமுறைகளைப் பின்பற்றாமல் இரண்டே இரண்டு முறைகளைப் பின் பற்றி உடனுக்குடன் வீட்டுமனை வழங்க இந்த அரசு ஏற்பாடு செய்யும் என்பதையும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் பல்வேறுபட்ட காரணங்களால்தான் அவர்களுக்கு மனை கொடுப்பதில் தாமதம் ஏற்படுகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இது நிர்வாகத்தில் இருக்கின்ற நடைமுறை சிக்கல் என்பதையும் நாம் உணருகிறோம். இந்த சிக்கலைத் தீர்ப்பதற்குத் தான் இந்தச் சட்டம் வருகிறது. அப்படி வருகிறபோது துரிதமாக வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்க இந்த அரசு ஏற்பாடு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஒ. சோ. வேலுச்சாமி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, லான்ட் அக்விசிஷன் ஃபார் ஹரிஜன் வெல்ஃபேர் ஸ்கீம் ஆக்ட் என்று சொல்லப்படுகின்ற சட்டம் நிறைவேற்றப் பட்டு பல மாதங்கள் ஆகின்றன. இந்த சட்டம் நிறைவேற்றப் பட்ட காலத்தில் அது நல்ல சட்டம் என்றும் புரட்சிகரமான சட்டம் என்றும் நாங்கள் பாராட்டி வரவேற்றோம். ஆனால் சென்ட்ரல் லான்ட் அக்விசிஷன் ஆக்டிலே இருக்கக் கூடிய தாமதத்தை நிவர்த்தி செய்யக்கூடிய இந்தச் சட்டத்திற்குரிய ரூல்ஸ் எல்லாம் ஃபேரம் பண்ணியதாகத் தெரியவில்லை. ஆகவே, அவ்வாறு தயாரிப்பதற்கு டிராப்ட் ரூல்ஸாவது தயாராக இருக்கிறதா என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, அதற்காகத்தான் சட்டத்துறையைக் கலந்து பேசுவதற்கு இந்த கோப்பு அங்கும் இங்கும் போய்க் கொண்டிருக்கிறது என்பதை நான் முன்பே சுட்டிக்காட்டினேன்.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கொடுக்கப்படுகிற மனைப்பட்டாக்கள், சுடுகாடு போன்றவை குறிப்பாக மதுரை வட தாலுக்கா மூலக்குறிச்சி கிராமத்தில் 1956-லே சுடுகாட்டுக்கு இடம் ஒதுக்கப்பட்டும் குடியிருப்பு மனை ஒதுக்கப்பட்டும் ஜாதி இந்துக்களின் உறவினர்களாக இருக்கின்ற அதிகாரிகள் அவர்களை அந்த இடத்தில் பிரவேசிக்க விடாமல் தடுக்கின்றார்கள். இந்த விஷயம் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் மாண்புமிகு அமைச்சரவர்களுக்கும் நேரடியாக நான் மனு கொடுத்திருந்தும் தக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை ஆகவே, பண முதலைகளுக்கு வசதியாக இருக்கின்ற அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்து ஏழை மக்களுக்கு தக்க பாதுகாப்பு கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, பண முதலைகளாக இருந்தாலும் சரி அல்லது வேறு எப்படிப்பட்ட பெரியவர்களாக இருந்தாலும் சரி மாண்புமிகு உறுப்பினர் திரு. கந்தசாமி அவர்கள் இன்றைக்கே அதைப்பற்றி எழுதித் தருவார்களேயானால் விசாரித்தறிந்து நிச்சயமாக இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. இ. தமிழரசன்: பேரவைத் துணை தலைவரவர்களே, இந்த அரிசன வீட்டுமனைக்காக கையகப்படுத்துகின்ற நிலம் சம்பந்தப்பட்டவரையில் அதிகாரிகள்தான் பெரும்பாலும் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். நிலச்சுவான்தார்கள்தான் பயன் பெறுகிறார்கள். இப்போது 30 ஆண்டுகாலம் ஆகியும் அரிசன மக்களுக்கு ஒழுங்காக வீட்டு மனைப் பட்டாக்கள் கொடுக்கப்படுவதில்லை. அதுமட்டுமல்ல. மூன்று தாலூக்காக்களுக்கு ஒரு தாசில்தார்தான் இருக்கிறார். ஆகவே அவரால் உடனடியாக வீட்டுமனைப் பட்டாக்களைக் கொடுப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க முடியவில்லை. அதுமட்டுமல்ல தாசில்தார் அலுவலகத்தில் டெலிபோன் வசதி இருந்தால் எங்களைப் போன்றவர்கள் உடனுக்குடன் தொடர்பு கொண்டு அவர்களைக் கேட்பதற்கு வசதியாக இருக்கும். இவற்றிற்கெல்லாம் அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் மூன்று வட்டங்களுக்கு ஒரு தாசில்தார் பணி

1979 மார்ச் 24]

யாற்றுவது உண்மை. இந்த அரசாங்கம் தீவிரமாக பரிசீலனை செய்து போதிய தாசில்தார்களை நியமிக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறோம். டெலிபோன் வசதி பற்றிக் குறிப்பிட்டார்கள். இப்போது இருக்கின்ற நிலைமை என்னவென்றால் அங்கே பணியாற்றுவதற்கே போதிய ஆட்கள் இல்லை என்பது. ஆகவே முதலிலே தேவையான ஆட்களைப் போடுவோம். அதற்குப் பிறகு மற்ற வசதிகளைச் செய்து கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரிசன மாணவர் விடுதிக் கட்டடங்கள்.

குறுகிய கால வினா எண் 23.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1977ஆம் ஆண்டு ஜூலை முதல் எத்தனை அரிசன மாணவர் விடுதிக் கட்டடங்கள் கட்ட ஆணையிட்டுள்ளது ? ஊர் வாரியாக?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: 1977ஆம் ஆண்டு ஜூலைக்குப் பின்னர் பின்வரும் ஊர்களில் புதிதாக நான்கு அரிசன நல மாணவர் விடுதிக் கட்டடங்கள் கட்ட ஆணையிடப் பட்டுள்ளன :

1. முசிரி (திருச்சிராப்பள்ளி மாவட்டம்).	1
2. ஆலங்குடி (புதுக்கோட்டை) ..	1
3. திருக்கோட்டியூர் (இராமநாதபுரம்) ..	1
4. மல்லான் கிணறு (இராமநாதபுரம்) ..	1
	4

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தாழ்த்தப்பட்ட மாணவர்கள் விடுதிகள் பெரும்பாலும், தனிப்பட்டவர்களின் வாடகை கட்டடங்களில்தான் நடைபெற்று வருகிறது. இதனால் தனிப்பட்டவர்களுக்கு வாடகை போய்க்கொண்டிருக்கிறது. ஆகவே அரசுக்கு இந்த வாடகை கிடைக்கிற அளவில் அரசே இதை பெரிய அளவில் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, சட்டியில் இருந்தால் தான் அகப்பையில் வரும். சட்டியில் இருப்பதை வைத்துக்கொண்டு சில விடுதிகளை இந்தத் துறை கட்டிக் கொண்டிருக்கிறது. 1977-க்குப் பிறகு நான்கு விடுதிகளை கட்டுவதற்கு ஆணையிடப்பட்டிருக்கிறது. இனிமேல் படிப்படியாக இவற்றை கட்டுவதற்கு அரசு ஆலோசித்துவருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, சாதியற்ற சமுதாயம் அமைப்போம் என்று எல்லா அரசியல்வாதிகளும் பேசிக் கொண்டிருக்கிறோம். ஆனால், இப்போதும் அரிசன மாணவர் விடுதிகள் என்று தான் இருக்கிறது. ஆகவே இதில் அரிசன என்ற சொல்லை எடுத்துவிட்டு மாணவர் விடுதி என்று மட்டும் வைத்துக் கொள்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, ஜாதியற்ற சமுதாயம் அமைப்போம் என்று எல்லா அரசியல் வாதிகளும் பேசிக்கொண்டிருக்கிறோம் என்று உறுப்பினர் கூறினார் இனியும் பேசிக்கொண்டே இருப்போம். இப்போது அரிசன மாணவர் விடுதி என்பதை அரசினர் மாணவர் விடுதி என்று அரசு மாற்றியிருக்கிறது.

கொடைக்கானல் மலைப்பகுதியில் அலுமினிய பாக்சைட்.

*520 வினா—திரு. கே. பண்ணை சேதுராம் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கொடைக்கானல் மலைப்பகுதியில் அலுமினியம் பாக்சைட் கனிகள் இருப்பது ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் என்றால் அவைகளை பயன்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) 7—10—1968 தேதியிட்ட தொழில்துறை அரசு ஆணை எண் 3459-ல், ‘‘மால்கோ’’ என்று அழைக்கப்படும் மெட்ரூஸ் அலுமினியம் கம்பெனி நிறுவனத்திற்கு கொடைக்கானல் பகுதியில் 960 ஏக்கர்கள் பரப்பில் முப்பது ஆண்டுகளுக்கு பாக்சைட் வெட்டியெடுத்துக்கொள்ள சுரங்கக் குத்தகை வழங்கப் பட்டுள்ளது.

1979 மார்ச் 24]

மால்கோ நிறுவனம், இந்தப் பகுதியில் கோனல் ஆறு வனப் பகுதியில் சில நிலங்கள் தவிர பாக்சைட் கிடைக்கும் ஏனைய எல்லா நிலங்களையும் விலை கொடுத்துச் சொந்தமாக வாங்கி யுள்ளது. அரசின் வனத்துறையுடன் தொடர்புகொண்டு கனிகள் கிடைக்கும் வனப்பகுதி நிலங்களையும் உரிமை கொள்ள முயற்சி கள் தொடரப்பட்டு வருகின்றன. மேட்டூர் அருகேயுள்ள மால்கோ நிறுவனத்தின் கச்சாப் பொருள் தேவைகளைப் பூர்த்தி செய்ய இந்த கனிகள் விரைவில் வெட்டியெடுக்கப்படவுள்ளது.

திரு. கே. பண்ணை சேதுராம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த கொடைக்கானல் மலைப் பகுதியில் அலுமினியம் பாக்சைட் கனிகள் அதிகமாக இருக்கின்றன. தமிழ கத்தில் இயற்கை வளங்கள் கொஞ்சுகின்ற கொடைக்கானல் பகுதி யில் இவை கிடைக்கின்றன. 1968-ல் இதை எடுப்பதற்காக மால்கோ நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு செயல்பட்டு வரு கிறது. ஆனால் விரைவாக செயல்படவில்லை. இதற்குக் கார ணம் மத்திய அரசா அல்லது மாநில அரசா? ஆகவே விரைவாக செயல்படுவதற்கும் இதற்கு ஊக்கம் அளிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, 1979ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து இந்தக் கனிகள் வெட்டி எடுக்க தொடங்கியிருக்கிறார்கள். இதுவரை 842 டன்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. எம். ஏ. லத்தீப்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கனி வெட்டும் திட்டத்திற்கான உரிமம் மால்கோ நிறுவனத்திற்கு எந்த அடிப்படையில் அளிக்கப்பட்டது? அதற்கு காலவரையறை ஏதேனும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா? இதற்கு உரிமம் அளிக்கப்பட்டவர்களிடமிருந்து ஏதேனும் பாக்கி அரசுக்கு வரவேண்டியிருக்கிறதா? அப்படியென்றால் எவ்வளவு வரவேண்டியிருக்கிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: என்னுடைய விடை யிலேயே இதைச் சொல்லியிருக்கிறேன். 30 ஆண்டுகளுக்கு அலுமி னியம் பாக்ஸைட் வெட்டியெடுப்பதற்கு சுரங்க குத்தகை அளிக்கப் பட்டிருக்கிறது. ராயல்டியாக 4 ரூபாய் ஒரு டன்னுக்கு (பெர் டன்) என்ற அளவில் அரசுக்கு கிடைக்கிறது.

Trade union meetings near T.V.S. group companies.

*Q. No. 521—Thiru R. UMANATH : Will the Hon. the Chief Minister be pleased to state :

(a) whether the normal trade union gate meetings are still prohibited near the T.V.S. group of companies; and

(b) if so, the reasons for prohibiting the same?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) சென்னை அண்ணாசாலை மற்றும் பட்டுல்லாஸ் சாலைகளிலுள்ள டி.வி.எஸ். கம்பெனிகளுக்கு முன் நுழைவாயில் கூட்டங்கள் (கேட் மீட்டிங்) தடை செய்யப்படவில்லை.

எதிர் தொழிற்சங்கங்களுக்கு இடையே மோதல்கள் ஏற்படாத வகையில், பாடியிலுள்ள டி.வி.எஸ். கம்பெனிகளுக்கு முன் நுழை வாயில் கூட்டங்கள் நடப்பதற்கு ஏற்ற வகையில் ஒழுங்குபடுத்தப் பட்டன.

(ஆ) எனவே, இக்கேள்விக்கு இடமில்லை.

[முற்பகல்-9-20]

திரு. ரா. உமாநாத் : துணைத் தலைவர் அவர்களே, பாடி யிலே வாயில் கூட்டங்களை நடத்துவதை சட்டம், அமைதியைப் பாதுகாப்பதற்காக தடை செய்யப்பட்டுள்ளது என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். ஏற்கனவே, முதல் அமைச்சர் அவர்கள் இப்படிப்பட்ட நிறுவனங்களில் குண்டர்கள் இருக்கிறார்கள் என்று டெல்லியிலேயும், இங்கேயும் அறிவித்திருக்கிறார்கள். குண்டர்கள் விரும்புவது கேட் கூட்டம் நடக்கக் கூடாது என்பது. இந்த குண்டர்கள் தாக்குவார்கள் என்ற காரணத்திற்காக, சட்டம் அமைதி என்ற பெயரிலே, நீங்கள் இந்தக் கூட்டத்தைத் தடை செய்கிறீர்கள். அது குண்டர்களின் நோக்கத்தை நிறைவேற்றுவ தாக இருக்கிறது. அதைத் தடுக்க வேண்டும். கூட்டம் போடுவது என்னுடைய பண்டமென்டல் ரைட். அதற்கு புரொடெக்ஷன் கொடுக்கவேண்டும். இதிலே அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, கூட்டம் நடத்துவதற்கான அடிப்படை உரிமைகள் யாருக்கும் மறுக்கப்படுவது இல்லை. கூட்டம் நடத்துகிறபோது, கலவரம் ஏற்படுகின்ற சூழ்நிலை உருவாகும் என்று அரசு கருதி னால், அதற்கு அரசு தடை விதிக்கிறது.

திரு. ரா. உமாநாத் : துணைத் தலைவர் அவர்களே, என்னு டைய கேள்விக்கு பதில் சொல்லவில்லை. கலவரம் செய்வதற் காக அவர்கள் வருகிறார்கள். எங்களுடைய ரைட்டை பாது காப்பதற்குப் பதிலாக, தடை விதிக்கிறீர்கள் என்று சொன்னால்

1979 மார்ச் 24] *[திரு. ரா. உமாநாத்]*

—ஏ. ஐ. ஏ. டி. எம். கே. கூட்டம் போடுகிறீர்கள், அதற்கு இன்னொரு கட்சிக்காரர் கலவரம் செய்ய வருகிறார்கள் என்பதற்காக அந்த ஏ. ஐ. ஏ. டி. எம். கே. கூட்டத்திற்கு 'பான்' செய்வீர்களா? அப்படி என்று சொன்னால், இந்த மாநிலத்திலேயே எந்தக் கூட்டத்தையும் நடத்த முடியாது.

That means; you are preventing from exercising my fundamental right to hold meeting.

அந்த பண்டமென்டல் ரைட்டை புரொடெக்ட் பண்ணுவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது? கூட்டம் போட உரிமை வேண்டும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, கட்சிகளைப் பற்றி தவறான கருத்தை மாண்புமிகு உமாநாத் அவர்கள் வெளியிடக் கூடாது. ஒரு கட்சிக் கூட்டம் நடத்தும்போது, இன்னொரு கட்சி அங்கே கலவரம் செய்யும், ஏற்படுத்தும் என்று கூறுவது சரியான கூற்றாகாது. ஒவ்வொரு கட்சியும் கூட்டத்தை நடத்துவதற்கு அனுமதிக்கப்படுவது ஜனநாயக முறையில் தமிழ்நாட்டில் நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. ஆனால், இங்கே ஏற்பட்டிருக்கின்ற பிரச்னை, மேற்கூறிய தொழிற்சங்கக் கூட்டத்திற்கு, போட்டித் தொழிற்சங்கத்தைச் சார்ந்தவர்கள் தொழிற்சாலைக்குள் போய்க்கொண்டும், வந்துக் கொண்டும் இருப்பதால், இருதரப்பாருக்கும் இடையே மோதல் ஏற்பட வாய்ப்பு இல்லாத வகையில் தொழிற்சாலையின் நுழைவாயிலுக்கு சற்று தூரத்தில் நடத்த அனுமதிக்கப்படுகிறது. எனவே, அந்த முறையில் அந்தக் கூட்டம் தடை செய்யப்பட்டிருக்கிறது.

திரு. க. சுப்பு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நுழை வாயில் கூட்டம் நடத்த முடியாது, சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது என்று அமைச்சர் அவர்கள் ஒப்புக் கொண்டார்கள். அதை நான் வரவேற்கிறேன். அங்கே குண்டர்கள், சென்ட்ரல் போலீஸ், ரிசர்வ் போலீஸ் எல்லாம் அந்த இடத்தில் இருக்கும்போது, கலவரம் வரும் என்று சொல்வது சரியல்ல. அப்படிச் சொன்னால், எங்கே கூட்டம் போட்டாலும், அந்தக் காரணங்களைச் சொல்ல முடியும். இந்தக் காரணத்தினால் தமிழ்நாடு பூராவும் லா அண்டு ஆர்டர் மெஷினரியே பெயில்யூர் ஆகிவிட்டது, பிரேக் டவுன் ஆகிவிட்டது என்று அர்த்தம்? அப்படியானால் இன்னும் இந்த ஆட்சியிலே ஏன் இருந்துவர விரும்புகிறீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, இது பாடியிலே நடைபெற்ற சம்பவம். பாடியிலே தொழிற் சங்கத் தகராறு ஏற்பட்டது. அத்தகைய தகராறிலே போட்டித் தொழிற் சங்கத்தினால் ஒரு சாரார் உள்ளே போவதும், இன்னொரு சாரார் போகக் கூடாது என்று சொல்வதும், இந்த

வகையிலே சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால், எல்லா தொழிலாளர்களையும் பாதுகாக்க வேண்டுமென்ற முறையில் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஆகவே, இதை வைத்துக்கொண்டு தமிழ்நாடு முழுவதும் சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது. ஆகவே, நீங்கள் ஏன் ஒட்டிக் கொண்டிருக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் கேட்டார்கள். ஆனால், மாண்புமிகு சுப்பு அவர்கள் இந்த இடத்திற்கு வருவதற்கு ஒட்டிக்கொள்ள மாட்டார்கள் என்பது நிச்சயமாக எனக்குத் தெரியும்.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : பாடி பகுதியில் இருக்கக் கூடிய தொழிலாளர்களுடைய அடிப்படையான உரிமையை ஒட்டிய பிரச்சினை இந்தப் பிரச்சினை. அங்கே இருக்கும் தொழிற் சங்கங்களுக்கிடையே தகராறு இருக்கும் காரணத்தால் கூட்டங்கள் நடத்த தடை விதிக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். தொழிலாளர்கள் கூட்டங்கள் நடத்தி தங்களுடைய பிரச்சினைகளை எடுத்துக் கூறுவது அடிப்படையான உரிமை. கேட் கூட்டங்கள் போடுவது அவர்களுடைய அடிப்படைய ன உரிமை. தமிழ் நாட்டில் பல்வேறு தொழிற்சாலைகளில் தொழிலாளர்கள், போராட்டங்கள், இயக்கங்கள் நடத்தும் போது 144 தடை உத்தரவு போடுவது. போலீஸ் அனுமதி பெற்றுத்தான் கூட்டம் நடத்த வேண்டுமென்று கூறுவது ஆகியவை எல்லாம் தொழிலாளர்கள் உரிமையைப் பறிக்கக் கூடிய நடைமுறையாகும். ஆகவே, அரசு அந்த முறைகளைக் கைவிட்டு தொழிலாளர்கள் கூட்டம் நடத்த அனுமதிக்கப்படுவார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இதைத்தான் மாண்புமிகு உமாநாத் அவர்கள் கேட்டார்கள். வேறு வார்த்தைகளிலே, வாக்கியங்களிலே இப்போது கேட்கிறார்கள். நான் சொல்ல விரும்புவது—இது ஒரு குறிப்பிட்ட பிரச்சினை. எல்லா இடங்களிலும் இல்லை. ஒரு குறிப்பிட்ட பிரச்சினையில் ஏற்பட்டுள்ள நிலையை ஒட்டி இந்தத் தடை உத்தரவு அமல்படுத்தப் பட்டுள்ளது. தொழிலாளர்கள் நுழைவாயில் கூட்டங்கள் நடத்துவது, மற்றக் கூட்டங்களை நடத்துவது என்பதெல்லாம் தொழிலாளர்களுக்கு இருக்கக்கூடிய அடிப்படையான உரிமை அவர்கள் கூட்டம் நடத்தக் கூடாது என்று அரசு கருதவில்லை.

திரு. ரா. உமாநாத் : போன செஷனில் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிறபோது பகிரங்கமாக இந்த அவையில் சொன்னார்கள். ஒரு முதலாளியுடன் சேர்ந்து ஒரு சங்கம் இன்னொரு தொழிற்சங்கத்தைக் கூட்டம் நடத்துவதற்குத் தடையாக இருந்தார்கள் என்று சொன்னார்கள். ஐ. என். டி. யு. சி. சங்கத்தைத் தான் அவர்கள் அவ்வாறு குறிப்பிட்டார்கள். அந்தச் சங்கம் முதலாளிகளோடு ஒத்துழைக்கிறது என்பது கவர்ன்மென்ட் அக்செப்டட் பொசிஷனாக இருக்கும்போது அவ்வாறு கூட்டம் நடத்துவதைத் தடுக்கும் வகையில் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடாமல் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

1979 மார்ச் 24]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இது சட்டம் ஒழுங்கு பிரச்சினையை பற்றிய பிரச்சினை. மாண்புமிகு உமாநாத் அவர்கள் ஏற்கனவே முதல்வர் அவர்கள் தொழிற் தகராறு சம்பந்தமாகத் தெரிவித்த கருத்தை இங்கே குறிப்பிடுகிறார்கள். கூட்டம் நடத்த அனுமதிக்கப்படாததற்குக் காரணம் இரு சாராருக்கும் கைகலப்பு ஏற்படும், அதனால் தொழிலாளர்களுக்குப் பாதகம் ஏற்படும் என்பதால்தான்.

திரு. க. சுப்பு : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது போட்டி சங்கங்கள் இருப்பதால் இந்தத் தகராறு என்று சொன்னார்கள். என்னென்ன சங்கங்கள் இருக்கின்றன, அந்தச் சங்கங்களின் பலம் எப்படி இருக்கிறது என்று அமைச்சர் அவர்களிடம் தகவல் இருந்தால் கூறுவார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பலத்தைத் தெரிந்து கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டதால்தான் கூட்டமே தடை செய்யப்பட்டது.

திரு. ரா. உமாநாத் : ப்ரொசிஜர் சம்பந்தமாக ஒரு சப்மிஷன். இந்த மாதிரிக் கேள்விகள் சீஃப் மினிஸ்டர் சம்பந்தமாக இருப்பதால் அவர்தான் கரெக்டாகப் பதில் சொல்ல முடியும். கலெக்டிவ் ரெஸ்பான்சிபிலிடி இருக்கிறது என்று சொன்னாலும் சப்ளிமெண்டரிகளுக்குப் பதில் சொல்லும்போது அவருக்குத்தான் ஃபாக்ட்ஸ் நன்றாகத் தெரிந்திருக்க முடியும்.

He alone will be able to clarity. இந்த மாதிரிப் பிரச்சினைகளில் அவர் பதில் சொன்னால் விவரமாகப் பதில் கூறமுடியும்.

திரு. க. சுப்பு : என்னென்ன சங்கங்கள் இருக்கின்றன என்ற கேள்விக்கே அமைச்சர் அவர்களால் பதில் சொல்ல முடியவில்லை. முதலமைச்சர் அவர்கள் இருந்தால் அவற்றுக்கெல்லாம் பதில் சொல்ல முடியும். முதலமைச்சர் இங்கு வந்து உட்கார்ந்திருக்கலாம்.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வி, கூட்டம் நடத்துவதைத் தடை செய்யப்பட்டது பற்றி. அது சம்பந்தப்பட்ட கேள்விகளுக்குத் தான் அமைச்சர் பதில் சொல்ல முடியும். அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வரும்போது சப்ளிமெண்டரி கேள்விகளுக்கான விவரங்களை எல்லாம் படித்துவிட்டுத்தான் வருகிறார்கள். மூலக் கேள்வியை ஒட்டிய துணைக் கேள்விகளுக்குத்தான் அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல முடியும்.

மன்னார்குடியில் பூச்சிமருந்து தொழிற்சாலை.

*522. வினா—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு கூட்டுறவு துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை மாவட்டம், மன்னார்குடி அருகில் உள்ள பாமணியில் பூச்சிமருந்து தொழிற்சாலை அமைக்க மத்திய அரசின் அனுமதி கிடைத்துவிட்டதா ?

(ஆ) இல்லையெனில் காலதாமதத்திற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :(அ) & (ஆ) : அரசு, பூச்சிக்கொல்லி மருந்து தொழிற்சாலை நிறுவுவதற்கு புதிதாக உரிமம் வழங்குவதில்லையாதலால், பாமணி உரமணி ஆலையுடன் இணைந்த முறையில் பூச்சி மருந்துத் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் கைவிடப்பட்டது.

[முற்பகல் 9-30]

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, முன்பு இருந்த அரசாங்கமே பூச்சி மருந்து தொழிற் சாலையை அங்கே அமைக்கவேண்டுமென்ற முறையிலே திட்ட முன்வரைவை மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறது. அப்படி அனுப்பி, அதை அமைக்க வேண்டுமென்ற முறையிலே அதற்காக தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை நிலையத்தின் சார்பாக வலியுறுத் தப்பட்டும், இப்போது உங்கள் ஆட்சியில் கைவிடப்பட்டதாக சொல்கிறீர்களே, உங்களுக்கு கைவிடுவதற்குத்தான் தெரியுமா ? அங்கே அந்தத் தொழிற்சாலை அமைக்கப்பட இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு.கே. ஏ. கிருஷ்ணசாமி : துணைத் தலைவர் அவர்களே, இது மத்திய அரசு சம்பந்தப்பட்ட பிரச்சினை. ஒரு தொழிற்சாலையை உருவாக்குவதா அல்லது மறுதளிப்பதா என்று தீர்மானிக்கிற உரிமை மத்திய அரசிடம் இருக்கிற காரணத் தாலும் இந்தக் கேள்வியினுடைய மையமாக இருக்கிற கருத்து. பூச்சி மருந்து தொழிற்சாலை அமைப்பதற்கு சாத்தியமாக இருக் கிறதா இல்லையா என்பதைத் தீர்மானிக்கிற உரிமை மத்திய அரசுக்கு இருக்கிற காரணத்தினாலும் அவர்கள் அதை மறுதளித் திருக்கிறார்கள் என்ற விவரத்தை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

REPORTING SECTION

திரு. துரை கோவிந்தராசன் : துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் பாமணி ஆலையில் பூச்சி மருந்து தொழிற் சாலை அமைக்கும் உத்தேசம் அரசுக்கு இல்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மத்திய அரசு அனுமதிக்கவில்லை என்று சொன்னார்கள் அமைச்சர் அவர்கள்.

திரு. துரை கோவிந்தராசன் : மத்திய அரசு கைவிட்டுவிட்ட தாகச் சொன்னார்கள். தஞ்சை மாவட்டத்தில் உற்பத்தி பெருகி காவிரித் தண்ணீர் பாய்கிற நேரத்திலே பூச்சி இன விருத்தி செய்யப்படும் கூடாரமாக இருக்கிற காரணத்தால் தஞ்சை மாவட்ட விவசாயிகள் உற்பத்தி செய்கிற பொருள்களை பூச்சி யாலும் கெட்டுக் கொண்டிருக்கிற காரணத்தால் வேறு முறை யிலாவது பூச்சி மருந்து தொழிற்சாலை அமைக்கும் உத்தேசம் அரசிடம் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்கும் மாண்பு மிகு உறுப்பினர் திரு. அம்பிகாபதி கேட்டிருக்கிற கேள்விக்கும் கொஞ்சம் கூட தொடர்பு இல்லை. எனவே அவர்கள் ஏதாவது புதிய முயற்சிகள் தேவைப்படுமானால் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி : துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் என்றால் தமிழகத்திற்கே உணவு அளிக்கக் கூடிய மாவட்டம். தஞ்சை மாவட்டத்திலே $15\frac{1}{2}$ லட்சம் ஏக்கர் நிலங்களில் உற்பத்தி செய்யக்கூடிய அதிகமான விவசாயிகள் இருக்கக்கூடிய நிலைமை இருப்பதால் பூச்சி கொல்லி மருந்து தொழிற்சாலையை அமைப்பதற்குப் போன அரசாங்கம் அனுமதி கொடுத்து மத்திய அரசுக்கு அனுப்பியதாக கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் நான் கேட்டுக்கொள்வ தெல்லாம் தஞ்சை மாவட்டத்தில் அதிகமாக உணவு உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கக்கூடிய முறையி லேயும் பூச்சியால் அவர்கள் நசுங்காமல் அவர்களைப் பாதுகாக்கக் கூடிய முறையிலேயும் இப்போது நடைபெறுகிற கூட்டத் தொடரி லேயே அந்தத் தொழிற்சாலை அங்கே வேண்டுமென்று அவசிய மாக ஒரு தீர்மானம் போட்டு மத்திய அர்சை வலியுறுத்துவார் களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : துணைத் தலைவர் அவர்களே், மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தை மனதிலே வைத்துக்கொண்டு விரைந்து நல்ல முடிவு எடுக்க துரிதமாக தன்னுடைய கடமையை அரசு செய்யும்.

திரு. க. சுப்பு : துணைத் தலைவர் அவர்களே, பாமணியில் அந்தத் தொழிற்சாலையை நிறுவ வேண்டுமென்று எல்லா சாத்தியக்கூறுகளும் இருக்கின்றன என்ற முறையிலே அது அனுப்பப்பட்டது. அதற்கான பீஸிபிளிட்டி ரிப்போர்ட் எல்லாம் வந்தது. இப்போது இந்த அரசு அதை வலியுறுத்தத் தவறியதன் காரணமாகத்தான் மத்திய அரசு அதை ரொட்டீனாக மறுத்திருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. மத்திய அரசிடம் வலியுறுத்தாதது இந்த அரசின் தவறுதான். இவர்களுடைய தவறின் காரணமாக அது மறுக்கப்பட்டிருக்கிறது. சில விஷயங்களை வலியுறுத்துகிறீர்கள். சில விஷயங்களை வலியுறுத்துவதில்லை. ஆகவே இப்போதாவது அதை வலியுறுத்துவதற்கு முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி ; துணைத் தலைவர் அவர்களே, நான் திரு. சுப்பு சொன்னதிலிருந்து சற்று மாறுபடுகிறேன். இந்த அரசு வலியுறுத்தவில்லை என்று சொன்னார்கள். இந்த அரசு மட்டுமல்ல, இந்த அரசோடு கூட்டுறவுத் துறையுடன் தொடர்பு கொண்டிருக்கிற தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் கூட நமக்காக மத்திய அரசினிடத்திலே வலியுறுத்தியது. அதற்குப் பிறகும் மத்திய அரசு உரிமம் கொடுப்பதை மறுதளித்திருக்கிறார்கள் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு என்ன காரணத்தினால் அதை மறுதளித்தார்கள் ? நம்முடைய அரசு அதற்கான திட்ட முன் வடிவை—எத்தனை இலட்சம் ரூபாயில் அந்தத் தொழிற்சாலையைத் துவங்குவது என்ற விவரங்களை அங்கே அனுப்பினார்கள் ? ஏன் அவர்கள் மறுத்தார்கள் ? மீண்டும் கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்தும் முறையில் நாம் நடவடிக்கை எடுக்க அரசிடம் என்ன யோசனை உள்ளது என்பதை அமைச்சரவர்கள் கூறுவார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தனிக் கேள்வி போடுமாறு பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுப் பயிற்சிக்கான மையம்.

*523 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் கூட்டுறவு பயிற்சிக்காக 'கூட்டுறவு மையம்' ஒன்று அமைக்கப்பட்டுள்ளதா ?

1979 மார்ச் 24]

(ஆ) அதற்கு மைய அரசு உதவித்தொகை வழங்கியுள்ளதா?

(இ) ஆம் எனில் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) & (ஆ) ஆம்.

(இ) கூட்டுறவு பயிற்சி கல்லூரிக்காக ரூபாய் 47 லட்சங்கள் செலவில் கட்டட அமைப்பு ஒன்று அறிஞர் அண்ணா நகரில் முடிவுறும் நிலையில் உள்ளது. மைய அரசு இந்த கட்டட அமைப்பிற்காக ரூபாய் 10 இலட்சங்கள் உதவித்தொகை வழங்கியுள்ளது. மேலும் கல்லூரி முதல்வர் மற்றும் விரிவுரையாளருக்காகும் முழுச் செலவினையும் மத்திய அரசு, தேசியக் கூட்டுறவு பயிற்சி மன்றத்தின் மூலம் ஈடு செய்கிறது.

திரு. கோ. இளங்கோவன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தப் பயிற்சிக்கு இவ்வாண்டு பெண்கள் கூடத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆனால் அவர்கள் தங்கும் விடுதி இல்லை என்றும் சொல்லப்படுகிறது. அதற்கு ஆவன செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, 47 இலட்சம் ரூபாய் செலவில் கட்டட அமைப்பு அறிஞர் அண்ணா நகரிலே நடைபெறுகின்ற முயற்சி முடிவுற்று இன்னும் இரண்டு மாதங்களுக்குள்—குறிப்பாக மே திங்கள் இறுதிக்குள்ளாக 'கோவாப்பரேட்டிவ் காம்ப்ளெக்ஸ்' என்ற அந்தக் கூட்டுறவு மையம் பேரறிஞர் அண்ணா நகரிலே திறக்கப்பட இருக்கிறது. அப்பொழுது பயிற்சி பெறுகின்ற பெண்கள் தங்குவதற்காக எல்லா வசதிகளும் அங்கே செய்யப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவு மையத்தில் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கின்ற அங்கத்தினர்கள் எத்தனை பேர் ? அதற்கு நிர்ணயிக்கப்பட்ட கால அளவு எவ்வளவு என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, அது பற்றிய விவரம் என்னிடத்திலே இல்லை. தனிக் கேள்வி போடுமாறு மாண்புமிகு உறுப்பினரவர்களை விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவு மையம் எப்பொழுதிலிருந்து நடைபெற்று வருகிறது ? மொத்தம் எத்தனை மாணவர்கள் அதில் படிக்கிறார்கள் ? இந்தப் பயிற்சி முடிந்த பிறகு அவர்கள் வேலைக்கு உத்தரவாதம் கொடுக்க அரசு ஏதாவது செயற்குறிப்பு வைத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தயவு செய்து தனிக்கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன். இது கட்டடத்தைப் பற்றிய பிரச்னை.

அருள்மிகு அருணாசலேஸ்வரர் கோயில்,
திருவண்ணாமலை.

*வினா 524.—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் கோயில் கும்பாபிஷேகம் நடந்து முடிந்ததற்கு பிறகும் புதுப்பிக்கும் வேலைகள் நடைபெற்று வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் புதுப்பிக்கும் வேலைகள் எப்பொழுது முடிவடையும்?

(இ) புதுப்பிக்கும் வேலைகளுக்கு எவ்வளவு ரூபாய் செலவாகும் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : துணைத்தலைவர் அவர்களே,

(அ) திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் ஆலயத்தின் கும்பாபிஷேகம் 1976ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்றது அதன் பின் அவ்வாலயத்தின் வடக்கு ராஜ கோபுரத் திருப்பணியும், தெற்கு ராஜ கோபுரத் திருப்பணியும் 1977ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் ஆரம்பிக்கப்பட்டு, நடைபெற்று வருகின்றன.

(ஆ) 1979ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் இத்திருப்பணிகள் முடிவடையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

(இ) இரண்டு திருப்பணிகளுக்கும் எதிர்பார்க்கப்படுகிற உத்தேசச் செலவு ரூ. 5,10,000.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் தேவஸ்தான திருப்பணி உத்தேச மதிப்பீட்டைவிடக் கூடுதலான செலவினங்களைச் செய்து பணி செய்யப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

1979 மார்ச் 24]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த இரண்டு கோபுரத் திருப்பணிகளுக்கும் சுமார் ஐந்து இலட்சம் ரூபாய் செலவாகலாமென எதிர்பார்க்கப்பட்டிருக்கிறது. இப்பொது ஆண்டுகள் கடந்திருப்பதால் பத்தாயிரம் ரூபாய் அதிக மாகலாம் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 9.40)

திரு. க. சுப்பு : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்படி இந்தக் கோயில் பணியில் தங்களை முழுமையாக ஒப்ப படைத்துக் கொண்டிருக்கிற ஊழியர்களை அரசு ஊழியர் களாக்க, சில கோயில்களில், உத்தரவு போடப்பட்டது. அது அமுல் படுத்தப்படவில்லையென்று கூறப்படுகிறதே (மணியடிக் கப்பெற்றது) நேற்று கூட விவரம் சொல்லியிருக்கிறார். எனவே, அதை அமுல்படுத்த இந்த அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது கோவில் கும்பாபிஷேகம் பற்றிய கேள்வி. இதில், ஊழியர்களைப் பற்றிய கேள்வி கேட்டால் எப்படி பதில் சொல்லமுடியும்? அமைச் சரிடம் பதில் இருந்தால் சொல்லலாம்.

திரு. க. சுப்பு : நம்முடைய அமைச்சரவர்கள் கேள்விக்குச் சம்பந்தம் இல்லாவிட்டாலும் என்று பதில் சொல்லி பழக்கப் பட்டவர்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இது திருவண்ணாமலை அருள்மிகு அருணா சலேஸ்வரர் கோவிலின் கோபுரத் திருப்பணிகளைப் பற்றிய கேள்வி. மாண்புமிகு உறுப்பினரவர்கள் மிக விவரம் தெரிந்த உறுப்பினர், சட்டம் தெரிந்த உறுப்பினர். தனிக் கேள்வி போட்டால்தான் விவரம் சேகரித்துத் தர இயலும் என்று அவரு ருக்குத் தெரியும்.

Tourist Hotel in Mudhumalai Forest area.

*Q. 525.—THIRU K. ABDUL LATHEEF, THIRU S. M. VASAN : Will the Hon. the Minister for Information and Religious Endowments be pleased to state:

(*a*) Whether the Tamil Nadu Tourism Development Corporation has proposed to construct a luxury hotel in the Mudhumalai forest area; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, (அ & ஆ)—சுற்றுலா பயணியர் விடுதி ஒன்று கட்ட தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் முடிவு செய்துள்ளது. அது ஆடம்பர ஓட்டல் அல்ல.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, ஆடம்பர ஓட்டல் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆடம்பரம் என்றால், என்ன, என்ன அம்சங்கள் அடங்கியுள்ளவை ஆடம்பரம் என்று கூறப் படும். அப்படியென்றால், ஆடம்பர ஓட்டலிலே இந்த அம் சங்கள் அடங்கியிருக்கும் வகையில் முதுமலையிலே கட்ட அர சாங்கம் முடிவெடுத்திருக்கிறதா? அப்படியென்றால், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : கேள்வி கேட்ட மாண்புமிகு உறுப்பினர் ஆடம்பர ஓட்டல் என்று கேட்டிருக் கிறார். ஆகவே, ஆடம்பர ஓட்டல் என்பதற்குள்ள இலக் கணத்தை அவர்தான் தெரிவிக்கவேண்டும். ஆகவே அவர் தெரிவித்தால்தான் அதுபற்றிய விளக்கத்தைத் தெரிவிக்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூலக் கேள்வியை திரு. எம். அப்துல் லத்தீப் கேட்கவில்லை, வேறு அப்துல் லத்திப் கேட்டார்.

சிறைச்சாலையில் சலுகைகள்.

*526 வினா—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் எதிர்கட்சித் தலைவர் 1977-78ல் சென்னை சிறைச்சாலையில் வைக்கப் பட்டிருந்தபோது, விசேஷ சலுகைகள் எவையேனும் அளிக்கப் பட்டதா ?

THE HON. THIRU K. NARAYANASWAMI The Leader of the Opposition of the Tamil Nadu Legislative Assembly when he was confined as a special remand prisoner in the Central Prison, Madras during 1977-78 sought the permission to bring his transistor radio from his home to keep it in his cell mainly with a view to listen to the news bulletin. Treating this as a special case the Government granted the permission in this regard

1979 மார்ச் 24]

Apart from this, no other special amenities other than those permissible to the special class remand prisoners as per the prisons rules were allowed to the Leader of the Opposition of the Tamil Nadu Legislative Assembly during his confinement.

திரு. மு. அம்பிகாபதி ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசியல் கட்சிகளைச் சேர்ந்த கைதிகள் என்றால், அனைவரும் அரசியல் கைதிகளாகவே நடத்தப் படுவதற்கான முறையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா, அந்தஸ்துகளைப் பாராமல் என்பதை அறிந்து கொள்ள விரும்புவதோடு அரசியல் கைதிகளுக்கு தனியான சிறைச்சாலை கள் அமைக்கவும் அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMI : Under the present rules there is as yet no proper definition of what is called 'political prisoners' and therefore the question does not arise.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, சட்டப் பேரவையின் எதிர்கட்சித் தலைவரவர்களுக்குச் சென்னைச் சிறைச்சாலையிலே அளிக்கப்பட்ட அந்த விசேஷ சலுகை, கேட்டு தரப்பட்டதா அல்லது அரசே தந்ததா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூலக் கேள்விக்கான பதிலிலேயே சொல்லிவிட்டார். கேட்டு கொடுக்கப்பட்டது, ' நியூஸ் ' கேட்பதற்காக, என்று.

THE HON. THIRU K. NARAYANASWAMI : I think, if my memory serves me all right, I have a recollection that when I visited the Central Jail on 11th November 1977, I met all the remand prisoners including my old friend and client the Hon. Leader of the Opposition and my old friend with whom I have had contact from the year 1952, i.e. Professor Anbazhagan and I think my friend Thiru Sadiq Pasha was also there and many other friends. I need not read out the entire roll of the old friends I met there. I have a recollection that the Honourable Leader of the Opposition expressed, being himself so saturated in the politics of this State and the country, so much acquainted with and participating in the politics of the State and elsewhere, he expressed a desire for possessing the transistor radio for hearing news which I think I conveyed to my Honourable Chief Minister, Immediately thereafter I think the necessary formalities were gone through and the transistor set was brought from his own home for the use of the Honourable Leader of the Opposition.

திரு. கே. பண்ணை சேதுராம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் பாளையங்கோட்டை சிறை சாலையில் இருக்கும்போது, பாம்புகளும், பூரான்களும்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: (மணியடித்து) தயவுசெய்து அமருங்கள். கேள்வி நேரத்திலே சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் பேசாதீர்கள். பாளையங்கோட்டைக்கு இது சம்பந்தம் இல்லாத விஷயம்.............

திரு. கே. பண்ணை சேதுராம்: நான் சொல்வதை தயவு செய்து கேளுங்கள்...............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மத்திய சிறையில் இருக்கிறபோது என்னென்ன சலுகைகள் அளிக்கப் பட்டது என்பதுதான் கேள்வி. நீங்கள் வேறு இடத்திற்கு போக வேண்டாம் தயவு செய்து உட்காருங்கள்.........

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவர் அவர்களே, என்னை கேள்வி கேட்க அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை, தயவு செய்து அமருங்கள், சொன்னால் கேளுங்கள், தயவு செய்து அமருங்கள், நீங்கள் உட்காரவில்லை என்ருல் நான் அடுத்த உறுப்பினரை அழைக்கிறேன். திரு. மு. அம்பிகாபதி.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் சொல்லுகிறபோது அரசியல் கைதிகள் யார், கிரிமினல் கைதிகள் யார் என்று பாகுபடுத்துவதற்கான முறையில் சட்டத்திலே எந்தவிதமான பகுதியும் இல்லை என்று குறிப்பிட்டார்கள், சுதந்திரம் வந்து 30 வருஷங்களுக்குப் பிறகும், அரசியல் கைதிகள் யார், கொலை, கொள்ளை, திருடுகள் செய்யும் கிரிமினல் கைதிகள் யார் என்று பிரித்துப் பார்த்து அரசியல் கைதிகளுக்கு தனியான சலுகைகள் கொடுக்கக்கூடிய அளவிலே இல்லை என்று சொன்னால் என்ன செய்வது? அப்படி அரசியல் கைதிகளுக்கு தனியான சலுகைகளை சிறைச்சாலையில் வழங்க ஒரு சட்ட முன்வடிவு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து கிரிமினல் கைதிகளோடு அரசியல் கைதிகளையும் அடைத்து வைக்காமல் அவர்களுக்குத் தனிச் சிறைச்சாலைப் பிரிவு ஏற்படுத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMI: So far as the first question is concerned, Government will certainly consider this aspect of the matter raised by the Hon. Member.

So far as the second part of the question is concerned whether there can be a separate cell or separate premises in the Jail will be a matter for enquiry and investigation and findings by the Jail Reforms Commission.

திரு. க. சுப்பு: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தக் கேள்வியிலேயே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மத்திய சிறைச்சாலையில் இருந்தபோது அவருக்கு கொடுக்கப்பட்டிருந்த சலுகைகளைப் பற்றி கேட்டிருந்தது. அதனால்தான் திரு. அம்பிகாபதி அவர்கள் அதைப்பற்றி இப்படிக் கேட்டிருக்கிறார். இலங்கையிலிருந்து எதிர்க்கட்சித் தலைவர் வந்தால், இங்கிலாந்திலிருந்து எதிர்க்கட்சித் தலைவர் வந்தால் அவருக்கு கேபினட் மினிஸ்டரின் அந்தஸ்து அளிக்கப்பட்டு வரவேற்கப்படுகிறது. அது மாதிரியே அரசியல் கைதிகளை காபினட் மினிஸ்டர் அந்தஸ்து கொடுத்து சலுகைகள் கொடுக்க வேண்டும். ஏன் மந்திரிகளே கைது செய்யப்படலாம், அதனால் அந்தச் சட்டம் கொண்டு வரப்படவேண்டும். இந்திராகாந்திக்கு ஜனதா கட்சி கொடுத்ததுபோல் இல்லாவிட்டாலும், காபினட் மினிஸ்டரின் அந்தஸ்திற்கு சமமாகவாவது அரசியல் கட்சிகளுக்கு சிறைச்சாலையில் சலுகைகள் காட்டப்படவேண்டும்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சுப்பு, திரு. பண்ணை சேதுராம் அவர்களுக்குச் சொன்னதுதான உங்களுக்கும். மந்திரிகள் கைது என்றெல்லாம் தேவையில்லாத விஷயங்கள்.

(முற்பகல் 9-50)

திரு. க. சுப்பு: எதிர்க்கட்சித் தலைவர் என்று சொன்னல் அப்படி அவர் அங்கீகரிக்கப்பட்டு, காபினட் அந்தஸ்து கொடுக்கப்பட்டு இருக்கிறது. பீகாரில் காபினட் அந்தஸ்துள்ள மந்திரியையே கைது செய்து சிறையில் வைத்து இருக்கிறுர்கள். அப்படி அமைச்சராக இருக்கிறபோதும் ஜெயிலுக்குப் போகலாம். ஆகவே, அமைச்சருக்கு இருக்கிற அந்த ரேங்கில் எதிர்க்கட்சித் தலைவர் டிரீட் செய்யப்பட வேண்டும். அப்படி செய்யப்பட்டு இருக்கிறார்களா என்பதுதான் கேள்வி. இந்திரா காந்தியை எப்படி டிரீட் செய்தார்களோ அப்படி டிரீட் செய்தார்களா என்பது கேள்வி. காபினட் மினிஸ்டருக்குக் கொடுக்க வேண்டிய டிரீட்மெண்ட் கொடுத்தார்களா என்பது கேள்வி.

THE HON. THIRU K. NARAYANASWAMI: This Government was quite happy to give one more amenity, viz., a fan, because I heard a complaint that there was mosquito nuisance in the jail.

As it is prevailing throughout the City of Madras, Jail cannot be an exception and so, there was mosquito nuisance. That month was I suppose, somewhere about November. So, there was also sultriness and hence, a fan was also furnished for the use of the Hon. Leader of the Opposition. Other amenities which are normally allowed for other prisoners—Ovaltin, Milk, Nescafe, Fruits, Vegetables—also were permitted to be used for supplementary diet.

திரு. மு. அம்பிகாபதி: துணைத் தலைவர் அவரகளே, இந்த சட்டமன்றத்தில் சிறைச்சாலையைப் பற்றி பல முறை பேசப்பட்டு சிறை சீர்திருத்தக் கமிஷன் அமைக்கப்படுகிற போது சிறைக்குச் சென்ற அனுபவம் உள்ள, அதுவும் அரசியல் கைதியாகச் சென்று அனுபவம் உள்ள, சட்ட மன்ற உறுப்பினர்களை அந்தக் குழுவில் போட வேண்டும் என்று கேட்டோம். இருந்தாலும், அரசாங்கம் அமைத்து இருக்கும் கமிட்டியில் சிறைக்கு அனுப்புவதிலேயே அனுபவம் உள்ளவர் களைத்தான் அதிகமாக தண்டனை கொடுத்து இருக்கி றார்கள் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவருக்கு என்னென்ன சலுகைகள் வழங்கப்பட்டன என்பது தான் கேள்வி. அதற்கு அமைச்சர் பதில் சொல்லி விட்டார்கள்.

திரு. மு. அம்பிகாபதி: ஆகவே, அரசியல் கைதிகளாக சிறைக்குச் சென்று அனுபவம் உள்ள சட்டமன்ற உறுப்பினர் களையும் அந்தக் கமிட்டியில் இணைத்துப் போடுவதற்கு அரசு முன் வருமா?

THE HON. THIRU K. NARAYANASWAMI : I would request the Hon. Member Thiru Ambikapathi to give an excellent description of his experience of his jail life before the Prison Reforms Commission.

திரு. கே. பண்ணை சேதுராம்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் மத்திய சிறைச்சாலையில் இருக்கும்போது டிரான்சிஸ்டர் வைத்து அனுபவித்ததாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது சொன்னார்கள். அப்படி டிரான்சிஸ்டர் வைத்து அவர்கள் அங்கே அனுபவித்த விபரங்களை எல்லாம், அந்தச் சிறைச் சாலையின் கதவு களுக்குப் பக்கத்திலே, நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் இங்கே தான் டிரான்சிஸ்டர் வைத்து எல்லாப் பாட்டுக்களையும் கேட்டுக் கொண்டு இருந்தார் என்ற கல்வெட்டு வைக்கப்படுமா? பாளையங்கோட்டை சிறைச் சாலையில் இங்கேதான் பாம்போடும், தேளோடும் அவர் போராடினார் என்று கல்வெட்டு இருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட கல்வெட்டு இங்கே வைக்க அரசு முன் வருமா?

THE HON. THIRU K. NARAYANASWAMI : Mr. Deputy Speaker, Sir, this question is totally irrelevant and totally not germane to the main question.

Abolition of death penalty.

*Q. 527—THIRU SALEM M. ARUMUGAM : Will the Hon. the Minister for Law be pleased to state—

(*a*) whether the Central Government has sought the views of the State Government on the question of the abolition of death penalty; and

(*b*) if so, the details thereof ?

THE HON. THIRU K. NARAYANASWAMI : (*a*) and (*b*)—The Central Government have not sought for the views of the State Government on the question of abolition of death penalty in the recent past. However, in 1956, the Government of India called for certain particulars regarding the total number of murders committed etc. and also the views of this Government on the general question of abolition of capital punishment in India in connection with a private Member's Bill that had been introduced in Parliament seeking to abolish capital sentence in India. The Government of India were informed that this Government were definitely against the abolition of capital punishment.

திரு. எம். ஆறுமுகம்: தலைவர் அவர்களே, இன்று உலகத்தில் பல பகுதிகளிலும் மரண தண்டனை அளிப்பது கூடாது என்ற கருத்து இருக்கிறது. இந்தியாவில் அது குறித்து ஒரு சட்டம் கொண்டு வர வேண்டும் என்று கருத்து ஆராயும் போது, சட்டத் துறையை மட்டுமே கலந்து அதன் மீது கருத்துக்களை மாநில அரசு அனுப்புவது சரியா? இம்மாதிரி கொள்கை பிரச்சினையில் சட்ட சபையைக் கலந்தும், சட்ட நிபுணர்களைக் கலந்தும் முடிவு எடுக்க அரசு முன் வருமா?

THE HON. THIRU K. NARAYANASWAMI : This Government is not responsible for sending a communication as early as 1956, i.e., 22 years or 23 years earlier.

திரு. ரா. உமாநாத்: துணைத் தலைவரவர்களே, மரண தண்டனை இருந்தும்கூட கொலைகளைப் பொறுத்த வரையில் அது நடந்து கொண்டுதான் இருக்கிறது.

Death sentence has failed to be a deterrent against murders.

அதைத் தடுப்பதற்கு ஊக்குவிக்கக் கூடியது என்ற நிலையில் மரண தண்டனை இருந்தும்கூட தவறு நடக்கிறது. அது இல்லாமல் இருந்தால் இன்னும் கூடுதல் கொலைகள் நடக்கும் என்பது ஹைபாத்திட்டிகல் கொஸ்டின். காபிடல் பனிஷ் மெண்ட் இருந்தும்கூட ஆவேசத்தில் கொலை செய்து விடுகிறான். ஆவேசத்தில் செய்யும்போது அவனுக்கு 'டெத் சென்டன்ஸ்' இருப்பது தெரிவதில்லை. ஆனால் டெத் சென்டன்ஸ் இருந்தும்கூட திட்டம் போட்டு கொலை செய்கிறவர்களும் செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். கொலை செய்தால் டெத் சென்டன்ஸ் உண்டு என்று தெரியும். தெரிந்தும்கூட திட்டம் போட்டு செய்கிறார்கள். எவிடன்ஸ் தெரியாத அளவுக்கு வெங்கடாசலம் மர்டர், பிளான் பண்ணி செய்தது. கீழ்வெண்மணியில் அரிசனங்கள் படுகொலை செய்யப்பட்டது திட்டம் போட்டு, லேடெஸ்ட்—முருகையன் படுகொலை; விஸ்வநாதன் கொலை செய்யப்பட்டது இப்படி ஒரு சீரிஸ் ஆஃப் கேஸஸ் நான் சொல்ல முடியும். ஆக திட்டம் போட்டு கொலை செய்கிறவனுக்கும், ஆவேசத்தில் தெரியாமல் கொலை செய்கிறவனுக்கும் தண்டனை ஒரே மாதிரிதான் இருக்கிறது. ஆகவே, இந்த அரசாங்கம் அதை தடை போட சிபாரிசு செய்யுமா? எச். எம். பட்டேல், ஹோம் மினிஸ்டர் போன வாரம் பார்லிமெண்டில் ஸ்பெஷல் கோர்ட் பில்லில் பேசும்போது, புபேஷ்குப்தாவுக்கு பதில் சொல்லும் போது 'டெத் சென்டன்ஸை' அபாலிஷ் பண்ணுவது பற்றி சீரியசாக கன்சிடர் செய்து கொண்டிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார். நம்முடைய மாநில அரசும் அதோடு சேர்ந்து சிபாரிசு செய்ய முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYASWAMI: I would very much like to get the clarification from the hon. Member whether he wants total abolition of death sentence or whether he wants distinction between deliberate pre-planned murders and murders that take place some times on the excitement of the moment which is caused by certain factors. (Thiru R. Umanath: Total abolition). This aspect will be taken into consideration. I may assure the hon. Member that even today England is reconsidering reimposing the death penalty. There has been recently a debate in the House of Lords where one of the most respected Law Lords of England who has had a life-time criminal law experience has pleaded for the restoration of the death sentence—Lord Justice God ard I would myself get the entire report of the debate and give more details, if necessary, for, some of the Law Lords who have been quite familiar with this branch of law have pleaded for the restoration of the death penalty. There are still a few countries where the death penalty is being seriously advocated.

I submit respectfully to this House that according to Thiru Umanath just because there is death sentence, murders have not ceased in this country. I am sorry to say with great respect to Mr. Umanath, there is a tremendous fallacy in his argument. It is an erroneous and fallacious argument to think that just because of the deterrent punishment all offences must cease. Do thefts cease just because the said offence is punishable with three years of imprisonment? Do rape ceases not occur in this country or in any other country just because it is punishable with 7 years imprisonment extending to life imprisonment? Offences do take place and they do occur. Detterrence is only one factor which enters into the mind of a Court in awarding its punishment. In a poison case which is deliberately planned, death sentence must be the proper sentence. For a political murder which has been planned deliberately with tremendous amount of what I call, crookery, cleverness, villainy and black-dyed deliberation and preparation. and I think it must be visited with death sentence. I have no regrets for awarding death sentence if the offence is not attended with extenuating or mitigating circumstances.

திரு. இ. தமிழரசன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, தண்டனை அளிக்கப்பட்ட பிறகு, படிப்படியாக கருணை மனு செய்து, குடியரசுத் தலைவர் அவர்களால் நிராகரிக்கப்பட்டப் பிறகும்கூட இரண்டு, மூன்று தடவைகள் மரண தண்டனையை நிறைவேற்றுவதை தள்ளி வைக்கிறார்கள். அதற்கான காரணம் என்ன? அதற்கு வழி முறைகள் இருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMI: That is for the simple reason that the man who is sentenced to death appeals to the President to exercise his prerogative power. Then failing there, he comes before the State Government and again after failing before the State Government he files one Criminal Miscellaneous Petition in the High Court and gets stay for a few days. Again he resorts to the legal expedient of going to the Supreme Court against the Criminal Miscellaneous Petition and then resorts to get a few more days. This is what is called the man who is under the shadow of death trying to get some reprieve either from the State Government or from the President or from the Court.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இத்துடன் கேள்வி நேரம் முடிவுற்றது. மற்ற கேள்விகள் நாளை எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு.

மேலவையில் இருந்து வரப்பெற்ற செய்தி குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்ற மேலவை கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளை திருத்தம் ஏதும் இன்றி நிறைவேற்றியதாக மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப் பெற்றுள்ளது.

1. தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு தனியார் காடுகள் பாதுகாப்பு (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்ற பேரவை சட்ட முன் வடிவு எண். 25/1978).

2. தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு நாடக நிகழ்ச்சிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 26/1978).

3. தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு உணவகங்கள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 40/1978).

4. தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு தனியார் வனங்களைப் பாதுகாத்தல் (கன்னியாகுமரிக்கு நீடித்தல்) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 15/1979.)

3. தகவல் கோரல்.

(அ) உரிமைப் பிரச்சினை எடுத்துக் கொள்வது குறித்து.

திரு. ஜே. ஜேம்ஸ்: துணைத் தலைவரவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். நான் நேற்றைய தினம் ஒரு உரிமை மீறல் பிரச்சினை இங்கே எழுப்பினேன். அப்போது மாண்புமிகு பேரவைத் தலைவரவர்கள் 'அது என்னுடைன கவனத்திற்கு வந்து விட்டது. ஆகவே நாளை எடுத்துக் கொள்ளலாம்' என்று கூறினார்கள். ஆகவே அதனை.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அதனைத் தன்னுடைய கவனத்திற்கு வந்திருப்பதாகவும் ஆகவே அதனை நாளை அதாவது இன்று எடுத்துக்கொள்வதாகவும் கூறினார்கள். தலைவர் இங்கே வந்த பிறகு அது எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1979 மார்ச் 24]

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, பொதுவாக இன்று ஒரு முக்கியமான பிரச்சினை, கோர்ட்டுகள் இயங்க வில்லை..............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 41, 42 ஆகிய பிரிவுகள் எவை எவை எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது என்பதைத் தெரிந்துகொண்ட பிறகு இது மாதிரி பிரச்சினை களைக் கிளப்பலாம். ஆகவே எல்லா உறுப்பினர்களுக்கும் சொல்லிக்கொள்கிறேன் அதாவது எவை எவை எடுத்துக் கொள்ளப்படப் போகின்றன என்பதைத் தெரிவிப்பதற்கு முன்பே இவ்வாறு கேட்பது சரியல்ல.

(4) ஒத்தி வைப்புத் தீர்மானங்கள்.

(அ) வழக்கறிஞர்களது வேலை நிறுத்தம் காரணமாக நீதித் துறை இயங்காமல் இருப்பது குறித்து.

1979ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 16ஆம் நாள் முதல் தமிழகத்தில் வழக்கறிஞர்கள் நடத்துகிற வேலை நிறுத்தத்தின் காரணமாக நீதித் துறை இயங்காமல் இருக்கிற பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் திரு. ஆர். உமாநாத், திரு. ஜே. ஜேம்ஸ், திரு. எம். ஏ. லத்தீப், திரு. கே. கந்தசாமி, திரு. மு. ஆறுமுகம் திரு. சோ. அழகர்சாமி, திரு. கூத்தக்குடி ச. சண்முகம், திரு. மு. அம்பிகாபதி, திரு. பொ. உத்திராபதி, திரு. செ. சிவசாமி, திரு. ரா. கிருஷ்ணன், திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து மிகச் சுருக்கமாக விளக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: பேரவைத் துணைத் தலைவரவர் களே, நான் 1979ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 21ஆம் நாள் அன்றே கொடுத்திருக்கிறேன். அதாவது "இந்திய அரசியல் சட்டத்தில் கூறப்பட்ட மூன்று பிரிவுகளில் ஒன்றான நீதி மன்றங் கள் தமிழ்நாட்டில் செயல்படாமல் இருக்கின்றது. குறிப்பாக சென்னை உயர்நீதி மன்றம் உட்பட பல்வேறு நீதிமன்றங்கள் தொடர்ந்து செயல்படாததால் தமிழக மக்கள் பெறவேண் டிய நீதியைக் கூட சில நாட்களாக பெற முடியாமல் தவிக் கின்றார்கள். தமிழகம் பூராவும் இதனால் ஏற்பட்ட பதட்ட மான சூழ்நிலையைக் குறித்து விவாதிக்க" அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறேன். இதனை நான் 21ஆம் தேதியே கொடுத்திருக்கிறேன்.. ஏன் எடுத்துக்கொள்ளப்படவில்லை?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் அவ்வாறு கொடுத்ததிற்குப் பின்னாலே உங்களுக்கு தக்க தகவல் அனுப்பப்பட்டிருக்கிறது. ஆனால் அதற்குப் பிறகு இருந்த முக்கியத்துவத்தைப் பொறுத்து அது எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிறது. நீங்கள் கொடுத்ததற்கு, அது தள்ளிவிடப் பட்டது என்ற தகவல் உங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது: மேலும் அன்றைய சூழ்நிலை அப்படி இருந்தது. அது ஏன் எடுத்துக்கொள்ளப்படவில்லை என்று நீங்கள் கேள்வி கேட்கக் கூடாது. அப்போதைக்கப் போது இருக்கக்கூடிய முக்கியத் துவத்தைப் பொறுத்து ஒரு பிரச்சினை எடுத்துக்கொள்ளப் படலாம், அல்லது தள்ளிவிடப்படலாம்.

திரு. நா. சுந்தரராஜ்: இப்போதாவது சேர்த்துக்கொள்கி றீர்களா இல்லையா, அதையாவது சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்கள் பெயரை சேர்த்துக் கொள்வதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் நீங்கள் கொடுத்த தீர்மானம் தள்ளப்பட்டிருப்பதாக உங்களுக்குப் பதில் அனுப்பப்பட்டுவிட்டது. இப்போது அதைப் பற்றி நீங்கள் எழுப்ப முடியாது, அடுத்ததாக எதிர்க் கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள்.....

திரு. நா. சுந்தரராஜ்: அப்படியானால் இப்போது மட்டும் அதே பிரச்னை எப்படி எடுத்துக்கொள்ளப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்களுடைய ஒத்திவைப்புத் தீர்மானம் தள்ளப்பட்டிருக்கிறது என்று பதில் அனுப்பப்பட்டுவிட்ட பின்னால் உங்கள் பெயரை எப்படி சேர்த் துக்கொள்ள முடியும்? இதை ஒப்புக்கொண்டால் இதே மாதிரி இன்னும் பத்து பேர்கள் எழுந்து நாங்களும் இது மாதிரி ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருந்தோம், எங்களுடைய பெயர்களையும் சேர்த்துக்கொள்ளுங்கள் என்று சொல்வார்கள் அதற்காகத்தான் இப்போது மறுக்கிறேன். உங்கள் தீர்மானம் தள்ளுபடி செய்தாகிவிட்டது.

திரு. நா. சுந்தரராஜ்: நீங்கள் எப்படி தள்ளுபடி செய்ய லாம்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது நான் கைந்து நாட்களுக்கு முன்னாலேயே தள்ளுபடி செய்தாகிவிட்டது நீங்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தீர்கள். அதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. ஒத்தி வைப்புத் தீர்மானங்களுக்கு என்று சில விதி முறைகள் இருக்கின்றன. அதை நாம் ஃபாலோ பண்ணவேண்டும். நான்கைந்து நாட் களுக்கு முன்னால் நீங்கள் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானத் திற்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது என்று பதில் தந்தாகி

[பேரவைத் துணைத் தலைவர்]

விட்டது. நீங்கள் மட்டுமல்ல, உங்களைப் போன்ற பலபேர்களும் கொடுத்திருக்கிறார்கள். அன்றைக்கிருந்த சூழ்நிலையில் அது எடுத்துக்கொள்ளப்படவில்லை. ஆகவே அது மறுக்கப்பட்டிருக்கிறது. அதையே இன்றைக்கு எடுத்துக்கொள்ளவேண்டும் என்று எப்படி வற்புறுத்த முடியும்?

திரு. நா. சுந்தரராஜ்: இங்கே அனுமதி மறுக்கப்பட்டது, ஆனால் மேலவையில் இதை எடுத்துக்கொண்ட பிறகு இங்கு நமக்கு புத்தி வந்த பிறகு இதை எடுத்துக்கொண்டிருக்கிறோம். அது மட்டும் சரிதானா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அங்குள்ள தலைவர் வேறு, இங்குள்ள தலைவர் வேறு, இதையெல்லாம் நீங்கள் சொல்லிக்கொண்டிருக்க முடியாது.

திரு. நா. சுந்தரராஜ்; ஏதாவது ஒரு முறையை வைத்துக் கொள்ளவேண்டும்.......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்களுடைய ஆலோசனைக்கு நன்றி.

திரு. ஒ. சுப்பிரமணியன்: ஒரு பிரச்னைக்காக ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கப்பட்டு அது மறுக்கப்பட்டால், அதில் தொடர்ந்து முக்கியத்துவம் இருக்கிறது என்று கருதினால், அடுத்த நாளே இன்னொரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுக்கலாம், அப்படி நீங்கள் கொடுக்கவில்லை.

திரு. மு. கருணாநிதி: துணைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய தீர்மானம் தள்ளப்பட்டது உறுப்பினர் அவர்கள் அறிந்து கொள்ளாமல் இருந்திருக்ககூடும். ஆகவே மீண்டும் விதிவிலக்காக கருதி இதை ஒரு முன் உதாரணமாக எடுத்துக் கொள்ளாமல், விதிவிலக்காகக் கருதி அவருடைய பெயரையும் இணைத்துக்கொள்ளவேண்டும் என்று தங்களை கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துச்சொன்னது போல், இதில் ஒரு விதிவிலக்கு என்று மட்டும் கருதி, இது நிரந்தரமான ஒரு முறை என்றில்லாமல் விதிவிலக்காக எடுத்துக்கொண்டு அவரையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களையும் பேச அனுமதிக்க வேண்டும் என்று எதிர்கட்சித்

தலைவர் அவர்களின் கருத்தோடு நானும் ஒன்றி, நானும் உங்களை வேண்டிக்கொள்கிறேன், விதிவிலக்கு என்று கருதி அவருக்கு வாய்ப்பு வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஒ. சுப்பிரமணியன் : முதல் நாள் தள்ளுபடி செய்து விட்ட ஒருவர் பெயர்மட்டும் இப்போது அந்தப் பிரச்னையில் எப்படி எடுத்துக்கொள்ளப்படுகிறது?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜ் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் இளங்கோவன் அவர்களும் ஒரே விதியின் கீழ்தான் ஒத்திவைப்புத் தீர்மானங்களை கொடுத்திருந்தார்கள். 42-வது விதியின் கீழ் கொடுக்கப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானங்கள் எடுத்துக்கொள்ளப்படவில்லை. தலைவர் அவர்கள் பதில் எழுதி அனுப்பிவிட்டார். ஆனால் இளங்கோவன் அவர்கள் மீண்டும் அதை எழுதிக் கொடுத்திருக்கிறார். சுந்தரராஜன் அவர்கள் அவ்வாறு மீண்டும் எழுதிக் கொடுக்கவில்லை. ஒருவர் ஒரு பிரச்னையை முக்கியத்துவம் என்று கருதினால் தொடர்ந்து அடுத்த நாளும் அதைப்பற்றி எழுதிக் கொடுத்திருக்கலாம். அதை நீங்கள் செய்யவில்லை. அதனால்தான் உங்கள் பெயரை இதில் இணைத்துக்கொள்ள முடியவில்லை. நீங்கள் கொடுத்த தீர்மானம் நிராகரிக்கப் பட்டிருப்பதால் நீங்கள் சொல்வதை ஏற்க முடியாது என்று குறிப்பிட்டேன். இருந்தாலும் அவை முன்னவர் அவர்களும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் கேட்டுக்கொண்டபடி, விதி விலக்காக இதை ஒரு முன் உதாரணம் என்று வற்புறுத்தாமல் இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு திரு. சுந்தர ராஜன் அவர்களுடைய பெயரையும் சேர்த்துக்கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1979 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 16 ஆம் நாள் முதல் தமிழகத்தில் வழக்கறிஞர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடு பட்டிருப்பதன் காரணமாக நீதித்துறை இயங்காமல் இருக்கின்ற ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. சென்னை போன்ற நகரங் களில் மட்டுமல்லாமல், எல்லா இடங்களிலும் நீதி மன்றங்கள் எங்கெங்கு இருக்கின்றனவோ அது எத்தகைய நீதி மன்றங் களாக இருந்தாலும் அந்த நீதிமன்றங்களில் எல்லாம் வழக் கறிஞர்கள் சென்று வாதாடுகின்ற நிலை இல்லாமல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பதால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள்.

[முற்பகல் 10-10]

இந்தப் பிரச்னை ஏதோ வழக்கறிஞர்களுக்கும், காவல் துறை நண்பர்களுக்கும் நடைபெற்ற ஒரு போராட்டமாக யாரும் கருதக் கூடாது. ஒரு தனிப்பட்ட சம்பவம்தான். வழக்கறிஞர்

1979 மார்ச் 24] *[திரு. மு. கருணாநிதி]*

ஐயாத்துரை என்பவர் மதுரையிலே காவல் துறை அதிகாரிகளிடம் அவர் ஒரு முறையீடு காரணமாக சென்றிருந்த நேரத்தில், தாக்கப்பட்டு அப்படி தாக்கப்பட்ட சம்பவம் பத்திரிகைகளிலே வெளிவந்த பிறகு, அவரும் முதல் அமைச்சர் அவர்களைச் சந்தித்து நிலைமைகளை எடுத்துக் கூறி உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று உறுதிமொழி எல்லாம் அளித்த பிறகும் இந்த மாமன்றத்திலே அப்படிப்பட்ட உறுதி மொழிகள் அளித்த பிறகும், வழக்கறிஞர்களுடைய மிகமிக முக்கியமான கோரிக்கையாக இருந்து வருவது, வழக்கறிஞர் தாக்கப்படுவது சம்பந்தமான புகாரின்மீது, அந்தக் காவல் துறையாளர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு இருந்தும் கூட, அவர் வேலையிலிருந்து தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்படாதது ஏன் என்ற கேள்வியாகும். எத்தனையோ சிறு சிறு காரணங்களுக்காக, அந்தக் காரணங்களையெல்லாம் எடுத்துச் சொல்லி, அந்த எடுத்துக்காட்டுகளையெல்லாம் இங்கே குறிப்பிட்டு, நான் இந்தப் பிரச்னையை சிக்கலாக்குவதற்கு விரும்பவில்லை. அவைகள் எல்லாம் இந்த நாடறிந்த எடுத்துக்காட்டுகள். அவைகளுக்காக திடீர், திடீரென்று காவல் துறை அதிகாரிகள், காவலர்கள் தற்காலிக வேலை நீக்கம் செய்துவைத்து, நடவடிக்கைகளை எடுத்துக் கொண்ட இந்த அரசு, கடந்த ஒரு வார காலமாக நடைபெறுகின்ற நாடு தழுவிய இந்த வழக்கறிஞர்கள் இயக்கத்தினுடைய கோரிக்கைக்கு மதிப்பளித்து, நடந்துகொள்ளாத அணுகுமுறை மிக மிக கண்டிக்கத் தக்க ஒன்று என்பதை சுட்டிக்காட்ட வேண்டுமென்பதற்காகவும், அது அன்னியில் இந்த வேலை நிறுத்தத்திற்கு ஆதரவாக, அனுதாபம் தெரிவிக்கின்ற, அறவழிக் கிளர்ச்சியிலே ஈடுபடுகின்ற ஏராளமான வழக்கறிஞர்களை கைது செய்து, சிறையிலே அடைக்கப்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டுவதற்காகவும் தான். அப்படி கைது செய்யப்பட்டு, மதுரை சிறையிலே அடைக்கப்பட்டிருப்பவர்களை சென்று பார்ப்பதற்காக, நேற்று மதுரைக்கு வேறு ஒரு நிகழ்ச்சிக்காகச் சென்றிருந்த எதிர்க் கட்சித் துணைத் தலைவர் பேராசிரியர் அவர்களும், மற்றும் பலரும் முயன்றும்கூட அதிகாரிகள் நிர்வாக சிக்கலின் காரணமாக நீங்கள் சிறையிலே இந்தக் கைதிகளை பேட்டி காண இயலாது என்று அவர்களுக்கு எழுத்து மூலமாகவே மறுப்பு தெரிவித்து, பேராசிரியரும் மற்றவர்களும் திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறார்கள். இந்த அளவிற்கு அரசாங்கம் ஒரு அணுகுமுறையை மேற்கொண்டிருக்கிறது. மிகமிக சாதாரணமான ஒரு கோரிக்கையை வீம்பின் காரணமாக, கௌரவப் பிரச்னையாகக் கருதி, இந்த நிலை வளர்க்கப்படுகின்ற காரணத்தால், இந்தக் காவல் துறையினருக்கும், வழக்கறிஞர் பெரு மக்களுக்கும் இடையே பெரிய மோதல் என்ற நிலையை எதிர் காலத்தில் ஏற்படுத்தி விடுமானால், அது மேலும் பல குழப்பங்களை ஏற்படுத்துவதாகும். எனவே, இந்த இரு சாராரையும் ஒற்றுமைப்படுத்துகின்ற நிலைக்கு, ஒரு நல்ல முடிவை இந்த அரசு எடுத்திட வேண்டும்.

காவல் துறை அதிகாரி மாற்றப்பட வேண்டுமென்று சொன்னோம். மதுரையிலே உள்ள திருப்பரங்குன்றத்திலே இருந்து, திருமங்கலத்திற்கு அவர் மாற்றப்பட்டிருக்கிறார்கள். இடையிலே 5, 6 மைல்கள்தான். இப்படி 5, 6 மைல்கள் தூரத்திற்கு மாற்றப்படுவது ஒரு நடவடிக்கையா என்று கூட கேட்டோம். இன்றைக்கு செய்திகள் வந்துள்ள வகையில் பார்த்தால் அவர் திருமங்கலத்திற்குகூட மாற்றப்படவில்லை. திருப்பரங்குன்றத்திலிருந்து, மதுரையிலேயே உள்ள நல்லாகுளம் போலீஸ் நிலையத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறார்.

அது அவருக்கு வழங்கப்பட்ட தண்டனை என்பதை எண்ணுகிற நேரத்தில் உள்ளபடியே இந்த அரசு வேண்டுமென்றே வழக்கறிஞர்கள் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள இயலாது முடியாது என்ற அலட்சியப் போக்கும், வீம்புப் போக்கும் கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி மேலும் பல விவரங்களை இங்கே எடுத்துக் கூறவும் நான் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை அளித்திருக்கிறேன். அவைகளைப் பற்றியெல்லாம் விரிவாகப் பேசுகிற வாய்ப்பை அளிக்கின்ற வகையில் அவையை ஒத்தி வைத்து விவாதிப்பதற்கான வாய்ப்பினை வழங்க வேண்டுமென்று தங்களை பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

<u>திரு. ரா. உமாநாத்:</u> வக்கீல்களுடைய கோர்ட் பகிஷ்காரத்தின் விளைவாக மாநிலம் பூராவும் நீதிமன்றங்கள் ஸ்தம்பித்திருக்கின்றன என்பது எல்லோரும் அறிந்த விஷயம். அதன் விளைவாக சில நெருக்கடிகள் ஏற்பட்டிருக்கின்றன. ஜாமீனில் வர வேண்டியவர்கள் வர முடியாமல் ஜெயிலில் ஓவர் க்ரௌடெட் ஆகி கிரைசிஸ் ஏற்பட்டிருக்கிறது. கோர்ட் நடக்க முடியாத காரணத்தால் இல்லீகல் டிடென்ஷன் இருக்கிறது. இது சீரியஸ் சிசுவேஷன். ஏன் இதை விவாதிக்க வேண்டுமென்றால் இந்தப் பிரச்சினையை சுமூகமாகத் தீர்க்க முடியாமல் குறுக்கே நிற்கக்கூடியது அரசாங்கத்தின் முரட்டுத்தனமான பிடிவாதம். சாதாரண பிடிவாதம் அல்ல, முரட்டுத்தனமான பிடிவாதம். அதுதான் குறுக்கே நிற்கிறது. அதற்கு நேற்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சபையில் கொடுத்த ஸ்டேட்மெண்டை பேஸ் ஆக வைக்கிறேன். முதலமைச்சரிடம் அந்த வக்கீல் வந்து பேசும் போது சொன்னதாகச் சொன்னார்கள்—'அவர் என்னை அடித்தார்; நான் அவரை அடித்தேன்' என்று சொன்னதாக முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்—That means according to the statement of the Hon. Chief Minister itself, the aggressive party is Sub-Inspector It is obvious.

''சப் இன்ஸ்பெக்டர் என்னை அடித்தார்; நான் அவரை திருப்பி அடித்தேன்'' என்று சொன்னதாகச் சொல்லியிருக்கிறார்—What power has he got ? On that one ground alone, he deserves suspension.

1979 மார்ச் 24] [திரு. ரா. உமாநாத்.]

சீஃப் மினிஸ்டர் ஸ்டேட்மெண்ட் அடிப்படையில் நான் இதை ப்ரொசீட் பண்ணுகிறேன். இதை எந்தக் கோர்ட்டிலும் சொல்லத் தயார் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கோர்ட்டில் சொல்லும்போது 'சப் இன்ஸ்பெக்டர் அடித்த பிறகு இவர் திருப்பி அடித்தார்' என்று நான் சொல்ல முடியும். சப் இன்ஸ்பெக்டர் அவரை அடிக்க என்ன அருகதை இருக்கிறது— He has no right to use violence against citizen, even if the citizen has gone wrong.

அந்த ஒரு கிரவுண்டே அவரை சஸ்பெண்ட் பண்ண வேண்டிய ஒன்றாகும். (குறுக்கீடு) விவகாரம் பெரிது, ஆகவே, பேச்சும் பெரிதாகத்தான் இருக்கும். அந்த ஒரு கிரவுண்டில் அவரை சஸ்பெண்ட் பண்ண இருக்கவேண்டும். வக்கீல் ரிடாலியேட் பண்ணினார் என்று அப்படியே வைத்துக் கொள்ளுங்கள். அதற்காக அவரைப் பிடித்து அடித்து தரையில் போட்டு புரட்டி லாக்கப்பில் போடுவதா? It is a serious problem. This thing has happened. ஒரு பிரஜை அடித்தால் கூட திருப்பி அடிப்பதற்கு போலீஸ் ஆபீசருக்கு ரைட் கிடையாது. அவரை கோர்ட்டுக்குத் தான் கொண்டு போக முடியும்—Another problem is this. The whole State Advocates want suspension of police officer and judicial enquiry.

அந்த முறையில் அது நடந்திருக்கிறது. வக்கீலுக்கே இந்தக் கதி என்றால் சாதாரண பிரஜைக்கு என்ன கதி ஏற்பட்டிருக்கும்? இதிலே அடங்கியிருக்கும் பிரச்சினை—The entire Law College demanding that. The Medical College students also got out on the same demand. The entire Opposition is pleading for that வக்கீலுக்கும் போலீசுக்கும் சண்டை அல்ல.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : இது பற்றிப் பல தடவை பேசியாகிவிட்டது. நீதிமன்றங்கள் இயங்கவில்லை என்பது குறித்து விவாதிக்க 42-வது விதியின்கீழ் கொடுக்கப் பட்டுள்ள தீர்மானத்தைப் பற்றிச் சுருக்கமாகப் பேசி முடித்து விடுங்கள்.

<u>திரு. ரா. உமாநாத்</u> : லேட்டஸ்ட் பொசிஷனை வைத்துப் பேசுகிறேன். சீஃப் மினிஸ்டர் ஸ்டேட்மெண்டை வைத்துக் கூறுகிறேன். தொடர்ந்து கோர்ட்டுகள் நடக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இதிலே நீதிமன்றங்களின் சுயேச்சைத் தன்மை சம்பந்தப்பட்டிருக்கிறது. ஜுடிஷியரியின் இன்டிபெண்டன்ஸ் இருப்பதே கொஞ்ச நஞ்சந்தான். அதிலும் கைவைக்கப்படுகிறது. போலீஸ் ஆபீசரைக் கமிட்டியில் போடுவது என்ன பிடிவாதம்? நீதிபதிக்கு எதிராக வேவு பார்க்கவா?

தன்மானம் இருக்கிற யாரும் அதை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். நீதிபதிக்கு சமமான அந்தஸ்தில் ஒரு போலீஸ் ஆபீசரை உட்கார வைக்க முடியுமா? நான் அப்படி உட்கார மாட்டேன் என்று அவர் சொல்லி மறுபடியும் நெருக்கடி வந்து மறுபடியும் நாங்கள் அட்ஜர்ன் பண்ண வேண்டுமென்று தீர்மானம் கொடுக்க வேண்டுமா?

[முற்பகல் 10-20]

ஆகவே இந்த விஷயம் இதிலே அடங்கியிருக்கிறது என்று நான் சொல்ல விரும்புகிறேன். இதிலே அரசாங்கத்தினுடைய ஸ்டீம் ரோலங் இருக்கிறது. ஸ்டீம் ரோலங்
The whole Advocates want suspension and judicial enquiry. The Law College Students, Medical College are demanding.

என்பதுதான். ஜுடிஷியரி கிட்டத்தட்ட நியூட்ரல் பொஸிஷன் பை இம்பிளிகேஷன். Independence of the judiciary should not be affected. The Medical College students in Madurai have also joined the agitation.

நேற்றைக்கு மதுரையிலே மெடிக்கல் காலேஜ் மாணவர்கள் எல்லாம் demanding that judicial enquiry and suspension of the police officer.

The entire opposition.

இந்த டிமாண்டிலே தான் அவர்கள் ஒருமுகமாக நிற்கிறார்கள் இதிலே ஒன்றையாவது மதிக்கவேண்டாமா?
This is my point. The entire Opposition is one on that issue.
இன்றைக்கு என்டைர் ஆப்போஸிஷன் ஒருமுகமாக நிற்கிறார்கள் ஒன்றுமே மதிக்காமல் கவர்ன்மெண்ட் பிடிவாதமாக இருக்கிறதா? அவர்களுடைய கோரிக்கையை உதாசீனப்படுத்துவதா? கவர்ன்மெண்ட் நடத்துவதற்கு ஆப்போஸிஷனுடைய கோவாப்ரேஷன் இல்லாமல் நடத்துவோம், அது வேண்டாம் என்று அரசாங்கம் சொல்வார்களேயானால் நாங்கள் அதை டாலரேட் பண்ண முடியாது.

போலீஸார் அவர்களுக்கு ரெப்ரசன்டேஷன் வேண்டுமென்பதாகச் சொல்கிறார்கள் என்று அன்றைக்கு சீப் மினிஸ்டர் அவர்கள் சொன்னார்கள். வக்கீல்களுக்கு அசோஸியேஷன் இருக்கிறது. ஆனால் தங்களுக்கு அசோஸியேஷன் இல்லை என்று போலீஸ்காரர்கள் சொல்கிறார்கள். போலீஸ்காரர்களுக்கு அசோஸியேஷன் இல்லை யென்பதற்காக நீதிபதிக்குச் சமமான அந்தஸ்த்து கொடுக்கவேண்டுமென்று சொல்லலாமா? போலீஸ்காரர்களுக்கு அசோஸியேஷன் இல்லையென்றால் அவர்களுக்கு சங்க உரிமை கொடுக்கவேண்டியதுதானே. In this case, our Governmentt in West Bengal and Tripura, have given them that right,

நாங்கள் வழங்கியுள்ளோம். மேற்கு வங்காளத்திலே திரிபுராவிலே வழங்கியாயிற்று. அதைப்பற்றி அன்று நான் சொல்லிய போது அதற்குப் பதிலாக முதலமைச்சர் என்ன சொன்னார். நான் ரிக்கார்ட்ஸிலிருந்து கோட் பண்ணுகிறேன்:

" மாண்புமிகு உமாநாத் அவர்கள் எந்த வேகத்தோடு எந்தக் குறிக்கோளோடு பேசுகிறார்கள் என்பது எனக்குத் தெரியும், அவர்களோடு கடந்த 35 ஆண்டுகளாப் பழகியவன்''.

என்று சொல்லியிருக்கிறார். என்னோடு அல்ல, கம்யூனிஸ்ட்களோடு. இதற்கும் போலீஸுக்கும் என்ன சம்பந்தம் என்று தெரியவில்லை. அவர் சொல்லியிருக்கிறார். " எந்த அடிப்படையில் பேசுகிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ளமுடியாமல் இல்லை. அவர் குறிப்பிட்ட இரண்டு மாநிலங்களும் அவர்கள் கட்சி ஆட்சி செய்கிற மாநிலங்கள். அவர்கள் எந்த அடிப்படையில் அசோஸியேஷன் அமைத்திருப்பார்கள் என்பதும், அந்த அசோசியேஷன்கள் எப்படி அவர்களோடு ஒத்துழைக்கின்றன என்பதையும் நான் அறிவேன் ".

என்று பேசுகிறார்கள். I have read from the records. By implication, the Hon. Chief Minister says:—

அவர் நினைக்கிற சுதந்திரம் தமிழ்நாட்டிலே உண்டா? முதலமைச்சர் பை இம்பிளிகேஷன் சுதந்திரமாக செயல்படக் கூடிய உரிமைகள் மேற்கு வங்காளத்திலே இல்லை என்று கூறுகிறார் என்று தான் அர்த்தம். நீங்கள் பாருங்கள், எக்ஸ்பஞ்சு பண்ணியதுபோக மிச்சம் இருக்கிற ரிக்கார்டுகளை நான் பார்த்தேன். அவர் சொல்லியபோது பை இம்பிளிகேஷன் சுதந்திரம் அங்கே இல்லை என்று சொல்லுகிறார் என்றுதான் அர்த்தம். அங்கே சுதந்திரம் இல்லையென்றால் அங்கே எல்லாம் அடிமைகளா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒன்றே ஒன்று சொல்கிறேன் நேற்றைய தினம் முதலமைச்சர் பேசிய பேச்சுக்கு இன்றைக்குப் பதில் சொல்வதற்கு நீங்கள் நேரம் எடுத்துக்கொள்ளக்கூடாது. நீங்கள் நேற்றேகூட அதற்கு மறுப்பெல்லாம் சொன்னீர்கள். தர்க்கம் எல்லாம் நடந்தது.

திரு. ரா. உமாநாத் : இல்லை, இதற்குச் சொல்லவில்லை அப்போது பேசியது எல்லாம் எடுத்துவிடுங்கள் என்று சொன்னார் Of course. my Government is there. When my Governments are attacked, I have got right to defend my Governments.

லாஸ்ட் பாயின்ட், எங்களுடைய பார்ட்டி கவர்மெண்ட் அங்கே.

திரு. நா. சுந்தரராஜ் : பாய்ன்ட் ஆப் ஆர்டர் சார், என்னுடைய சர்க்கார் என்ற முறையிலே சொன்னார் எதைச் சொல்கிறார்..............

திரு. ரா. உமாநாத்: எங்கள் பார்ட்டி என்றுதான் சொன்னேன். மேற்கு வங்காளத்திலும், திரிபுராவிலும் எங்கள் பார்ட்டி தான் இருக்கிறது. அதனால் சொல்கிறேன். கோபம் வருகிறபோது முதலமைச்சர் மனதிலே இருப்பதைச் சொல்கிறார். நாங்கள் ஆட்சி நடத்தக்கூடிய இடங்களில் சுதந்திரம் இல்லை என்று சொல்வது
This is the old slanders by the imperialists and capitalists.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உமாநாத் அவர்கள் அதிகமாகச் சிரிக்கிறபோது உண்மையைச் சொல்வார்.

திரு. ரா. உமாநாத்: அப்படி அவர் பதில் சொன்னது உங்களுடைய லட்சணம் எங்களுக்குத் தெரியும் என்று சொல்வது மாதிரியாக இருக்கிறது.

திரு. ரா. உமாநாத்: குழாயடியிலே நடக்கும் சண்டையிலே தான் இப்படிப் பேசுவார்கள். எனவே, இப்படிப் பேசுவது நம்முடைய முதலமைச்சரவர்களின் தகுதிக்கு ஏற்றதா என்று நான் கேட்க விரும்புகிறேன். தகுதிக்கு ஏற்றதா என்று நான் கேட்டு,

He is talking as if West Bengal is a nation, Tamil Nadu is a nation Both are Governed by the same constitution.

வெஸ்ட் பெங்கால் கவர்ன்மெண்டாக இருந்தாலும், எந்தக் கவர்ன்மெண்டாக இருந்தாலும் ஒரே 'கான்ஸ்ட்டிடியூஷன்' தான்.

ஒன்றை நான் ஒத்துக் கொள்கிறேன். இங்கே சுதந்திரம் இருக்கிறது. டி.ஐ. சைக்கிளில் சுடுவதற்குச் சுதந்திரம் இருக்கிறது.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதெல்லாம் சம்பந்தமில்லாத விஷயம்.

திரு. ரா. உமாநாத்: சம்பந்தம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எல்லாவற்றையும் உங்களால் சம்பந்தப்படுத்த முடியும். ஆனால் நினைத்ததையெல்லாம் பேசிக் கொண்டே போனால் நேரம் கிடையாது. இன்னும் ஐந்தாறு பேர் பேசவிருக்கிறார்கள்.

திரு. ரா. உமாநாத்: இங்கே சுதந்திரம் உண்டு என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். டி.ஐ. சைக்கிளில் சுடுவதற்குச் சம்பந்தம் உண்டு, ஹங்கர் ஸ்டிரைக் செய்கின்ற கொட்டகை

1979 மார்ச் 24] [திரு. ரா. உமாநாத்]

யில் நெருப்பு வைப்பதற்குச் சுதந்திரம் இருக்கிறது. அந்தச் சுதந்திரம் மேற்கு வங்கத்தில் அனுமதிக்கப்பட்டவில்லை. ஆகவே,.........................

மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இங்கே விவாதம் நடப்பது, நம்முடைய தமிழ் நாட்டைச் சேர்ந்த பிரச்சினை பற்றி விவாதம் நடக்கிறதா அல்லது மேற்கு வங்கத்தைப் பற்றிய பிரச்சினை பற்றி விவாதம் நடக்கிறதா? (குறுக்கீடு) நேற்று சொன்னார் என்றால் நேற்றே சொல்லியிருக்கலாம், அப்படியில்லாமல் நேற்று சொல்லியதற்கு இன்றைக்குச் சொல்லப்போகிறேன் என்று ஒத்தி வைப்புத் தீர்மானத்தில் தொடர்ந்து இப்படிப் பேசுவது முறையா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நானும் அதையே தான் சொல்கிறேன். நேற்று சொன்னார் என்றால் அதற்கு நேற்றைக்கே பதில் சொல்லியிருக்கலாம். அப்படியே சொல்வது என்றாலும் அதை இன்றைக்கேதான் சொல்லியாக வேண்டுமென்பதில்லை. போலீஸ் டிமாண்டில் உங்கள் பிரச்னையை, உங்கள் கருத்தைப் பற்றிப் பேசலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: துணைத் தலைவரவர்களே, நேற்றைய தினமே சொல்ல வேண்டுமென்றால், நேற்றைய தினம் மத்திய அரசாங்கத்தைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கூறியதற்கு மறுப்பு கூறுவதற்காக எழுந்த நேரத்தில் பேரவைத் தலைவரவர்கள் அனுமதிக்கவில்லை. ஆகவே பிரிவிலஜ் மோஷன் கொடுத்திருக்கிறேன், அதை நாளைக்காவது....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: காலையிலேயே எழுப்பப்பட்டு, அதற்குப் பதிலும் சொல்லி விட்டேன்.

திரு. ரா. உமாநாத்: ஆகவே, இந்தச் சுதந்திரம் அங்கே இல்லை என்பது உண்மை. அந்தச் சுதந்திரத்தை எங்கள் சர்க்காரில் கொடுக்க மாட்டோம் என்பது உண்மை. தொழிலாளர்கள், வக்கீல்கள், மாணவர்கள் ஆகிய அவர்கள் மீது தாக்குதல் என்பது எங்கள் சர்க்காரில் எங்கேயும் அனுமதிக்கப் பட மாட்டாது. ஆகவே, இப்படிப்பட்ட பிரச்சினைகள் இதில் அடங்கியிருப்பதால், சீரியசான பிரச்சினைகள் இதிலே அடங்கியிருப்பதால் மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதத்தைக் கட்டாயமாக அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: துணைத் தலைவரவர்களே, தலைவரவர்களுக்கு உதவியாக நான் சுருக்கமாக கூறிக் கொள்ளலாம் என்று எண்ணுகிறேன். விரிவாக மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கூறிவிட்ட காரணத்தினால் சுருக்கமாகச் சில கருத்துக்களை மட்டும் நான் கூற விரும்புகிறேன்.

ஆரம்பத்தில் ஒரு சிறிய பிரச்சினையாக ஆரம்பித்து, இன்றைய தினம் ஒரு பெரிய நாடு தழுவிய பிரச்சினையாக மாறியிருப்பதை நிச்சயமாக இந்த அரசு நன்றாக உணர்ந் திருக்கும். குறிப்பாக இன்றைய தினம் இதன் விளைவுகள் எவ்வாறு வந்திருக்கின்றன என்று எண்ணிப் பார்த்தால் இந்த நாட்டிலே இருக்கின்ற பல்வேறு வகுப்பைச் சேர்ந்த மக்கள் இந்தப் பிரச்சினையினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். வழக்கு மன்றத்திற்குச் செல்கின்ற பல்வேறு தரப்பில் உள்ள மக்கள், சிவில் கோர்ட்டுகளுக்குச் செல்கின்ற மக்கள், கிரிமினல் கோர்ட்டுகளுக்குச் செல்கின்ற மக்கள் பாதிக்கப்பட்டிருக் கிறார்கள். ஆகவே, பல இலட்சக் கணக்கான, பல கோடிக் கணக்கான ரூபாய் நட்டம் கூட ஏற்பட்டிருக்கிறது பொது மக்களுக்கு.

ஜெயிலில் அடைக்கப்பட்டவர்கள் விடுதலையாக்கப்பட்டு நீதி மன்றங்களில் உத்தரவு பிறப்பித்த பிறகும்கூட இன்றைய தினம் வழக்கறிஞர்கள் போராட்டத்தின் காரணமாக ஜெயிலில் இருப்பவர்கள் வெளியில் வர முடியவில்லை.

ஆகவே, இந்த அளவிற்கு இந்த நாட்டில் சட்டம் ஒழுங் கைப் பாதுகாக்க முடியாத அளவில் இந்தப் பிரச்சினை மாறியிருக்கிறது. அது மட்டுமல்லாமல், இன்றைக்கு மதுரை யைச் சேர்ந்த பல்வேறு வழக்கறிஞர்களும், சட்டக் கல்லூரி மாணவர்களும், மற்ற பெரியவர்களும் சிறையிலே வாடு கிறார்கள்.

ஒரு வேளை இந்த அளவிலாவது நாம் இப்போது பிரச்சினை யைத் தீர்ப்போம் என்று சொன்னால் இது அரசியல் பிரச்சினை யாக மாறாமல் ஏதோ வழக்கறிஞருக்கும் போலீஸ் அதிகாரி களுக்கும் இடையே ஏற்பட்ட பிரச்சினையில் இந்த அரசு தலையிட்டு அதனைத் தீர்த்து வைத்தது என்ற பெரிய மரியாதை இந்த அரசுக்கு வரும். இதுவரையில் அரசியல் பிரச்சினை இல்லை என்பதை நன்றாக இந்த அரசு உணரும். ஆனால் மேலும் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படவில்லை என்றால் நிச்சயமாக இதுவொரு அரசியல் பிரச்சினையாக மாறக்கூடிய அபாயம் இருக்கிறது. அரசியல் பிரச்சினையாக மாறிவிட்டால் இந்த அரசால் இதைத் தட்டிக் கழிக்க முடியாது, அதை ஆட்டிப் படைக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, இந்த 42-வது விதி யின்படி நான் கொடுத்திருக்கின்ற தீர்மானத்தை இந்த அவையில் விவாதிப்பதற்காக இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

1979 மார்ச் 24]

(முற்பகல் 10-30)

திரு. எம். ஏ. லத்தீப்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தப் பிரச்சினை இப்பொழுது சாதாரணமாக ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வந்து அவசரப் பிரச்னை என்ற அளவுக்கு அல்லாமல், இப்பொழுது ஒரு அபாயமான கட்டத்தை அடைந்திருக்கிறது என்பதே இன்றைக்கு நான் கொடுத்திருக்கின்ற ஒத்தி வைப்புத் தீர்மானத்தினுடைய அடிப்படை. காரணம், பொது நிர்வாகத்தினுடைய மூன்றில் ஒரு பங்கு,

One-third of the administration completely constitutional breakdown.

என்று சொல்லக் கூடிய அளவுக்கு இன்றைக்கு ஒரு 'கான்ஸ்டிடுயூஷன் கிரைசிஸ்' ஏற்பட்டிருக்கிறது. நீதி நிர்வாகம் இன்றைக்கு முழுவதும் ஸ்தம்பிக்கும் வகையில் கோர்ட்டுகள் மூடப்பட்டிருக்கின்றன, வழக்குகள் தேங்கியிருக்கின்றன, வழக்கறிஞர்கள் எல்லாம் வெளியே இருக்கிறார்கள். நீதி மன்றத்திற்கு நீதிபதிகள் வருகிறார்கள், ஆனால், வழக்குகளை நடத்த முடியவில்லை. கட்சிக்காரர்கள் இன்றைக்கு ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். வழக்குகள் தேங்கிக் கொண்டிருக்கின்றன. நாட்டு நிர்வாகத்தினுடைய மூன்றில் ஒரு பங்கு தேங்கி விட்டது. அரசியலமைப்புச் சட்டம் இந்த மாநிலத்தையே ஊனப்பட்டு முடமாக்கப்பட்டு,

Constitutional crisis

என்ற அளவுக்கு இன்றைக்கு மாநிலத்தினுடைய நிர்வாகம் கேள்விக் குறியாக ஆக்கப்பட்டிருக்கிறது. இதை, இன்றைக்கு மிகச் சாதாரண பிரச்சினையாக நாம் எடுத்துக் கொள்வோமானால் தயவுசெய்து நான் கேட்டுக் கொள்கிறேன். இதனுடைய விளைவுகளை இதனுடைய பூதாகரமான விளைவுகளை அரசாங்கம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாம் நல்ல மரபுகளை ஏற்படுத்த வேண்டும். இன்றைக்கு ஒரு காரியத்தில் நாம் வெற்றி அடைந்து விடுவோம் என்ற திருப்தியைப் பெறலாம். ஆனால், அதுஇன்றைக்குள்ள திருப்தி ஒருநிர்வாகத்தில் நல்ல மரபுகளை, செம்மையான பாரம்பரியங்களை ஏற்படுத்தி விட்டோம் என்ற திருப்தியைப் பெறுவதுதான் இது அவர்களுக்கு நல்லது, ஆட்சி இலக்கணத்திற்கு அவர்கள் தருகின்ற நல்ல நெறி முறைகளாக இருக்கும். அந்த வகையில் நான் சொல்கிறேன். மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் சொல்கிறேன், இந்த நிர்வாகம் இந்த ஆட்சி, இந்த விஷயத்தில் கடைபிடித்த முறை சரியல்ல என்பதுதான் என்னுடைய கருத்தாகும்.

Then should elasticity

நெளிவுசுளிவுகள் இருக்க வேண்டும்.

You should not be straight

நீங்கள் அப்படியே ஸ்ட்ரெயிட்டாக இல்லாமல், வளைந்து கொடுக்க வேண்டும். ஆட்சி என்பது நாணல் மாதிரி இருக்க வேண்டும். கொஞ்சம் வளைந்து கொடுத்து மீண்டும் எழுந்து நிற்க வேண்டும். அது தான் ஆட்சியே தவிர, வழக்கறிஞர்களைப் பார்த்து, நீங்கள் அந்த சப்-இன்ஸ்பெக்டரை சஸ்பெண்ட் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை விட்டு விடுவீர்களானால், நான் நீதிவிசாரணைக்கு ஒத்துக் கொள்வேன் என்று பேரம் பேசுகின்ற—எங்கோ நடக்கின்ற பேரம் பேசுகின்ற முறையாக இருக்குமானால், அது ஆட்சிக்கு அழகல்ல. நான் மேற்கொண்டு சில விவரங்களைச் சேகரித்து இருக்கிறேன். நான் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்குச் சொல்வது, அந்த சப்-இன்ஸ்பெக்டரை வழக்கறிஞர் அடித்தது ஒரு புறம் இருக்கட்டும். அங்கே, போலீஸ் ஸ்டேஷனுக்கு போயிருக்கிற வழக்கறிஞரை, சப்-இன்ஸ்பெக்டர் விசாரிக்கும் போது, எல்லோரையும் வைத்துக் கொண்டு, அந்த வழக்கறிஞரைப் பார்த்துச் சொல்லி இருக்கிறார்,

"Ckay Boy"

என்று, ஒரு வழக்கறிஞரை, சப் இன்ஸ்பெக்டர், போலீஸ் ஸ்டேஷனில் வைத்துக் கொண்டு,

"Ckay Boy"

என்று சொல்லும்போது, வழக்கறிஞர் வெளியே செல்கிறார். அப்படி வெளியே செல்கிற வழக்கறிஞரை....*....*....*.... என்று சொல்லி அவரை நிறுத்தி, சட்டையைப் பிடித்து அடித்திருக்கிறார் என்று சொன்னால்.................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதெல்லாம் இதற்கு சம்பந்தம் இல்லாத பிரச்னை. மூலப் பிரச்னை எதுவாகவும் இருக்கலாம். அங்கு என்ன நடந்திருக்கிறது என்று நீங்கள் பார்த்த மாதிரி, அப்படியே டிஸ்கிரைப் செய்வதை நான் அலவ் பண்ண முடியாது. நீங்கள் பார்த்த மாதிரி சொல்கிற உங்களுடைய வர்ணனைகளையெல்லாம் நான் அலவ் பண்ண முடியாது, நான் அதை எடுத்து விடுகிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: என்னைப் பேச விடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:....*....*.... என்று சப் இன்ஸ்பெக்டர் வக்கீலைப் பார்த்து சொன்னதாக சொல்கிற அந்த வாசகங்களைச் சபைக் குறிப்பிலேயிருந்தும், பத்திரிகைக் குறிப்பிலிருந்தும் எடுத்துவிட உத்தரவிடுகிறேன். நீங்கள் சுருக்கமாகப் பேசுங்கள்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. எம். ஏ. லத்தீப்: சுருக்கமாக முடியக்கூடிய கதை இல்லை இது. ஒரு வழக்கறிஞரை இந்தமாதிரியான வார்த்தைகளில் பேசியிருக்கிறார்கள். அடித்து இருக்கிறார்கள். அதுவும் போலீஸ் ஸ்டேஷனில் வைத்து அடித்து இருக்கிறார்கள். அடித்ததற்கு, பேசியதற்கு அந்த இன்ஸ்பெக்டர் இன்னமும் சஸ்பெண்ட் செய்யப்படாமல் இருக்கிறார். வழக்கறிஞர்களுடைய சமுதாயம் அது எவ்வளவு பெரிய சமுதாயம், அது வெளியில் தான் இருக்கிறது என்று நீங்கள் நினைக்க வேண்டாம். இந்த அவையிலேயே இந்த சபையிலேயே நிறைய பேர் வழக்கறிஞர்கள் இருக்கிறோம். அவர்களுடைய கோரிக்கைக்கு அரசாங்கம் செவி சாய்க்க வேண்டும். முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள், சஸ்பெண்ட் செய்வது என்னும் கோரிக்கையை விட்டு விட்டால் நீதி விசாரணை வைக்கிறோம் என்று சொல்கிறார்கள். இது எவ்வளவு பெரிய பிரச்னை? என்ன கேட்கிறார்கள், அவர்கள் கோரிக்கை என்ன, நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும், அந்த சப்-இன்ஸ்பெக்டர் சஸ்பெண்ட் செய்யப்பட வேண்டும். அந்தத் தீர்வு எடுக்கப்படாவிட்டால் வழக்கறிஞர்கள் சமுதாயம் கொதித்தெழும். நான் என்னைப் பொறுத்த வரையில் சொல்கிறேன்—இது போன்ற தீர்வு எடுக்கப்படாவிட்டால், அந்த போலீஸ் அதிகாரி சஸ்பெண்ட் செய்யப்பட்டு, நீதி விசாரணை எடுக்காவிட்டால், நான் இந்த அவையிலேயே தர்ணா நடத்துவேன் போராட்டம் நடத்துவேன். இதற்கு ஒரு முடிவை அரசு உடனே எடுக்க வேண்டும். ஒரு வழக்கறிஞரை அடித்து இருக்கிறார்கள். அதற்கு நீதி வழங்கப் பட வேண்டும். அதுவும் போலீஸ் ஸ்டேஷனில் அடித்திருக்கிறார்கள். அந்த போலீஸ் அதிகாரி சஸ்பெண்ட் செய்யப்பட வேண்டும், நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும். இதைத் தான் வழக்கறிஞர்கள் சமுதாயம் விரும்புகிறது, மக்களும் விரும்புகிறார்கள். நீதி என்னவென்று மக்களுக்குத் தெரியாதா சட்டம் தன் வேலையைச் செய்யும் என்று சொல்கிறாரே, பார்த்து விடுவோம் அந்தச் சட்டம் என்ன செய்யும் என்று. சட்டமே நாங்கள் தான், நாங்கள் சொல்வதுதான் சட்டம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அரசாங்கம் தன் போக்கை, தன் அணுகு முறையை மாற்றிக் கொள்ள வேண்டும். நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும். அந்தப் போலீஸ் அதிகாரி சஸ்பெண்ட் செய்யப்பட வேண்டும் —இல்லாவிட்டால் நான் இங்கேயே தர்ணா செய்வேன் என்று சொல்லிக் கொள்கிறேன். நாங்கள் எந்தப் போராட்டத்திற்கும் தயாராக இருக்கிறோம். வழக்கறிஞர்கள் சார்பாக இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு காண வேண்டும். இதைப் பற்றி பேச நாங்கள் இன்னமும் தயாராக இருக்கிறோம். அதனால் மேலும் இந்தப் பிரச்சினையைப் பற்றி பேசுவதற்கு அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. அழகிரிசாமி அவர்களைப் பேச அழைக்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே இந்த வழக்கறிஞர்கள் வேலை நிறுத்தம் சம்பந்தமாக.....

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்களுடைய உணர்ச்சியைப் போற்றுகிறேன். அதைப் புரிந்துக் கொள்கிறேன். ஒரு விளக்கம் வேண்டும். யாரை தர்ணா செய்வது என்று சொல்லி விட்டால் நல்லது.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, இந்த வழக்கறிஞர்களுடைய போராட்டம் 10 நாட்களாக நடந்து கொண்டிருக்கிறது. அரசாங்கம் இது சம்பந்தமாக அதன் அணுகு முறை சரியாக இல்லாததன் காரணமாக, சிறைச் சாலைகளில் ஜாமீனில் வெளிவரக் கூடியவர்கள் வர முடியாமல் உள்ளேயே இருக்கிறார்கள். சிறையில் இடம் இல்லை என்று சொல்லக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல, போலீஸ் அதிகாரியை சஸ்பெண்டு செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை வாபஸ் வாங்கினால், நீதி விசாரணை வைக்கப்படும் என்று சொல்கிறார்கள்.

வழக்கறிஞரை போலீஸ் அதிகாரி அடித்தது, தாக்கியது உண்மை என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, போலீஸ் அதிகாரி அடித்திருக்கிறார். வழக்கறிஞரும் திருப்பி அடித்திருக்கிறார் என்று முதல்வர் அவர்களே சொல்லியிருக்கிறார். முதல்வர் அவர்கள் விளக்கியது மட்டும் அல்ல, பல தலைவர்கள் இங்கு எடுத்துச் சொன்னது மட்டும் அல்ல, உண்மை என்று ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆக இது சம்பந்தமாக உடனடியாக கலவரங்களை அடக்க அந்தப் போலீஸ்காரரை சஸ்பெண்ட் செய்து விட்டு, நீதி விசாரணை நடத்திய பிறகு அவருக்கு நியாயம் என்றால் தாராளமாக வேலை கொடுங்களேன். இப்படி அவரை சஸ் பெண்ட் செய்து, நீதி விசாரணை நடத்தியிருந்தால் இந்தப் பிரச்னையை எப்பொழுதோ முடித்திருக்கலாம்.

ஆகையால் இப்படி அரசாங்கத்தின் தவறான போக்கின் காரணமாக இன்றைக்கு இவ்வளவு பெரிய சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. அதற்கு உடனடியாக வழக்கறிஞர்களுடைய

1979 மார்ச் 24] *[திரு. சோ. அழகர்சாமி]*

கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும். அது மட்டும் அல்ல, தமிழ்நாட்டிலுள்ள மக்கள் எல்லோரும் அச்சப்படுகிறார்கள். ஒரு வழக்கறிஞரை, வேறு காரணத்திற்காக போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்தவரை, போலீஸ் ஸ்டேஷனிலேயே வைத்து அடித்திருக்கிறார்கள். வழக்கறிஞர்களுக்கே இந்த நிலை என்றால், மற்றவர்களுக்கு என்ன நிலை ஏற்படும் என்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. நீதி விசாரணையை ஏற்படுத்துவது மிகமிக அவசியம், அதன் காரணமாக சபையின் மற்ற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 10-40]

திரு. கே. சுந்தசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று தமிழகத்தில் வழக்கறிஞர்கள் தாக்கப்பட்டதால் ஏற்பட்ட விளைவு அரசின் மூன்று அங்கங்களில் ஒரு அங்கமாக இயங்கி வருகின்ற, மிக முக்கியமான, சுதந்திரமாக இயங்கி வரவேண்டிய நீதி நிர்வாகம் ஸ்தம்பித்து, அதனால் பல லட்சக் கணக்கான மக்கள் வழக்கு மன்றத்தின் மூலம் முடிவு தெரிந்து கொள்ள வேண்டியவர்கள், தீர்ப்பின் மூலம் வெளியே வர வேண்டியவர்கள், உள்ளேயே இருந்து தீர்ப்புப் பெற முடியாத சங்கடமான சூழ்நிலையில் தவித்துக் கொண்டு இருக்கிறார்கள் என்ற செய்தியை இந்த மாமன்றத்தின் மூலம், சுருக்கமாக விவாதித்த மாமன்ற உறுப்பினர்களின், சர்வ கட்சித் தலைவர்களின் மூலம் கருத்துக்களை தெரிந்த அரசு, அதிலே உடனடியாக ஒரு முடிவை உருவாக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த விவாத்ததில் என் கருத்தைச் சொல்கிறேன். இங்கே தெரிவித்த மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துக்களோடு என்னுடைய கருத்தையும் இணைத்து, அதிக நேரம் எடுக்காமல் தெரிவிக்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், ஏனைய அமைச்சர் பெருமக்களும் இதை ஒரு கௌரவப் பிரச்னையாகக் கருதாமல், இதற்கு ஒரு முடிவு காணவேண்டும். அங்கே நடந்தது என்ன? போலீஸ் ஸ்டேஷனுக்கு வழக்கறிஞர் விசாரணைக்காக கட்சிக்காரர்களோடு போகிறார். அங்கே இருவரும் அடித்துக் கொண்டதாகச் செய்தி வந்து இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். இது ஒரு புறம் இருக்க, சாதாரணமாக நிலைமை என்ன இருந்து இருக்கும். போலீஸ் ஸ்டேஷனில் போலீஸ்காரர்கள் இருக்கிறார்கள், சப்-இன்ஸ்பெக்டர், டெப்டி இன்ஸ்பெக்டர், இன்ஸ்பெக்டர் என்று அங்கே இருக்கிற போது, அட்வகேட் வேண்டுமானால் வார்த்தைகளை அதிகமாக, அல்லது சூடான வார்த்தைகளைக் கூறியிருக்கலாம். சாதாரணமாக

Under normal circumstances what would have happened is this போலீஸ் அதிகாரிதான் முதன் முதலில் அடித்து இருப்பார். அப்படி சந்தேகிக்க இடம் இருக்கிறது. அப்படி நினைப்பதற்கு இடம் இருக்கிறது என்ற விவரத்தைச் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். காரணம், நாம் யாரும் ஐய் விட்னஸ் இல்லை. சம்பவத்தை யாரும் பார்க்கவில்லை. ஆனால் மிகப்பெரிய வழக் கறிஞர், மாண்புமிகு மேலவை உறுப்பினர் என்னுடைய சீனியர் அட்வகேட், திரு. சந்தோஷம் போன்றவர்கள், பார் கவுன்சில்—வழக்கறிஞர் சங்கத் தலைவர் ராஜையா அவர்களும், என்னிடத்தில் நேரடியாக மதுரையில் சொன்னார்கள். மாண்புமிகு அய்யாத்துரை அவர்களும் சொன்னார்கள், வழக்கறிஞரை முதலில் தாக்கியிருக் கிறார்கள், அவர் கடுமையாகப் பேசிவிட்டு வெளியே வந்து இருக்கிறார் (மணியடிக்கப்பட்டது) நான் அதற்குள்ளே போக விரும்பவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது பற்றிப் பல தடவை இந்த மன்றத்தில் பேசியாகிவிட்டது. இன்றைக்கு எடுத்து இருக்கிற பிரச்னை, நீதித் துறை இயங்காத இருக்கிற காரணத்தால் உள்ள பதட்ட நிலை குறித்து என்பதைப் பற்றிய தாகும். ஆகவே, அதனால் மக்களுக்கு என்னென்ன கஷ்டம் இருக்கிறது என்பதைப் பற்றி பேசவேண்டும்.

திரு. கே. கந்தசாமி : நான் அதற்குள்ளே போக விரும்ப வில்லை. போகக்கூடாது என்று நீங்கள் உத்திரவிட்டு இருக் கிறீர்கள். அதை நான் மதிக்கிறேன் சூழ்நிலை அப்படி இருக்கிறது. இந்த அரசைக் குறைகூறுவதற்காக அல்ல. ஒரு உண்மையை விளக்க கடமைப்பட்டு இருக்கிறேன். வழக்கு ஒருவருக்கு ஒருவர் ஏற்படுகிறபோது நீதிமன்றங்களை அணுகி நீதி பெற்று தவறு செய்தவர் தண்டிக்கப்படுகிறார். அதைப் போலவே, இந்தப் பிரச்னையிலும் ஒரு நீதிபதியை நியமித்து, என்ன தவறு, யார் செய்தார்கள் என்பதைக் கண்டறிந்து அவர்கள் பேரில் நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆகவே, முதலமைச்சர் அவர்கள் நீதி விசாரணைக்கு—அதாவது ஒரு பாக்ட் பைண்டிங் கமிஷனுக்கு—உடனடியாக உத்திரவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். யார் தவறு செய்தார்கள் என்று அந்த விசா ரணை நீதிபதி அறிக்கை தருகிறதோ அவர்மீது நடவடிக்கை எடுக்கட்டும். இரண்டு தரப்பினரும் நீதிபதியிடத்தில் வேண்டிய தகவல்களைத் தரலாம். அந்த முறையைக் கடைபிடிக்க வேண்டும். ஆகவே, இதை ஒரு பிரச்னையாக ஆக்கி கொண்டிருக்கவேண்டடம். ஏற்கனவே வக்கீல்கள் தங்கள் உயிர்போல் பாவிக்கும் கருப்பு அங்கியையே தீயில் இட்டுக் கொளுத்தி யிருக்கிறார்கள். இதைவிட ஒரு பதட்ட நிலை இருக்க முடியாது.

1979 மார்ச் 24] [திரு. கே. கந்தசாமி]

ஆகவே, இது குறித்து விவாதிக்க பிற அலுவல்களை ஒத்தி வைத்தாலும் சரி, ஒத்தி வைக்காவிட்டாலும் சரி, விரைவாக சுமுகமான முடிவு எடுத்து, சீக்கிரமாக இதற்கு தீர்வுகாண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு சேலம் மு. ஆறுமுகம் : துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நாட்டிலே தொழிலாளர்கள், விவசாயிகள், அரசு ஊழியர்கள், மாணவர்கள், மருத்துவர்கள் என்று தொடர்ந்து அடிக்கடி பல வேலை நிறுத்தம் நடந்து கொண்டு இருக்கும் இந்த நேரத்தில், கடந்த 32 ஆண்டுகளுக்குப் பிறகு இன்று வழக்கறிஞர்கள் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இன்றைக்கு நீதித்துறையில் நீதிக்காகப் போராடக் கூடியவர்கள் அவர்களுடைய நீதிக்காகப் போராட்டம் நடத்துகிற அளவிற்கு நிலைமை தமிழ்நாட்டில் ஏற்பட்டு இருக்கிறது என்கிறபோது உண்மையிலேயே இந்த நாட்டின் ஜனநாயகத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் கவலைப்படாமல் இருக்க முடியாது.

இன்றைய தினம் வழக்கறிஞர்களுடைய கோரிக்கையை அரசு சட்டை செய்யவில்லை என்ற காரணத்திற்காக தாங்கள் அணிந்திருக்கிற கறுப்புச் சட்டையைக் கொளுத்துகிற அளவுக்கு வந்திருக்கிறார்கள். புராணத்திலே ஒரு வரலாறு உண்டு. நமக்கெல்லாம் தெரியும். சிவபெருமான் அவர்கள் கூறிய கருத்து ஒன்று தவறு என்ற காரணத்திற்காக அதை எதிர்த்த நக்கீரன் மீது நெற்றிக்கண்ணைக் காட்டினார் சிவபெருமான். நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் செய்தவன் யாராக இருந்தாலும் குற்றம் செய்தவன் சிவனாக இருந்தாலும் சரி, வேறு எவனாக இருந்தாலும் சரி தவறு தவறுதான் என்று ஆணித்தரமாக அடித்துச் சொன்னார் நக்கீரர். அதைப் போன்று இன்றையதினம் நாட்டிலே தங்கள் சமுதாயத்தினுடைய உணர்வுகள் முறியடிக்கப்பட்ட நேரத்தில், அவர்கள் நீதி கேட்டு கடந்த 9 நாட்களாக போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்களுடைய வீர முழக்கத்திற்குப் பிறகு அரசு கலக்கம் அடைந்திருக்கும் என்று நான் நினைக்கிறேன். (ஆரவாரம்).

இன்றைக்கு நாட்டிலே நீதித்துறையிலே இவ்வளவு பெரிய கொந்தளிப்பு நிலைமை இருக்கிறபோது இந்திய அரசியல் சட்டத்தின் ஆர்டிக்கிள் 177-ன்படி அட்வகேட் ஜெனரல் இந்த சபையினுடைய ஒரு ''எக்ஸ் அஃபிஷியோ மெம்பர்'' என்ற முறையில் நாட்டிலே ஏற்பட்டிருக்கிற கொந்தளிப்பான நிலைமையில் ஒரு தீர்வுகாண இந்தச் சட்டமன்றத்திற்கு ஆலோசனைக் கூறத் தவறிவிட்டார் என்று நான் அவர் மீது குற்றஞ் சாட்டுகிறேன். இவ்வளவு பெரிய நிலைமையில் ஒரு சமரசம் காண்பதற்கு முடியாமல் கடந்த ஒரு வாரமாக அவர் என்ன

செய்துகொண்டிருக்கிறார் என்பதை நான் அறிய விரும்புகிறேன். இப்படிப்பட்ட நேரத்தில் உரிய ஆலோசனைக் கூறமுடியாத ஒரு அட்வகேட் ஜெனரல் தமிழகத்திற்குத் தேவையா என்பதையும் அறிய விரும்புகிறேன். இப்படிப்பட்ட பல்வேறு பிரச்னைகள் இருக்கின்றன. அவைகளைப்பற்றி எல்லாம் விரிவாகப் பேசி, முடிவு செய்ய சபையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, இன்றைய தினம் தமிழ்நாட்டிலே இருக்கிற முக்கியமான பிரச்சனை நீதி மன்றங்கள் அடைக்கப்பட்டிருக்கிற அல்லது செயல்படாமல் இருக்கிற ஒரு சூழ்நிலையில் இந்த அவையிலே ஒத்திவைப்புத் தீர்மானம் வந்து, அதன் மீது பல்வேறு பிரச்னைகளை எடுத்துக் கூறி, தீர்வு காண்கின்ற நோக்கத்தோடு அந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் அவை முன் வைக்கப்பட்டிருக்கின்றது.

இந்திய ஜனநாயகம் மூன்று முக்கியமான தூண்களாகப் ஆக்கப்பட்டு, அந்த மூன்று தூண்களும் அரசியல் சட்டம், நீதித்துறை, நிர்வாகம் என்ற அளவில் பிரிக்கப்பட்டு, அந்த மூன்றும் ஒருசேர இயங்கினால்தான் இந்தியாவிலே ஜனநாயகம் நிலைத்து நிற்கும் என்று நிர்ணயித்திருக்கிறார்கள்.

கடந்த 10 நாட்களாக நீதித்துறை, அடங்கி, ஒடுங்கி, அமைதியாக, இருக்கிற ஒரு காட்சியை இன்றையதினம் நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அதைப் பார்க்கும்போது ஜனநாயகம் தமிழ்நாட்டிலே தழைக்குமா, இந்தியாவில் ஜனநாயகம் தழைக்குமா என்ற அச்சத்திற்கு மக்கள் வந்திருக்கிறார்கள்.

நாம் எத்தனையோ சட்டங்களை நிறைவேற்றினாலும், துடிப்பாக வேகமாக, விவேகமாக நிறைவேற்றினாலும் அதை நிறைவேற்றுகின்ற பொறுப்பு நீதிமன்றங்களைச் சேர்ந்தது என்பதை நாம் அறிவோம். அந்த நீதிமன்றங்கள் தூங்கினால் சட்டம் நிறைவேற்றினாலும் சட்டம் சட்டமாக இருக்காது; சட்டமும் இருக்காது; ஒழுங்கும் இருக்காது என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

கடந்த 10 நாட்களாக மூடிக்கிடக்கின்ற நீதிமன்றங்கள் செவ்வாய்க்கிழமை வரையில் மூடப்பட்டிருக்கும் என்று பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறதை நாம் பார்க்கிறோம். நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். ஆயிரம் குற்றவாளிகள் விடுதலையானாலும் ஒரு நிரபராதி தண்டிக்கபடக் கூடாது என்பதே நீதியின் நடைமுறை. அப்படி இருக்கும் போது ஒரு நிரபராதி நீதிமன்றம் நடைபெறாத காரணத்தால்

1979 மார்ச் 24] [திரு. நா. சுந்தரராஜ்]

10 நாட்களாகக் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்பட்டிருக்கிறான். 10 நாள் கழித்து தான் ஒரு நிரபராதி விடுதலை செய்யப்படுகிறான் என்ற அவல நிலை இன்றைக்கு நாட்டிலே ஏற்பட்டிருக்கிறது. இந்த அவல நிலை தேவையா? இதற்கு யார் காரணம்? ஏன் இந்த நிலை ஏற்பட்டது? இது போலீஸ் இலாகாவுக்கும் வக்கீல்களுக்கும் மட்டுமுள்ள பிரச்னை அல்ல. இந்த நாட்டிலே இருக்கக்கூடிய சாதாரண மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது முக்கியம். சாதாரண நாட்களிலே படுகின்ற கஷ்ட நஷ்டங்கள் எல்லாம் போதாது என்று அவர்களுக்கு இப்படி ஒரு நிலைமை வரவேண்டுமா? தன்னுடைய கஷ்டத்திற்கு ஒரு வழிதேடி கோர்ட்டுக்கு ஆயிரக்கணக்கான ரூபாய் செலவு செய்து வருகிறான். கோர்ட்டிலே அவனுடைய பிரச்னைக்கு தீர்வு காணமுடியாமல் 10 நாள் கஷ்டப்படுகிறான் என்றால் அவனைப்பற்றி கவலைப்படுவது யார்? அவனுக்காக யார் வாதாடுகிறார்கள்?

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்றையதினம் பேசினார்கள். நான் அதைப் பாராட்டுகிறேன். போலீசுக்காக யார் பேசுவது? அவர்களைப்பற்றிக் கேட்க யாரும் இல்லை என்று சொன்னார்கள். இந்த நிலையில் இருக்கிற அவர்களை நான் கேட்க விரும்புவது கேட்பதற்கு யாருமில்லாத முறையில் சாதாரண ஏழை எளிய மக்கள் இன்றைக்கு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்; அவர்களுக்கு என்ன பரிகாரம் காணப்போகிறீர்கள்? அவர்களுக்காக யார் பேசுவது?

[முற்பகல் 10-50]

அந்த மக்களுக்காகப் பேசவேண்டிய பொறுப்பு எங்களைப் போன்றவர்களுக்கு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் போன்றவர்களும், திரு. கந்தசாமி போன்றவர்களும் வழக்கறிஞர்களுக்காகப் பேசலாம். ஆனால், சாதாரண மக்களுக்குப் பேசுவது யார்? அவர்களைப் போன்றவர்கள் வழக்கறிஞர்களுக்காகத்தான் பேசுவார்கள். ஆகவே எங்களைப் போன்றவர்கள்தான் ஏழை மக்களுக்காகப் பேசுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஆனால் முதலமைச்சரவர்கள் என்ன சொல்கிறார் என்றால் இரண்டு சாராரும், சில நிபந்தனைகளை ஒத்துக் கொள்ளவேண்டும் என்று சொல்கிறார். நான் ஒன்று கேட்கிறேன். இதற்கு முன்னால் பல விஷயங்களுக்கு நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்கின்றபோது இரண்டு சாராரையும் கேட்டுவிட்டுத்தான் ஏற்பாடு செய்தீர்களா? ஆகவே அந்தப் பிரச்னைக்கெல்லாம் போகாமல் நேரடியாகவே நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்

கிறேன். அப்படி நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்தால் இந்த விஷயம் இலகுவாக முடிந்துவிடும். ஆகவே இந்த விஷயத்தில் காலம் தாழ்த்தாமல் சீக்கிரம் முடிவு எடுக்க வேண்டும். காலத்தாழ்வு செய்தால் பாதகமான நிலைமை உண்டாகும். ஆகவே எந்தப் பிரச்சனையாக இருந்தாலும் காலம் தாழ்த்தாமல் ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

அடுத்து இங்கே அட்வகேட் ஜெனரலைப் பற்றிப் பேசினார்கள். இதிலே உண்மையிலே வருந்தத்தக்கது என்னவென்றால் அந்த அட்வகேட் ஜெனரல் இந்த அவைக்கு சரியான தகவல் தராததுதான். ஒரு எக்ஸ்-அஃபிஷியோ என்ற முறையில், அவையிலே ஓட்டளிக்க உரிமை அவருக்கு இல்லை என்றாலும், சரியான முறையிலே இந்த அவை நடப்பதற்கு உதவுகின்ற பொறுப்பு அட்வகேட் ஜெனரலுக்கு உண்டு. ஆகவே அட்வகேட் ஜெனரல் மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சரியான விளக்கம் கொடுக்கவேண்டும். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் கூட இட் இஸ் கான்ஸ்ட்டிட்யூஷனல் கிரைசஸ் என்று சொன்னார்கள். இது ஒரு சாதாரண அடிப்பிடித் தகராறு அல்ல. அரசியல் சட்டத்திலே குறிப்பிடப்பட்டபடி ஒரு முக்கியமான அங்கமாகிய நீதித்துறை இயங்காமல் இருக்கிறது. அதனை இயங்க வைக்க வேண்டிய பொறுப்பு இந்த அரசாங்கத்திற்கு உண்டு. அதுபோல் சரியான தகவல்களைத் தந்து, நல்ல முறையில் இந்த அவை நடப்பதற்கு உதவ வேண்டிய பொறுப்பும் அட்வகேட் ஜெனரலுக்கு உண்டு. இங்கே கூட நம்முடைய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சரவர்கள் ராஜினாமா செய்ய வேண்டும் என்று கூறப்பட்டது. எங்களைப் பொறுத்தவரையில், இந்தப் பிரச்சனையைப் பொறுத்த வரையில் யார் ராஜினாமா செய்கிறார். யாரை சஸ்பெண்ட் செய்கிறார்கள் என்பது பெரிதல்ல. அதெல்லாம் கோரிக்கை அல்ல. நீதி மன்றங்கள் தொடர்ந்து நடக்கவேண்டும். அதுதான் எங்களுக்கு முக்கியம். ஆகவே சாதாரணமாக மற்றப் பிரச்சினைகளுக்காக இந்த அவையினை ஒத்தி வைக்க அனுமதி இல்லை என்று சொல்வது போல் இப்போதும் சொல்லாமல்—அதாவது 24 உறுப்பினர்கள் கொடுத்திருந்தால் எடுத்துக் கொள்ளப்படலாம் என்று விதிகளிலே இருக்கின்றது. அதுபோன்று—மிக முக்கியமான பிரச்சினையாக இது இருப்பதால் இதனை எடுத்து விவாதிப்பதற்காக அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன் :</u> பேரவைத் துணைத் தலைவரவர்களே, இங்கே கடந்த 10 நாட்களாக நடைபெற்று வருகிற வழக்கறிஞர்களின் போராட்டத்தைப் பற்றி வேகத்தோடு சில உறுப்பினர்களும், பரிகாரம் காணவேண்டும்

1979 மார்ச் 24] [திரு. கி. மனோகரன்]

என்ற நல்ல உள்ளத்தோடு எதிர்க்கட்சித்தலைவர் போன்ற மற்றவர்களும் தங்களது கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். இது ஒன்றும் மகிழ்ச்சிகரமான நிகழ்ச்சி என்று இந்த அரசு கருதவில்லை. இந்தப் பிரச்சினையைப் பற்றி ஒவ்வொருவரும் எவ்வளவு உறுதியோடு இருக்கிறார்கள் என்பதையும் அந்தப் பிரச்சினையின் முக்கியத்துவத்தை உணர்ந்து தங்களுடைய கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதையும் அவர்களுடைய பேச்சின் மூலம் தெரிந்து கொண்டேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் போன்றவர்கள் எல்லாம் மிகவும் ஆவேசத்தோடு நான் இந்த மன்றத்தை விட்டு போகமாட்டேன் இங்கேயே உட்காருவேன் 1½ மணிக்குப் பிறகும், மற்றவர்கள் எல்லாம் சென்று கதவைச் சாத்தியபிறகும்'' என்ற தொனியில் பயமுறுத்துகிற வகையில் தன்னுடைய கருத்துக்களைச் சொன்னார்கள். அவைகளை எல்லாம் நல்ல எண்ணத்திலேதான் நான் எடுத்துக் கொள்கிறேனே தவிர அதாவது அவருக்கு இருக்கின்ற கொள்கையின் அடிப்படையில் அந்த உற்சாகத்தின் அடிப்படையில், உணர்ச்சியின் அடிப்படையில், அவர் பேசி இருக்கக்கூடும் என்றுதான் நினைக்கிறேன். நல்லெண்ணத்திலேதான் அவர் அந்தக் கருத்தைத் தெரிவித்தார். அதைப் போலவே ஆறுமுகம் அவர்கள் பேசும்போது, சிவன் ஆனாலும் சரி, வேறு யாராக இருந்தாலும் சரி, யார் சொன்னாலும் குற்றம் குற்றமே என்று நக்கீரன் சொன்னார் என்றெல்லாம் ஏதோ ஒரு குழப்பமான கதையைச் சொல்லி சபையை சிறிது நேரம் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தினார்கள். நாம் மகிழ்ச்சிப்படக் கூடிய நேரமல்ல இது, சீரியஸான விஷயங்களைப் பேசிக் கொண்டிருக்கும்போது இப்படிப்பட்ட துணுக்குகள் வருவது கவலை அளிக்கக்கூடியதுதான். பிரச்சினையை சுமூகமாகத் தீர்ப்பதற்கு பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. தயவு செய்து எந்த உறுப்பினர்களும், எதிர்க்கட்சித் தலைவர்களும் ஒரு தவறான கருத்தை மக்கள் மத்தியில் பரப்பவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து கோர்ட்டுகள் இயங்கவில்லை என்று சொல்லப்படுவதை நான் பலமாக மறுக்கிறேன். கோர்ட்டுகள் இயங்குகின்றன. வழக்குகளில் வாதாடுவதற்கு வழக்கறிஞர்கள் செல்லவில்லை, ரிமாண்டில் செல்வதற்கும், ஜாமீனில் அழைத்துச் செல்வதற்கும் ஏற்ற முறையில் நீதிபதிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதல்லாமல் ஏதோ 'கான்ஸ்டிட்யுஷனல் கிரைஸிஸ்' என்ற ஒரு பெரிய வார்த்தையைச் சொல்லிவிடுவதன் மூலம் ஒரு பெரிய பூகம்பமே வெடித்து விட்டது போலவும் உணர்வுகளை உண்டு பண்ணுவது நல்லதல்ல என்பதைப் பொறுப்புணர்ச்சியுள்ள உறுப்பினர்களுக்கு பணிவோடு தெரிவித்துக் கொள்ள நான் கடமைப் பட்டிருக்கிறேன். பேச்சு வார்த்தை விரைவில் முடியும், சுமூகமாக முடியும், அனைவரும் மகிழ்ச்சிபடத் தக்க அளவில் முடிவு ஏற்படும் என்பதை இந்த மாமன்றத்திற்கு முதலமைச்சர்

அவர்கள் சார்பில் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். இதில் விரைவில் முடியும் என்ற வார்த்தையைக் கூர்ந்து கவனிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த அளவுக்கு பேச்சு வார்த்தை அமைதியாகவும், நல்ல முறையிலும் நடந்து கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் எரிகிற நெருப்பில் எண்ணெய்யை ஊற்றுவது போல் இல்லாமல் எந்த அளவுக்கு பேச்சுக்கள் எந்த அளவு தவிர்க்க முடியுமோ அந்த அளவுக்கு பேச்சுக்கள் இருப்பது நல்லதாக இருக்கும். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, நமது எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் மதுரை சென்றிருந்த போது அங்குள்ள சிறைச்சாலையில் இருந்த வக்கீல்களைப் பார்ப்பதற்கு அங்குள்ள அதிகாரிகள் அனுமதி வழங்க மறுக்கப்பட்டதாகவும் தெரிவித்தார். எனக்கு பல உணர்வுகள் வருகின்றன. அந்த உணர்வுகளை எல்லாம் நான் எடுத்து வைக்க விரும்பவில்லை, குறிப்பாக—பக்தவத்சலம் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது, பெருமதிப்புக்குரிய இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை, இரவோடு இரவாக அவருக்கு ஏற்பட்டிருந்த நெஞ்சுவலியையும் கவனியாது, இங்கிருந்து பாளை சிறைச் சாலைக்கு தூக்கி வீசி— அவர் அங்கிருந்த போது, அவரைப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டு நான் என் துணைவியாரோடு நாகர்கோவிலுக்கு செல்லுகின்ற நேரத்தில்—போகிற வழியில் —அல்லது வருகிற வழியில்—இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைப் பார்ப்பதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்று பக்தவத்சலம் அவர்களிடம் கேட்டேன். எப்போது செல்லப்போகிறீர்கள் என்று கேட்டார்கள். இன்றைக்கு மாலையில் செல்லுவதாக இருக்கிறேன் என்றேன். அப்படி யானால் உங்களுக்கு மாலை நான்கு மணிக்கு உத்தரவு வரும் என்றார். நான்கு மணிக்கு உத்தரவும் வந்தது. அதேபோல் இன்னொரு நண்பரைப் பார்ப்பதற்கு திருச்சி சிறைச்சாலைக்கு செல்லவேண்டும் என்று கேட்டபோது அதற்கும் அவர் ஒத்துக் கொண்டார். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தவறாக கருதக் கூடாது. இதில் பல நிர்வாகத் தவறுகள்—இடையூறுகள் இருக்கலாம். அதே போன்று எங்கள் கட்சியிலுள்ள ஜே. பி. ஆர். அவர்கள் சிறைச்சாலையில் இருந்த போது, அவரைப் பார்க்கவேண்டும் என்று அப்போதிருந்த தலைமைச் செயலாளர் சபாநாயகம் அவர்களைக் கேட்டேன். நீங்கள் எழுதி அனுப்புங்கள் என்று கேட்டார்கள். எழுதி அனுப்பினேன். எழுதி அனுப்பி மூன்று நாட்கள், நான்கு நாட்கள் ஆகியும் அனுமதி தரப்படாததால் திருப்பியும் அவரிடம் கேட்டேன். இதை முதலமைச்சர் அவர்களுக்கு இப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு—இதை தெரிவித்து விட்டீர்களா என்று கேட்டபோது, அவர், இது அவரது மேஜையில் தான் இருக்கிறது. உங்களது விண்ணப்பம் அங்கேதான் இருக்கிறது. அவரது உத்திரவின்றி எதுவும் செய்ய முடியாது என்று சொல்லி விட்டார் ஆக நான் போய்ப் பார்ப்பதற்கு அனுமதிக்கப்பட

1979 மார்ச் 24] [பிற்பகல் 11-00]

[திரு. கி. மனோகரன்]

வில்லை. அதற்காக இதை நான் குறையாக சொல்லவில்லை. அதற்கான பல காரணங்கள் இருக்கலாம். அதன் அடிப்படையில் எனக்கு அனுமதி மறுத்திருக்கக்கூடும்...................

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, பேராசிரியர் அவர்கள் பார்க்க விரும்பியது ரிமாண்டில் இருக்கின்ற கைதிகளை. நிதியமைச்சர் அவர்கள் அப்போது பார்க்க விரும்பிய ஜே. பி. ஆர். அவர்கள் மிசா கைதியாக இருந்தார். எந்த மிசா கைதியாக இருந்தாலும், அவரது குடும்பத்தாரைத் தவிர வேறு யாரும் சென்று பார்க்க முடியாது என்பது மத்திய அரசின் உத்தரவு, அப்படித்தான் மிசா கைதிகள் அவர்களது குடும்பத்தாரால் மட்டும் தான் பார்க்க அனுமதிக்கப்பட்டது. கழக ஆட்சி கலைக்கப்பட்ட பிறகும், தமிழ்நாட்டில் 500-க்கும் மேற்பட்டவர்கள் மிசா கைதிகளாக இருந்த நேரத்தில் அவர்களது குடும்பத்தார் மட்டும் தான் பார்க்க அனுமதிக்கப்பட்டார்கள்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: ஆகவேதான் சொன்னேன், சில நிர்வாகக் காரணங்கள் இருக்கக்கூடும், எனக்கு அனுமதி மறுக்கப்பட்டதற்கு என்று. ஆனால் 1970-ல் ஒரு ஜி.ஓ. பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. நமது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபோது இந்த ஜி.ஓ. பிறப்பிக்கப்பட்டுள்ளது.

M. L. As. and M. P. S. who intend visiting the Jail should give notice within three days time.

யாராவது பார்க்கப் போனால், 3 நாட்களுக்கு முன்பு என்றிருக்கிறது. (குறுக்கீடு) மன்னிக்க வேண்டும். ஜி.ஓ.வில் தரப்பட்டிருப்பதைப் படித்துக் காட்டினேன். 3 நாட்களுக்கு முன்பு கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. ஆக, இப்படி சில காரணங்கள் இருந்திருக்கக் கூடும். அந்த அடிப்படையில் அனுமதி மறுக்கப்பட்டிருக்கும். இதை ஒரு பெரிய பிரச்சினையாக எடுக்கவில்லை. அன்பழகன் அவர்கள் செல்லுகின்ற காரணத்தால், சில சிக்கல்கள், சிரமங்கள் ஏற்படுமென்று சூழ்நிலை ஏற்படுமென்று காவல் துறையினர் கருதியிருக்கக் கூடும். அதை ஒரு பிரச்சினையாக நானும் கருதவில்லை. மதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் கருதியிருக்கமாட்டார்கள் என்று கருதுகிறேன். இங்கே, அருமை நண்பர் உமாநாத் அவர்கள் பேசும்போது ஒரு கருத்தைச் சொன்னார்கள்.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, நான் சிறைச்சாலை வாயிலுக்குச் சென்றபோது, வழக்கறிஞர்களைச் சென்று பார்க்க முடியாது என்று நிர்வாக முறை காரணமாக அப்படிச் சொல்லியிருக்கலாம் என்று தெரிவித்தார்கள். மற்றவர்கள்

பார்க்க அனுமதிக்கப்பட்டது. எனக்கு மட்டும் தடை. ஆனால் நமது நிதி அமைச்சர் அவர்கள் இதை பெரிய பிரச்னையாக ஆக்க வேண்டாம் என்று சொல்கிறார்கள். இதை நான் சொல்ல வேண்டுமே தவிர, அவர் சொல்லக்கூடாது. ஒரு சிறைக் கைதியை தண்டிக்கப்பட்ட நிலையில் போய்ப் பார்ப்பது, பிரச்னை பற்றி தெரிந்து கொள்வதோடு, அவருக்கு ஆறுதல் அல்லது ஒரு சமாதானம் ஆற்றுவதற்காகத்தான். ஆனால், சிறை அதிகாரிகள் வேறு ஒரு வகையான காரணத்திற்காக அப்படிச் சொல்லியிருக்கலாம். ஆனால் அரசாங்கத்தின் சார்பிலே என்று சொல்லுகின்ற போது, இந்தப் பிரச்னையை பெரிய பிரச்னையாக ஆக்க வேண்டாம் என்று சொன்னால், அதற்கு நான் விளக்க வேண்டிய அவசிய வரும். எனவே தயவு செய்து......

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : எனக்கு ஆட்சேபணை இல்லை. பிரச்னையைப் பெரிதாக எடுத்துக் கொள்ளுங்கள் என்றால், அவர்கள் சில காரணங்களுக்காக மறுத்திருக்கக் கூடும், அதைப் பெரிய பிரச்னையாக ஆக்க வேண்டாம் என்று சொன்னேனே தவிர, இங்கிருந்து ஒரு உத்திரவை அனுப்பி, அன்பழகன் அங்கே வருவார், அனுமதிக்க வேண்டாம் என்று சொல்லவில்லை என்பதற்காகச் சொன்னேன். அந்த எண்ணமும் நமக்கு இல்லை.

நண்பர் உமாநாத் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள், 'அவர் முதலிலே அடித்தார், நான் பிறகு அடித்தேன்' என்று முதல் அமைச்சர் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாக எனக்கு ஞாபகம். எனவே, இங்கே முதல் அமைச்சர் அவர்கள் பேசியிருப்பதை, நான் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

"ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டார்கள் என்று இருவரும் புகார்கள் கொடுத்திருக்கிறார்கள். ஒருவருக்கு ஒருதலைப் பட்சமாக ஆதரவு தர முடியும் என்ற நிலையிருப்பது முறையல்ல என்ற நிலையில் சஸ்பென்ட் கிடையாது என்று சொல்லுகிறோமே தவிர, யார் யார் மீது தாக்குதல் நடந்தது என்பதையும், ஒருவர் ஒருவரைத் தாக்கினார் என்றும், அதே போன்று இன்னொருவர் தாக்கப்பட்டார் என்றும் இரு தரப்பிலிருந்தும் புகார்கள் வருகின்ற நேரத்தில் போலீஸ் துறையினர் நிச்சயமாக நடவடிக்கை எடுப்பார்கள் என்பதில் யாருக்கும் வேறுபட்ட கருத்து இருக்காது" என்று சொல்லியிருக்கிறார்.

அடுத்தாற்போல் அவர் சொல்கிறார் : "என்னைச் சந்தித்த போது அவர்கள் சொன்னது, நாங்கள் ஒருவருக்கொருவர் அடித்து கொண்டோம், அவரும் அடித்தார், நானும் அடித்தேன் என்று சொல்லியிருக்கிறார்."

ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டார்கள். அதற்குப் பிறகு விளக்கம் தருகின்ற முறையில், 'அவர் அடித்தார், நானும் அடித்தேன்' என்கிற வகையிலே சொல்லியிருக்கிறார்களே தவிர,

1979 மார்ச் 24] *[திரு. கி. மனோகரன்]*

அருள்கூர்ந்து முதல் அமைச்சர் அவர்கள் அந்தக் கருத்தைப் பேச வில்லை. 'அவர் அடித்தார், நானும் அடித்தேன்' என்ற கருத்தை அவர் பேசியதாகச் சொல்லி, மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் இந்தப் பிரச்னையை திசை திருப்ப வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றபடி அவரது அரசாங்கத்தைப் பற்றி எல்லாம் ஏதோ சொன்னதாகவெல்லாம் சொன்னார்கள். என்னைவிட ஜோதி பாசு அவர்களை அவர்களுக்கு நன்றாகத் தெரியும். எந்தக் கெட்ட எண்ணத்தோடு, எந்தத் தீய நோக்கோடு, அல்லது களங்கம் கற்பிக்க வேண்டுமென்ற குறிக்கோளோடு முதலமைச்சர் அவர்கள் பேசியிருப்பார்கள் என்று உமாநாத் அவர்கள் எண்ணிக் கொண்டிருந்தால் தயவுசெய்து அந்த எண்ணத்தை மாற்றிக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே பேசிய அத்தனை எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் நான் முதலமைச்சர் அவர்கள் சார்பாகத் தெரிவித்துக் கொள்வது—

ஒன்று, கான்ஸ்டிடியூஷன் கிரைசிஸ் இதிலே இருக்கிறது என்பதை நான் வன்மையாக மறுக்கிறேன்.

இரண்டு, Independence of Judiciary is crippled என்று சொல்லப்பட்ட கருத்தை ஏற்றுக் கொள்ள மறுக்கிறேன்.

மூன்று, நீதிமன்றம் இயங்கவில்லை என்று சொல்வதில் அடிப் படை இல்லையென்பதை வலியுறுத்தித் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நான்காவது, சுமுகமான சூழ்நிலையில் பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கிற இந்த நிலையில், விரைவில் முடிவு ஏற் படும் என்ற நல்ல நம்பிக்கை நட்சத்திரம் உதயமாகியிருக்கிற இந்தச் சந்தர்ப்பத்தில் தயவு செய்து அதற்குக் குந்தகம் விளை விக்கும் அளவுக்கு நமது பேச்சுக்கள் அமையக்கூடாது என்பதற் காக இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் தேவையில்லை என்று கூறி அதை வலியுறுத்தாதீர்கள் என்று கேட்டு நான் அமைகிறேன்.

<u>திரு. மு. கருணாநிதி :</u> தலைவர் அவர்களே, முன்னவர் அவர்கள் அளித்த விளக்கம் எங்களுக்குத் திருப்தி தரவில்லை. ஏனென்றால் விரைவில் சுமுகமாக முடிவு காணப்படும் என்று ஏழு நாட்களாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) நாங்கள் வெளியே போவதாக இல்லை. இங்கேயேதான் இருப்ப தாக இருக்கிறோம். இதற்கு ஒரு முடிவு கண்டு அறிவிக்கும் வரையில் எந்த ஒலி முழக்கமும் செய்யப் போவதில்லை, செய் தாலும் பத்திரிகையில் வராது என்று சொல்லுவார்கள்—இதற்கு

முடிவு காண்கிற வரையில் இங்கே எழுந்து நின்று கொண்டிருப்பதாக முடிவு செய்திருக்கிறோம். அப்படியே நின்று கொண்டிருப்போம்.

(திராவிட முன்னேற்றக் கழகம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, காந்தி காமராஜ் காங்கிரஸ் கட்சி, முஸ்லீம் லீக் கட்சி ஆகிய கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்கள் எழுந்து நின்று கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் விளக்கத்திற்குப் பிறகு அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்கத் தேவையில்லை என்ற காரணத்தால் அனுமதி மறுக்கப்படுகிறது.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நின்று கொண்டிருக்கப்போவதாக மட்டும்தான் சொன்னார்கள். இப்போது அவர்களுக்குள்ளேயே பேசிக் கொண்டிருக்கிறார்கள். அமைதி காத்தால் அடுத்த நிகழ்ச்சிக்குப் போகலாம்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற மரபை அனுபவம் பெற்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உருவாக்க உறுதுணையாக இருக்கக்கூடாது என்று மெத்தப் பணிவன்போடு லீடர் ஆப் தி ஹவுஸ் என்ற முறையில் கேட்டுக் கொள்கிறேன். இதுவரை தமிழகத்தின் வரலாற்றில், சட்டசபை வரலாற்றில், நீங்கள் எல்லாம் கால்கடுக்க நின்று கொண்டிருக்க நாங்கள் எல்லாம் அமைதியாக உட்கார்ந்திருக்கக் கூடிய சூழ்நிலை ஏற்படுகிற நிலைமையைத் தயவு செய்து உருவாக்காதீர்கள். அது ஜனநாயகத்திற்கு நல்லதல்ல ; நீங்கள் அடிக்கடி சொல்வீர்களே—காக்க வேண்டிய மரபு, அதற்கும் ஏற்புடைத்தானது அல்ல. வெளியே பார்ப்பவர்கள் என்ன நினைப்பார்கள் இப்படிப்பட்ட செய்தி வந்தால் என்று ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நிச்சயமாக இதற்கு ஒரு முடிவு விரைவில் கிடைக்குமென்று உறுதி அளித்த பிறகு அந்த உறுதியை ஏற்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் திருப்பியும் தனது எண்ணத்தை புனராலோசனை செய்து நல்ல முறையில் ஒரு நிலைமையை உருவாக்க உதவ வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி : விரைவில் என்றால் எப்போது ?

திரு. மு. கருணாநிதி : விரைவில் என்று சொன்னால் போதாது. எத்தனை மணி நேரத்திற்குள் எத்தனை நாளைக்குள் என்று சொல்ல வேண்டும்.

1979 மார்ச் 24]

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல விரும்புவது விரைவில் என்று சொன்னால்—இங்கேயே சொல், இப்போதே சொல், இத்தனை மணி நேரத்திற்குள் என்று சொல் என்றெல்லாம் கேட்பது நியாய மாகாது. அதிக பட்சமாகப் போனால் இரண்டு நாட்களுக்குள் இதற்கு ஒரு முடிவு ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : அந்த இரண்டு நாட்கள் என்பதை திங்கட்கிழமை என்று எடுத்துக்கொள்ளலாமா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இடையிலே ஞாயிற்றுக் கிழமை வருவதை கவனத்தில் கொள்ளுங்கள். இன்னும் கொஞ்சம் விளக்கமாகவே தெரிவிக்க விரும்புகிறேன். செவ்வாய்க்கிழமை மாலைக்குள் நல்ல முடிவு தெரியும்.

[முற்பகல் 11-10]

திரு. மு. கருணாநிதி : செவ்வாய் வெறும் வாயாக இருக்கக் கூடாது என்று குறிப்பிட்டு, அவை முன்னவரின் உறுதிமொழியை ஏற்று

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தனிப்பட்ட முறையிலே சொல்வதாகக் கருதக்கூடாது. ஆண்டவனைக் கூட அப்படிச் சொல்வது உண்டு. 'ஆண்டவனே நீ வெல்வாய்.'

திரு. மு. கருணாநிதி : 'நீ அப்படித்தான் அடிக்கடி சொல்வாய்.' எனவே அவை முன்னவருடைய உறுதிமொழியை ஏற்றுக் கொண்டு நாங்கள் அமர்கிறோம்.

(எழுந்திருந்த உறுப்பினர்கள் அனைவரும் இருக்கைகளில் அமர்ந்தனர்.)

திரு. சேலம் மு. ஆறுமுகம் : செவ்வாய் வெறும் வாயாகப் போகாமல் அது வருவாயாக இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

(ஆ) பொள்ளாச்சி குவாலிட்டி மில் வேலை நிறுத்தம் குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்போதும் நேரம் **11-10**-க்கு மேல் ஆகிறது இன்னும் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் இருக்கின்றன. இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் இருக்கின்றன. அதற்குப் பிறகு டிமாண்டுகள் இருக்கின்றன.

ஒத்திவைப்புத் தீர்மானங்களை இப்போது எடுத்துக் கொண்டால் டிமாண்டின் மேல் ஒரு கட்சிக்கு ஒரு உறுப்பினர் தான் பேசமுடியும் ஆகவே, ஒரு கட்சிக்கு ஒரு உறுப்பினர் என்ற முறையிலே பேசுகின்ற உறுப்பினருடைய பெயர்களை அந்த அந்தக் கட்சிகளினுடைய கொறடாக்கள் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றே எடுத்துக்கொள்ள வேண்டுமென்றால் எடுத்துக் கொள்ளலாம், இல்லாவிட்டால் நாளை எடுத்துக்கொள்ளலாமா?

அடுத்து ஒத்திவைப்புத் தீர்மானம். பொள்ளாச்சியிலுள்ள குவாலிட்டி மில்லில் வேலை நிறுத்தம் குறித்தும், போலீசார் தொழிற்சாலைக்குள் புகுந்து தொழிலாளர்களைத் தாக்கியது குறித்தும் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று திருவாளர்கள், சுப்பு, அழகர்சாமி, அம்பிகாபதி, உத்திராபதி, சிவசாமி, கூத்நகுடி ச. சண்முகம், நடராஜன், ரமணி, சொர்ணம், கிருஷ்ணன், எஸ். ஜே. சாதிக் பாட்சா ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவசர முக்கியத்துவமானது என்பதைக் குறித்து மிக மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : துணைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சியிலே உள்ள குவாலிட்டி மில்லிலே உள்ள தொழிலாளர்கள் அங்கே உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்து வந்ததைத் தொடர்ந்து 100 தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டு சிறையிலே அடைக்கபட்டிருக்கிறார்கள். அவர்களை எல்லாம் நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டுமென்று எல்லாக் கட்சித் தலைவர்களும் கேட்டுக் கொண்டு வருகிறார்கள். 12(3) செட்டில்மெண்ட் என்ற முறையிலே இல்லாமல், 18 (1) செட்டில்மெண்ட் என்ற முறையிலே போடப்பட்ட நிர்வாகமும் ஒரு சில தொழிலாளர்கள் மட்டுமே இருந்து செய்துகொண்ட ஒப்பந்தம் எந்த அளவிற்கு மற்றத் தொழிலாளர்களைப் பாதிக்கும் என்று பார்க்காமல் மற்றத் தொழிலாளர்களின் மேல் அந்த ஒப்பந்தத்தைத் திணிக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. அங்கே இன்றைக்கு ஒரு பதட்டமான நிலைமை இருப்பதற்குக் காரணம் அங்கே இருக்கிற டி.எஸ்.பி. முறைக்கு மாறாக நடந்து கொண்டிருக்கிறார் என்பது தான் அவருடைய பெயர் அங்கப்பன். அவர் 150 குண்டாந்தடி போலீஸ்காரர்களை அழைத்துக்கொண்டு அந்த மில்லிற்குப் போய் அந்தத் தொழிலாளர்களைக் கைது செய்து இருக்கிறார் தொழிலாளர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். இரண்டு நாட்களாக மில்லில் தொழிலாளர்கள் இல்லை. போலீஸார் தான் இருக்கிறார்கள். வேலையே செய்யவில்லை. மேல் இடத்திலிருந்து மந்திரி வீரப்பன் அவர்களுக்கு வேண்டியவரான மெய்யப்பன் செட்டியாருடைய மில் தான் அது. எந்த அளவிற்கு மந்திரி வீரப்பனுக்குத் தொடர்பு என்று எனக்குத் தெரியவில்லை. ஆகவே உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்களைக் கைது

செய்து சிறையில் அடைத்துவிட்டு அங்கே போலீஸாரே இருக்கிற நடைமுறை வேறு எப்போதாவது எங்காவது நடந்ததுண்டா? கேட் மீட்டிங் போடக்கூடாது தொழிலாளர்கள் என்று தான் தடை செய்துவிட்டீர்கள், பரவாயில்லை, சங்கத்தை உடைப்பது என்று முடிவு செய்துவிட்டீர்கள். பரவாயில்லை, ஆனால் போலீஸை தொழிற்சாலைக்கு அனுப்பி தொழிலாளர்களை கைதுசெய்ய சொல்லியிருக்கிறீர்கள். இப்படி போலீசார் நடக்கிறார்கள். கேட்டால் மேலிடத்து உத்திரவு என்று சொல்லக்கூடிய நிலைமையெல்லாம் சரியல்ல. 18 (1) செட்டில்மெண்ட் எந்த அளவிற்கு மற்றத் தொழிலாளர்களைப் பாதிக்கும், கட்டுப் படுத்தும் என்பது சட்டப் பிரச்சினை. ஆகவே, அதை லேபர் டிபார்ட்மெண்ட்டிற்கு விட்டு விட வேண்டும். இருக்கின்ற தொழிலாளர்களை, நிபந்தனையில்லாமல் கையெழுத்து போட வேண்டுமென்று சொல்வதெல்லாம் சரியல்ல. தொழிலாளர்களைக் கைதுசெய்வது தவறு. அவர்களை விடுதலை செய்வதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். அந்த ஏற்பாட்டைச் செய்வதாக எனக்குத் தோன்றவில்லை. ஆகவே, இதைப்பற்றி விவாதிப்பதற்காக அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சியிலுள்ள குவாலிட்டி மில்லில் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்களைக் காவல் துறையைச் சேர்ந்தவர்கள் புகுந்து தாக்கியதோடு பலரைக் கைதும் செய்திருக்கிறார்கள். தொழிற்சங்கப் பிரச்சினையில், தொழிலாளர்களின் போராட்டங்களில், போலீசார் தலையிடக் கூடாது என்று சட்டமன்றத்திலே நாங்கள் தொடர்ந்து வற்புறுத்தி வருகிறோம். தொழிலாளர்கள் கோரிக்கைகளை வெளியிடும் பொழுது, தொழிலாளர்கள் போராடும்பொழுது, தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வதும், உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்வதும் அவர்களுடைய உரிமை அப்படி பொள்ளாச்சி குவாலிட்டி மில்லில் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்த பொழுது, போலீசார் அத்துமீறி அங்கே உள்ளே நுழைந்து அவர்களைத் தாக்கியிருக்கிறார்கள். கரூரிலே எல்.ஜி.பி. பாடி கம்பெனியிலே என்ன நடந்ததோ அதைப்போல பொள்ளாச்சியிலே நடந்திருக்கிறது. காவல் துறையைச் சேர்ந்தவர்கள் தொழிலாளர்கள் பிரச்சினையில் அனாவசியமாக உள்ளே சென்று தாக்குவதும், அவர்களின் மீது உண்மைக்குப் புறம்பான வழக்குகளைப் போடுவதும் இன்றைக்குச் சகஜமான நிலையாக மாறிருக்கிறது. இதனை உடனடியாகத் தடுத்து நிறுத்துவதற்கு அரசாங்கம் சரியான முயற்சியை எடுக்க வேண்டும்.

அவர்கள் 18 (1) ஒப்பந்தம் போட்டதாகச் சொல்லப்படுகிறது ஒப்பந்தத்தில் ஏற்பட்ட சிக்கலின் காரணமாக ,தொழிலாளர்கள் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். இத்தகைய

உள்ளிருப்பு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தபொழுது தொழிற்சாலைக்குள்ளேயே காவல் துறையினர் நுழைந்து கடுமையாகத் தாக்கிப் பலரைக் காயப்படுத்தியிருப்பது நியாயத்திற்கு விராதமானது. வேலியே பயிரை மேய்வது போல என்று சொல்வார்களே அதைப்போல போலீசாரே தொழிலாளர்களைத் தாக்க முயற்சிக்கின்ற பிரச்சினைகளைக் குறித்து விவாதிப்பதற்காக அவையின் இதர பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: மிஸ்டர் டெபுடி ஸ்பீக்கர் சார், பொள்ளாச்சி குவாலிட்டி மில்லில் இப்பொழுது நடந்து கொண்டிருக்கக் கூடிய விவகாரம். அதில் போலீஸ் தலையிட்டதானது தொழிலாளர் வர்க்கத்தின் அடிப்படை உரிமைகளில் போலீஸ் தலையிட்டு அது முதலாளிகளுக்குச் சாதகமாக முடியக்கூடிய சூழ்நிலை உருவாவதைப்பற்றி விரிவாகத் தீர விவாதிக்க வேண்டுமென்ற விஷயத்தைத்தான் நான் உங்களுக்கு எடுத்துக்காட்ட வேண்டியுள்ளது.

இந்த மில்லில் 400 பேர் வேலை செய்கிற நிலையில், நிர்வாகம் ஏற்கனவே ஒரு சிறு பகுதி தொழிலாளர்களோடு 18 (1)-ன் கீழ் தனி ஒப்பந்தம் செய்து இருக்கிறது. பெருவாரியான தொழிலாளர்களுக்கு எதிராக வேலைத் திறமையை—எஃபிசியன்சி—அதை அவர்களுடைய சம்பளத்தோடு இணைத்துக்கொண்டு சம்பள வெட்டு ஏற்படக்கூடிய இடத்திற்குச் செல்லக்கூடிய தப்பைச் செய்தார்கள். அதன் மீது தொழிலாளர்களுக்கு ஆத்திரம் இருந்தாலும் அவர்கள் தப்பாகப் போராடவே இல்லை. அந்த ஒப்பந்தம் முடிந்த பிறகு, அது காலாவதியானதற்குப் பிறகு இந்த நிலைமையை மீண்டும்—'எஃபிசியன்சி' என்பதைச் சம்பளத்தில் இணைக்கக் கூடாது என்று கூறி, வேறு கோரிக்கைகளையும் கூறி, 1978ஆம் ஆண்டு தீபாவளிக்கு முன் மூன்று மாத காலம் நியாயமான, சட்ட பூர்வமான வேலை நிறுத்தம் நடந்தது. முதலாளி வர்க்கம் அதை ஏற்றுக்கொள்ளவில்லை என்ற நிலையேற்பட்டு, அதற்குப் பிறகு இன்றைக்கு வேறுவழியின்றி அவர்கள் தங்களுக்கு நியாயம் கிடைத்து தீர வேண்டுமென்று தொழிலாளர் வர்க்கத்திற்கே உரித்தான தங்களுடைய போராட்ட உரிமைகளில் ஒன்றாக இருக்கின்ற உள்ளிருப்பு வேலை நிறுத்தத்தை ஆரம்பித்திருக்கிறார்கள்.

உள்ளிருப்பு வேலை நிறுத்தம் 9ஆம் தேதி ஆரம்பிக்கப்பட்டு, பத்து நாட்களுக்குப் பிறகு போலீஸ் படையோடு கம்பெனிக்குள்ளேயே சென்று, உள்ளே உட்கார்ந்து போராட்டம் நடத்தக் கூடிய தொழிலாளர்கள் சுமார் நூறு பேர்களைக் கைது செய்து, தூக்கி வெளியே கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த நிலைமை கையாளப்பட்டால், தொழிலாளர்களுக்குப் பக்கபலமாக நிற்கி

றோம் என்ற கொள்கைப் பிரகடனத்தைச் சட்ட மன்றத்தில் தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்கள். அரசாங்கத்தின் சார்பில் செய்ததெல்லாம் சுக்குநூறாக, தூள் தூளாகப் போகின்ற நிலைமைகள் ஏற்படும். இது சட்டத்தையே மீறுகின்ற நிலைமை. அடிப்படை உரிமைகளுக்கே கட்டுப்பாடு விதிக்கப்படுமானால் அது சரியல்ல. தொழிலாளர் வர்க்கத்தில் அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகின்ற நிலைமைகள், தொழிற் சங்க விதிகள் மீறப்படு கின்ற நிலைமைகள் அங்கே ஏற்பட்டுள்ளது. இப்படிப்பட்ட நிலை தொடர்ந்தால் அது முதலாளிகளுக்குச் சாதகமாக அமை யும். மெஜாரிட்டி தொழிலாளர்களுக்கு விரோதமாக ஒப்பந்தம் செய்து கொண்டு, போலீசின் உதவியுடன் தொழிலாளர்களை மிரட்டினால் மைனாரிட்டி ஒப்பந்தத்தை இவர்கள் அடிமைகளைப் போல ஏற்றுக்கொள்ளக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டு விடும் நிலை மைக்கு வந்துவிடும். போலீசாரின் அத்து மீறிய பெரிய தலையீடு என்று சொல்வது இதைத்தான்.

[முற்பகல் 11-20]

இது சட்டத்திற்கு விரோதமானது, தொழிலாளிவர்க்கத்திற்கு விரோதமானது, இந்த அரசினுடைய கொள்கைக்கு விரோத மானது. இந்த நிலையிருப்பதால், இந்த அவையை ஒத்தி வைத்து இதைத் தீர விவாதித்து, கைது செய்யப்பட்ட தொழி லாளர்களை வெளியே கொண்டு வருவதோடு மாத்திரமல்ல, மைனாரிட்டி தொழிலாளர்கள் சங்கம் செய்துகொண்ட ஒப்பந் தத்திற்கு அரசாங்கமும் அதனுடைய இலாகாவும் போலீசாரும் ஒரு கருவியாக, முதலாளி வர்க்கத்திற்கு பயன்படக்கூடாது என் பதற்காக அந்த விஷயத்தை, ஆழ விவாதிக்க வேண்டும், தீர விவாதிக்க வேண்டுமென்பதால், இந்த அவையின் இதர அலுவல் களை ஒத்திவைக்க வேண்டும் என்று நான் கோருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, பொள்ளாச்சியிலுள்ள குவாலிட்டி ஸ்பின்னிங் மில்லில் சுமார் 466 தொழிலாளர்கள் வேலை செய்து வருகின்றனர். இந்த தொழிலாளர்கள் கீழ்க்கண்ட தொழிற் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ளனர் :—

1. தேசிய பஞ்சாலை தொழிலாளர் சங்கம் (டி. என். டி.யூ.சி.).

2. கோவை மாவட்ட திராவிட பஞ்சாலை தொழி லாளர்கள் முன்னேற்ற சங்கம் (தி.மு.க.).

3. கோவை மாவட்ட பஞ்சாலை தொழிலாளர்கள் முன்னேற்ற சங்கம் (ஹிந்து மஸ்தூர் சபா).

4. அண்ணா பஞ்சாலை தொழிலாளர் சங்கம் (அ.இ.அ.தி.மு.க.).

5. ஐக்கிய பஞ்சாலை தொழிலாளர் சங்கம்.

6. கோவை மாவட்ட பஞ்சாலை தொழிலாளர்கள் சங்கம் (ஐ.என்.டி.யூ.சி.)

பெரும்பான்மையான தொழிலாளர்கள் தேசீய பஞ்சாலைத் தொழிலாளர்கள் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளனர்.

தேசீய பஞ்சாலை தொழிலாளர்கள் சங்கம் (டி.என்.டி.யூ.சி.) மற்றும் கோவை மாவட்ட பஞ்சாலை தொழிலாளர்கள் சங்கத்தைச் (ஐ.என்.டி.யூ.சி.) சார்ந்த தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் தொழிற் தகராறு சட்டம் பிரிவு 18ன்(1)-கீழ் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் நிர்வாகம் தொழிலாளர்களுக்கு பின் சம்பளம் (Back Wages) வழங்குவதாக ஒப்புக் கொண்டிருந்தது. இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடாத தொழிற் சங்கங்களைச் சார்ந்த தொழிலாளர்களுக்கு பின் சம்பளம் வழங்க நிர்வாகம் மறுத்ததாகவும், ஆனால் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டால் பின் சம்பளம் வழங்க நிர்வாகம் தயாராய் இருப்பதாக ஒப்புக் கொண்டதாகவும் தெரிகிறது.

1979 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 19 ஆம் நாள் அன்று கோவை மாவட்ட திராவிட பஞ்சாலை தொழிலாளர்கள் முன்னேற்றச் சங்கத்தைச் சார்ந்த சுமார் 96 தொழிலாளர்கள் ஆலையினுள் நுழைந்து அங்கு வேலை செய்து கொண்டிருக்கும் மற்ற தொழிலாளர்களைத் தடுத்தனர். இதனால் சட்டம் ஒழுங்கு குலைந்து அமைதிக்கு பங்கம் ஏற்பட்டது. சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டியும் வேலை செய்து கொண்டிருக்கும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்காகவும் காவல் துறையினர் நடவடிக்கை எடுத்தனர். இதன் விளைவாக 80 தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டனர். 1979 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 20 ஆம் நாள் அன்று தொழிற்சாலைக்குள் அமைதியாக உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்த 24 தொழிலாளர்கள் • கைது செய்யப்படவில்லை. இப்பேர்பட்ட சமயத்தில் போலீஸ் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று கேரள உயர்நீதி மன்றம் ஒரு தீர்ப்பு கொடுத்திருக்கிறது.

" The managment can ofcourse claim that the ingress and egress to their business premises should be protected from obstruction and if there is imminent danger or peril to life or property, police should afford that such protection as is necessary to avert such harm."

அந்த உயர்நீதி மன்ற திர்ப்புக்கு ஏற்பத்தான் புரட்சித் தலைவர் ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது, நடத்திக்கொண்டிருக்கிறது என்று சொல்லி, கோவை டெப்புட்டி கமிஷனர் ஆப் லேபர் அவர்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் சமரசப் பேச்சு வார்த்தை நடத்த இருக்கிறார்கள் என்பதையும் மாவட்ட ஆணையாளரும் சமரச முயற்சியில் ஈடுபட்டுள்ளார் என்பதையும் தெரிவித்துக் கொள்வதோடு தற்சமயம் அமைதி நிலவுகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, இது குறித்து விவாதிக்க, அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்கத் தேவையில்லை யென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : தலைவரவர்களே (மணியடிக்கப் பெற்றது) அறிக்கைக்குள்ளே போகவில்லை.. கேரள நீதிமன்றத் தீர்ப்பைப்பற்றி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் தீர்ப்பு கொடுத்து விடுகிறேன். பிறகு சொல்லுங்கள்.

திரு. சி. ஆறுமுகம் : உடனடியாக சொல்லியாகவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சொல்லமுடியாது. உட்காருங்கள். 42-வது விதியின்கீழ் அமைச்சர் அறிக்கைக்குப் பிறகு கேள்வி கேட்க முடியாது.

திரு. சி. ஆறுமுகம் : 'கிரிமினல் வேஸ்ட்' சொல்லத்தானே வந்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 42-வது விதியின்படி அமைச்சருடைய அறிக்கைக்குப் பின்னாலே கேள்விகள் கேட்கக் கூடாது.

திரு. க. சுப்பு : கிளாரிஃபிகேஷன் கேட்கலாம். அவர் பேசும் பொழுது

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கிளாரிஃபிகேஷன் கேட்க முடியாது, 42-வது விதியின் கீழ்

திரு. சி. ஆறுமுகம் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார். பேரவை தலைவர் அவர்களே

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உட்காருங்கள் அமைச்சர் அவர்கள் பேசிய அறிக்கையைப் பற்றியதாக இருந்தால், அதைப்பற்றி சொல்லக்கூடாது.

(திரு. க. சுப்பு திரு. நா. சுந்தரராஜ், ஆகியோரும் எழுந்து நிற்கிறார்கள்.)

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, அந்தப் பிரச்னை அல்ல, இது வேறு பிரச்னை, உயர்நீதி மன்றத்தினுடைய . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உட்காருங்கள் அதைப்பற்றித் தான் சொல்லக்கூடாது. அப்புறமாகச் சொல்லுங்கள். நான் முடித்துவிடுகிறேன்.

திரு. க. சுப்பு: இதை உடனடியாகச் சொல்லியாக வேண்டும். நீங்கள் பேசியதற்கு பின்னால், ரூலிங் கொடுத்து விட்டால் அப்புறம் பேசக்கூடாது அதனால்தான்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேசக் கூடாது தான். 42-வது விதியின்கீழ் அமைச்சர் விளக்கம் கொடுத்த பிறகு அந்த அறிக்கையின் மீது பேசுவதற்கு விதியில் இடமில்லை அப்புறமாக பேசிக் கொள்ளுங்கள்.

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் கேட்கிறேன். ஹைகோர்ட் தீர்ப்பிற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை, நான் கேட்பது லா அண்டு ஆர்டர் விஷயமாக. . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 42-வது விதியின் கீழ் விசாரித்ததற்குப் பிறகு, அமைச்சர் அவர்கள் பதிலுரைத்த பிறகு அவர்களின் அறிக்கையின் மீது கேள்வி கேட்க இடமில்லை. .

திரு. க. சுப்பு: கேள்வி கேட்கலாம் என்று இருக்கிறது. . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது 41-ன் கீழ், 41-வது விதியின் கீழ் கேள்விகள் கேட்கலாம். இந்தப் பிரச்னை விதி 42—42-வது விதியின் கீழ் கேள்விகள் கேட்கக் கூடாது. தவறான தகவல் கொடுக்கிறார் என்று எழுதிவேண்டுமானால் கொடுங்கள். உரிமைப் பிரச்னையாக எடுத்துக் கொள்ளலாம். .

திரு. க. சுப்பு: விளக்கங்கள் கேட்கலாம் என்று முன்பேயே அனுமதித்திருக்கிறீர்கள்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எனக்குத் தெரிந்த வரையில் நான் அனுமதிக்கவில்லை, தயவுசெய்து உட்காருங்கள். . .

1979 மார்ச் 24]

திரு. க. சுப்பு : நான் பாயிண்ட் ஆப் ஆர்டர் கேட்கிறேன்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதை முடித்து விடுகிறேன், அதற்குப்பிறகு கேளுங்கள். அந்தப் பிரச்னையே வேண்டாம் இப்பொழுது....

திரு. க. சுப்பு : நான் விளக்கம் கேட்கிறேன். நீங்கள் சொல்லிவிட்டால் நான் கேட்க முடியாது. நான் கேட்டது லா அண்டு ஆர்டர் அதற்கு முதலமைச்சர் அவர்கள் தான் பதில் சொல்லவேண்டும். அதை இரண்டுவிதமாக எடுத்துக் கொள்ளலாம். லேபர் வியூவிலும் கேட்கலாம், லா அண்டு ஆர்டரிலும் கேட்கலாம். ஆனால் நான் கேட்டது லா அண்டு ஆர்டரில்தான். நான் சொன்னது டி. எஸ். பி. போலீஸ் படையோடு அங்கே போய் இருக்கிறார்கள் என்பது. முதலமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். ஆனால் தொழில் அமைச்சர் பதில் சொல்கிறார்கள். அது லா அண்டு ஆர்டர் பிரச்னை. முதலமைச்சர் தான் விளக்கம் தர வேண்டும். தொழில் அமைச்சர் அவர்கள் சம்பந்தமில்லாமல்...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : [மணியடித்து] அந்த அறிக்கையின் மீதுதான் விமர்சிக்கக் கூடாது என்றேன். தயவு செய்து திரு. சுப்பு அவர்கள் அமர வேண்டும்....

திரு. க. சுப்பு : நான் சொன்ன ஒத்திவைப்புத் தீர்மானம், முதல் அமைச்சர் அவர்களின் துறையைச் சேர்ந்தது. தொழிலாளர் நல அமைச்சர் உயர்நீதி மன்ற தீர்ப்பை.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எந்த அமைச்சரும் பதில் சொல்லலாம். மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரின் விளக்கத்திற்குப்பிறகு அந்த அறிக்கையின் மீது பேசக் கூடாது என்று விதி. நீங்கள் இப்படி பேசிக் கொண்டே போனால் அதையெல்லாம் குறிப்பேட்டில் இருந்து நீக்கிவிட வேண்டியிருக்கும்...

திரு. க. சுப்பு : நீக்காவிட்டால் மட்டும் என்ன வாழ்கிறது? முதல்வர் அவர்கள் இருக்கிறார்கள் பதில் சொல்லட்டும்...

திரு. நா. சுந்தரராஜ் : பாயிண்ட் ஆப் ஆர்டர், தலைவர் அவர்களே....

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, ஒத்தி வைப்புத் தீர்மானம் வேறு, அமைச்சரின் விளக்கம் வேறு, அதைப்பற்றி பேச என்னை அனுமதித்தால்தானே....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை தயவு செய்து உட்காருங்கள். பாயிண்ட் ஆப் ஆர்டர் ரைஸ் பண்ணுவதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறது. கொஞ்சம் கேளுங்கள் நான் சொல்வதை. 42-வது விதியின் கீழ் அமைச்சர் அறிக்கைப் படித்து விட்டால் அதை திரும்பவும் எழுப்ப கூடாது அதைப் பற்றி விமர்சிக்க கூடாது. வேண்டுமானால் தவறான தகவல் தந்தார் என்று எழுதி கொடுத்து உரிமைப் பிரச்னை கொண்டு வாருங்கள்.

திரு. க. சுப்பு: எழுதிக் கொடுக்காமலேயே கொடுக்கலாம் என்று செக்ஷன் 184-ன் கீழ் இருக்கிறது. நான் மாண்புமிகு அமைச்சர் இராகவானந்தம் அவர்கள் மீது உரிமைப்பிரச்னை எழுப்புகிறேன். நான் விதிகளின் படியே போகிறேன். இப்பொழுதே இதற்கு முடிவு காண வேண்டும்.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சர் தவறான தகவல் கொடுத்திருக்கிறார் என்று நினைத்தால், உரிமைப் பிரச்னையை எழுதிக் கொடுங்கள். அமைச்சர் அவர்களது விளக்கத்திற்கு பிறகு அவையின் இதர அலுவல்கள் ஒத்தி வைத்து விவாதிக்க தேவையில்லை என்ற காரணத்தால் அனுமதி மறுக்கப்படுகிறது.

திரு. க. சுப்பு: எழுதிக் கொடுக்க வேண்டும் என்று இல்லை....

5. கவன ஈர்ப்புகள்.

(அ) நீலகிரி மாவட்டம், இதளார் பகுதியில் ஏற்பட்ட வகுப்புக் கலவரம் குறித்து.

[முற்பகல் 11.30]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து 41-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளைக்குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம். திருவாளர்கள் கே. உச்சி, க. அரங்கசாமி, ஏ. ஆர். மாரிமுத்து, துரை முத்துசாமி ஆகியோர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் கொண்டு வருவார்கள்.

திரு. நா. சுந்தரராஜ்: பாயிண்ட் ஆப் ஆர்டர்சார்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கு இணங்க அகற்றப்பட்டது.

REPORTING SECTION

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் திரு நா. சுந்தரராஜ் பேசியதை அவைக்குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : ஹைகோர்ட் தீர்ப்புப்படியா இந்த சர்க்கார் நடக்கிறது ?

திரு. கே. உச்சி : துணைத் தலைவர் அவர்களே, ''நீலகிரி மாவட்டம், இதளார் பகுதியில் 1979 ஆம் ஆண்டு சனவரி மாதம் நடந்த கலவரத்தின் போது ஏற்பட்ட உயிரிழப்பு, பொருட் சேதம் காரணமாகப் பொது மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து'', என்கிற அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சருக்காக, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அறிக்கை அளிப்பார்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே. 1979 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 3 ஆம் நாள் அன்று மாலை சுமார் ஐந்து மணியளவில் ஊட்டியிலிருந்து வந்துகொண்டிருந்த பேருந்து இதளார் கிராமத்தில் நின்ற பொழுது தங்கப்பன் என்பவர் பேருந்தில் ஏறிக்கொண்டு பயணிகளை பேருந்தில் ஏறவிடாமலும் இறங்கவிடாமலும் தடுத்திருப்பதாகத் தெரிகின்றது. படுகர் இனத்தைச் சேர்ந்த மாத்தன் என்பவர் தங்கப்பனின் இந்த நடவடிக்கையைக் கண்டித்ததாகத் தெரிகின்றது. இதனால் இருவருக்கும் இடையே தகராறு மூண்டு ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டனர். இந்தச் சமயத்தில் படுகர் இனத்தைச் சேர்ந்த சிலர் தங்கப்பனை தாக்கியுள்ளதாகத் தெரிகின்றது—தங்கப்பன் மயக்கமடைந்து கீழே விழுந்துவிட்டார். அங்கிருந்து படுகரல்லாதார் தங்கப்பனுக்கு தண்ணீர் கொடுக்க முனைந்தபோது படுகர்கள் தடுத்திருப்பதாகத் தெரிகின்றது. இதன் தொடர்பாக இருசாராருக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டுள்ளது. தங்கப்பன் தாக்கப்பட்டது சம்பந்தமாக வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு, அவர் மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்டார். அமைதி காக்குமாறு இரு தரப்பினரையும் வேண்டியபொழுது அதற்கு சம்மதித்தனர். குற்றவாளிகள் தலைமறைவாகிவிட்டனர்.

1979 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 4 ஆம் நாள் அன்று காலையில் (சுமார் 7.45 மணி) படுகர் இனத்தைச் சார்ந்த சிலர், மற்ற ஜாதியினரை வீடுகளையும் கடைகளையும் காலிசெய்து விட்டு வெளியேறும்படி மிரட்டியுள்ளதாகத் தெரிகின்றது.

[திரு. ச. இராமச்சந்திரன்]

[1979 மார்ச் 24

1979 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 4 ஆம் நாள் அன்று காலையில் படுகரல்லாத மற்ற ஜாதியைச் சேர்ந்த சுமார் 150 பேர்கள் இதளார் காவல் நிலையத்தில் கூடி குற்றவாளிகளை உடனே கைது செய்ய வேண்டும் என்று வற்புறுத்தியுள்ளனர். தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி கூறி துணை ஆய்வாளர் அவர்களை அமைதிப்படுத்தினார். அதே நேரத்தில் படுகர்களுக்குச் சொந்தமான குடியிருப்புகளில் வசிக்கும் மற்ற ஜாதியினர் ஒன்றுகூடி சுமார் 9.45 மணியளவில் படுகர்களின் வீடுகளுக்கும் ஜன்னல், கண்ணாடிகள் முதலியவைகளுக்கும் சேதமேற்படுத்த முனைந்துள்ளனர். இதனையறிந்த காவல் துறையினர் உடனே அங்கு விரைந்து வன்முறையில் ஈடுபட்ட கூட்டத்தைக் கலைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். ஆனால் அதற்குள்ளாக சுமார் 170 வீடுகளுக்கு, சுமார் ரூ. 7,000 அளவுக்கு சேதம் விளைவிக்கப்பட்டுவிட்டது. காயமடைந்த எட்டு பேர்கள் மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்டனர். இச்சம்பவம் சம்பந்தமாக இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. செய்தியறிந்து, டி.எஸ்.பி. அங்கு சென்ற பொழுது சுமார் 400 பேர் சாலையில் அமர்ந்து கொண்டு தங்கப்பனைத் தாக்கியவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வற்புறுத்தினர். டி. எஸ்.பி. தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறி அமைதி காக்குமாறு வேண்டி, அவர்களை சமாதானம் செய்து அனுப்பி வைத்தார். போலீஸ் ரோந்து ஏற்பாடு செய்யப்பட்டது. உடனே இதுபற்றிப் புலனாய்வு செய்ய தனி போலீஸ் பிரிவும் டி.எஸ்.பி-யால் ஏற்படுத்தப்பட்டது.

1979 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 4 ஆம் நாள் அன்று பின்னிரவில் நஞ்சநாடு கிராமத்தைச் சேர்ந்த படுகர்கள், மேல் கோளிக்கரையில் உள்ள அரிசன குடியிருப்பைத் தாக்கியுள்ளதாகத் தெரிகின்றது. இதனையறிந்தவுடன், காவல் துறையினர் அங்கு விரைந்து பார்க்கையில் குற்றவாளிகள் யாரும் அங்கு இல்லை. காயம் அடைந்ததாகப் புகார் கூறிய 15 பேர்கள் மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்டனர். இச்சம்பவம் பற்றி வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது.

1979 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 5 ஆம் நாள் அன்று காலை சுமார் 11 மணியளவில் இதாளரைச் சேர்ந்த படுகர்கள் பெருந்திரளாகக் கூட முற்பட்டனர். லாரிகளிலும் வந்து அங்கு கூடினர். அவர்களைக் கலைந்து செல்லுமாறு அதிகாரிகள் கேட்டுக்கொண்ட பொழுது அவர்கள் மறுத்திருப்பதாகத் தெரிகின்றது. சுமார் 12.30 மணியளவில் கோத்தகண்டிமட்டம் என்னுமிடத்தில் படுகரல்லாதார் ஆயுதங்களுடன் திரண்டுள்ளதாகச் செய்தி கிடைத்தவுடன் ஆயுத காவல் படையினருடன் டி.எஸ்.பி. அங்கு விரைந்து அவர்களை விரட்டிவிட்டு திரும்புகையில் ஆயுதங்களுடன் படுகர்கள் கோத்தண்டிமட்டம் நோக்கி வந்து கொண்டிருந்தனர். அபாயகரமான சூழ்நிலை உருவாக

1979 மார்ச் 24]

[திரு. ச. இராமச்சந்திரன்]

இருந்ததால் அதனைத் தடுக்க குறைந்த அளவு பலப்பிரயோகம் செய்து அவர்கள் விரட்டப்பட்டனர். ஆயினும் மலைச் சரிவுகளில் சிலர் சென்று படுகரல்லாதோரின் வீடுகளுக்கு தீ வைக்க வீடுகளைப் பாதுகாக்க படுகரல்லாதார் விரைந்தனர். இருதரப்பாருக்கும் தாக்குதல் ஏற்பட்டுள்ளது. இதில் மூன்று பேர் இறந்துள்ளனர். இச்சம்பவங்கள் சம்பந்தமாக நான்கு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. டி.எஸ்.பி.யும், காவலர் களும் இதளாரில் இருந்தபொழுது படுகர்கள் சிலர் மேல கோளகரை, கீழ கோளகரை, நரிகோளயடா முதலிய இடங்களில் உள்ள அரிசனங்களின் குடியிருப்புகளுக்கு தீ வைத் துள்ளதாகத் தெரிகின்றது. இதனால் 145 குடிசைகள் சேதப்படுத்தப் பட்டுள்ளன. சேதத்தின் அளவு சுமார் ஒன் னரை லட்சம் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. தீயணைப்புப் படையினர் வரவழைக்கப்பட்டு தீ அணைக்கப்பட்டது. பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. அதிக அளவில் போலீசார் வரவழைக்கப்பட்டு பாதுகாப்பு ஏற்பாடு கள் செய்யப்பட்டன. மேலும் அசம்பாவிதங்கள் நிகழாத வாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டனா. டி.அய்.ஜி.-யும், மாவட்ட ஆட்சித் தலைவரும் சம்பவம் நடந்த இடங்களைப் பார்வையிட்டனர்.

1979 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 9 ஆம் நாள், 1979 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 10 ஆம் நாள் ஆகிய நாட்களில் மாவட்ட ஆட்சித் தலைவர் அமைதிக்குழு ஒன்றினைக் கூட்டி அமைதி காக்குமாறும், போலீசாருக்கு உதவியாக இருக்குமாறும் வேண்டிக்கொண்டார். அமைதிகாக்க முழு ஒத்துழைப்புத் தருவதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்தச் சம்பவங்களின் தொடர்பாக 12 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 175 பேர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். வழக்குகளைப் புலனாய்வு செய்ய தனி போலீஸ் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தற்போது நிலைமை அமைதியாகவே உள்ளது. எனவே இதுபற்றி சட்டமன்ற பேரவையில் விவா திக்கத் தேவையில்லை என்று கருகிறேன்.

திரு. கே. உச்சி : துணைத் தலைவர் அவர்களே, இதளார், நஞ்சநாடு, எமராடு, பகுதிகளிலே ஏறத்தாழ 50 பேர்கள் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் நூற்றுக்கணக்கான குடிசைகள் சேதமடைந்திருக்கின் றன. நஞ்சநாடு பகுதியில் 121 என்று நினைக்கிறேன்— 121 குடிசைகள் தீக்கு இரையாக்கப்பட்டிருக்கின்றன. அதனால் படுகர் இனத்தைச் சேர்ந்த மூன்று வாலிபர்கள் இறந்திருக்கிறார் கள். இதற்காக அந்தக் குடும்பங்களுக்கு நஷ்டயீடு தர, சமீபத்தில் விழுப்புரத்தில் தந்ததைப்போல தர அரசாங்கம் முன்வருமா? இப்படிப்பட்ட குற்றங்கள் எங்கு நடந்தாலும் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து தண்டிக்க வேண்டும். இனி

மேல் இம்மாதிரியான குற்றங்கள் நடக்கக்கூடாது. அதற்கு இந்த அரசு ஒரு நீதி விசாரணை ஏற்படுத்த முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இது இரு சாரா ருக்கும் தொடர்ந்து, அவர்களிடையே ஏற்பட்டிருக்கிற சந்தேகத்தின் காரணமாகவும் போட்டி, பகைமை காரணமாகவும் தொடர்கதையாக நடைபெற்றிருக்கிற சம்பவம். ஆகவே, குற்றவாளி யாராக இருந்தாலும் கண்டுபிடித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் தனி போலீஸ் பிரிவு ஏற்படுத்தப்பட்டு, புலனாய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகையால் நீதி விசாரணை இதில் தேவையில்லை.

இழப்புக்கு ஈடு கொடுக்கப்படுமா என்று கேட்டார்கள். அதற்காக விழுப்புரத்திலே நடைபெற்றதையும் எடுத்துக்காட்டினார்கள். அது பற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. க. சுப்பு: தலைவரவர்களே, நான்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்தப் பிரச்சனை முடிந்துவிடட்டும், தயவு செய்து உட்காருங்கள்.

(திரு. க. அரங்கசாமி எழுந்தார்).

நீங்கள் தீர்மானம் கொடுக்கவில்லை என்று நினைக்கிறேன்.

திரு. க. அரங்கசாமி: நானும் கொடுத்திருக்கிறேன். என்னுடைய பெயர் சேர்க்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அலுவல் ஆய்வுக் குழுவில் 41-வது விதியின்கீழ் ஒரே கட்சியைச் சேர்ந்த நான்கு உறுப்பினர்கள் தீர்மானம் கொடுத்திருந்தாலும் அவர்களில் ஒருவர்தான் பேசலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதனால்தான் நான் உங்களை அழைக்கவில்லை. (திரு. க. அரங்கசாமி எழுந்தார்) தயவு செய்து உட்காருங்கள். நிகழ்ச்சியை நடத்துவதற்கு ஒத்துழையுங்கள். அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவு இது.

[முற்பகல் 11-40]

(ஆ) கிழக்கு முகவை மாவட்டம் நெட்டூர் கண்மாய் பழுதடைந்திருப்பதனால் விவசாயம் பாதிக்கப்பெற்றுள்ளது குறித்து.

1979 மார்ச் 24]

*திரு. செ. சிவசாமி: துணைத் தலைவர் அவர்களே, கீழ்க் கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மை மற்றும் பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

> ''கிழக்கு முகவை மாவட்டம், நெட்டூர் கண்மாயில் உள்ள 5-வது மடை பழுதாக உள்ளதாலும், சரியான பராமரிப்பு இல்லாததாலும், மோசமான நிலையில் இருப்பதால் சுமார் மூவாயிரம் ஏக்கர் நிலத்தில் உற்பத்தி குறைவு குறித்து''.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் துணைத் தலைவரவர்களே, பாசனத் தலைமைப் பொறியாளர் மேற்கூறிய நெட்டூர் கண்மாய் நல்ல நிலைமையில் இருப்பதாகவும், மராமத்து வேலைகள் தேவையில்லை என்றும் அறிவித்துள்ளார். வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 4-வது, 5-வது மடைகளை மீண்டும் கட்டுவதற்காக ரூபாய் இருபது ஆயிரம் செலவில் ஒரு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வேலைகள் நல்ல முறையில் நடைபெற்று வருகின்றது என அறிவிக்கிறேன்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெட்டூர் கண்மாயானது சுமார் 3 ஆயிரம் ஏக்கருக்கு பாசன வசதி அளிக்கக்கூடியது. ஒரு ஏக்கருக்கு 20 மூட்டை என்று வைத்தாலும் கூட 60 ஆயிரம் மூட்டைகள் தரக்கூடிய கண்மாய் மூன்றாண்டு காலமாக நீர் பெருகவில்லை. இதற்கெல்லாம் சேர்த்து மொத்தமாகக் கணக்குப் போட்டால் 1 இலட்சத்து 80 ஆயிரம் மூட்டைகளை இந்த அரசு இழந்து இருக்கிறது. இவ்வளவு மிகப் பெரிய இழப்பு அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த பட்ஜெட்டிலே 88 லட்சம் டன் உற்பத்தி செய்வதாகத் இந்த ஆண்டு திட்டமிட்டிருக்கிறார்கள். அந்த 88 லட்சம் டன்னை எப்படி உற்பத்தி செய்யப் போகிறார்கள் என்பது தெரியவில்லை. மூன்றாண்டு காலமாக தொடர்ச்சியாக அந்தக் கண்மாய் பெருகவில்லை. ஏனென்றால் அங்கே இருக்கக்கூடிய 5-வது மடை கடந்த காலத்தில் எற்பட்ட புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டது. அது ரிப்பேர் செய்யப்பட்டது. ஆனால் மீண்டும் அதே இடத்தில் ஓட்டை விழுந்துவிட்டது. ஆகவே கடந்த ஆண்டு நீர் பெருகவில்லை. மீண்டும் ரிப்பேர் செய்யப்பட்டது. அதற்குப் பிறகு மீண்டும் இந்த ஆண்டிலேயும் அதே இடத்திலே ஓட்டை விழுந்துவிட்டது. அதனால் தண்ணீர் சரியாகப் பெருக வில்லை. இதனால் உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது. பத்தாயிரம் விவசாயக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதிகாரிகள் தவறான

தகவலை அரசுக்கு தந்திருக்கிறார்கள் ஆகவே இப்படிப் பட்ட பெரிய இழப்பு அரசாங்கத்திற்கும் விவசாயிகளுக்கும் ஏற்பட்டிருப்பதைத் தவிர்ப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப் படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, மராமத்து வேலைகள் ஏற்கனவே செய்யப்பட்டு நல்ல நிலைமையிலே கண்காணிக்கப்பட்டு வருவதாக தலைமை பொறியாளர் அவர்கள் எனக்குத் தகவல் கொடுத்திருக்கிறார்கள். மேலும் கடந்த வெள்ளத்தில் 4-வது, 5-வது மடைகள் பாதிக்கப்பட்டு, அதற்காக 20 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டு வேலைகள் எல்லாம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் அந்த இடத்திலே மீண்டும் ஒட்டை விழுந்திருக்கிறது என்ற நிலை ஏற் பட்டால் அது கண்டிப்பாகக் கவனிக்கப்படும். அதுமட்டுமல்ல, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பொய்யான தகவல்களைக் கொடுத் திருப்பார்களேயானால் இந்த அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் மானியக் கோரிக்கைகள் 29, 30 தேதிகளில் வர இருக்கின்றன. அப்போது இது போன்றவைகளை எடுத்துச் சொன்னால் உடனடி யாக கவனிக்கிறோம் என்பதைத்தெரிவித்துக்கொள்கிறேன்.

தகவல் கோரல்.

(ஆ) அறிவிப்பு கொடுத்துள்ள உரிமைப் பிரச்சினை குறித்து.

திரு. க. சுப்பு: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 184-வது விதியின்கீழ் ஒரு உரிமைப் பிரச்சினை கொடுத்திருக் கிறேன். அதாவது கேரளா ஹைகோர்ட்டின் தீர்ப்பில் அடிப்படையில்தான் புரட்சித் தலைவர் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அமைச்சரவர்கள் சொன்னார்கள், இது டெலிபரேட் மிஸ் லீடிங் ஆகாதா? மிஸ்ட அப்ளிகேஷன் ஆகாதா? ஆகவே இது குறித்து நான் ஒரு உரிமைப்பிரச்சினை கொடுத்திருக்கிறேன், அதை எழுப்புவதற்கு அனுமதி வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்போது தான் எழுதிக் கொடுத்திருக்கிறீர்கள். பிறகு எடுத்துக்கொள்ளப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(6) அரசினர் சட்ட முன் வடிவுகள்.

(அ) நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே;

''தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்''

என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, அட்டவணை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 17/1979)'' சட்டமாக நிறைவேற்றவேண்டும் என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பெற்றது.

(ஆ) நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/1979) '' ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும் என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2, 3, அட்டவணை பேரவையின் முடிவிற்குப் விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு. 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/1979) சட்டமாக நிறைவேற்றப்பெற வேண்டும்'' என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப் பெற்றது.

7. வரவு-செலவுத் திட்டம் 1979—80 வாக்கெடுப்பு—

கோரிக்கை எண். 6—பத்திரப் பதிவு.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

''மானியக் கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவு—என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,69,36,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

திரு. சு. பாலன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாட்டில் பத்திரப் பதிவு ஆகும் தொகை அதிகமாகவுள்ளதால், செலவைக் குறைப்பதற்கு ஏற்பாடு செய்வது பற்றி'' விவாதிக்க—

''மானியக் கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவு—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,69,36,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்.''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''நீதிமன்றங்களில் அசையா பொருட்கள் (நிலம், வீடு) மீது இணைப்பு உத்தரவு விதிப்பதை சம்பந்தப்பட்ட பத்திரப் பதிவு அலுவலகத்துக்கு தகவல் கொடுக்க ஏற்பாடு செய்யாமலிருப்பதால்''—

''மானியக் கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவு—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,69,36,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

என்ற வெட்டுப் தீர்மானத்தைமுன் மொழிகின்றேன்.

Thiru Salem M. ARUMUGAM: Sir, to discuss the need to introduce mobile registration offices in villages; I move—

"That the allotment of Rs. 2,69,36,000 under Demand No. 6—Registration—be reducted by Rs. 100".

திரு. செ. சிவசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''பத்திரப் பதிவுத் துறையில் பகுதி எழுத்தர் பதவியின் வரன்முறைபடுத்தலில் 33 நபர்கள் இருந்ததில் 18 நபருக்கு மட்டும் நல்லாணை பிறப்பித்த ஒரவஞ்சனைப் பற்றி'' விவாதிக்க—

''மானியக் கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவு—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ 2,69,36,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

[முற்பகம் 11-50.]

கோரிக்கை எண். 23—கூட்டுறவு.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

''மானியக் கோரிக்கை எண் 23—கூட்டுறவு—என்ற தலைப் பின்கீழ் ரூ. 7,26,25,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.''

திரு. மா. மணிமாறன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''வெள்ளப் பாதிப்பினால் ஏற்பட்ட இழப்பினால் கடன் தீர்க்க முடியாதவர்களுக்குக் கடன் நீக்கம் செய்ய வகையில்லாமல் இருப்பதைப் பற்றி'' விவாதிக்க —

'' மானியக் கோரிக்கை எண். 23—கூட்டுறவு—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 7,26,25,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் ''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, '' கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் நடத்தாமல் காலம் கடத்தி வருவது பற்றி '' விவாதிக்க—

[திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்]

'' மானியக் கோரிக்கை எண். 23—கூட்டுறவு—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 7,26,25,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் ''
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

Thiru Salem M. Arumugam: Mr. Speaker Sir, to discuss the need to Institute criminal proceedings in all cases of defalcations in Co-operative Banks without delay. I move: "That the allotment of Rs. 7,26,25,000 under dDemand No. 23—Co operation be reduced by Rs. 100".

திரு. செ. சிவசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, '' கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களை உடனடியாக நடத்துவது '' பற்றி விவாதிக்க—'' மானியக் கோரிக்கை எண் 23—கூட்டுறவு—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 7,26,25,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''
என்ற வெட்டு தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. அ. சுவாமிதாஸ்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு கிராம விவசாயக் கடன் சங்கங்களில் பணிபுரியும் ஊழியர்கள் அனைவருக்கும் மாவட்ட மத்திய வங்கியே ஊதியம் கொடுப்பதற்கான வழிமுறைகளை வகுக்க ஏற்பாடு செய்யாதது குறித்து '' விவாதிக்க—

'' மானியக் கோரிக்கை எண். 23—கூட்டுறவு—என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 7,26,25,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

கோரிக்கை எண். 57—பல்வகை மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

'' மானியக் கோரிக்கை எண். 57—பல்வகை மூலதனச் செலவு —என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,59,02,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.''

திரு. சு. பாலன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, '' அரிசனங்கள் நடத்தும் கூட்டுறவு கடன் கொடுக்கும் சொசைட்டியில் தற்போதுள்ள வட்டியை குறைப்பது பற்றி '' விவாதிக்க—

1979 மார்ச் 24]

[திரு. சு. பாலன்]

'' மானியக் கோரிக்கை எண். 57—பல்வகை மூலதனச் செலவு—என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 5,59,02,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் ''
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, '' வர்த்தகக் கொள்கைப் பற்றி '' விவாதிக்க—

'' மானியக் கோரிக்கை எண். 57—பல்வகை மூலதனச் செலவு—என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 5,59,02,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் ''
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: Sir, to discuss the necessity to start Government Printing Press in Kanyakumari District. I move: That the allotment of Rs. 5,59,02,000 under Demand No. 57—Miscellaneous Capital Outlay be reduced by Rs. 100."

Thiru Salem M. ARUMUGAM: "Sir, to discuss the need to see up Community transport system with residence colonies by the state I move: That the allotment of Rs 5,59,02,000 under Demand No. 57—Miscellaneous Capital Outlay be reduced by Rs. 100."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்கள் அவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன.

திரு. து. புருஷோத்தமன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின் மீது என்னுடைய சில கருத்துக்களை நான் இங்கே சொல்ல விழைகிறேன். பொதுவாக, கூட்டுறவுத் துறை என்பது எல்லோராலும் வரவேற்கப்படுகின்ற ஒரு சிறப்பான துறை என்பதை

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. நான் கொடுத்திருக்கின்ற மானியக் கோரிக்கையின் மீது அரசினுடைய கொள்கை விளக்க குறிப்பு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றது. அவைகள் அத்தனையையும் சட்டமன்ற குறிப்பேட்டிலே ஏற்றி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். †

† 122-156 ம் பக்கத்தில் இணைப்பு I, II ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

திரு. து. புருஷோத்தமன் : அந்த வகையிலே ஒரு சிறப்பான துறை என்றாலும், முந்திய காலங்களிலே இந்தத் துறை எந்த அளவுக்கு சிறப்பாக செயல்பட்டு வந்ததோ, அப்படியில்லாமல் தற்போது இந்தத் துறை எல்லா வகையிலும், நிர்வாகத்திலும் சீர்கேடு அடைந்திருக்கிறது என்பதற்கு ஓரிரு உதாரணங்களைச் சொல்ல நான் விரும்புகிறேன்.

முன்பெல்லாம் போர்டு ஆப் டைரக்டர்ஸ் என்ற பெயரால் பொது மக்கள் பிரதிநிதிகள் அந்த நிர்வாகத்தில் அங்கம் வகித்து சிறப்பான நிர்வாகத்தை ஏற்படுத்தித் தந்தார்கள். அதற்குப் பின்னால் அவர்கள் எல்லாம் நீக்கப்பட்டனர். அவர்கள் எல்லாம் ஏதோ அதிகமான அளவுக்குப் தொலை பேசியை உபயோகித்தார்கள், காரிலே அதிகமாகப் பயணம் செய்தார்கள் என்ற குற்றச் சாட்டைத் தெரிவித்து அதிகமாக செலவழித்த தொகையைத் திருப்பித் தரவேண்டுமென்ற ரீதியிலே நடவடிக்கை எடுக்கப் பட்டது. ஆனால் அவர்கள் நிர்வாகப் பொறுப்பில் இருந்தபோது கூட்டுறவுத் துறையின் மூலமாக அரசாங்கத்தைச் சேர்ந்த அதிகாரிகள் செயலாளராக சேர்மனுக்குக் கீழே பணியாற்றி வந்தார்கள். எந்தச் சிறு தவறானாலும் எடுத்துக் காட்டுகிற வகையில் அவர்கள் பணி புரிந்தார்கள். ஆனால் அப்போது செயலாளராகப் பணி புரிந்த அந்தத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளே இன்றைய தினம் ஸ்பெஷல் ஆபீசர்களாக நியமிக்கப்பட்ட பிறகு இன்றைய தினம் அந்தத் துறை எந்த அளவுக்கு மோசமான நிலைமையில் இருக்கிறது என்பதை நான் இங்கே எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

உதாரணமாக, நம்முடைய சென்னையில் இருக்கிற தமிழ்நாடு கூட்டுறவு மத்திய வீட்டு வசதிச் சங்கம் இன்றையதினம் ஒரு ஸ்பெஷல் ஆபீசரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. அவர் ஏற்கெனவே நம்முடைய சென்னையில் இருக்கிற டி.யு.சி.எஸ். நிர்வாகத்தில் பதவி வகித்தவர். அதிலே அவர் பல்வேறு குறைபாடுகளைச் செய்துவிட்டார் என்ற ஒரு குற்றச்சாட்டு இருக்கிறது. அதற்குப் பின்னால் தஞ்சை மாவட்டத்தில் மார்க்கட்டிங் பெடரேஷனில் அவர் ஸ்பேஷல் ஆபீசராக இருந்தார். அங்கே அவர் பல்வேறு குறைபாடுகளை, ஊழல்களைச் செய்தார் என்று இந்தப் பேரவையில் எடுத்துக்காட்டியபோது நம்முடைய அமைச்சர் அவர்களே குறுக்கிட்டுச் சொன்னார்கள்—"அவர் குற்றம் செய்தது உண்மைதான் ; அதனால் ஆறுமாத காலம் ஊதிய உயர்வு அளிக்கப்பட மாட்டாது" என்று மட்டும் சொல்லி அவருக்கு வேறு எந்தத் தண்டனையும் கொடுக்கப்படாமல் விடப்பட்டது. அந்த ஊதிய உயர்வு அளிக்கப்படாமல் இருக்கிறதா என்பதும் சந்தேககமாக இருக்கிறது. ஜாயின்ட் ரிஜிஸ்ட்ரார் காடரில் இருப்பவர் செய்த மிகப் பிரம்மாண்டமான குற்றச் சாட்டுகளுக்கு அவருக்கு அளிக்கப்பட்ட சாதாரணத் தண்டனை போதாது. சாதாரண

1979 மார்ச் 24] [திரு. து. புருஷோத்தமன்]

கிராமங்களில் இருக்கக்கூடிய சொஸைட்டிகளில் கூட எழுத்தர் செயலாளர் செய்துவிட்ட சிறு தவறானாலும் உடனே சஸ்பெண்ட் செய்கிறார். இந்த அதிகாரி அமைச்சருக்கு வேண்டியவரோ என்ற சந்தேகத்திற்கு இடமளிக்கக்கூடிய வகையில் அவரை கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்திற்கு ஸ்பெஷல் ஆபீசராகப் போட்டிருக்கிறார்கள். இன்றையதினம் அவர் தஞ்சாவூரிலும் தமிழகத்தின் மற்ற இடங்களிலும் செய்த தவறுகளைக் குற்றச்சாட்டுகளாக பல்வேறு தரப்பில் அச்சடித்து துண்டு நோட்டீசாக விநியோகித்திருக்கிறார்கள். அதை நான் இங்கே படிக்க விரும்பவில்லை. என்றாலும் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து காட்டுகிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம் நிர்வாகத்தில் இருப்பவர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்கிறார்கள். கூட்டுறவுத் துறையில் பதவி உயர்வு கொடுக்க வேண்டுமென்றால் பட்டதாரியாக இருக்கவேண்டும். அல்லது கூட்டுறவுத் துறையில் தனிப்பயிற்சி பெற்றிருக்கவேண்டும். அப்படித் தனிப் பயிற்சி பெறாதவர்களுக்கும் பதவி உயர்வு கொடுத்திருக்கிறார்கள். அவருடைய பி.ஏ.வாகப் பணியாற்றிய சச்சிதானந்தம் என்பவரை மானேஜர் காடரில் பதவி உயர்வு கொடுத்து பட்டதாரி அல்லாதவருக்கு சட்ட விதிகளை மீறி பதவி உயர்வு கொடுத்து இருக்கிறார்கள். மாமியார் உடைத்தால் மண் பாண்டம், மருமகள் உடைத்தால் பொன் பாண்டம் என்ற வகையில் இந்தத் துறை இயங்கிக் கொண்டிருக்கிறது.

இன்றைய தினம் இருக்கக்கூடிய ஸ்பெஷல் ஆபீசர்கள் நம்முடைய அமைச்சர்களுக்குக் கூட இல்லாத வசதிகளை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கார் பெற்றிருக்கிறார்கள் அதிலே டேப் ரெக்கார்டர் வைத்திருக்கிறார்கள், ரேடியோ வைத்திருக்கிறார்கள், ஃபேன் வைத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட எல்லா வசதிகளையும் பெற்றிருக்கிறார்கள். ஆனால் முன்னாலே

[நண்பகல் 12-00]

இருந்த நிர்வாக டைரக்டர்கள் அன்றைக்கு சிறிய தவறைச் செய்தால்கூட, டெலிபோனை அதிகமாகப் பயன்படுத்தினால் கூட, தண்டிக்கப்படுகிற நிலைமை இருந்தது. ஆனால் இன்றைய தினம் இவர்களைக் கேட்பதற்கு ஆளில்லை.

எனக்குத் தெரியும், ஸ்டேட் கோவாப்ரேடிவ் பாங்க் அதிகாரி, நம்முடைய அமைச்சருக்கு வேண்டியவர், அகமத் என்பவர், அவர் கலெக்டருடைய ரேங்கிலே இருக்கிறவர். அவருடைய காரிலே எல்லா குளுகுளு வசதிகளும் செய்யப்பட்டு இருக்கிறது. நீங்கள் கேட்டுப் பாருங்கள். கூட்டுறவுத் துறை என்பது ஏழை, நடுத்தர மக்களுக்காக, இல்லாதவர்களுக்காக உதவிசெய்கிற துறை. அந்த துறையிலே இப்படி ஊழல்கள் மலிந்து கிடக்கின்றன, என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஒரு ஸ்பெஷல் ஆபீஸர் திருவேங்கடம் என்பவர் மாதத்திற்கு 15, 20 நாட்களுக்கு வெளியூர் சென்று விடுகிறார். ஆகாய விமானத்தில் பறந்துகொண்டிருக்கிறார். இன்றைய தினம் அவர், இந்த மாதம் 1ஆம் தேதியிலிருந்து 20ஆம் தேதி வரையிலே அவர் ஏறக்குறைய 1,300 ரூபாய்க்கு பெட்ரோல் பில்லைப் பெற்றுக்கொண்டு இருக்கிறார். மாதத்திற்கு 15, 20 நாட்கள் வெளியூர் செல்கிறவர் 1,300 ரூபாய்க்கு பெட்ரோல் பில்லை பெறுகிறார் என்றால் எந்த அளவிற்கு சீர்கேடான நிலைமை இருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும்.

தமிழ்நாடு கூட்டுறவு மத்திய வீட்டு வசதி சங்கத்திலே ஏறக்குறைய 1972 ஆம் ஆண்டிலே அவர்கள் பார்த்த சொஸைட்டிகள் 200 ஆக இருந்தது. ஆனால் அந்தச் சங்கத்திலே இன்றைக்கு ஏறக்குறைய 120 பேர்கள்தான் வேலை செய்கிறார்கள். அவர்கள் இன்றைய தினம் பார்க்க வேண்டிய சொஸைட்டிகள் 600-க்கு மேலே இருக்கின்றன. இருந்தாலும் அதிகமான அலுவலர்கள் வேண்டுமென்று அவர்கள் அரசாங்கத்திற்கு எழுதி அரசாங்கமும் பரிந்துரைத்தாலும்கூட அவர்களுக்கு அதற்கு அனுமதி வழங்க அங்கே இருக்கிற ஸ்பெஷல் ஆபீஸர் தயங்கிக் கொண்டிருக்கிறார். ஆகவே நிர்வாகக் கேடுகள் அங்கே இருக்கிற அதிகாரிகளால்தான் ஏற்படுகின்றன. அதே நிர்வாகத்திலே டைரக்டர்கள் இருக்கிற போது தவறு செய்தால் தண்டிக்கிறபோது, இன்றைக்கு அதிகாரிகள் தவறு செய்தால் அவர்களைக் கண்டிக்க, ஆடிட் செய்ய ஆளில்லாமல் இருக்கிறது. தமிழ்நாடு கூட்டுறவுத் துறையிலே நடைபெறுகின்ற ஊழல்களை, அக்கிரமங்களைக் கண்காணிப்பதற்காக உடனடியாக கணக்குகளை ஆடிட் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இதைப்போல பல்வேறு குறைகளை நான் எடுத்துச் சொல்ல முடியும். நம்முடைய வீட்டு வசதி சங்கத்திலே லைப் இன்ஸ்யூரன்ஸ் மூலமாக 6 கோடி ரூபாய் கடனாகப் பெற்று இருக்கிறார்கள். அந்த 6 கோடி ரூபாயை துணை சங்கங்களுக்கு விநியோகிப்பதற்காக வைத்திருக்கிறபோது அந்தப் பணத்தை 2, 3 மாதங்கள் பாங்கிலே போட்டு வைத்திருக்கவேண்டும். கூட்டுறவுத் துறையின் பணத்தை நிச்சயமாக ஒரு கூட்டுறவு பாங்கிலே தான் போடவேண்டும். ஆனால் எந்த வங்கியிலே போட்டார்கள் என்றால், எந்த ஏஜெண்டை நமக்குத் தெரியுமோ எந்த ஏஜெண்டை தன்னுடைய சுயநலத்திற்குப் பயன்படுத்தமுடியுமோ அந்த தனியார்—அரசுடைமையாக்கப்பட்ட வங்கியிலே போடுகிறார்கள். எப்படி கூட்டுறவுத் துறை வளரும் ! அந்த பாங்க் மானேஜர் சொல்வதைப் போன்று எந்த பேங்கிலே அந்தப் பணத்தைப் போடுகிறார்கள் என்றால் சேமிப்புக் கணக்கிலே போடுகிறார்கள். சேமிப்புக் கணக்கிலே போட்டால் குறைந்த வட்டிதான் வரும். 2, 3 மாதங்களுக்கு, கோடிக்கணக்கான ரூபாயை பிக்ஸட் டெபாஸிட்டில் போட்டால் அதிகமான வருவாய் வரும். அங்கே இருக்கிற

ஸ்பெஷல் ஆபீஸர் கவனம் செலுத்தாமல் அரசாங்க அதிகாரிகள் எல்லாம் தவறான தகவலை இன்றைக்குக் கொடுக்கிறார்கள். அந்த சங்கத்திலே 2, 3 நாட்களுக்கு முன்னாலே பணியாளர்கள் தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்தி உண்ணாவிரதம் இருந்து இருக்கிறார்கள். அங்கே பணியாற்றி வருகின்ற ஊழியர்கள், சி.எஸ்.ஆர். என்ற பதவியிலே இருக்கிறவர்கள் ஏறக்குறைய 39 பேர்கள் வீட்டுவசதி சங்கத்திலே இருக்கிறார்கள். அவர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய பணியே யார் யார் வீடு கட்டுகிறார்களோ அவர்களுக்குக் கடன் உதவி செய்ய வேண்டுமென்பதுதான். அந்தக் கடன் உதவிக்குத் தகுதி பெற்றவர்கள் யார் என்பதைக் கண்காணித்து அந்த அலுவலகத்திற்குச் சொல்ல வேண்டுமே தவிர, அவர்களே அந்தக் கடன்களுக்காகப் பரிந்துரை செய்ய, சேங்ஷன் செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டதை எதிர்த்து அந்த அலுவலகத்திலே இருப்பவர்கள் உண்ணாவிரதம், ஸ்ட்ரைக் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு, இன்றையதினம் அது வாபஸ் பெறப்பட்டது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, நேற்றைய தினம் அரசுச் செயலாளரை அழைத்து பேசி அதில் சுமுகமான முடிவு ஏற்பட்டு விட்டது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. து. புருஷோத்தமன் : நானே அதைப் பேசுகின்ற பொழுது தெரிவித்தேன். நான்கைந்து நாட்களாகத் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி வேலை நிறுத்தம் செய்தார்கள். நேற்றைய தினம் அது கோவாப்ரேட்டிவ் செக்ரட்டரிக்குத் தெரிவிக்கப்பட்டு, இன்றைக்கு அதற்குத் தீர்வு காணப்பட்டது என்றும் சொன்னேன்.

இப்படிப்பட்ட நிலைமைகளை உயர் அதிகாரிகளுக்கு அந்தத் துறையில் இருக்கின்ற 80 ஸ்பெஷல் ஆபீசர்கள் எடுத்துச் சொல்லாத காரணத்தால்தான் அவர்கள் தகவல் சொல்லாததால்தான் இந்தத் துறை நஷ்டத்திலேயும், இன்னும் பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கும் ஆளாக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒட்டு மொத்தமாக என்னுடைய கருத்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்து என்னவென்றால் கூட்டுறவுத் துறையிலுள்ள அத்தனையையும் பொதுவாக மக்களுடைய பிரதிநிதிகளால் நிர்வகிக்கப்பட வேண்டுமென்றுதான் நான் இங்கே எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், இங்கே வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கின்ற பல மாண்புமிகு உறுப்பினர்கள், இந்தக் குற்றம் நீக்கப்பட

வேண்டும், பொதுமக்களின் பிரதிநிதிகள் இருக்க வேண்டும், போர்ட் ஆப் டைரக்டர் இருக்கவேண்டுமென்றுதான் கொடுத்திருக்கிறார்கள். 'அந்த வகையில் நான் அதை ஆதரிக்கிறேன்.

நம்முடைய பேரவையின் துணைத் தலைவர் அவர்களின் அனுமதியின் பேரில் ஒன்றை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இந்த அரசாங்கம் பதவியேற்ற பிறகு இந்த அவையிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்களும் சரி, அல்லது வேறு எந்த அமைச்சர்களானாலும் சரி, பேசுகின்றபொழுது நாங்கள் விளம்பரத்தை விரும்பாதவர்கள், விளம்பரத்தை விரும்பாதவர்கள்தான் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்றெல்லாம் சொல்கிறார்கள். ஆனால் நான் ஒன்றைச் சொல்கிறேன். பொதுவாக இந்தக் கூட்டுறவுத் துறையானது, நிர்வாகச் சீர்கேட்டால் நஷ்டத்திலே இருந்தாலும், விளம்பரத்தை எந்த அளவிற்குத் துரிதப்படுத்துகிறார்கள் என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

மாயவரத்திலே இருக்கின்ற கூட்டுறவு அங்காடியிலே துணிகளைக் கட்டிக்கொடுக்கின்ற, பேக் செய்து கொடுக்கின்ற காகிதப் பைகளிலே நம்முடைய முதலமைச்சருடைய முழு உருவப் படத்தை, அந்தத் திருவுருவப் படத்தை, சூட்டும் கோட்டும் போட்டுக் கொண்டிருக்கின்ற படத்தை அச்சடித்துக் கொடுத்திருக்கிறார்கள் என்றால், இந்தத் துறையிலே அவர்கள் விளம்பரத்தை விரும்புகிறார்கள் என்ற குற்றச்சாட்டை நான் இங்கே எடுத்துச் சொல்லி, அந்தத் தவறை உங்கள் முன்னாலே காட்டுகிறேன். ஆகவே, இந்தத் துறையிலே எந்த வகையிலே தங்கள் விளம்பரத்தைச் செய்ய வேண்டுமோ அந்த அளவிற்கு ஆளுங்கட்சியினர் செய்கின்ற எண்ணத்தைக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்குச் சீர்கெட்டு வருகின்ற இந்தத் துறையைப்பற்றி ஏதாவது நல்ல திட்டங்களைத் தீட்டி நஷ்டத்தை ஈடுகட்டுகின்ற வகையிலே அதிலே முனைய வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மணியடிக்கப்பெற்றது).

அடுத்து ஒரு கருத்தை மட்டும் நான் சொல்லி முடிக்கிறேன். ஏழைகளுக்கு வீடு கட்டுவதற்காக இந்தத் துறையின் மூலம் அவர்களுக்கு ரொக்கமாக 4,000 ரூபாய் கொடுப்பதாக அறிவித்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை இன்றைய தினம் செயல் படுத்தும் வகையில் முனைப்போடு இருக்கிறார்கள். நான் கேட்டுக்கொள்வதெல்லாம், திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்தபொழுது. எந்த அளவிற்கு ஏழைகளுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுத்து குடியிருங்கள் என்று தாராளமாகச் சொன்னது. ஆனால் இன்றைய தினம் பணமாகத் தருகிறேன் என்றால் நிச்சயமாக வீடு எழுப்பப்படுமா என்பதை எண்ணிப்பார்க்க

வேண்டும். ஆகவே, அருமைக்குரிய நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்வது என்னவென்றால், அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் நிலைமைகளை நீங்களே ஏற்படுத்தித் தர வேண்டுமென்பதாகும். மீண்டும் போர்ட் ஆஃப் டைரக்டரை ஏற்படுத்த வேண்டும்,. பொதுமக்களின் பிரதிநிதிகளை ஏற்படுத்த வேண்டும், இவ்வாறு செய்து அந்த நிர்வாகத்தைச் செம்மைப்படுத்த வேண்டுமென்று வலியுறுத்தி என்னுடைய வார்த்தைகளை முடிக்கிறேன், வணக்கம்.

[பிற்பகல் 12-10]

திரு. எஸ். ஜே. இராமசாமி: சட்டமன்ற பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிற கூட்டுறவுத் துறை மானியத்தைப் பற்றி, அதை ஆதரித்து, அந்த மானியக் கோரிக்கை நிறைவேற என்னுடைய ஆதரவையும் தெரிவித்து, என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன். கூட்டுறவுத் துறை, இன்றைக்கு விவசாயிகளுக்கு, மிகுந்த அளவு நல்ல பலனை அளிக்கக்கூடிய ஒரு காமதேனு என்று சொன்னாலும் அதை ஒத்துக்கொள்ள வேண்டிய நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட கூட்டுறவுத் துறை இன்றைக்கு எப்படி இருக்கிறது என்று பார்த்தால் அந்தக் கூட்டுறவுத் துறையிலே வாங்கிய கடனைத் திருப்பிக் கட்டாமல் இருக்கிற நிலையில், அது சீரழிந்து போகக் கூடிய நிலை இருக்கிறது. கூட்டுறவுத் துறையில் இன்றைக்கு விவசாயிகள் பணம் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு லோன் போட்டு, குறுகிய காலக் கடனும், மத்திய காலக் கடனும், கூட்டுறவுத் துறையிலே இருக்கக்கூடிய நில வங்கிகளிலிருந்தும் சரி, விவசாய வங்கிகளிலிருந்தும் சரி வாங்குகிறோம். கிராமத்திலே இருக்கிற கூட்டுறவு வங்கி, மாவட்டத்திலே இருக்கக்கூடிய சென்டிரல் பாங்கிடம் கடனைப் பெறுகிறது. மாவட்ட சென்டிரல் பாங்க், ஸ்டேட் பாங்கிடம் கடன் வாங்குகிறது, ஸ்டேட் பாங்க் ரிசர்வ் பாங்கிடம் அந்தக் கடனை பெறுகிறது. ஆகவே, படிப்படியாக மேலே இருந்து கிராமம் வரையில் அந்தக் கடன்கள் வங்கிகளால் பெறப்பட்டு, இன்றைக்கு வினியோகம் செய்யப்படுகிறது. ஆகவே, அதைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றால், ரிசர்வ் பாங்க்தான் தள்ளுபடி செய்ய வேண்டுமே தவிர, கிராமத்திலேயிருக்கிற விவசாய வங்கி எப்படி தள்ளுபடி செய்யமுடியும். தமிழ்நாட்டிலே ஒரு மரபு இருக்கிறது. பெற்ற கடனைத் திருப்பிக் கொடுப்பது தமிழ்நாட்டு மரபு. தகப்பன் பெற்ற கடனைக் கூட பிள்ளை கொடுத்துவிடுகிறார் என்ற மரபை நாம் ஏற்படுத்தியிருக்கிறோம். பெற்ற கடனைத் திருப்பிக் கொடுக்காமல்போனால், வங்கிகள் பணம் இல்லாமல் திரும்பக் கடன் கொடுக்க முடியாத நிலை ஏற்படுகிறது. அவை வீணாகப்

போகின்றன, திவாலாகப் போகின்றன. கூட்டுறவு வங்கிகளிலே கூட, ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இன்றைக்கு கூட்டுறவுத் துறையிலே, தன்னிச்சையாக இயங்கக் கூடிய ஸ்பெஷல் ஆபீசர்களைப் போட்டிருக்கிறார்கள். அதை வேண்டாம் என்று சொல்லவில்லை. அது இடைக்காலத்திலே இருக்கக்கூடிய நிலைமையாக இருக்கட்டும். ஆனால், தொடர்ந்து தனி அலுவலர்களையே போட வேண்டுமென்பதை அரசாங்கம் கருத்திலே நினைக்கவே கூடாது. அதை நிறுத்தி விட்டு உடனடியாக, எந்த வகையினாலும் சரி, மக்கள் குழுக்களாகப் போட்டாலும், அல்லது அதற்காகத் தேர்தலை நடத்தினாலும் சரி, அந்த வகையில் நடத்த வேண்டுமென்று, இந்த நேரத்திலே அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு மாண்புமிகு முதலமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன்.

இன்னொன்றைச் சொல்கிறார்கள், இன்றைக்குக் கிராமத்திலே இருக்கிற விவசாயி, தாம் பெற்ற கடனைத் திருப்பிக் கொடுக்காமலிருக்கும் நிலையில், பாங்கிகள் திரும்பவும் கடன் கொடுக்க முடியாமல் தடுமாறுகிறார்கள். கமர்ஷியல் பாங்கிலே கூட விவசாயிகளுக்குப் பணம் கிடைக்கவில்லை. ஆனால், அந்த ஆண்டிற்குள் பணம் திரும்பி வந்தால்தான், அவர்கள் கடன் கொடுக்க முடியும். விவசாய வங்கிகளிலே அப்படிப் பட்ட நிலை இல்லை. விவசாயி, வங்கியிலே பெற்ற கடனைத் திருப்பிக் கட்டினால் மறுபடியும் கடன் வாங்கலாம் என்ற உறுதி விவசாய வங்கியிலே இருக்கிறது. கமர்ஷியல் வங்கியிலே அத்தகைய உறுதி இல்லையென்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இதில் அரசு தனியாக கவனம் செலுத்த வேண்டும். பெற்ற கடனைத் திருப்பிக் கட்ட மாட்டேன் என்று வம்பு செய்பவர்களை, அடம் பிடிப்பவர்களைத் தனியாக பிரித்து,, ஆசையோடு, கனிவோடு எடுத்துச் சொல்லி, கடனைத் திருப்பிச் செலுத்தவில்லையென்றால், அந்த வங்கிகளெல்லாம் என்ன கதியாகும் என்பதை எடுத்துச் சொல்லி, கடன்களைத் திரும்பப் பெறுவதால், இந்தக் கூட்டுறவு வங்கிகளானது மேலும் நன்கு விரிவடையக்கூடிய நிலைமை இருக்கிறது. அதை யெல்லாம் கருத்திலே கொண்டு, விவசாயப் பெருமக்கள் கடனைத் திருப்பிக் கொடுக்கும் பணியை அன்புடன் ஏற்றுக் கொள்ளவேண்டும், கனிவுடன் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

மைலாப்பூரிலே நிலவள வங்கியின் தலைமை அலுவலகம் இருக்கிறது. அங்கே டிராக்டர்களுக்காகப் பணத்தை வசூலித்தார்கள். தமிழ்நாட்டிலே, டெப்பாசிட்டாக ரூ. 1,000 கட்டி விட்டு, டிராக்டருக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால்

ஒரு சிலருக்குத்தான் டிராக்டர்கள் கிடைத்தன, மற்றவர்களுக்குக் கிடைக்கவில்லை. அங்கே சீட்டுப்போட்டு டிராக்டர் கொடுக்கப்பட்டது, ஆகவே, கொடுக்காதவர்களுக்கு உடனடியாகப் பணத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டும். அதில் காலதாமதம் செய்வது எந்தவிதத்திலும் நியாயமல்ல. அதைத் திருப்பிக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்னொன்று இங்கே நான் சொல்லவிரும்புகிறேன். சென்டிரல் பேங்கிலே செலுத்தாத நிலுவை என்று பார்க்கிறபோது 1978-வது ஆண்டிலிருந்தே நிலுவை பாக்கி நின்று கொண்டிருக்கிறது. குறுகிய காலக் கடன்கள் எல்லாம் நீண்டகால கடன்கள் ஆக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. திருப்பிக் கொடுக்காமல், கூட்டுறவு வங்கிகளிடமிருந்து பெற்ற கடன்களைத் திருப்பிச் செலுத்தாமல் இருந்துக் கொண்டு போகிற நிலைமை வளர்ந்து கொண்டிருக்கிறது. இப்படி வளரவிட்டால் கூட்டுறவு வங்கிகளே நடைபெற முடியாமல் போய்விடும் நிலைமை உருவாகிவிடும். அரசாங்கம் இதில் உடனே கவனம் செலுத்த வேண்டும். மெத்தனம் கூடாது. மெத்தனம் காட்டினால், கூட்டுறவு வங்கிகள், அதன் பணியாளர்கள், விவசாயிகள் எல்லோரும் பாதிக்கப்படுவார்கள்.

இன்னொன்றையும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். விவசாயிகள் சொசைட்டி இருக்கிறது. விவசாயிகள் சொசைட்டிக்காக பணம் கடன் வழங்கப்படுகிறது. இங்கே ஒரு இன்ஸ்பெக்டர் இருக்கிறார். இந்த இன்ஸ்பெக்டர் சாங்ஷன் செய்து சென்டிரல் பாங்கிற்கு அனுப்புகிறார். சென்டிரல் பாங்கில் இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்கள். அவர் சேங்ஷன் செய்து அனுப்பினால்தான் அந்தப்பணம் கூட்டுறவு சங்கங்களுக்கு போகும்.

இந்த சேங்ஷன் செய்கிற இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்களே அவர்கள் கூட்டுறவு சங்கங்களின் விவசாயிகளுடன் சரியான முறையில் நடந்து கொள்வதில்லை. அந்தச் சங்கங்களிடமிருந்து அவர்கள் பணம் வாங்கிக் கொள்கிறார்கள். லஞ்சம் வாங்கிக் கொண்டு, கூட்டுறவு சங்கத்தலைவர்களின் முன்னால் 40,000 சேங்ஷன் என்று சொல்லி விடுகிறார்கள். ஆனால் சென்டிரல் பாங்கில் கொண்டுபோகும்போது 20,000 ரூபாய்க்கு மட்டும் எழுதி கொடுத்துவிடுகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் மாற வேண்டும். இந்த இன்ஸ்பெக்டர்களை எல்லாம் கண்காணித்து, இத்தகைய நடைமுறைகளை மாற்ற அரசாங்கம் முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இன்றைக்கு இந்த கன்சியூமர் சொசைட்டி கன்சியூமர் பெடரேஷன் இருக்கின்றன. கன்சியூமர் பெடரேஷனானது எவ்வளவு வேண்டுமானாலும், எதை வேண்டுமானாலும்

கொள்முதல் செய்து கொண்டிருக்கிறது. மளிகைச் சாமான்கள் கொள்முதல் செய்யலாம், துணி வகைகளைக் கொள் முதல் செய்யலாம், இன்னும் பல பொருள்களை கொள்முதல் செய்யலாம். ஆனால் அப்படி கொள்முதல் செய்யும் அதிகாரம் அங்குள்ள தனி அதிகாரியிடம் இருக்கிறது. அவரைக் கண்காணிக்க யாருமே இல்லை. யார் இருக்கிறார்கள்? ஆடிட் இருக்கிறது, அது எப்போதோ வரப்போகிறது. ஆனால் நேரடி கண்காணிப்பு எதுவுமே இல்லை. செயலாளர் போய் பார்க்க முடியுமா? அமைச்சர் போய் பார்க்க முடியுமா? ரிஜிஸ்திரார் போய்த்தான் பார்க்க முடியுமா? அங்கே நடக்கும் ஊழல்கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். அந்த முறையை மாற்ற வேண்டும். அங்கே ஒரு பாடி (குழு போட்டு) போட்டு கண் காணிக்க வேண்டும். அப்படி ஒரு பாடி போடாமல் தள்ளிப் போட்டுக் கொண்டே போனால் நிலைமை வேறாகப் போய் விடும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நேற்றைக்குக் கூட விவசாய சங்கத்தைச் சேர்ந்தவர்கள் முதல்வர் அவர்களைச் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள். முதல் வரும் கவனிக்கப்படும் என்று சொல்லி அனுப்பியிருக்கிறார். இப் படிச் சொல்வதை விட்டுவிட்டு, ஒரு பாடியைப் போட்டு அவர்களைக் கண்காணித்தால், சங்கத்தார்கள் வரும்போது, இவர்களையும் வைத்துக் கொண்டு பேசியிருக்க முடியும். இப்படி நீங்கள் கடனைத் திருப்பிக் கொடுக்காமல் போய்க் கொண்டேயிருந்தால் வங்கிகளே நடைபெறாத சூழ்நிலை ஏற் படும் அதனால் நீங்களும் பாதிக்கப்படுவீர்கள் என்று, இவர் களையும் வைத்துக் கொண்டு அவர்களையும் வைத்துக் கொண்டு பேசியிருக்க முடியும். தயவு செய்து அப்படிப்பட்ட ஒரு அமைப்பை பாடியை உடனே ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் ஒரே ஒரு பிரச்னை—பவானி சாகரில் புஞ்சை புளியம் பட்டியில் ஒரு கட்டிடம் கட்ட வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள், தயவுசெய்து இந்தக் கட்டிடம் கட்டு வதற்கு அரசு முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஓ. சுப்பிரமணியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு சங்கங்கள் விவசாயக் கடன் உதவி, விவசாய இடுபொருட்கள் வழங்கல், விவசாய விளைபொருட்களை விற் பதற்கு வசதி செய்தல், இன்றியமையா நுகர் பொருட்களை விநியோகித்தல் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், நடைமுறையில் இவ்வளவு செய்கிறதா என்பதை ஆராய வேண்டும். ஏன் என்றால் கூட்டுறவுத் துறை மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட மன்றங்களால் நடத்தப்பட வேண்டும் என்று அடிப்படைத் தத்துவம். ஆனால் இப்பொழுது ஸ்பெஷல்

ஆபிசர்களைப் போட்டு அதிகார வர்க்கத்தினரின் ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறது. உடனடியாக ஸ்பெஷல் ஆபீசர் பதவிகளை ரத்து செய்து தேர்தல்களின் மூலமாக நல்ல நடைமுறைகளை இந்தக் கூட்டுறவுத் துறையில் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1977-78-ல் குறுகிய கால, மத்திய காலக் கடன்களாக 12.28 கோடி ரூபாயும், 76-77இல் முறையே 125.12 கோடி, 19.14 கோடி ரூபாயும் வழங்கப்பட்டுள்ளன. 1978 ஆம் ஆண்டு டிசம்பர் முடிய 7.33 கோடி ரூபாய் அளவிற்கு வழங்கப் பட்டுள்ளன. இவைகள் எதுவும் வசூலிக்கப்படாமல் இருக் கின்றன. அதற்குக் காரணம் விவசாயிகள் விளைச்சல் இல் லாமை, 75-76 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து 3 ஆண்டு களுக்கு வறட்சி 77-78இல் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தால் கடந்த 4 ஆண்டுகளாக நிலவள வங்கிகளில் 32.87 கோடி ரூபாய்க்குக் கடன்கள் தள்ளி வைக்கப்பட்டிருக்கின்றன.

[பிற்பகல் 12-20]

223 நிலவள வங்கிகளில் 120 கடன் கொடுக்கிற நிலைமையில் இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவைகளில் எல்லாம் பெறப்பட்ட பணத்தை மக்கள் திருப்பிக் கொடுக்க முடியாத, சக்தி இல்லாத நிலையில், இயற்கையின் விளைவால், ஆபத்து களால் என்று நீங்கள் ஒப்புக் கொண்டு இருந்தாலும், அந்த நிலவளவங்கிகள் செயலாற்ற முடியாததன் காரணமாக உண்மை யிலேயே தேவையான விவசாயிகளுக்குக் கடன் கிடைக்க வாய்ப்பு இல்லை என்பதை வருத்தத்துடன் சொல்லிக் கொள்ள ஆசைப்படு கிறேன். காரணம் என்னவென்றால், எந்தச் சொசைடி கேட் டாலும், நிலவள வங்கியைக் கேட்டாலும் கடன் வழங்க தகுதி அற்றது என்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு சொசைடியோ, அல்லது வங்கியோ ஒரு குறிப்பிட்ட நபர்கள் கடன் திருப்பிச் செலுத்தவில்லை என்ற காரணத்திற்காக பணம் செலுத்தியவர் களும் அபராதம் கட்டுவதுமாதிரி இருக்கிறதே தவிர ''நாட் டுயர்வே கூட்டுறவு'' என்று சொல்லப்பட்ட அர்த்தத்தில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏதோ ஒரு சிலர் தவறு செய்தால் மிகப் பெரும்பான்மையானவர்கள் தண்டிக்கப் வது எந்த விதத்தில் நியாயம் என்பதை நான் கேட்க விரும்பு கிறேன்.

கடன் கொடுப்பதற்கு டார்கெட் வைக்கிறார்கள். வசூல் செய்வதில் டார்கெட் வைத்தால் பரவாயில்லை. இத்தனை ரூபாய் கள் கட்டாயமாகக் கடன் கொடுக்க வேண்டும் என்று சொல்கிற போது, கடனைத் திருப்பிக்கொடுக்க முடியாதவர்கள், கடன் பெறத் தகுதியில்லாதவர்கள் ஆகியோருக்கு கொடுக்கிறார்கள். இதனால் அவர்களிடத்தில் இருந்து கடன் கொடுத்ததைத்

திருப்பிப் பெற முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, கடன் கொடுப்பதற்கு டார்கெட் வைப்பதை விட, கடன் வசூல் செய்வதற்கு டார்கெட் வைத்தால் நல்லது. ஆகவே, கடன் கொடுப்பதற்கு டார்கெட் முறை நீக்கப்பட வேண்டும்.

(திரு. எஸ். ஜே. இராமசாமி—தலைமை)

எல்லாத் துறைகளிலும் கூட்டுறவு அமைப்பு ஏற்படுத்த வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு அரசு ஏற்பாடுகளை செய்து வருகிறது. ஆனால் நடைமுறையில் எவ்வளவு கஷ்டம் ஏற்படுகிறது என்பதை உணர்ந்து சில சங்கடங்களை நிவர்த்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த ஆடுவளர்ப்புத் திட்டம் அடிப்படையில் சொசைடி அமைக்கவேண்டும் என்று இருக்கிறது. அதன் மூலமாக சில பிரச்சனைகள் வருகின்றன. அந்த சொசைடி மூலமாகத்தான் கடன் வாங்கவேண்டும் என்று நிர்பந்தம் இருப்பதால் கிராமப் புறத்தில் இருப்பவர்கள் கூட்டுறவு பற்றி இங்கே என்ன சீர் திருத்தங்களைச் சொன்னாலும், அந்த ஆடு வளர்ப்புத் திட்டங்கள் மூலம் பயனடைய விரும்புகிறவர்கள் அதற்காகவே சொசைடி அமைக்க முடியாமல் இருப்பதால், அவர்களுக்கு மற்ற கூட்டுறவு சொசைடிகளில் இருந்து அந்த ஆடு வளர்ப்பிற்காக கடன் வாங்க முடியவில்லை. மார்ச் 31-ம் தேதிக்குள் ஏறக்குறைய 5 லட்சம் அந்த ஆடு வளர்ப்பிற்காக ஒதுக்கப்பட்டு இருந்தாலும் அந்த அமைப்பு இல்லாத காரணத்தால் ஒதுக்கப்பட்டு இருக்கிற தொகை உபயோகிக்க முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, இது ஒரு பெரிய திட்டம் என்று இருந்தாலும், அது நடைமுறையில் சாத்தியம் இல்லாத ஒன்றாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

லையபிலிடி இல்லை என்று புகார் சொல்லப்படுகிறது. அதற்கு நீங்களே காரணம் சொல்லியிருக்கிறீர்கள். மொத்தம் 223 நில வள வங்கிகளில் பணப்பற்றாக்குறை இருப்பதால் கடன் ' வழங்கவில்லை என்று சொல்லப்படுகிறது. இப்படி நீங்களே பல கஷ்டங்கள் இருக்கின்றன என்று ஒப்புக்கொள்கிறீர்கள். அப்படி இருந்தாலும் கூட இன்று விவசாய மக்களின் நலனைப் புறக்கணிக்கிறார்கள். அது சரியல்ல. அதுவும் அவர்கள் வசூலிக்கும் தண்ட வட்டி மிகவும் கடுமையானது. காரணம் என்னவென்றால் வேறு எந்தத் துறையிலும் இல்லாத வகையில் இது இருக்கிறது. இதன் காரணமாக அவர்கள் தனியாரிடமும் போய் கடன் பெற முடியவில்லை. அங்கேயும் அவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். ஆகவே, இந்தத் தண்ட வரி வசூலிப்பதைத் தவிர்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும், விவசாயிகள் கடன் தொகையை எவ்வளவு திருப்பிக்கட்டியிருந்தாலும், கடுமையான தண்ட வட்டியானது போடுவதால் அது கடன் தொகை மேல் போய்விடுகிறது. உதாரணத்திற்கு நான் ஒன்றைச்

சொல்லவிரும்புகிறேன். சிவகெங்கை, பரமக்குடி பகுதியில் கூட்டுறவு டாக்சி டிரைவர்கள் சங்கம் அமைக்கப்பட்டு, அவர்கள் அதன் மூலம் கார் வாங்கியிருக்கிறார்கள். அந்த நேரத்தில் அந்தக் காரின் விலை ரூ. 22,000 அவர்கள் தவணையாக மொத்தம் கட்டவேண்டிய தொகை 33,000 ரூ. ஆகும். பெட்ரோல் விலை உயர்வால், வேறு பல காரணங்களால் அவர்கள் தொழில் நசிந்து விட்ட காரணத்தால் தொடர்ந்து அவர்களால் பணம் கட்ட முடியவில்லை. அவர்களுடைய கார்கள் அதனால் விற்பனை செய்யப்பட்டது. அப்படி விற்பனை செய்யப்பட்ட பின்னரும் அந்த கார் விற்றப்பணம், அவர்கள் அது வரைக்கும் கட்டியிருக்கும் பணம் ஆகியவற்றை சேர்த்தால் ரூ. 35,000 வருகிறது-அவர்கள் ஒவ்வொருவரும் மேலும் ரூ. 18,000 20,000 பாக்கி கட்ட வேண்டும் என்று சொல்கிறார்கள். இப்படிப் பார்த்தால் ரூ. 53,000, ரூ. 55,000 திருப்பித் தர வேண்டும் என்று சொன்னால், அது சரியா? இப்படி அவர்களால் கட்ட முடியாத நிலை இருப்பதால் அவர்களுக்கு ஜாமீன் போட்டவர்களுக்கு நோட்டீசு வந்து இருக்கிறது. அவர்கள் ஏற்கனவே ரூ. 35,000 வரை கட்டியிருக்கிற போது, மேலும் ரூ. 18,000 கட்டவேண்டும் என்று சொல்வது எப்படி சரி? எந்த நோக்கத்திற்காக கூட்டுறவு சங்கம் அமைக்கப்பட்டதோ அந்த அமைப்பு வெற்றிகரமாக நடக்கவில்லை என்றால் மக்களுக்கு எப்படி கூட்டுறவு அமைப்பிலே ஒரு நம்பிக்கை ஏற்படும், அந்த நம்பிக்கையில் குறைவு ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன்.

அதற்குமேலாக தண்ட வட்டிப் போடுவது நியாயமாகாது. இந்த தண்ட வட்டிப் போடுவதை அறவே நீக்கினால்தான் கூட்டுறவுத் துறை உருப்பட முடியும்; மக்களுக்கும் முன்னேற வாய்ப்பாக இருக்கும்.

நகைகளைத் தனியார் அடகுக் கடைகளில் அடகு வைத்தால் தண்ட வட்டி கிடையாது. ஆனால் கூட்டுறவுச் சங்கங்களில் அடமானம் வைத்தால் அதற்கு தண்ட வட்டி போடுகிறார்கள். இது எந்த விதத்திலும் நியாயமாக இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பஞ்சம், புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகள் என்று அரசாங்கம் அறிவித்தாலும் கூட கூட்டுறவுத் துறையில் சலுகை வழங்கப்படுவதில்லை. ஆனால் அரசு ஊழியர்கள் 'அடடா' என்று சொல்லுகிறார்கள்; அஙிப் பெறுவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்று அரசாங்கம் அறிவித்து சலுகை கொடுக்கிறார்கள். அதை ஏற்றுக்கொண்டு, எங்களிடம் வந்து கையெழுத்து

கேட்கிறார்கள்; நாங்கள் கொடுக்கிறோம்; அவர்கள் சலுகைகள் பெறுகிறார்கள். ஆனால் இந்தச் சலுகை விவசாயிகளுக்கு இல்லை. அது ஏன் என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, கூட்டுறவுத் துறையில் லேபர் கான்ட்ராக்ட் சொசைட்டி வைத்து நடத்துகிறார்கள். அது எந்த இடத்திலும் சரியாக நடக்கவில்லை. எங்காவது நல்ல முறையில் நடந்தால் அதுபற்றி ரொம்ப சந்தோஷம். ஏனென்றால் சில தனிப்பட்டவர்கள் தங்களுடைய லாபத்திற்காக அதை வைத்து நடத்துகிறார்களே தவிர, எந்த நோக்கத்திற்காக வைக்கப்பட்டதோ அந்த நோக்கம் நடைபெறவில்லை. தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து, ஒரு கூட்டுறவு அமைப்பை ஏற்படுத்தினால் அதன் மூலம் அவர்களுக்கு வேலை கொடுக்கப்படும், கிடைக்கின்ற லாபத்தை அவர்கள் பங்கிட்டுக்கொள்ளலாம் என்ற முறையில்தான் விசேஷ சலுகைகளை அந்த அமைப்புக்கு கொடுத்தார்கள். ஆனால் இப்போது இருப்பது அங்கே யாரோ ஒருவர் தலைவராக இருக்கிறார். தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும்; அவர்களுக்கு லாபம் கிடைக்க வேண்டும் என்பது அவருடைய நோக்கம் அல்ல. தலைவருக்கு வேண்டியவர் வந்தால் அவர் டிபாசிட் கட்டாமல் கூட, 5% குறைத்துக் கேட்டால் கூட வேலையை அவருக்கு கொடுத்து விடுவார். உண்மையிலேயே அதில் அங்கத்தினர்களாக இருக்கிறவர்களுக்கு உரிய முறையில் அதனால் வேலை கிடைக்க வழியில்லை. 5% தனக்கு லாபம் கிடைத்தால் போதும் என்ற நிலையில்தான் தலைவர் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். இந்தக் குறைபாட்டை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் என்று தெரியவில்லை. ஒரு இயக்கத்தை நாம் ஆரம்பிப்பது தனிப்பட்டவர்களுக்கு லாபம் கிடைப்பதற்காக அல்ல; அது காரணமாக இருக்கக் கூடாது. ஏதோ ஒரு சிலர் லாபம் அடைவதற்கு பலருடைய பெயர்களை வைத்து, பயன்படுத்துவதாக அந்த இயக்கம் இருக்கக்கூடாது என்பதே என்னுடைய கருத்து.

கூட்டுறவுத் துறையில் தணிக்கைப் பிரிவும், நிர்வாகப் பிரிவும் இதுவரையில் ஒன்றாக இருந்தது. தற்போது இரண்டையும் தனித்தனியாகப் பிரிப்பதற்கு முன் வந்திருக்கிறார்கள். இது அவசியமில்லை. கூட்டுறவுத் துறையில் ஊழல் மிகுந்திருக்கிறது. அதைத் தடுப்பதற்கு இப்படி பிரிக்கப்படுகிறது என்று சொல்கிறார்கள் இப்படிப் பிரிப்பதால் மட்டும் ஊழலை நிறுத்திவிட முடியாது. ஆடிட் துறையில் இருப்பவர்களுக்கு ப்ரமோஷன் வாய்ப்புகள் மிகவும் குறைவாக இருக்கிறது, என்பது மட்டுமல்ல; அதனால் உருப்படியான பயன் எதுவும் இல்லை என்ற காரணத்தால் இரண்டாகப் பிரிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தப்படியாக, நாணயச் சங்கங்களில் அலுவலர்களை நியமிக்கிறார்கள். மத்திய சங்கத்திலிருந்துதான் அவர்களை நியமிக்கிறார்கள். அந்த அலுவலர் தவறு செய்தால் அவருடைய தவறான நடவடிக்கையினால் சங்கத்திற்கு நஷ்டம் ஏற்பட்டால் அந்தச் சங்கத்தின் தலைவரைத்தான் அதற்குப் பொறுப்பாக்குகிறார்கள். இது எப்படி நியாயம்? தலைவருக்குத் தெரியாமல் மேல்மட்டத்திலிருந்து நியமிக்கப்படுகிற ஒருவர் நாணயமாக நடந்துகொள்ளாத காரணத்தால் ஏற்படுகிற தவறுக்குத் தலைவரைப் பொறுப்பாக்குவது எந்த வகையிலும் நியாயம் அல்ல.

இன்னொன்று, அந்த அலுவலருக்குக் குறைந்த சம்பளம்தான் 150 ரூபாயிலிருந்து 200 ரூபாய் வரையில்தான் கொடுக்கப்படுகிறது. ஆனால் மத்திய வங்கியில் பணியாற்றும் பியூன், டிரைவர் போன்றவர்களுக்குக் குறைந்தபட்சம் 400, 500 ரூபாய் கொடுக்கப்படுகிறது. அவர்களுக்குக் கூடுதலாகக் கொடுக்கிறார்கள் என்று சொல்லவில்லை. மக்கள் நலனுக்காக பணியாற்றுகின்ற நாணயச் சங்க அலுவலருக்கு அந்த அளவுக்காவது சம்பளம் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறேன் அவர்களுடைய ஊதியத்தை உயர்த்திக் கொடுக்க வேணடுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது) இன்னும் கொஞ்சம் நேரம் கொடுங்கள். கட்சிக்கு ஒருத்தர்தான் பேச வேண்டியிருக்கிறது.

நிலவள வங்கிகளில் விழாக்கள் நடத்த அதிகாரிகள்தான் ஏற்பாடு செய்கிறார்கள். தலைவருக்கு அதில் எந்தவிதமான வரம்பும் இருப்பதாகத் தெரியவில்லே. அப்படி இருக்கையில் வருகின்ற மந்திரிகள், மற்றவர்களுக்கு ஆடம்பரமாகச் செலவு செய்துவிட்டு, அதன் பொறுப்பைத் தலைவருக்குச் சுமத்துகிறார்கள். அதிகாரிக்கு எந்தவிதமான பொறுப்பும் இதில் இருப்பதாகத் தெரியவில்லே. இதையெல்லாம் சீர்தூக்கிப் பார்த்து சீர்திருத்தம் செய்ய வேண்டியது மிக, மிக அவசியம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

அடுத்து ஹவுஸ் மார்ட்கேஜ் பாங்கில் சாங்ஷன் ஆகும் தொகையில் 10 சதவீதம் வசூல் செய்திருக்கவேண்டும். ஆனால் பினாமி ரசீது கொடுத்து வசூல் செய்து பாங்க் கணக்கில் வரவு வைக்கப்படாமல் லோன் சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது.

இம்மாதிரி முறைகேடுகள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்கூட நடைப்பெற்றிருக்கிறது. அதை விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மார்க்கெட்டிங் சொசைட்டியை எந்த அளவுக்குப் பயன்படுத்தவேண்டும் என்று ஒரு சிறு யோசனையைச் சொல்வதற்கு ஆசைப்படுகிறேன். மைசூரில் மாண்டியாவில் ஒரு சொசைட்டி இருக்கிறது. அங்கு விவசாயிகள் சென்று தங்கள் விளைபொருட்களை விற்கவும் அதே இடத்தில் தனக்குத் தேவையான பொருட்கள் அனைத்தையும் நியாயவிலையில் வாங்கவும் வசதியை ஏற்படுத்தியுள்ளார்கள். அதேபோல் தமிழ் நாட்டிலும் அமைக்க முன்வருவார்களேயானால் விவசாய மக்களுக்கு நல்ல விலையும் கிடைக்கும், மற்றவர்கள் அவர்களை ஏமாற்றாமல் இருப்பதற்கும் வாய்ப்பு ஏற்படும்......

(மணியடிக்கப்பட்டது)

பத்திரப் பதிவுத் துறையைப் பொறுத்தவரையில் அதாவது ரிஜிஸ்ட்ரேஷனைப் பொறுத்தவரையில் சிவகங்கையில் உள்ள..

(மணியடிக்கப்பட்டது)

மாண்புமிகு மாற்றுத்தலைவர் (திரு. எஸ். ஜே. இராமசாமி): நேரம் ஆகிவிட்டது. 10 நிமிடத்திற்கு 11 நிமிடம் ஆகிவிட்டது சீக்கிரம் முடியுங்கள்.

திரு. ஓ. சுப்பிரமணியன் : இப்போது கட்சிக்கு ஒருவருக்குத் தான் வாய்ப்பு கொடுக்கப்படுகிறது. ஆகவே கொஞ்ச நேரம் அதிகமாகக் கொடுங்கள்.

மாண்புமிகு மாற்றுத்தலைவர் (திரு. எஸ். ஜே. இராமசாமி): உங்களுடைய கட்சித் தலைவர்களும் சேர்ந்துதானே அலுவல் ஆய்வுக்குழுவில் முடிவு எடுத்திருக்கிறார்கள். ஆகவே நேரம் அதிகமாக இல்லை சீக்கிரம் முடியுங்கள்.

திரு. ஓ. சுப்பிரமணியன் : எங்களுடைய பேச்சுரிமையே மறுக்கப்படுகிறதே.

அடுத்து சிவகெங்கையில் உள்ள டிஸ்ட்ரிக்ட் ரெஜிஸ்ட்ரார் அலுவலகத்தில் தஸ்தாவேஜ்கள் வைக்க பாதுகாப்பான இடங்கள் இல்லாமல் ஆங்காங்கே வைக்கப்பட்டுள்ளன. ஏன் அந்தக் கட்டிடத்தை விஸ்தரிக்கக் கூடாதா என்று கேட்டால் பக்கத்திலே உள்ள இடம் பி.டபிள்யூ. டி-க்குச் சொந்தமான இடம் என்று சொல்கிறார்கள். ஆகவே அந்தப் பகுதியிலே அந்த டிஸ்ட்ரிக்ட் ரெஜிஸ்ட்ரார் அலுவலகத்திற்குரிய கட்டிடத்தை

விஸ்தரிக்க ஆவன செய்ய வேண்டும். கட்டிடம் கட்டுவதற்கு இடம் ஒதுக்கவேண்டும். இதுபோன்ற காரியங்களைக் கூட்டுறவுத் துறையைப் பொறுத்தமட்டில் செய்தால் நிச்சயமாக இந்த நாட்டு மக்கள் அவர்களுக்குக் கடமைப்பட்டிருப்பார்கள் என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

*திரு. சோ. அழகர்சாமி : மாற்றுத் தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவுத் துறையானது மிக முக்கியமான துறை மட்டுமல்ல. இந்தத் துறை சாதாரணமாக கிராமப் பகுதி களிலே இருக்கின்ற ஏழை எளிய விவசாயிகளுக்கு, உற்பத்தி பெருகுவதற்குக் கடன் கொடுக்கின்ற வேலையைச் செய்கிறது இந்தக் கூட்டுறவுத்துறையைப் பொறுத்தமட்டில் இதனுடைய பல்வேறு பிரிவுகள் வெவ்வேறு அமைச்சரிடத்தில் இருக் கின்றன. அவை எல்லாம் மொத்தமாக ஒரே அமைச்சரிடத் திலே கொடுக்கப்பட வேண்டும். இந்தக் கூட்டுறவுத் துறையைப் பொறுத்தமட்டில் அது பல வேலைகளைச் செய்து வருகிறது. அதாவது பலவிதமான கூட்டுறவுச் சங்கங்கள் நாட்டி டிலே இருக்கின்றன. கடன் கொடுக்கின்ற வேலையை மட்டும் இந்தச் சங்கங்கள் செய்யவில்லை. பல தொழில்களைக்கூட கூட்டுறவுச்சங்கங்கள் நடத்தி வருகின்றன. ஆகவே கூட்டுறவு சம்பந்தப்பட்ட அனைத்துத் துறைகளும் ஒரே அமைச்சரிடத் திலே இருந்தால் பலனுள்ளதாக இருக்கும்.

அடுத்தபடியாக நம்முடைய மாண்புமிகு திரு. சுப்பிரமணி யன் அவர்கள் கூட ஒன்றைக் குறிப்பிட்டார். நிர்வாகத்துறை தணிக்கைத்துறை அதாவது இதனை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று சொல்லப்படுகிற அந்த ஆலோசனை தேவை யில்லை என்று சொன்னார். ஆகவே நானும் சொல்கிறேன். அது இரண்டு பிரிவாக இருந்த உத்திரப்பிரதேசத்திலே இவ் வாறு இரண்டையும் ஒன்றாக ஆக்குவதற்காக முயற்சி செய்யப்பட்டது. அதனால் பல பாதகமான விளைவுகள் ஏற்பட்டதற்குப் பிறகு இரண்டும் ஒரே துறையின் கீழ் கொண்டு வரப்படுகிறது. ஆகவே அப்படிப்பட்ட தணிக்கை துறை என தனியாக்கப்படும் யோசனை அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 4,740 கூட்டுறவுச் சங்கங்கள் கிராமப் பகுதி களில் கடன் கொடுக்கின்ற வேலையினைச் செய்து வருகின்றன. ஆனால் இப்போது கிராமப் பகுதிகளில் கடன் தேவை 310 கோடி ரூபாய். 1976-77-ல் 125 கோடி ரூபாய் கொடுக்கப் பட்டிருக்கிறது. 1977-78-ல் 127 கோடி ரூபாய்தான் கொடுக்கப்பட்டது. அதாவது இரண்டு கோடி ரூபாய்தான் அதிகமாகக் கொடுக்கப்பட்டது. நீண்ட காலக் கடன் டார் ஜெட் 16 கோடி ரூபாய். டிசம்பர் வரைக்கும் கொடுக்கப்

பட்டது 7 கோடியே 30 இலட்ச ரூபாய் தான். அதற்குப் பிறகு கொடுக்க முடியவில்லை. காரணம் என்னவென்றால் கடன் கேட்க ஆள் இல்லையா? 223 நிலவள வங்கிகளில் 120 வங்கிகள் கடன்களைத் திரும்பப் பெற முடியாமலும், கடன் களைக் கொடுக்க முடியாமலும் இருக்கின்றன. ஆகவே இந்தக் கடன் கொடுப்பதிலே இருக்கின்ற முறைகளை மாற்ற வேண்டும். கடன்பட்டவர்கள் இன்று திரும்பச் செலுத்த முடி யாத நிலையிலே இருக்கிறார்கள். ஆகவே எப்படிக் கடனைத் திரும்ப வசூலிப்பது, எப்படி கொடுப்பது என்பது பற்றி நன்கு விவாதிக்கலாம். இப்போது சில கூட்டுறவுச் சங்கங்களை நடத்த முடியாமல் இருக்கிறது.

அதற்காக கடந்த காலத்தில் என்ன சொல்லப்பட்டது? கடந்த மூன்று ஆண்டுகளாக தொடர்ந்து, வறட்சியினாலும், புயலாலும் வெள்ளத்தாலும் கடன்களை திருப்பிச்செலுத்த முடியவில்லை. இதை நீங்களே ஒத்துக்கொண்டிருக்கிறீர்கள். இந்த அறிக்கை யிலேயே ''தொடர்ந்து மூன்று ஆண்டுகள் நிலவிய கடுமையான வறட்சி காரணமாகவும், 1977-78 ஆம் ஆண்டில் புயலாலும், வெள்ளத்தாலும் ஏற்பட்ட சேதம் காரணமாகவும் நிலவள வங்கிகள் கடந்த நான்கு ஆண்டுகளில் 32.87 கோடி ரூபாய்க்கு ஆண்டுத்தவணைகள் வசூலிப்பதை தள்ளிவைத்து கடன் தவணை களை மாற்றி அமைத்துள்ளன.....'' என்று சொல்லப்பட்டிருக் கிறது தவணைகளை மட்டும் மாற்றி வைத்தால் போதாது. வட்டியை அறவே தள்ளிக் கொடுக்கவேண்டும் அரசாங்கத் தில் எத்தனையோ சேமிப்பு பண்டுகள் எல்லாம் இருக்கின்றன. அவற்றிலிருந்து இந்தக் கடன் தொகையை ஈடு செய்து கொள்ளவேண்டும். அது மட்டுமல்ல, மத்திய வங்கிகளாக இருந்தாலும் சரி, மாநில வங்கிகளாக இருந்தாலும் சரி, அவற்றிலுள்ள பாலன்ஸ் ஷீட்டைப் பார்த்தால் 15 லட்சம், 50 லட்சம் என்று லாபம் வந்திருப்பதை பார்க்கிறோம். இவையெல்லாம் எங்கேயிருந்து வந்தது. இவையெல்லாம் விவசாயிகளிடமிருந்து வாங்குகின்ற வட்டிதான். இப்படிப் பட்ட தொகையிலிருந்து வராத கடன்கள், கட்ட முடியாத, திருப்பிச் செலுத்த முடியாத கடன்களை எல்லாம் ஈடு செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு அரசு யோசிக்க வேண்டும். அதேமாதிரி, கடனைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருக்கின்ற சங்கங்களுக்கு எல்லாம் இந்த உதவியை அளிக்க முடியுமா என்றும் ஆலோசிக்கவேண்டும்.

பொதுவாக கூட்டுறவு சங்கங்களுக்கெல்லாம் தேர்தல் நடத்த வேண்டும். கடந்த மூன்று ஆண்டுகளாக கூட்டுறவு சங்கங்களில் எல்லாம் 76-வது ஆண்டிலிருந்து ஸ்பெஷல் ஆபீஸர்தான் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய சம்பளத்தை எல்லாம் கூட்டுறவு சங்கங்கள்தான் கொடுக் கின்றன. தேர்தல் நடந்து ஒரு போர்டு ஒரு செக்ரட்டரி

என்று தான் இருக்க வேண்டியிருக்கும். இப்போது அப்படியல்ல, கூட்டுறவு சங்கங்கள் அதில் வேலை செய்கின்ற ஸ்பெஷல் ஆபீசர்களுடைய சம்பளங்களைக் கொடுக்கவேண்டும். பண்டகசாலைகளாக இருந்தாலும் சரி, சாதாரண நிலவள வங்கிகளாக இருந்தாலும் சரி, இவைகளில் எல்லாம் இருக்கின்ற ஸ்பெஷல் ஆபீசர்களுக்கு இந்தச் சங்கங்களே சம்பளத்தை கொடுக்க வேண்டியிருப்பதால் ஏராளமான செலவு ஏற்படுகிறது இதை உடனடியாக நிறுத்தவேண்டும். தேர்தலை வைப்பதாக சொன்னீர்கள், தேர்தலை வைப்பதற்கு தயக்கம் ஏன்? இதற்காக ஒரு சட்டம் வரப்போகிறது என்று மூன்று வருடங்களாக சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். சீக்கிரமாக தேர்தலை வைக்க வேண்டியது தானே, இதற்கு ஏன் தயக்கம் காட்டுகிறீர்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு போர்டு வந்துவிட்டால் இந்தச் சிக்கல்களை எல்லாம் தீர்க்கலாம். ஆனால் இப்போது ஸ்பெஷல் ஆபீசர் இருப்பதால் யாரும் கண்ட்ரோல் பண்ண முடியாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது.

கூட்டுறவு பண்டகசாலைகளைப் பொறுத்தவரையில், 76-77-ல் பண்டங்களை விற்பனை செய்தது 147.23 கோடி ரூபாய். ஆனால் 77-78ல் 139.47 கோடி ரூபாய் என்று குறைந்திருக்கிறது. இப்படி குறையக் காரணம் என்ன? பண்டகசாலைகளில் எல்லாம் சரியான நிர்வாகம் நடைபெறுவதில்லை. அத்துடன் தேவைப்படும் பொருட்களை வரவழைத்து வினியோகிக்காத காரணத்தினாலும் விற்பனை குறைந்து வருகிறது. இதைக் கவனித்து கூட்டுறவுத் துறையில் விற்பனையைப் பெருக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு நீண்ட கால கடன் என்று சொல்லி கொடுக்கப்படுகின்ற கடன்கள் 7 வருடங்கள் தவணை கொடுக்கப்படுகிறது. வெளிநாடுகளில் எல்லாம் பார்த்தால் இப்படிப்பட்ட நீண்டகால கடன்கள் 30 வருடங்கள் 40 வருடங்கள் என்று தவணை கொடுக்கிறார்கள். ஆனால் நீண்டகாலக் கடனைப் பெற்று ஒரு கிணற்றை சுமார் 20 ஆயிரம் ரூபாய் செலவு செய்து வெட்டினால் அதை 7 வருடங்களில் எப்படித் திருப்பிக் கொடுக்க முடியும்? நீண்ட கால கடன்கள் என்று வாங்கப்படுவது, அதிலிருந்து கிடைக்கின்ற வருமானத்தை கொண்டுதான் நீண்ட கால கடனை அடைக்க வேண்டும்.

(மணியடிக்கப்பட்டது)

என்ன, இதற்குள்ளேயே மணி அடித்துவிட்டால் எப்படி? முன்னால் எல்லாம் 20 ஆண்டுகள் என்று தான் இருந்தது, ஆனால் மாண்புமிகு ஆதித்தனார் காலத்தில் இது ஏழு ஆண்டு என்று கொண்டு வந்தார்கள். கிணறு வெட்டுவதாக இருந்தா

லும் வேறு பாசன திட்டங்களுக்காக உபயோகித்திருந்தாலும் இதற்காக வாங்கப்படுகின்ற நீண்ட காலக் கடன்களுக்கு குறைந்தது 30 ஆண்டு கால தவணையாவது இருக்கவேண்டும்......

(இந்த நேரத்தில்—வாக்குப்பதிவுக்காக——கோரமில்லாமல் இருந்தால் உறுப்பினர்களை அழைப்பதற்காக அடிக்கப்படும்—மணி ஒலித்துக்கொண்டிருந்தது.)

(பிற்பகல் 12-40)

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. இராமசாமி) : தங்களுக்கு கொடுக்கப்பட்ட நேரம் 10 நிமிடம். இப்போது 8 நிமிடங்கள் ஆகிவிட்டது.

திரு. து. புருஷோத்தமன் : இப்போது மணியடிக்கின்றதே, ஏதாவது தீப்பிடித்துக் கொண்டதா?

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. இராசாமி) : என்ன காரணம் என்று தெரியவில்லை. மின்சாரக் கோளாறு என்று சொல்லப்படுகிறது. வேறு ஒரு காரணமும் அல்ல. இப்போது எந்த டிமாண்டும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. எனவே, நீங்கள் தொடர்ந்து பேசலாம்.

திரு. மு. கருணாநிதி : மாற்றுத் தலைவர் அவர்களே, இப்போது டிவிஷன் நேரமும் அல்ல. மணி அடிக்கப்படுகின்றது. உறுப்பினர்கள் எல்லாம் இருக்கைக்கு வருகின்றார்கள். கதவுகள் சாத்தப்படுகின்றது. இப்படி மணி அடிப்பதற்குக் காரணம் என்ன ?

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : கதவுகள் சாத்தப்பட்டிருந்தால் திறந்து விடும்படி கேட்டுக் கொள்கிறேன். கதவுகள் திறந்துதானே இருக்கின்றது.

திரு. மு. கருணாநிதி : நீங்கள் அப்போது வரவில்லை. இப்போதுதான் வந்திருக்கிறீர்கள். கதவுகள் சாத்தியதற்கு காரணம் என்ன?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கதவுகள் அப்படி சாத்தப்பட்டிருந்தால் திறந்து விடலாம்.

திரு. அ. சுவாமிதாஸ் : மின்சாரக் கோளாறுக்குக் காரணம் என்ன ?

REPORTING SECTION

1979 மார்ச் 24]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாற்றுத் தலைவர் அவர்கள் காரணம் என்ன என்று தெரியாது என்று சொன்னார்கள். அதே நிலைதான் எனக்கும். மின்சாரக் கோளாறு காரணமாக இருக்கலாம் என்று சொல்லப்படுகிறது. என்ன காரணம் என்று கேட்டுச் சொல்லலாம்.

திரு. அ. சுவாமிதாஸ் : மின்சாரக் கோளாறாக இருந்தால் மணி அடித்திருக்காதே?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 'எலக்ட்ரிசிடி கட்' என்று நான் சொல்லவில்லை. ஏதாவது ஒன்றோடு ஒன்று 'டச்' ஆகக்கூடிய கோளாறு ஏற்பட்டிருக்கலாம்.

திரு. சோ. அழகர்சாமி : துணைத் தலைவர் அவர்களே, ஆகவேதான் கடந்த காலத்திலே வழங்கிய கடனை, நீங்களே ஒத்துக்கொண்ட மாதிரி வெள்ளத்தாலும் வறட்சியாலும் புயலாலும் விவசாயிகள் பாதிக்கப்பட்டதன் காரணமாக, அவர்களுக்கு நிவாரணம் அளிக்கின்ற வகையிலே அதை மத்திய காலக் கடனாக மாற்றியிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். மத்திய காலக் கடனாக மாற்றப்பட்டாலும், இதற்கு குறுகிய காலக் கடனுக்கு உள்ளதைவிட வட்டியை அதிகரித்திருக்கிறீர்கள். எனவே, பாதிக்கப்பட்ட விவசாயிகள் இதனை எப்படிக் கொடுக்க முடியும்? எனவேதான், நிவாரணம் வேண்டுமென்று கேட்கின்றார்கள். அதற்கு அரசாங்கம் சரியான ஏற்பாடு செய்ய வேண்டும்.

அது மட்டுமல்ல, இன்றைக்கு கேரளாவிலே 2, 3 தினங்களுக்கு முன் வந்துள்ள பட்ஜெட்டை பத்திரிகையிலே பார்த்தபோது, அவர்கள் வட்டி விகிதத்தைக் குறைத்திருக்கிறார்கள். சென்ற ஆண்டைவிட 3% குறைத்திருக்கிறார்கள். நீங்கள் ஏன் அப்படி குறைக்கக் கூடாது? போன சட்டசபையிலே கேட்கின்ற நேரத்தில் 60 பைசாவைக் குறைத்திருக்கிறீர்கள். ஆனால், கேரளாவிலே சென்ற ஆண்டைவிட 3% வட்டி விகிதம் குறைத்திருக்கிறார்கள். நீங்களும் அதைப்போல் யோசித்து முடிவு செய்ய வேண்டும்.

ரிசர்வ் வங்கியிலே 6%க்கு வாங்கி, அது விவசாயிகளுக்கு கொடுக்கின்றபோது 12% என்று கொடுக்கப்படுகின்றது. அதற்குப் பதிலாக ஏன் அதை 9% என்று கொடுக்கக் கூடாது? அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். கடந்த காலத்திலே 3%க்கு வாங்கி, அதை விவசாயிகளுக்குக் கொடுக்கும்போது $6\frac{1}{4}$% என்று கொடுத்திருக்கிறார்கள். ரிசர்வ் வங்கியில் 6% க்கு வாங்கி, பின்னால் விவசாயிகளுக்கு கடன் கொடுக்கும்போது நீங்கள் 14, 15 என்று வட்டி விகிதத்தை உயர்த்த வேண்டிய அவசியம் இல்லை.

அதேமாதிரி, பல இடங்களில் தங்க நகைகளுக்கு கடன் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. தனி நபர் ஜாமீனில் பேரில் கடன் கொடுக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அதற்கு வட்டி விகிதம் என்ன? தனி நபர் ஜாமீனில் வாங்கினால் வட்டி விகிதம் 12%. ஆனால் தங்க நகைகள் மேல் வாங்கினால் வட்டிவிகிதம் 15%. இப்படி அர்பன் கூட்டுறவு பாங்குகளும், கிராமக் கூட்டுறவு பாங்குகளும் 15% வட்டிக்கு கொடுக்கிறார்கள். அது அவ்வாறு இருக்கக்கூடாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேமாதிரி, விவசாய விளைபொருள் சென்ற ஆண்டை விட விற்கப்பட்ட இந்த விவசாய விளை பொருள்களின் மதிப்பு குறைந்திருக்கிறது. 1977–78-லே 54.84 கோடிக்கு இந்த விவசாய விளைபொருள்கள் மார்க்கெட்டிங் கூட்டுறவு சொசையடியாலே விற்கப்பட்டிருக்கிறது. அது 43 கோடியாக குறைந்திருக்கிறது. அதற்குக் காரணம் என்ன? அடுத்த ஆண்டிற்கு 50 கோடிக்கு விற்க முடியும் என்று போட்டிருக்கிறீர்கள். அது சரிதானா? அது வளர்ச்சியா? அல்லது தேய்வா? என்பதைச் சிந்திக்கவேண்டும். வளர்வதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டும். அதே போல் வட்டிவிகிதம் 6-லிருந்து, 6 பிளஸ் 3 ஆகமொத்தம் 9% ஆக இருக்க வேண்டும். அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். நீண்டகாலக் கடன். தற்போது 7 ஆண்டுகள் என்று இருப்பதை, 30 ஆண்டுகளாக மாற்ற வேண்டும். நீங்களே ஒத்துக் கொண்டிருக்கிறீர்கள், விவசாயிகள் வெள்ளத்தாலும், புயலாலும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்று. ஆகவே, அந்தக் கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும். அதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும்.

நிலவள வங்கிகளில் வேலை பார்க்கக்கூடிய ஊழியர்களுக்கு ஒரே விதமான சம்பளம் கிடையாது. பல ஊர்களில் சொசைடிகளில் வேலை பார்க்கக்கூடியவர்கள் 50 ரூபாய், 100 ரூபாய் சம்பளம் பெற்று வேலை செய்து வருகிறார்கள். பீடி, சுருட்டு தொழிலாளர்களுக்கெல்லாம் குறைந்த பட்ச ஊதியத்தை நிர்ணயித்திருப்பது போல் இவர்களுக்கும் குறைந்த பட்ச ஊதியத்தை நிர்ணயிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த வங்கிகளில் இருக்கக்கூடிய ஸ்பெஷல் ஆபீசர்கள் அவர்களுக்கு உரிய ஊதியத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறுர்கள். கீழே உள்ளவர்கள் ஊதிய உயர்வு கேட்டால் பதிவாளரோ அல்லது அரசாங்கமோ அனுமதி கொடுப்பது கிடையாது. முறையாக கேட்டு கூட்டுறவு அமைப்புகளை நிர்வகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று, கேட்டு விவசாயிகளுக்கு கொடுக்கப்படுகிற கடன்களுக்கு வட்டி விகிதத்தைக் குறைத்து கடன் கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

சட்டமன்ற LEGISLATURE வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1979 மார்ச் 24]

*திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு மானியத்தின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்தைத் தெரிவிப்பதற்காக இங்கு நிற்கிறேன்.

மற்ற பிரச்சினைகளுக்குப் போவதற்கு முன்னதாக கூட்டுறவுத் துறையிலே உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் வலியுறுத்திக் கூற கடமைப்பட்டிருக்கிறேன். சென்ற ஆண்டு இதே மானியத்தின்மீது நடைபெற்ற விவாதத்திலே எதிர்க்கட்சியைச் சார்ந்த அனைவருமே, இன்னும் சொல்லப் போனால் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் கூட தேர்தலை நடத்த வேண்டுமென்று வற்புறுத்தினார்கள். அதற்குப் பதிலளிக்கின்ற முறையில் மாஜி கூட்டுறவு அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே ஒரு வாக்குறுதியைக் கொடுத்திருக்கிறார்கள். ''ஒரு சட்டம் நிறைவேற்றப்படுவதற்கான முறைகளை தயாரித்துக் கொண்டிருக்கிறோம். அது சட்ட இலாகாவுக்குப் போய்விட்டது. சீக்கிரமாக வந்துவிடும். உடனடியாக சட்டத்தை இந்த அவையில் சமர்ப்பித்து நிறைவேற்றி சீக்கிரமாகத் தேர்தல் நடத்தப்படும்'' என்று இந்த அவையில் அவர்கள் கொடுத்த வாக்குறுதி ரெக்கார்டில் இருக்கிறது. ஆண்டு ஒன்று கழிந்துவிட்டது. ஆனால் தேர்தல் நடத்துவதற்கான எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை என்று சொல்லும்போது இந்த அவைக்குக் கொடுத்த வாக்குறுதியை எவ்வளவு நாட்களுக்குக் கடத்த வேண்டுமோ அவ்வளவு நாட்களுக்குக் கடத்தப்படும் ஒரு நிலையை அரசாங்கம் எடுத்திருப்பது சரியல்ல என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, இந்த விவாதத்திலே அரசுத் தரப்பிலிருந்து கூட்டுறவுத் துறையிலே இன்ன மாதத்திற்குள்ளாக தேர்தல் நடத்தப்படும் என்ற வாக்குறுதியை நிச்சயமாக அளிக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்த தேர்தலைக் காலம் கடத்துவதற்காகச் சொல்லப்படுகிற அரசுத் தரப்பு வாதம் சரியல்ல என்று வற்புறுத்திக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தப் பகுதியில் இருப்பவர்கள் 'பை-லா' படி தகுதியுள்ளவர்கள் அனைவரும் சேர்க்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில் சட்டம் கொண்டு வரப்பட இருப்பதால் காலதாமதப்படுத்துவது சரியல்ல. தேர்தலை நடத்த வேண்டுமென்று சொல்லும் போது பல இடங்களில் ஊழல்கள் இருக்கின்றன. அந்த ஊழலைப் பற்றி விசாரித்து முடிவு காண வேண்டுமென்று சொல்லி தேர்தல் நடத்துவதில் காலம் கடத்துவது சரியல்ல என்றும் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். ஊழல் என்று சொல்லி 15 ஆண்டுகளுக்கு முன்னால் கடையநல்லூர் சொசைடி கலைக்கப்பட்டு இன்னும் தேர்தல் நடத்தப்படாமல் இருக்கிறது. இந்த

மாதிரி காரணங்களைச் சொல்லி தேர்தல் நடத்துவதில் காலம் கடத்தாமல் நல்ல முறையில் விரைவில் தேர்தலை நடத்த ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12-50]

ஊழல்கள் இப்போது நடக்கவில்லையா? எத்தனை ஊழல்களைச் சொல்ல வேண்டும்? மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் எனக்கு அவகாசம் கொடுத்தால் பல சொசைடிகள் பற்றி விவரத்தோடு, ஆதாரத்தோடு பேசத் தயாராக இருக்கிறேன். எல்லாவற்றிற்கும் போகவேண்டாம், ஒன்றிரண்டைப் பற்றி மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

காவேரி சிறப்பு அங்காடியிலே 10 லட்சம் ஊழல் நடைபெறவில்லையா? காமதேனு சிறப்பு அங்காடியிலே ஊழல் நடைபெறவில்லையா? இப்போது நான் சொல்வது எல்லாம் தனி அதிகாரிகள் ஆட்சியிலேதான். அதேபோன்று கோவை சிந்தாமணியிலே தனி அதிகாரி இருக்கிறபோதுதான் 40 ஆயிரம் மூட்டை அரிசி ஆந்திராவிலிருந்து கொண்டு வரப் பட்டது. காலாகாலத்திலே விநியோகிக்கப்படாமல் மக்கிப் போய் போக்குவரத்துச் செலவுகளை தள்ளுபடி செய்து பல லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது, இதையெல்லாம் மறுக்க முடியுமா? அதற்கான ஆதாரங்கள் ரிகார்டுகள் எல்லாம் இருக்கின்றன. அதைப் போன்று பல இடங்களிலே நடைபெற்றிருக்கின்றன.

அது மட்டுமல்ல, இன்றைக்கு ஊழல் என்ற பெயரால் பல இடங்களில் அவைகள் கலைக்கப்படுகின்றன. சென்ற கூட்டத்திலேயே சுட்டிக்காட்டப்பட்டது. தங்களுக்குக் காழ்ப்பு உணர்ச்சி ஏற்பட்டால் உடனே கலைப்பது. நான் இரண்டு உதாரணங்களை ம்ட்டும் சொல்ல விரும்புகிறேன். சென்ற ஆண்டிலே விக்கிரமசிங்கபுரத்திலே, அங்கே சி. ஐ. டி. யு. தலைமையிலிருந்த தொழிலாளர்கள் ஸ்டோர் கலைக்கப்பட்டது. அதற்குக் காரணங்கள் என்ன சொல்லப்பட்டது? அங்கே தேர்தல் நடத்தவேண்டுமென்று அதிகாரிகள் அதற்கு ஒப்புக்கொண்டு தேர்தல் நடத்தப்படும் என்று அறிவிக்கப் பட்டும், தேர்தல் தடை செய்யப்படுகிறது. பல காரணங்களைச் சொல்கிறார்கள், கலைக்கிறார்கள். இப்போது கேட்டால் அந்த சொஸைடியிலே நடைபெற்ற ஊழல்கள் நிவர்த்திக்கப்படவில்லையென்று சொல்கிறார்கள். நான் ஆதாரத்தோடு சொல்கிறேன். இப்போது அதிகமான ஊழல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அன்றைக்கு அதைக் கலைப்பதற்கு என்ன காரணத்தைச் சொன்னார்கள்,

தொழிலாளர்களுக்கு சம்பளத்தில் 70 சதவீதம் கடன் கொடுத்தார்கள், ஏன் கொடுத்தார்கள் என்பது ஒரு காரணம். இன்னொரு காரணம், அந்த மில்லிலே இருக்கிற வேலை பார்க்கிற பதிலிகளை மெம்பர்களாக ஏன் சேர்த்தார்கள் என்பது. இன்றைக்கு இந்தக் குற்றச்சாட்டுகள் நிவர்த்திக்கப்பட்டிருக்கின்றனவா? அங்கே இன்றைக்கு ஒரு டி. ஆர். தான் ஸ்பெஷல் ஆபீஸராக இருக்கிறார். அவர் வந்ததற்குப் பிறகும் அதே 70 சதவீதம்தான் கொடுத்துக் கொண்டிருக கிறார்கள். பதிலியாக இருக்கிற தொழிலாளர்களைச் சேர்ப்பது தவறு என்று சொல்லி கலைத்தார்களே, அவர்களும் சேர்க்கப்படுகிறார்கள். என்ன நிலைமை. தனி அதிகாரி வந்ததற்குப் பிறகும் இருக்கிற நிலைமை தான். எந்த வகையிலே இது முறையானது என்பதை நான் மந்திரி சபைக்கே விட்டுவிடுகிறேன். அவர்கள் முடிவு செய்யட்டும். இன்றைக்கு அந்த ஸ்பெஷல் ஆபீஸரைப் போட்டதற்குப் பிறகு அவர் என்னுடைய நண்பராக ஆக வேண்டும் என்ற முறையிலே அ.தி.மு.க. பிரமுகர்கள் ஒருவருக்கொருவர் சண்டைபோட்டு அங்கே ஜாமீனில் வெளிவருகிற கேஸோடு நிற்கிறது. மறுக்கமுடியுமா? அது மட்டுமல்ல, அவர்மீது கேஸ் போடு, இவர் மீது கேஸ் போடு என்று போட்டி போட்டுக்கோண்டு போலீஸ் ஸ்டேஷன் முன்னாலே அ. தி. மு. க. பிரமுகர்கள் உண்ணாவிரதம் இருந்ததை மறுக்கமுடியுமா? ஆகவே, இப்படி ஊழல் வளருவதற்கே ஸ்பெஷல் ஆபிஸர் கையிலே அதிகாரத்தைக் கொடுத்ததுதான் காரணம். தேர்ந்தெடுக்கப்பட்ட ஆளாக இருந்தால் நாளைக்கு வோட்டு வாங்கப்போகிறபோது வாக்காளர்கள் கேட்பார்கள் என்ற பயம் இருக்கும், இங்கே அதிகாரிகளைக் கண்காணிக்க முடியாத நிலைமை இருக்கிறது.

இன்னொரு உதாரணம் சொல்கிறேன். சேலத்திலே 1978ஆம் ஆண்டிலே கடைசிப் பகுதியிலே மத்திய கூட்டுறவு வங்கிக்கு ஒரு செயலாளர் நியமிக்கப்பட்டிருக்கிறார், ஸ்பெஷல் ஆபீஸர் ஆட்சியிலே. திருச்சி மாவட்டத்திலே 'அப்படி ஒரு செயலாளர் நியமிக்கப்படவில்லை, மதுரையிலே நியமிக்கப்படவில்லை, திருநெல்வேலியிலே நியமிக்கப்படவில்லை, இப்படி வேறு எங்குமே நியமிக்கப்படாமல் இருக்கிறபோது சேலத்திலே மட்டும் நியமிக்கப்பட்டிருக்கிறார். யார் தெரியுமா? கூட்டுறவு வங்கியிலே இருந்தவர், அந்த வங்கியிலே பல மோசடி செய்தவர், வங்கியிலே இருக்க லாயக்கற்றவர் என்று கூட்டுறவுத் துறையாலே எழுதப்பட்டவர், ரிக்கார்டுகள் இருக்கின்றன அதற்கெல்லாம். அந்த உத்திரவைப் போட்டவர் ரிஜிஸ்திரார் அவர்கள்தான். அந்த நபர் யார் என்று ரிஜிஸ்டாருக்கு தெரியும், நான் பெயரைச் சொல்லவில்லை, வெளியே உள்ளவரைப்பற்றி நான் சொல்லக்

கூடாது என்பதால், அது தவறு என்றால் நான் வாபஸ் வாங்கிக் கொள்கிறேன். இப்படி ஊழல்கள் மேலும் மேலும் வளர்ந்து கொண்டிருக்கின்றன.

இப்படி ஸ்பெஷல் ஆபீசர் ஆட்சியிலே இருக்கிறது. ஆகவே தான் நாங்கள் சொல்கிறோம், ஸ்பெஷல் ஆபீசர்களை ரத்து செய்துவிட்டு உடனடியாகத் தேர்தல் நடத்தி மக்கள் கையிலே ஒப்படைக்க வேண்டுமென்று சொல்கிறோம்.

மாண்புமிகு அமைச்சரவர்களின் அறிக்கையிலே, சொசைட்டிகளுக்கு இன்னும் பல கடன்களை வசூலிக்க முடியவில்லை என்று இருக்கிறது. ஏற்கனவே, வெள்ளம், புயல், இயற்கையின் கோளாறு ஆகியவற்றின் விளைவாக, வாங்கிய கடனை அடைக்க முடியாத நிலையில் விவசாயி களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை மாமன்றத்தில் ஒத்துக் கொள்கிறோம். அந்தக் காரணத்தினால்தான் கடன்களை கூட ஒத்தி வைக்க ஒத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் இன்றைக்கு அந்தக் கடன்களை எப்படி அவன் கட்டுவான்? ஆகவேதான், குறைந்தபட்சம், 3,600 ரூபாய்க்குக் கீழே ஒரு வருஷத்திற்கு எல்லாச் செலவுகளும் போக வருமானம் வருகின்ற அந்த விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, அவர்கள் வாங்கிய கூட்டுறவுக் கடன்களை ரத்து செய்துவிட்டு, கூட்டுறவுச் சங்கத்திற்கு மத்திய அரசும், மாநில அரசும் மானியம் கொடுத்து, மீண்டும் அந்த விவசாயிகளுக்குக் கடன் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சரவர்கள் வைத்திருக்கும் கொள்கை விளக்க அறிக்கையில் ஒரு விஷயம் சுட்டிக் காட்டப்பட்டிருக் கிறது. நலிந்த விவசாயிகளுக்குத்தான் அதிகப்படியாகக் கடன் கொடுப்பதற்கு இந்த அரசு முயற்சிக்கிறது. சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு அப்படிக் கொடுக்க முயற்சிக் கிறது என்று சொல்கிறார்கள். அதை நாங்கள் வர வேற்கிறோம். ஆனால் அதுவும் போதாது. ஏற்கனவே பல நண்பர்கள் சுட்டிக் காட்டியதைப் போல அடித்தளத்திலே இருக்கின்ற சாதாரண விவசாயிகளுக்கு 75 சதவீதம் கடன் கொடுக்க வேண்டும், அதாவது மொத்தமாகக் கொடுக்கும் கடனில் 75 சதவீதத்தைக் கொடுக்க வேண்டும்.

இன்னொரு வேடிக்கை என்னவென்றால், ஜாமீன் போட் டால்தான் கடன் கிடைக்கும் என்று சில சொசைட்டிகளில் சொல்லப்படுகிறது. நல்லதுதான். ஆனால், ஜாமீன் போட்ட வர் பணம் கட்டவில்லை, இன்னொரு ஜாமீன் போட்டவர் அவர் கட்டிய பணத்தைக் கட்டியபின் அவர் லோன் கேட்கும்

பொழுது கொடுக்க முடியாது என்று சொல்வதை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தச். சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனக்கு முன் பேசிய நண்பர்கள் சொன்னார்கள், வட்டி விகிதத்தைப் பற்றி. அதைப் பற்றிச் சொல்லும்பொழுது மிகவும் வேடிக்கையாக இருக்கிறது. 15 சதவீதம் வட்டி, உயர்ந்த பட்சம் 18 சதவீதம் என்று. பல அமைப்புகளின் நிர்வாகச் செலவுகளுக்காக வட்டி உயர்த்தப்படுகிறது. இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால், விக்கிரம சிங்கபுரத்தில் ஒரு தொழிலாளர் சொசைட்டி மாதாமாதம் சேமிப்பு மூலம் அவர்கள் சேமித்த பணத்தை வைத்திருக் கிறார்கள். அந்தப் பணத்தை அவர்கள் கடன் கொடுக்கும் பொழுது 9 சதவீத வட்டி என்று சொசைட்டி பை-லாவை வைத்திருந்தால், நாங்கள் 15 சதவீதம் வட்டி வீதம் என்று சொல்லும்பொழுது நீங்கள் எப்படி 9 சதவீதம் வட்டி என்று வைக்கலாம், அதை உயர்த்துகிறீர்களா இல்லையா என்று சொல்கிறார்கள். அது எங்கள் பணம்தானே, குறைந்த வட்டிக்கு விடுகிறோம் என்று சொன்னால், அது முடியாது, குறைந்தபட்சம் 12 சதவீதமாவது வட்டியை உயர்த்த வேண்டுமென்று சொல்லி, அப்படிச் செய்யவில்லை யென்றால் உங்கள் சொசைட்டியை சூப்பர்சீட் செய்து விடுவோம் என்று சொல்கிற அளவிற்குத்தான் அரசாங்கம்— அரசாங்கம் என்றால் கூட்டுறவு டிபார்ட் மெண்ட், அந்த நிலையிலே போய்க் கொண்டிருப்பதை அனுமதிக்கக் கூடாது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்பொழுது கிராமங்களில் சிறு தொழில் ஆரம்பிப்பதற்கு யாராவது முன் வந்தால் 4 சதவீதம் அவர்களுக்கு, அதற் காக அரசாங்கம் உதவி செய்கிறோம் என்று சொல்லப்படு கிறது. தொழில் வளர வேண்டியதுதான், இல்லையென்று மறுக்கவில்லை. ஆனால் அதேநேரத்திலே, அடித்தட்டிலே யிருக்கும் சாதாரண விவசாயிகளுக்கு மட்டும் 15 சதவீதம் என்றும், 18 சதவீதம் என்றும் போடுவானேன். ஆகவே, அவர்களுக்கும், இந்தத் தொழில் வளர்ச்சிக்குக் கொடுக்கின்ற முறையிலேயே 4 சதவீதம் வட்டிக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்றும், அதற்கான ஏற்பாடு செய்யவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)

கடைசியாகச் சிப்பந்திகளைப்பற்றி ஒரேயொரு வார்த்தை. சிப்பந்திகளைப் பொறுத்தவரையில் அவர்களுக்குச் சம்பள உத்தரவாதம் கிடையாது. ஏதோ குறிப்பிட்ட சம்பளம் என்று சொல்லப்படுகிறது. எனக்கு முன் பேசிய நண்பர்கள் சொன்னார்கள், கூட்டுறவுச் சிப்பந்திகளுக்கு என்றால்

கடைகளில் குறைந்த விலையிலா பொருட்களைக் கொடுக் கிறார்கள்? ஆகவே, அவர்களுக்குக் குறைந்த பட்ச சம்பள உத்தரவாதம் கொடுக்கப்பட வேண்டும். போனஸ் கொடுக்கப் பட வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாகப் பணிப் பாதுகாப்பு அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும். ஆபீசர் நினைத்தால், தலைவர் நினைத்தால் சிப்பந்திகளை வேலையை விட்டுப் போகச் சொல்லலாம் என்ற நிலையிருக் கிறது. அப்படிப்பட்ட நிலைக்குப் பதிலாக, ஓராண்டு வேலை செய்திருந்தால் அவர்கள் நிச்சயமாகப் பதிவு செய்யப் படவேண்டும். மற்றவர்களுக்கு எப்படிப் பணிப்பாதுகாப்பு இருக்கிறதோ அதே பணிப்பாதுகாப்பு இவர்களுக்கும் இருக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். அது மட்டும் அல்ல.

[பிற்பகல் 1-00]

அந்தத் தொழிலாளர்கள் குறிப்பிட்ட இடத்திலே இருந்து மாற்றப்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. சமீபத்திலே, மதுரை மாவட்டத்திலே ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. அதற்காக உண்ணாவிரதம் இருந்தார்கள். ஒரு தீர்மானம் அவையில் கொடுக்கப்பட்டது. இந்த மானியத்திலே பேசலாம் என்ற முறையிலே அது நிராகரிக்கப்பட்டிருக்கிறது. கூட்டுறவு வங்கியிலே 10 வருஷம் 12 வருஷம் வேலை பார்த்தவர்களை, இன்ன பாங்கிற்கு போ, அந்த பாங்கிற்கு போ என்று அனுப்பு வது, கடைசியிலே, நீ எனக்கு இல்லை, உனக்கு இல்லை என்று கைகழுவி, அதனால் அவர் பார்த்த சர்வீஸெல்லாம் வீணா கிறது. அது சரியல்ல. அப்படிப்பட்ட சாதாரண தொழி லாளர்களுக்கு வேலை உத்தரவாதம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பேசுவதற்கு அதிக நேரம் இல்லாத காரணத்தால், இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

*திரு. அ. சுவாமிதாஸ்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பத்திரப் பதிவு கூட்டுறவு ஆகிய மானியங் களின் மீது ஒருசில கருத்துக்களை நான் கூறலாம் என்று கருதுகிறேன். பத்திரப் பதிவுத் துறையைப் பொறுத்த வரையில் இரண்டு கருத்துக்களை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கன்னியாகுமரிக்குப் பக்கத்திலே கேரள மாநிலம் இருக்கிறது. கேரள மாநிலத்திலே பத்திரப் பதி வுக்குக் குறைந்த கட்டணத்தை அவர்கள் வசூலிக்கிறார்கள். ஆகவே, பக்கத்து மாவட்டத்திலே உள்ளவர்கள், பத்திரங் களைப் பதிவு செய்வதற்காக கேரள மாநிலத்திற்குச் சென்று பத்திரங்களைப் பதிவு செய்கிறார்கள். அதனாலே, நமது தமிழ்நாடு அரசுக்குப் பெரிய இழப்பு ஏற்படுகிறது. அதைப் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1979 மார்ச் 24] *[திரு. அ. சுவாமிதாஸ்]*

கேரள மாநிலத்திலிருக்கிற கட்டணத்திற்கேற்ப தமிழ்நாடு மாநிலத்திலே, கட்டணத்தைச் சமப்படுத்தமுடியுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, இன்னொரு கருத்து, தொழிற்கூடங்கள் ஏற்படுத்துவதற்கு தொழில் துறையானது தனியார்களுக்கு நிலத்தை விற்பனை செய்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்திலே ஒருவருக்கு ஒரு சென்ட் ரூ. 150 என்ற அடிப்படையில் அரசு நிறுவனம் விலை நிர்ணயித்து, விற்பனைக்குக் கொடுத்தது. நாகர்கோவிலில் அந்த பத்திரத்தைப் பதிவு செய்ய முடியவில்லை. காரணம், நாகர்கோவிலில் பத்திரப்பதிவுத் துறையானது, சென்டுக்கு ரூ. 400 என்று விலை நிர்ணயம் செய்திருக்கிறது. ஆனால், சென்னை நகரிலே இருக்கிற அலுவலகமானது அதைப் பதிவு செய்யத் தயாராக இருக்கிறது. சென்னையில் ' எக்சம்ஷன்' கொடுக்கப்பட்டிருக்கிறது. அதே போல், எல்லா மாவட்டங்களுக்கும் விதி விலக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, கூட்டுறவுத் துறைக்கு வருகிறேன். இங்கே அமைச்சரவர்கள் கொடுத்திருக்கிற விளக்கத்திலே, 4-வது பக்கத்திலே. ''விவசாயிகள் கொடுக்க வேண்டிய பாக்கித் தொகைகளை திருப்பித் கொடுக்காமலிருப்பதன் விளைவாக, மத்திய வங்கியிலும் தொடக்கச் சங்கங்களிலும் தவணை கடந்த கடன்கள் அதிகரித்து வருவதே கடன்கள் கொடுப்பதில் ஏற்பட்டுள்ள இந்த வீழ்ச்சிக்கான முக்கிய காரணம் ஆகும். ஆனால், வரும் மாதங்களில் தவணை கடந்த கடன்களை வசூலிப்பதில் முன்னேற்றம் இருக்கும் என்ற நம்பிக்கையுடன் 1979-80 ஆம் ஆண்டில் வழங்கப்படும் குறுகிய கால, மத்திய காலக் கடன்களுக்கான இலக்கு 160 கோடி ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது'' என்று இலக்கைக் கொடுத்திருக்கிறார்கள். நான் ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். கடன்களை வசூலிக்க முடியாமல் இருக்கும்போது எப்படி ரூ. 160 கோடியை நாம் கடனாகக் கொடுத்து அந்தச் சங்கங்களை வளர்க்க முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே, அந்தக் கடன்களை மீட்டுக் கொள்வதிலே அரசாங்கம் திட்டவட்டமாக வரையறுத்த கொள்கையைப் பின்பற்ற வேண்டும். இப்பொழுதிருக்கிற கொள்கைப்படி அரசாங்கம் கடனை மீட்டிடவும் முடியாது, விவசாயிகளுக்கு கடன்களை கொடுக்கவும் முடியாது. ஆகவே, திட்டவட்டமாகச் சொல்லவேண்டும். ஒன்று அரசு பெரியகருணை வைத்து விவசாயிகள் பெற்ற கடனைத் திரும்பச் செலுத்த வேண்டியதில்லையென்று கட்டளையிட வேண்டும். அப்படிச் செய்தால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைவார்கள்.

அப்படி செய்வதற்கு அரசாங்கத்திற்கு இப்பொழுது நிதி வசதி இல்லையென்றால் . இன்னொரு கருத்தைச் சொல்ல ஆசைப்படு கிறேன். சிறு விவசாயிகளுக்காவது 500 அல்லது 1,000 ரூபாய் என்ற அளவில் அவர்கள் பெற்ற கடன்களை தள்ளுபடி செய்யலாம் அல்லது வட்டி கட்ட வேண்டியது இல்லை அசலை மட்டுமாவது கொடுத்தால் போதும் என்று சொல்லி வசூல் செய்து விடவேண்டும். விவசாயிகள் வட்டியைச் செலுத்த வேண்டியது இல்லை, முதலை மட்டும் செலுத்தினால் போதும் என்ற நிலைக்கு அரசு வரவேண்டும். அப்படி வந் தால்தான் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட முடியும். கடனை திருப்பிக் கொடுக்கவும் முடியவில்லை, வாங்கவும் முடியவில்லை. அதனால் சங்க ஊழியர்களுக்குக் கூட சம்பளம் கொடுக்க முடியாத நிலையில் அந்தச் சங்கங்கள் இருக்கின்றன. இப் படிப்பட்ட நிலையில் அந்தத் துறை போய்க் கொண்டிருக்கிற காரணத்தினால், வட்டியே வேண்டாம் என்று சொல்லி கட்டாயமாகக் கடனைத் திருப்புவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இந்தத் தேக்க நிலை வந்ததற்குக் காரணமே அவசரகால நிலைமைதான். அவசரகால நிலைமையில் அவர்களை ஊக்குவிக்கிறோம் என்று சொல்லி அவர்களிடம் பணத்தைத் திணித்தோம். திருப்பிக் கொடுப்பதற்கு பல்வேறு காரணங்களினால் அவர்களால் முடியவில்லை. சங்கத்தை நிர்வகிக்கவும் இப்பொழுது முடியவில்லை. இன்று தீவிரமான ஒரு முடிவிற்கு உடனடியாக அரசு வந்தாக வேண்டும். தாமதம் காட்டக்கூடாது. தாமதம் காட்டினால் கூட்டுறவுத் துறையே இயங்காது, நின்றுவிடும் நிலைமை ஏற்படும்.

அடுத்து கடன் வழங்குவதில் இப்பொழுது இருக்கிற நிலை மையெல்லாம் மாற்றியாக வேண்டும். கிராமங்களில் இருக்கிற கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயிகளுக்கு மட்டும்தான் கடனை வழங்கிக் கொண்டிருக்கின்றன. அதிலே சில மாற்றங்கள் செய்ய வேண்டும். நெல் பயிருக்கு 6 மாத குறுகிய கால கடனை 1 ஆண்டுக்கு மாற்ற முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்னொன்று கிராமங்களிலே இருக்கிற விவசாயிகளை, ஒத்த, விவசாய தொழிலோடு சம்பந்தப்பட்ட பல தொழி லாளர்கள் இருக்கிறார்கள். மரவேலை செய்பவர்கள், இரும்பு வேலைச் செய்பவர்கள், கொத்த வேலைச் செய்பவர்கள், நமது நண்பர் ஜேம்ஸ் அவர்கள் சொன்னார்களே அதுபோல அவர்களுக்கும் கடன் கொடுக்கலாம் என்ற சட்டத்தை திருத்தி அமைத்து அவர்களுக்கும் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

இன்னும் ஒன்று, சிலர் தங்கள் பிள்ளைகளை பள்ளிக்கூடத்தில் கற்க காலாகாலத்தில் சேர்ப்பதற்கு

1979 மார்ச் 24] [திரு. அ. சுவாமிதாஸ்]

தேவையான நிதி வசதி இல்லாமல் இருக்கிறார்கள். அப்போது கடனை அவர்களுக்கும் கொடுத்தால் கிராமங்களில் உள்ள அனைவருக்கும் வசதியாக இருக்கும்.

இன்னொன்று இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் விற்பனைக் கூடங்கள் இருக்கின்றன. யாராக இருந்தாலும் மாத சம்பளம் உள்ளவர்களுக்கு பொருட்களை கடன் கொடுக்க வேண்டும். ஒரு பாஸ் புக் மாதிரி வைத்துக் கொண்டு எண்ட்ரி போட்டு, மாதம் சம்பளத்திலிருந்து திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். இந்த முறையை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கத்தைப் பொறுத்த அளவிலே ஒரு பரவலான தவறான எண்ணம் தமிழ்நாட்டிலே இருக்கிறது. கூட்டுறவுத் துறை என்று சொன்னாலே கூட்டுறவு ஊழல் துறை என்ற எண்ணம் இருக்கிறது. அது தவறான கருத்து. கூட்டுறவு சங்கத்திலே தவறு ஏற்படும்போது யாராக இருந்தாலும் உடனடியாக தண்டிக்கப்பட வேண்டியவர்கள்தான். இப்பொழுது எங்கு தான் தவறு நடக்கவில்லை. அது வேறு. ஆனால் கூட்டுறவுத் துறையில் தவறு நேர்ந்தால் யார் தவறு செய்தாலும் சங்கத் தலைவர்கள் இடத்தில் தான் சர் சார்ஜ் வாங்குகிறார்கள். கூட்டுறவுத் துறையில் ஒரு சிறு தவறு நேர்ந்து விட்டால் அதிகமான விளம்பரத்தைப் போட்டு, விடுகிறார்கள். உடனடியாக ஒரு தனி கோர்ட் போட்டு, அதற்கு விசாரணை அதிகாரியை தனியாகப் போட்டு, விளம்பரப்படுத்தி விடுகிறார்கள்.

அதனால் கூட்டுறவுத் துறையில்தான் அதிக ஊழல் இருக்கிறது என்று மக்கள் நினைக்கிறார்கள். இந்த முறை தடுக்கப்படவேண்டும். தவறு செய்பவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள்தான். அதில் சந்தேகம் இல்லை. ஆனால் இவ்வளவு விளம்பரம் வேண்டுமா என்று சிந்தித்துப் , பார்க்க வேண்டும்.

இன்னொன்று விற்பனைச் சங்கங்களை , நுகர் பொருள் விற்பனைச் சங்கங்களாக மாற்றி வருகிறோம், அதில் கூட்டுறவு கிராமச் சங்கங்களுக்கு தருகின்ற பொருள்கள் தரமானதாக இல்லை. நல்ல பொருள்களாக இல்லை. அத்துடன் எடை குறைந்ததாக இருக்கிறது என்று புகார்கள் இருக்கின்றன. கூட்டுறவுச் சங்கங்களுக்கு சிவில் சப்ளை கார்ப்பரேஷன்கள் தான் பொருள்களை கொடுக்கிறார்கள். அவர்கள் என்னக் கொடுக்கிறார்களோ அதைத்தான் வாங்கியாக வேண்டும். அப்படிக் கொடுப்பதை வாங்க மறுத்தால் வாங்காமல் இருங்கள் எங்களுக்கு என்னவென்று சிவில் சப்ளை கார்ப்பரேஷன்

காரர்கள் நடந்து கொள்ளுகிறார்கள். நான் கூட்டுறவுத் துறை அமைச்சருடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்—எவ்வளவு தூரம் கூட்டுறவுத் துறை உணவுப் பொருள்களின் தரங்கள் இருக்கின்றன என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற கூட்டுறவுச் சங்கத்தில் சிவில் சப்ளை கார்ப்பரேஷன் வழங்கியிருக்கிற அரிசியின் தரத்தை நீங்கள் நேரில் பார்க்க வேண்டும்—பார்த்து அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(ஒரு அரிசிப் பொட்டலத்தை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரிடம் அளித்தார்.)

இந்த அரிசியை யாராவது சாப்பிட முடியுமா என்று பாருங்கள்? எவ்வளவு மோசமாக இருக்கிறது அதன் தரம் என்று நீங்கள் பார்க்க வேண்டும்.

[பிற்பகல் 1-10]

இதைச் சாப்பிட்டால் உயிர் வாழ முடியுமா? இப்படிப்பட்ட அரிசியை கூட்டுறவுத் துறையில் கொடுத்து, சங்கங்கள் வாயிலாக கொடுங்கள் என்று சொன்னால், எப்படி செயல்பட முடியும். ஆகவே இதில் இருந்து சங்கங்களுக்குப் பாதுகாப்பு வேண்டும். இது உணவுத் துறையில் வரும் என்றாலும் கூட்டுறவு சங்கத்தின் மூலமாக வழங்கும் அரிசி தரமான அரிசியாக இருக்க வேண்டும். கூட்டுறவுத் துறையைக் காக்கும் பொறுப்புள்ள அமைச்சர் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசு செய்ய வேண்டும். இந்த அரிசியை பொதுமக்களுக்குக் கொடுத்தால் எப்படி அவர்கள் சாப்பிடுவார்கள். எங்கள் ஊரில் ஒரு பழமொழி சொல்வார்கள், ' ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி ' என்று, அதைப் போல் இப்படிப்பட்ட அரிசியை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வினியோகிப்பது முறைதானா? இந்த நிலை போக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அங்கே கொடுக்கப்படும் பொருள்களின் எடை சரியானதாக இல்லை. வெயிட்ஸ் அன்ட் மெஷர்ஸ் இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கண்காணிப்பில் நிறுத்து சங்கங்களுக்கு விற்கப்படவேணடும். அப்போதுதான் சரியான எடை இருக்கும். அதை அரசாங்கம் கவனத்தில் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நகைக்கடன்களைப் பொறுத்தவரையில் (மணியடிக்கப்பட்டது) இது முக்கியமான பிரச்னை, அரசாங்கத்தின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். இப்போது கடன்

வழங்கும் சங்கங்களுக்கு 15 சதவீதம் வட்டி வசூலிப்பதில் இரண்டு சதமானம் தான் அந்தச் சங்கங்களுக்கு கிடைக்கிறது. இந்த இரண்டு சதத்தை வைத்துக் கொண்டு அவர்கள் அந்தச் சங்கத்தை எப்படி நடத்தமுடியும். அங்கே வேலை செய்யக் கூடியவர்களுக்கு சம்பளம் கொடுக்க வேண்டும். பந்தோபஸ்தாக வைப்பதற்கு ஒரு இரும்புப் பெட்டி வேண்டும். அத்துடன் 2 லட்சம் 3 லட்சம் ரூபாய் அளவிற்கு இன்சூரன்சு செய்ய வேண்டும். இதெற்கெல்லாம் அந்த 2 சத வருவாய் போதாது. ஆகவே, அரசு பிரைமரி சொசைடிகளுக்கு கொடுக்கும் வட்டி விகிதத்தை மாற்றி அமைக்கவேண்டும். இந்த வட்டி விகிதம் மாற்றி அமைக்கவேண்டும் என்று சொன்னால் ரிசர்வ் வங்கியிலிருந்து கடன் பெறும் ஒரு வங்கியின் மூலமாக அது கூட்டுறவு மத்திய வங்கியாக இருந்தாலும் சரி, அல்லது வேறு வங்கியாக இருந்தாலும் சரி, அந்த வங்கியில் இருந்து கடன் பெறும் வாய்ப்பு இருந்தால் தான், இந்த வட்டி விகிதம் மாற்றி அமைக்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. அ. சுவாமிதாஸ் : பிரைமரி சங்கங்களில் பணியாற்றும் ஊழியர்கள் ரூபாய் 90 அடிப்படை சம்பளம் என்ற அளவில் பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு என்று அடிப்படை சம்பளம் நிர்ணயிக்கப்பட வேண்டும். அவர்களுக்குக் கொடுக்கும் சம்பளத்தையும், மத்திய வங்கி கொடுக்கலாம். மிகுதியான லாபம் ஈட்டுகிறவர்கள் அவர்கள் தான். பிரைமரி சங்கங்களில் இருப்பவர்கள் தான் மிகுதியான வட்டியை மக்களிடத்தில் இருந்து வசூலித்து மத்திய வங்கிக்குத் தருகிறார்கள். ஆகவே, ஒரு குறைந்த பட்ச சம்பளத்தை பிரைமரி சொசைடி ஊழியர்களுக்கு கொடுக்க வேண்டும். அதற்கு அரசாங்கம் கட்டாயமாக உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சீக்கிரம் முடியுங்கள்.

திரு. அ. சுவாமிதாஸ் : கிட்டங்கி வசதி செய்து கொடுக்க வேண்டும். அந்த கிட்டங்கிகளை உருவாக்குகிற பொறியாளர்களின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வரவேண்டும். அந்த கிட்டங்கிகளை கட்டுகிறபோது அதை ஏதோ குடோன் போல் கட்டிவிடுகிறார்கள். அது தானியங்களை, உரங்களை வைப்பதைத் தவிர வேறு எதற்கும் பயன்படுவது இல்லை. ஆகவே, அந்த கிட்டங்கிகளைக் கட்டுகிறபோது, அங்கே நுகர்பொருள் வாணிபம் செய்யவும், அலுவலகம் நடத்தவும் ஏற்பாடு செய்யவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : போதும், முடித்து விடுங்கள். இப்போது மணி 1.15 ஆகிறது. நீங்கள் பேசி முடித்தபிறகு திரு. சாதிக் பாட்சா அவர்கள் பேசி, அதற்குப் பிறகு மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்ல வேண்டும்.

திரு. அ. சுவாமிதாஸ் : நேரம் இல்லாததால், இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் ஒரே ஒரு முக்கியமான கோரிக்கையை மட்டும் ஸ்டாம்ப் வெண்டர்கள் சார்பில் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு, அவர்கள் அதை அனுதாபத்தோடு கவனித்து, நிச்சயமாக நிறைவேற்று வார்கள் என்ற நம்பிக்கையோடு கொண்டுவர விரும்புகிறேன்.

ஸ்டாம்ப் பேப்பர்ஸ்—முத்திரைத் தாள்களை கஜானா விலிருந்து லைசென்ஸ் பெற்ற ஸ்டாம்ப் விற்பனையாளர்கள் வாங்குகிறார்கள். இந்த முத்திரைத்தாள் விற்பனையில் தற்போது ஒரு நபர் ஒரு நாளைக்கு 2,000 ரூபாய்க்குமேல் விற்பனை செய்யக்கூடாது என்று இருக்கிறது. அதை 5,000 ரூபாய் வரையில் விற்பனை செய்யலாம் என்று மாற்றியமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை அவர்கள் வைத்திருக்கிறார்கள். அதை நான் அவர்களின் சார்பாக மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

கஜானாவில் 2,000 ரூபாய், 3,000 ரூபாய் 5,000 ரூபாய் மதிப்புள்ள பத்திரங்கள் சப்ளை செய்யப்படுகின்றன. 5,000 ரூபாய் மதிப்புள்ள பத்திரம் இருக்கும்போது, 2,000 ரூபாய் வரை வரையில்தான் விற்பனை செய்யலாம் என்று இருப்பது சரியல்ல; அதை 5,000 ரூபாய் என்று மாற்றியமைக்க வேண்டும்.

இன்னொன்று, கஜானாவில் பணம் கட்டினால் அன்றைக்கே ஸ்டாம்ப் கிடைப்பதில்லை. பணத்தைக் கட்டியவுடனே அல்லது அன்று மாலைக்குள் ஸ்டாம்ப் பேப்பர்ஸ் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து, லைசென்ஸ்டு ஸ்டாம்ப் வெண்டார்கள் விற்பனை செய்கின்ற முத்திரைத் தாள்மீது கமிஷன் கொடுக்கப்படுகிறது.

50 ரூபாய் வரையில் 2 சதவீதம்.

51முதல் 100 ரூபாய் வரையில் 1.5 சதவீதம்.

101 முதல் 400 ரூபாய் வரையில் 0.70 சதவீதம்.

401 முதல் 1,000 ரூபாய் வரையில் 0.30 சதவீதம்.

கோர்ட் ஃபீஸ் ஸ்டாம்ப் 25-லிருந்து 1½ சதவீதம் அல்லது 2 சதவீதம்.

காப்பியிங் ஸ்டாம்ப் 1 சதவீதம்—என்ற அளவுக்கு கமிஷன் கொடுக்கப்படுகிறது.

இது 1965-லிருந்து இருக்கிறது. இதை மாற்றி 2 சதவீதம், 1½ சதவீதம் என்று இருப்பதை பிளாட் ரேட்டாக 3 சதவீதம் ஆக்க வேண்டுமென்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள். இது பல ஆண்டுகாலமாக இருக்கிற ஒரு கோரிக்கை. இதை அமைச்சரவர்கள் நிறைவேற்றித் தர வேண்டுமென்று அவர்களின் ஸ்பெஷல் கவனத்திற்கு இந்தப் பிரச்சினையைப் பரிவோடு கொண்டுவந்திருக்கிறேன். அவர்கள் 3 சதவீதம் என்று கேட்டிருக்கிறார்கள். 3 சதவீதம் என்று இல்லாவிட்டாலும் இப்போது இருப்பதைவிட அந்த பர்சன்டேஜை கொஞ்சம் உயர்த்திக்கொடுக்க வேண்டும் என்று கேட்டு. இந்த ஒரே ஒரு பிரச்சினையைத்தான் வைத்திருக்கிறேன். அதை நிச்சயமாக நிறைவேற்றித் தருவீர்கள் என்ற நம்பிக்கையுடன் அமர்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:</u> மாண்புமிகு பேரவை துணைத் தலைவரவர்களே, இதுவரையில் அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த ஏழு மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த மானியங்களின் மீது பல்வேறு மேலான கருத்துக்களை எல்லாம் தமிழக அரசினுடைய பார்வைக்கு, பரிசீலனைக்கு தந்து, பிறகு அதைச் செயல்படுத்துவதற்கு கவனப்படுத்தி இருக்கிறார்கள். அனைவருக்கும் முதற்கண் என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக, முதன் முதலாக பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் புருஷோத்தமன் அவர்கள் நல்ல சில விவரங்களை இந்த கண்ணியமிக்க சபையிலே எடுத்து வைத்திருக்கிறார்கள்.

குறிப்பாக அவர்கள் பேசுகின்ற நேரத்தில் சில உணர்வுகளைச் சுட்டிக்காட்டினார்கள். சென்னை பெருநகரில் இருக்கிற வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கத்திலே நடைபெறுகின்ற சில விவரங்களை அவர்கள் தமிழக அரசினுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அது இந்த மானியத்திலே இடம்பெறவில்லை என்றாலும்கூட சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கை வருகின்ற நேரத்தில்

அதற்கு உரிய அமைச்சரவர்கள் தெளிவான விளக்கத்தை அளிக்க இருக்கிறார்கள் என்று அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் புருஷோத்தமன் அவர்கள் பேசும்போது பேச்சின் ஊடே வேறு ஒரு விவரத்தையும் சொன்னார்கள். தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியினுடைய தனி அதிகாரி அவர்களைப் பற்றி ஒரு சிறு விவரத்தை இங்கே கவனப்படுத்தினார்கள். அவர்கள் குளிர்பத மோட்டார் காரில் வசதியாக—அமைச்சர்களை விட வசதியாக செல்கிறார்கள் என்றும், ஒரு தனி அதிகாரி அவர்களுக்கு இப்படிப்பட்ட வசதிகள் எல்லாம் இருக்கலாமா என்ற விவரத்தையும் கண்ணியமிக்க இந்த சபைக்கு அவர்கள் நினைவுபடுத்தினார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் புருஷோத்தமன் அவர்களுடைய கவனத்திற்கு சில விவரங்களை கொண்டுவருவது என்னுடைய தலையாயக் கடமை என்று கருதுகிறேன்.

[பிற்பகல் 1-20]

தமிழக மாநில கூட்டுறவு வங்கியைப் பொறுத்தவரையில் இன்றைய தினம் மூன்று வாகனங்கள்தான் இருக்கின்றன அதில் ஒன்று ஜீப். இரண்டு அங்கே இருக்கின்ற பணியாளர்கள் பயன்படுத்துகின்ற இரண்டு கார்கள். அதிலே ஒன்று ஃபியட்கார். இன்னொன்று அம்பாசிடர் கார். அந்த இரண்டு கார்களையும் கூட்டுறவு சம்பந்தப்பட்ட எல்லா பணியாளர்களும் பயன்படுத்துகின்றனர். குறிப்பாக அவர்கள் சொல்கிற நேரத்தில் அதிகாரிகள் செல்லுகின்றகாரிலே ஏர் கண்டிஷன் இருக்கிறது என்றும் அதிலே வேறு சில வசதிகள் இருக்கின்றன என்றும் சொன்னார்கள். ஆனால் அப்படிப்பட்ட நிலை இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு எடுத்துச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கின்றேன். அது மட்டுமல்ல, அப்படி அவர்கள் தனிப்பட்ட முறையில் அந்தக் கார்களை சொந்த காரியங்களுக்குப் பயன்படுத்துவார்களேயானால் அதற்காக இன்றைக்கு ஒரு முறைகளை நாங்கள் வகுத்து வைத்திருக்கிறோம். அதாவது அந்தப் பணி சம்பந்தப்பட்ட காரியங்களுக்கு மட்டுமே அதனை அவர்கள் பயன்படுத்தவேண்டும். அப்படி ஏதாவது சொந்தக் காரியங்களுக்கு பயன்படுத்தி இருக்கிறார்கள் என்று தெரிந்தால் அது சம்பந்தப்பட்ட செலவினங்களை எல்லாம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து பெறுகின்ற அந்த வரையறையையும் இன்றைக்கு நாங்கள் தெளிவாக வரையறுத்து இருக்கிறோம் என்பதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. புருஷோத்தமன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1979 மார்ச் 24] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

அடுத்து நம்முடைய அருமைச் சகோதரர் மாண்புமிகு உறுப்பினர் சிவகெங்கைத் தொகுதியைச் சேர்ந்த மாண்புமிகு அண்ணன் திரு. சுப்பிரமணியன் அவர்கள் பேசுகிற நேரத்தில் பல நல்ல கருத்துக்களை எல்லாம் சொன்னார்கள். குறிப்பாக அவர்கள், இன்றைக்கு விவசாயிகள் மீது தண்ட வரி விதிக்கப் படுகிறது என்றும் ஆகவே அதனைப் பரிசீலனை செய்யவேண்டும் என்றும் மிக உருக்கமாக எடுத்துச் சொன்னார்கள் குறிப்பாக இன்றையதினம் அந்தப் பிரச்சினை தமிழக அரசினுடைய பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. ஆனால், இன்றையதினம் விவசாயிகளுடைய உயர்மட்டக் குழு அந்தப் பிரச்சினையை பரிசீலனை செய்து கொண்டிருக்கிற காரணத்தாலே, இந்த மாமன்றத்திலே அது சம்பந்தமாக எந்த உணர்வுகளையும் தமிழக அரசினுடைய சார்பாக சொல்ல முடியாத நிலையிலே இருக்கிறோம் என்றும், என்றாலும் கூட அந்தத் தண்டவரிப் பிரச்சினையை நிச்சயமாக இந்த தமிழக அரசு பரிவோடு கவனிக்கும் என்று மாண்புமிகு அண்ணன் திரு. சுப்பிரமணியன் அவர்களுக்கு இந்த நேரத்திலே நான் தெளிவாகத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதே போல சிவகெங்கை சார்பதிவாளர் அலுவலகத்தை விஸ்தரிக்க வேண்டும் என்பது பற்றியும் அவர்கள் சொன்னார்கள். இப்போது இருக்கின்ற சார்பதிவாளர் அலுவலகம் பல ஆண்டுகளுக்கு முன்பு ஒரு குறிப்பிட்ட அளவில் கட்டப்பட்டது. இன்று பல கூடுதல் பொறுப்புக்கள் ஏற்பட்டுள்ளதன் காரணமாக, ரூபாய் 75 ஆயிரம் செலவில் அதனைக் கட்ட அரசு முடிவு செய்துள்ளது. ஆகவே புதிதாக அதற்குரிய அலுவலகக் கட்டிடம் கட்டப்பட இருப்பதன் காரணத்தால் இப்பிரச்சினை இனி இருக்காது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. சுப்பிரமணியன் அவர்களுக்கு இந்த நேரத்திலே நான் தெளிவுபடுத்த கடமைப் பட்டவனாக இருக்கிறேன்.

அதைப்போலவே அவர்கள் வேறொரு கருத்தினையும் சொன்னார்கள். கூட்டுறவு விழா என்ற பெயரினால் ஆங்காங்கே உள்ள சில தனி அதிகாரிகளால் வசூல் செய்யப்பட்டு செலவு செய்யப்படுகிறது என்றும் அதனைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றும் அந்த முறை கேடுகள் ஒழுங்கு படுத்த வேண்டும் என்றும் ஒரு விவரத்தை எடுத்துச் சொன்னார்கள். ஆனால் கூட்டுறவு வார விழா என்ற இந்த தேசியவிழா தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டத்தின் அனைத்து மாநிலங்களும் ஒரு குறிப்பிட்ட வாரத்தில் கொண்டாட வேண்டும் என்று அவர்கள் முடிவு செய்து அதன்படி தமிழகத்திலே சென்ற ஆண்டு நவம்பர் மாதம் 14-ம் தேதியிலிருந்து 20-ஆம் தேதி வரையிலே 7 நாட்களுக்கு சென்னை மாநகரத்தில் வள்ளுவர் கோட்டத்திலேயும் பிற இடங்களிலேயும் கொண்டாடப் பட்டது.

[திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி] [1979 மார்ச் 24

ஆனால் இது கொண்டாடப்பட்ட நேரத்தில், விழாக்கள் மாவட்ட தலைநகரங்களில் எப்படி நடத்த வேண்டும், எப்படி செலவை 'பிரித்துச் செலவு செய்யவேண்டும் என்று சொல்லப்பட்ட பரிந்துரையின் அடிப்படையில் ஒரு உத்தரவை சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு நாங்கள் மிகத் தெளிவாக சொல்லி உத்தரவு போட்டிருக்கிறோம். குறிப்பாகச் சொல்லப் போனால் மத்திய வங்கிகளின் கிளைகளாக மாவட்ட தலைநகரங்களில் இருக்கின்ற இடங்களில் ஐயாயிரம் ரூபாய்க்கு மேல் செலவு செய்யக் கூடாது என்றும், மாவட்டங்களில் இருக்கின்ற விற்பனை சங்கங்களில் 5,000 ரூபாய்க்கு மேல் செலவு செய்ய கூடாது என்றும், இதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தை தவறாகப் பயன்படுத்தக் கூடாது என்றும், மிகத் தெளிவாக, இது சம்பந்தமாக முறைகேடுகள் வந்துவிடும், தவறுகள் ஏற்பட்டு விடும் என்று முன் எச்சரிக்கையாக, வரையறுக்கப் பட்டு, எந்தெந்த நிலையில் எந்தெந்த செலவினங்களை செய்ய வேண்டும் என்பது குறித்து ஆணையிடப் பட்டிருந்தது என்பதை மாண்புமிகு அண்ணன் சுப்பிரமணியம் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, நம்முடைய மதிப்பிற்குரிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் மாண்புமிகு சகோதரர் அழகிரிசாமி அவர்கள் பேசுகின்ற நேரத்தில், இப்போது மத்திய கால கடன்களாக கொடுக்கப்பட்டிருக்கின்ற கடன்களுக்கு வட்டி அதிகமாக இருக்கிறது என்றும், அதைக் குறைக்க வேண்டும் என்றும் எடுத்துச் சொன்னார்கள். அதுபற்றி ஒரு விவரத்தை அவர்களுடைய மேலான பார்வைக்காக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கனவே உள்ள கடன்களுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் சலுகை அளித்த விவரத்தை இந்த சபையில் அறிவித்தது மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். மத்திய கால கடன்களுக்கு 13.8 சதவீதத்திலிருந்து 12.5 சதவீதமாக வட்டியைக் குறைத்து 1—1—79 ஆம் தேதி மத்திய கால கடன்களுக்கு ரிசர்வ் வங்கி சீலுகை கொடுத்திருக்கிறது. அதை நாமும் வழங்க முடிவு எடுத்திருக்கிறோம். வறட்சி, வெள்ளம் காரணமாக கொடுக்கப்பட்ட நேரத்தில் எல்லாக் குறுகிய கால கடன்களும் மத்திய கால கடன்களாக மாற்றப்பட்டு எல்லா விவசாயிகளுக்கும் 12.5 சதவீதமாக என்றிருந்தது. அதை சிறு விவசாயிகளுக்கு 10 சதவீதமாகவும், மற்ற விவசாயிகளுக்கு 12.5 சதவீதமாகவும் குறைக்கப்பட்டது. மேலும் விவசாயக் கருவிகள் வாங்குவதற்காக வழங்கப்பட்ட மத்திய கால கடன்களுக்கு எல்லா விவசாயிகளுக்கும் 12.5 சதவீதம் என்றிருந்தது. அது 11 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. அதைப் போலவே நிலவள வங்கி மூலமாக வழங்கப்பட்ட நீண்ட கால கடன்களுக்கு எல்லா விவசாயிகளுக்கும், சிறு

பாசன காரியங்களுக்கும் நிலச் சீர்திருத்த காரியங்களுக்காக வாங்கப்பட்ட கடன்களுக்கு 10.5 சதவீதமாகவும், இதர காரியங்களுக்கு வாங்கப்பட்ட கடன்களுக்கு 11 சதவீத மாகவும் 13-3-1979-லிருந்து சிறு விவசாயிகளுக்கு எல்லா காரியங்களுக்கும் வாங்கப்பட்ட கடன் களுக்கு 9.5 சதவீதமாகவும் மற்ற விவசாயிகளுக்கு சிறு பாசன காரியங்களுக்கும், நிலச்சீர்திருத்தக் காரியங்களுக்கும், 9.5 சதவீதமாகவும், இதர காரியங்களுக்கு 10.5 சதவீத மாகவும் குறைக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அழகிரிசாமி அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே, எல்லா உறுப்பினர்களும் பேசுகின்ற நேரத்தில், தனி அதிகாரிகளைப்பற்றியும், தனி அதிகாரி களுடைய பொறுப்பில் நடந்து வருகின்ற வங்கிகளில் உள்ள விவரங்களை எல்லாம் இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள். இந்த அரசு ஒவ்வொரு பிரச்னையிலும் தக்க நடவடிக்கை எடுக்க உறுதியாக இருக்கிறது. மேலும் மாண்புமிகு உறுப்பினர் சொரணம் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், விக்கிரமசிங்க புரத்தில் உள்ள கூட்டுறவு சங்கத்தில் அரசியல் காழ்ப்புக் காரணமாக கலைப்பதற்கான முயற்சி எடுக்கப்பட்டது என்றும் அந்த விவரங்களையும் சொன்னார்கள். நான் அவர் களுக்குத் தெரிவித்துக் கொள்வது, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களது அரசு ஏற்பட்ட பிறகு, கடந்த ஆண்டு களில் நடைபெற்ற—முன்னால் இருந்த அரசின் காலத்தில் கூட்டுறவுத் துறையில் ஏற்பட்டிருந்த நடவடிக்கைகளை எல்லாம் பார்த்தால் எவ்வளவோ நடவடிக்கைகளை எடுத்திருக் கலாம். ஆனால், இந்த அரசைப் பொறுத்த வரையில், ஒவ் வொரு பிரச்னையிலும் ஒரு முறைக்கு இரண்டு முறை, மூன்று முறை நான்கு முறை பார்த்துபின்னால் தான், கடைசியாக நடவடிக்கை எடுக்கவேண்டியது நியாயம் தான், இதில் முறை கேடுகள் நடந்திருக்கிறது என்பது தெரிந்த பின்னால் தான் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. முறைகேடுகள் இல்லை என் றிருந்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுப்பதில்லை என்பதை மிகத் தெளிவாக சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

[பிற்பகல் 1-30]

குறிப்பாக அவர்கள் விக்கிரமசிங்கபுர சங்கத்தைப் பற்றிய விவரங்களைச் சொன்னார்கள். என்னிடத்திலே இருக்கின்ற தகவல்படி, அங்கே 10 முறைகேடுகள் நடைபெற்று, அதனால் அது கலைக்கப்பட்டது. ஆனால், அதிலே இன்றைய தினம் நான்கு முறைகேடுகள் களையப்பட்டு, இன்னும் ஆறு முறை கேடுகள் களையப்படாமல் இருக்கின்ற காரணத்தால், அங்கு

அந்த தனி அதிகாரி நீட்டிக்கப்பட்டு இருக்கின்றார். மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் எவ்வளவு உணர்வோடு, ஆதங் கத்தோடு, மன உணர்வோடு, அங்கே இருக்கின்ற தொழி லாளர்களுக்கு ஜனநாயக ரீதியிலே அந்தச் சங்கத்தை இயக்க வேண்டுமென்பதற்காக, உரிய நடவடிக்கைகளை எடுக்கச் சொல்லுகின்றார்களோ, அவருடைய வேட்கையோடு ஒன்றிச் சொல்கிறேன். அந்த அளவிலே, இந்த முறைகேடுகளை யெல்லாம் விரைவில்..................

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>: பேரவையின் அனுமதியோடு பேரவையின் நேரத்தை, தீர்மானம் நிறை வேறுகின்ற வரையிலே நீட்டிக்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி</u>: விரைவிலே களைந்து, ஜனநாயக ரீதியான ஏற்பாட்டை அங்கே அமைக்க இந்த தமிழக அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக் கிறேன்.

<u>திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்</u>: விரைவாக என்று சொன்னால், எவ்வளவு சீக்கிரம் அங்கு தேர்தல் நடக்கும் என்பதற்கு 1, 2 மாத காலமா அல்லது எவ்வளவு நாட்களுக்குள் என்பதைச் சொன்னால் பிரயோஜனமாக இருக்கும்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி</u>: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, சேலம் மத்திய வங் கியைப் பற்றிச் சொன்னார்கள். சில விவரங்களைச் சொல்லும் போது, சேலம் மத்திய வங்கியின் செயலாளர் ஏற்கனவே ஊழலிலே ஈடுபட்டதாகவும், முறைகேடுகளிலே ஈடுபட்ட தாகவும், அவர்களை இன்றைய தினம் அந்த முறைகேடு களைப் பற்றியெல்லாம் கவனிக்காமல், மீண்டும் இந்த பொறுப்பிலே அமர்த்தி யிருப்பதாகச் சொன்னார்கள். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வேன். இன்றையதினம் சேலம் கூட்டுறவு மத்திய வங்கியில் நிய மிக்கப்பட்டிருக்கின்ற செயலாளர் புதிதாக அங்கே நியமிக் கப்பட்டவர் அல்ல. ஏற்கனவே துணைச் செயலாளராக அதாவது அசிஸ்டெண்ட் செகரடரியாக இருந்த அவர், இன் றைக்கு மேல் பதவிக்கு உயர்த்தப்பட்டிருக்கிறார். அவர் மீது எந்தவிதமான குற்றமும், எந்தவிதமான புகாரும் இல்லை. இப்போதுள்ள பதிவாளர் அவர்கள், அவருடைய பணி திருப்திகரமாக இருப்பதாகச் சொல்லியிருக்கிறார். எனவே தாங்கள் சொல்வது சரியல்ல. ஏற்கனவே இருந்த அசிஸ்

டெண்ட் செகரட்ரி ப்ரமோஷன் செய்யப்பட்டிருக்கிறார். அவர் மீது எந்த விதமான குற்றச்சாட்டும் இல்லை என்று தகவல் வந்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் சொரணம் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அங்கே அவர் துணைச் செயலாளராக இருந்தபோதே, பல முறை கேடுகள் நடந்திருக்கிறது என்பதைப் பற்றி விசாரிக்கப்பட்டு, நிரூபிக்கப்பட்டு, உத்தரவு பிறப்பிக்கப்பட்ட குறிப்பு அந்த கூட்டுறவு வங்கியிலேயே இருக்கிறது. ஜாயின்ட் ரிஜிஸ்திரார் அப்படி எழுதிய குறிப்பு இப்போதும் அந்த அலுவலகத்திலே இருக்கிறது. அந்த ஜாயின்ட் ரிஜிஸ்திரார் இப்போதும் கூட்டுறவுத் துறையிலே உயர்ந்த பதவியிலே இருக்கிறார்.

ஆகவே, இந்த விவரங்களும், அந்த உத்தரவும் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொரணம் அவர்கள் சில விவரங்களை அளித்ததற்காக நன்றி. எனக்கு வந்துள்ள தகவலிலே அப்படிப்பட்ட விவரம் இருக்கிறது. மேலும் இந்தப் பிரச்னையிலே வேறு விவரங்களை உறுப்பினர் அவர்கள் சொல்லியிருப்பதால், உரிய அதிகாரிகளைக் கேட்டு, அதற்கான விவரங்களைச் சேகரித்து நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு பதில் அளிக்கப்படும் என்று உறுதி கூறுகிறேன்.

அடுத்து, மதிப்பிற்கும் மிகுந்த மரியாதைக்கும் உரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். முத்திரை • தாள்கள் பிரச்னை பற்றி அவர்கள் சில நல்ல ஆக்கபூர்வமான விவரங்களை எடுத்துச் சொன்னார்கள். முத்திரை தாள்கள் விற்பனை செய்பவர்களுடைய சங்கத்தைச் சார்ந்தவர்கள் கூட ஒரு விண்ணப்பத்தை அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அவைகள் எல்லாம் இன்றையதினம் அரசின் பரிசீலனையில் உள்ளது. நிச்சயமாக, பரிவோடு, நல்ல மன நிறைவோடு, அவர்களுக்கு உதவுகின்ற வகையிலே அந்த முடிவுகள் அமையும் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் சாதிக் பாட்சா அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல், பத்திரங்களை அன்றைக்கே பதிவு செய்து கொடுப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

பிற்பகல் 3 மணிக்கு மேல் கொடுக்கப்படும் பத்திரங்கள் அதிகமாக இருந்தால் அடுத்த நாள் அல்லது அதற்கு அடுத்த நாள் பத்திரச் சொந்தக்காரர்களுக்குக் கொடுக்கப்படுகின்றன என்பதையும் இந்த நேரத்தில் அவர்களுக்கு சொல்லிக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப் போல் கூட்டுறவுத் துறையில் நீண்ட நாள் அனுபவம் பெற்ற உறுப்பினர் சுவாமிதாஸ் அவர்கள் பல நல்ல கருத்துக்களை எல்லாம் இந்த மானியத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கும் மக்கள், பக்கத்திலுள்ள கேரளத்திற்குச் சென்று பத்திரங்களைப் பதிவு செய்கிறார்கள் என்ற ஒரு விவரத்தை எடுத்துச் சொன்னார்கள். அதற்குக் காரணம் அங்கே சர்சார்ஜ் இல்லையென்று சொன்னார்கள். கன்னியாகுமரி மாவட்ட மக்கள் மட்டுந்தான் அப்படிச் சென்று பதிவு செய்கிறார்கள் என்று மாண்புமிகு சுவாமிதாஸ் அவர்கள் சொன்னார்கள். கன்னியாகுமரி மாவட்ட மக்கள், பக்கத்தில் இருக்கும் திருவனந்தபுரம் போன்ற பகுதிகளுக்குச் சென்று பத்திரங்களைப் பதிவு செய்து நம்முடைய மாநிலத்திற்கு வரக் கூடிய வருவாயை இழக்கச் செய்கிறார்கள், இந்தக் குறையைப் போக்கவேண்டுமென்று சொன்னார்கள். இந்த நட்டத்தைத் தவிர்ப்பது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது என்பதை மட்டும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழில் பேட்டைக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் நிலங்களுக்கு முத்திரைத் தீர்வையிலிருந்து விலக்களிக்கவேண்டுமன்று சொல்லியிருக்கிறார்கள். ஏற்கனவே விலக்களிக்கப்படவேண்டுமென்பது பற்றி தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறோம். அவர்களுக்கு மேலும் விவரங்கள் வேண்டுமென்றால் நிச்சயமாக தனியாக விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட தொழிற் பேட்டைகள் வளரவேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு அப்படிப் பத்திரங்கள் பதிவாகின்ற நேரத்தில் விதிவிலக்கு அளிக்க அத்தனை காரியங்களையும் செய்ய இந்த அரசு ஈடுபட்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றும் பல உறுப்பினர்கள், குறிப்பாக எல்லா உறுப்பினர்களும் பேசுகிற நேரத்தில் தனி அதிகாரிகளுடைய பொறுப்பில் இருந்து விடுவிக்கப்பட்டு மக்களால், உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு, கூட்டுறவுச் சங்கத்தின் உயிர்த் துடிப்பாக இருக்கிற அந்தக் குரல் எப்போது எழும் எழும் என்று கேட்டார்கள். அவர்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்வேன். விரைவில் அது நடைபெறும். இந்த அரசு உங்களைப் போலவே அதிலே அக்கறை கொண்டிருக்கிறது. இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு இதே மாமன்றத்தில் உங்கள் அனுமதியோடு ஒரு சட்டத் திருத்தத்தை நிறைவேற்றியிருக்கிறோம். 17-வது விதியில்

கூட்டுறவுச் சங்கத்தினுடைய அந்த விதியில் இருக்கிற 'ஆடமாடிக் மெம்பர்ஷிப்' என்ற வகையில்' யாரும் உறுப்பினர்கள் ஆகலாம் என்ற வகையில் ஒரு நல்ல வாய்ப்பு. நலிந்தவர்களும் சேரலாம், வாய்ப்பு இல்லாதவர்களும் சேரலாம் என்ற அப்படிப்பட்ட ஒரு வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அவைகளை எல்லாம் மனத்தில் வைத்துக்கொண்டு இன்றைய கூட்டுறவுச் சட்டத்திலே பல விரும்பத்தகாத ஷரத்துக்கள் இருப்பதால் தேவைப்பட்ட சில ஷரத்துக்களைச் சேர்க்க வேண்டிய அவசியம் இருப்பதால், நீக்க வேண்டிய ஷரத்துக்களை நீக்கவும், சேர்க்க வேண்டிய ஷரத்துக்களைச் சேர்க்கவுமான எல்லாக் காரியங்களையும் இந்த அரசு செய்து முடித்து விரைவில் உங்கள் அனுமதியோடு சட்ட முன்வடிவாக இந்த கண்ணியம் மிக்க சபையில் கொண்டுவந்து அதற்குப் பிறகு விரைவில் தேர்தலை எப்படி நடத்த வேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்களோ அப்படி தமிழக அரசு, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவரின் விழுமிய தலைமையில் இருக்கும் இந்த அரசு விரும்புகிறது. அதிலே நமக்குள்ளே வேறுபாடுகள் கிடையாது, மாறுபாடுகள் கிடையாது. தனி அதிகாரிகள் அந்தப் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற உறுப்பினர்கள் நிர்வாகத்திற்கு வருகிற நேரத்தில் தான் கூட்டுறவின் முழுத் தன்மையே வடிவம் பெறும் என்பதில் உங்களைப் போலவே தமிழக அரசும் நம்பிக்கை கொண்டிருக்கிறது என்று சொல்லி, அதற்கான ஆயத்தங்கள் செய்து கொண்டிருக்கிறோம் என்று சொல்லி, கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணைகளைத் திரும்பப் பெற்றுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொடுக்குமாறு பணிவன்போடு விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது குறுக்கிடக்கூடாது என்று நான் இருந்து விட்டேன். அந்தத் தனி அதிகாரி பல்வேறு வசதிகள் செய்யப்பட்ட காரை உபயோகப்படுத்தியது பற்றிக் குறிப்பிட்டதற்குப் பதில் சொன்னார்கள்.

[பிற்பகல் 1-40]

நான் குறிப்பிட்டது, ஸ்டேட் கோவாப்ரேடிவ் பேங்கினுடைய உயர் அதிகாரி திரு. அகமத் அவர்கள் உபயோகப்படுத்துகின்ற அந்த வங்கிக்குச் சொந்தமான காரிலே பல்வேறு வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன என்று குறிப்பிட்டேன். ஆனால் அமைச்சர் அவர்கள் மாற்றி, தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி வங்கியினுடைய கார் என்று குறிப்பிட்டார்கள், அது அல்ல....

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மன்னிக்கவும். நான் கொடுத்த தகவல் தமிழ்நாடு மத்திய கூட்டுறவு வங்கியைப்பற்றித்தானே தவிர, வீட்டு வசதி சங்கத்தைப் பற்றி யல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. து. புருஷோத்தமன் : நானும் அதைத்தான் சொல்கிறேன். தமிழ்நாடு கூட்டுறவு மத்திய வீட்டு வசதி சங்கம், அந்த அலுவலகத்தைப்பற்றித்தான் பேசினேன். அந்த வசதி செய்யப்பட்டது, ஸ்டேட் கோவாப்ரேடிவ் பேங்கினுடைய காரை அதிகாரி பயன்படுத்துகிறார்...............

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லியதுபோல் சம்பந்தப்பட்ட மானியம் வருகிறபோது சம்பந்தப்பட்ட அமைச்சர் அதற்கான விவரங்களைத் தருவார்கள்.

திரு. து. புருஷோத்தமன் : நான் முதலிலே குறிப்பிட்டேன். அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். இந்தமாதம் ஒன்றாம் தேதியிலிருந்து 20 ஆம் தேதி வரையில் காருக்கு ரூபாய் 1200 வரையிலும் செலவு செய்யப்பட்டிருக்கிறது..................

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கம் என்னுடைய பொறுப்பிலே இல்லை. நான் கூட்டுறவுத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்று இருக்கிறேன். அந்த பொறுப்பு இன்னொரு அமைச்சரிடத்திலே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கூட்டுறவுத் துறைக்குப் பொறுப்பேற்று இருப்பதால் அதற்கும் தாங்கள் பொறுப்பு ஏற்றிருக்கிறீர்கள் என்று நினைத்துக்கொண்டு கேட்கிறார்கள்.

திரு. அ. சுவாமிதாஸ் : கூட்டுறவுத் துறை பொறுப்பு ஏற்றிருக்கின்ற தங்களைப்பார்த்துக்கேட்க விரும்புகிறேன், கிராம கூட்டுறவுச் சங்கங்களின் புழுக்கட்டிய அரிசியை, தரக்குறைவான அரிசியை விற்கவேண்டுமென்று எங்களைக் கட்டாயப்படுத்துகிறீர்களே, அதிலிருந்து எங்களைக் காப்பாற்ற அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : கண்ணியத்திற்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிதாஸ் அவர்கள் எடுத்துச் சொன்ன விவரத்தை உடன் பரிசீலித்து ஆவன செய்ய உறுதி சொல்கிறேன்.

திரு. மா. மணிமாறன் : தமிழ்நாட்டிலே விவசாயிகள் இன்று ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். கூட்டுறவுச் சங்கத்தாலே கொடுக்கப்பட்ட கடன்களிலோ அல்லது வட்டியிலோ நிவாரணம் கிடைக்குமென்று அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்...................

1979 மார்ச் 24]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உட்காருங்கள், அமைச்சர் அவர்கள் பேசியதற்குப் பின்னாலே அவர் பேசியதில் ஏதாவது சந்தேகம் இருந்தால்தான் கேட்க முடியுமே தவிர புதிய பிரச்சினையை இப்போது எழுப்புவதற்கு அனுமதிக்கப்படுவது இல்லை; உட்காருங்கள்.

விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

திரு. மா. மணிமாறன் : அனுமதிக்கவில்லையென்றால் நாங்கள் எதற்காக அங்கே இருந்து வருகிறோம், இந்தமாதிரி ஏன் சபையை நடத்துகிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேசாமல் உட்காருங்கள், சபை ஒழுங்காக நடக்கும்.

மானியக் கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவு.

திரு. சு. பாலன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.

திருவாளர்கள் ரா. கிருஷ்ணன், செ. சிவசாமி, சேலம் மு. ஆறுமுகம் ஆகியவர்கள் இருப்பிடங்களில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றனவாகக் கருதப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : ''மானியக் கோரிக்கைஎண் 6—பத்திரப் பதிவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,69,36,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

மானியக் கோரிக்கை எண் 23.—கூட்டுறவு—

திருவாளர்கள் மா. மணிமாறன், அ. சுவாமிதாஸ் ஆகியவர்களுடைய வெட்டுத்தீர்மானங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : ஏற்கெனவே சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலே சீக்கிரம் என்று சொல்லப்பட்டு, தேர்தல் பற்றிச் சொல்லப்பட்டு, இப்போது ஒரு ஆண்டு ஆகிவிட்டது...................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டிஸ்கஷன் இஸ் ஓவர், நீங்கள் இப்போது உங்கள் வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்துகிறீர்களா அல்லது வித்ட்ரா பண்ணுகிறீர்களா என்று மட்டும் சொல்லுங்கள்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தேர்தல் பற்றித் திட்டவட்டமாக அறிவிக்காததால் நான் வலியுறுத்துகிறேன்.

வெட்டுத்தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

திருவாளர்கள் செ. சிவசாமி, சேலம் மு. ஆறுமுகம் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் தீர்மானம் பெற்றுக் கொள்ளப்பெற்றனவாகக் கருதப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

''மானியக் கோரிக்கை எண் 23—கூட்டுறவு என்ற தலைப் பின்கீழ் ரூ. 7,26,25,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

"கோரிக்கை எண் 57—பல்வகை மூலதனச் செலவு" திருவாளர்கள் சு. பாலன், ஜே. ஜேம்ஸ் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

திருவாளர்கள் செ. சிவசாமி, சேலம் மு. ஆறுமுகம் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

''மானியக் கோரிக்கை எண் 57—பல்வகை மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 5,59,02,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

1979 மார்ச் 24]

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 26-3-1979 திங்கட்கிழமை காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-47 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

ஏதுமில்லை.

இணைப்பு - I

[. . 76ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பை காண்க.]

கோரிக்கை எண் 6.

1. பத்திரப் பதிவுத்துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.

பத்திரப் பதிவுத்துறை, முக்கியமாக, 1908 ஆம் ஆண்டு பத்திரப் பதிவுச் சட்டத்தை (மத்தியச் சட்டம் 16/1908) நிர்வகிக்கும் பொறுப்பையும் சொத்துரிமையைப் பாதிக்கக்கூடிய ஆவணங்களைப் பதிவு செய்யும் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டுள்ளது. மேலும் இயங்காச் சொத்துக்களின் மீது உரிமை கோருபவரது உரிமைகளை நிலைநாட்டும்ஆவணங்களைப் பாதுகாக்கும் பொறுப்பையும் நிறைவேற்றி வருகின்றது. இத்துறை இந்தியப் பங்குதாரர்கள் சட்டம், சங்கங்கள் பதிவுச் சட்டம், பிறப்பு-இறப்புப் பதிவுச் சட்டம், திருமணச் சிறப்புச் சட்டம், இந்து திருமணச் சட்டம், கிறித்துவ திருமணச் சட்டம், பார்சி திருமண மற்றும் விவாகரத்துச் சட்டம், வரதட்சிணை ஒழிப்புச் சட்டம் போன்ற திருமணப் பதிவு சட்டங்கள், திருவிதாங்கூர்-கொச்சி இலக்கிய அறிவியல் அறக்கட்டளைச் சங்கங்கள் பதிவுச் சட்டம் ஆகியவற்றையும் நிர்வகித்து வருகின்றது. இத்துறை தமிழ்நாடு சீட்டு நிதிச் சட்டத்தையும் நிர்வகித்து வருகிறது. இத்துறையைச் சேர்ந்த துணைப்பதிவாளர்கள், மாவட்டப் பதிவாளர்கள் போன்ற சில அதிகாரிகளிடம் இந்திய முத்திரைத்தாள் சட்டத்தின் குறிப்பிட்ட சில பிரிவுகளின் கீழும் அதிகாரங்கள் ஒப்படைக்கப் படுகின்றன.

2. துறையின் நிர்வாக அமைப்பு.

(1) பத்திரப் பதிவுத் துறைத் தலைவர் இத்துறையின் தலைவராவார். இவரே பிறப்பு-இறப்பு, திருமணங்களைப் பதிவு செய்யும் தலைமைப் பதிவாளருமாவார். இவர் சீட்டு நிதிகளின் இயக்குநர் ஆவார். இவருக்கு துறையின் அலுவலகப் பணியாளர்களைத் தவிர பத்திரப் பதிவுத் துணைத் தலைவர் ஒருவர், நேர்முக உதவியாளர் ஒருவர், சீட்டு நிதிகளின் கூடுதல் இயக்குநர் ஒருவர், ஆய்வு அதிகாரி (சீட்டு) ஒருவர் ஆகியோர் உதவி புரிகின்றனர்.

(2) இம்மாநிலம், சென்னை, கடலூர், தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி, சேலம், கோயம்புத்தூர் என ஏழு வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வட்டாரத்துக்கும் பத்திரப் பதிவு அலுவலக ஆய்வாளர் பொறுப்புடையவராவார். ஒவ்வொரு வட்டாரத்திலும் 5 முதல் 6 பதிவு மாவட்டங்கள்

1979 மார்ச் 24]

உள்ளன. ஆய்வாளர், துணைப் பதிவாளர் அலுவலகங்களை ஆய்வு செய்தல், துணைப் பதிவாளர்களுக்கு எதிராக வரும் ஊழல் புகார்கள், குறைத்து மதிப்பிடுதல் போன்ற முறைகேடுகள் குறித்து விசாரணை நடத்துதல் ஆகிய பணிகளைக் கவனிக்கிறார்.

(3) ஏழு வட்டாரங்கள் மேலும் 37 பதிவு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் மாவட்டப் பதிவாளரின் கட்டுப் பாட்டின்கீழ் இருக்கும். மாவட்டப் பதிவாளர்கள், தங்களது மாவட்டங்களிலுள்ள துணைப் பத்திரப் பதிவு அலுவலகங்களை ஆண்டுக்கொரு முறையும், திடீரென்றும் சோதனையிடுகிறார்கள். சொத்து மதிப்பைக் குறைத்துக் காட்டித் தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் குறித்து விசாரணை செய்து அவை குறித்து மேற் கொண்டும் நடவடிக்கை எடுக்கின்றனர். மேலும், அவர்கள் துணைப் பதிவாளர்கள் அனுப்புகின்ற ஆவணங்களைப் பதிவு செய்ய மறுக்கும் ஆணைகளுக்கெதிராகச் செய்து கொள்ளப்படும் மேல் முறையீடுகள் குறித்தும் விசாரணை செய்கிறார்கள். நிறுவ னங்கள், சங்கங்கள், பிறப்பு-இறப்பு, திருமணங்கள் ஆகியவற் றின் பதிவாளர்களும் இவர்களே. மேலும், இவர்கள் திருமணப் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவாளர்களாவார்கள்.

(4) மாவட்டப் பதிவாளர்கள், துணைப் பதிவு அதிகாரிகள் தங்கள் கடமைகளைச் செம்மையாகச் செய்து முடிக்க, பதிவு மாவட்டங்கள், துணைப் பதிவாளர் அலுவலகங்கள் ஆகியவற் றின் எண்ணிகையைப் படிப்படியாக உயர்த்துவது அவசியம் என்று கருதப்படுறது. பதிவு மாவட்டங்களின் எண்ணிக்கையை 40 ஆக உயர்த்த முதலில் கருதப்பட்டது. எனினும், நிதிநிலை இடர்ப்பாடு காரணமாக, 1979-80ஆம் ஆண்டில் கூடுதல் பணி யாளர் தொகுதியுடன் மேலும் ஒரு மாவட்டப் பதிவாளர் அலுவ லகம் ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது. இதனையும் சேர்த்து மொத்தம் 38 பதிவு மாவட்டங்கள் இருக்கும்,

(5) இம்மாநிலத்தில் தற்சமயம் ஏற்கெனவே உள்ள பத்திரப் பிரிவுகள் உட்பட 452 துணைப் பதிவாளர் அலுவலகங்கள் உள்ளன. துணைப்பதிவாளர் அலுவலகத் தலைவராகிய துணைப் பதிவாளர் ஆவணங்களை பதிவு செய்தல், வில்லங்க சான் றிதழ்களையும் சான்றளிக்கப்பட்ட நகல்களையும் வழங்குதல், அதிகாரப் பத்திரத்திற்குச் சான்றொப்பம் அளித்தல் போன்ற சட்டப்படிக்கான பணிகளைப் பத்திரப் பதிவுச் சட்டத்தின் கீழ் நிறைவேற்றுகிறார். இது தவிர, திருமணச் சட்டத்தின் கீழ் திருமணம் நடத்தி வைக்கும் அதிகாரியாகவும், சீட்டுகள் பதிவாள ராகவும், விற்பனைப் பத்திரங்கள், அடைமானப் பத்திரங்கள், அறுதியாவணங்கள், பரிமாற்றப் பத்திரங்கள் முதலிய குறிப் பிட்ட சில ஆவணங்களைப் பொறுத்த மட்டில் முத்திரைத்தாள் சட்டத்தின் 16, 41, 42 ஆகிய பிரிவுகளின் கீழ் கட்டணம் வசூலிப்பவராகவும் ஒரு துணைப் பதிவாளர் செயல்படுகிறார். பொதுமக்கள் பத்திரங்கள் பதிவு செய்வதற்கு வசதிகள் எங்கெங்கு

அவசியமோ அங்கெல்லாம் புதிய துணைப் பதிவாளர் அலுவலகங்கள் திறக்கப்படுகின்றன. 1979-80ஆம் ஆண்டில் மேலும் நான்கு துணைப் பதிவாளர் அலுவலகங்கள் ஏற்படுத்தக் கருதப் பட்டுள்ளது.

(6) தணிக்கைப் பிரிவு—ஒன்று இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பதிவு மாவட்டங்களில் உள்ள துணைப் பதிவு அலுவலகங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்வதற்காக ஒவ்வொரு தணிக்கைப் பிரிவும் ஒரு தணிக்கை துணைப் பதிவாளரின் கீழ் செயல்படுகிறது. இத்தணிக்கையின்போது முத்திரைத்தாள் சட்டத்தின் 47-ஏ பிரிவின் கீழ் ஆவணங்களை மதிப்பிடுவதில் அது சிறப்பான நாட்டம் செலுத்துகிறது. இது பதிவு அலுவலகங்களின் ஆய்வாளரின் மேற்பார்வையில் உள்ளது. இந்த மாநிலத்தில் மொத்தம் 22 தணிக்கை துணைப் பதிவாளர்கள் உள்ளனர்.

3. கூடுதல் பணியாளர்களை நியமிக்க அனுமதி.

(1) பத்திரப் பதிவுத் துறையின் பணிச் சுமைக்கு ஏற்ப 1979-80-ல் துணைப் பதிவாளர் அலுவலகங்களில் 25 இளநிலை உதவியாளர் பதவிகளை ஏற்படுத்த அனுமதி வழங்க அரசு கருதியுள்ளது.

(2) 1979-80ஆம் ஆண்டில் பத்திரப் பதிவு அலுவலகங்களில் நிரந்தர ஆவணங்களைப் பாதுகாத்து வருவதற்காக 100 இரும்பு அலமாரிகள், 19 இரும்பு பெட்டிகள் வாங்குவதற்கு ஒப்பளிப்பு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

4. கட்டிடங்கள் கட்டுதல்.

(1) தற்பொழுது வாடகைக் கட்டிடங்களில் இருக்கும் அனைத்துத் துணைப் பதிவாளர் அலுவலகங்களையும் மாவட்ட பதிவாளர் அலுவலகங்களையும் படிப்படியாக அரசு கட்டிடங்களில் அமர்த்துவதற்காக விரிவான தொரு திட்டம் வகுக்கப்பட வேண்டும் என கருதப்பட்டது. இருபத்திரண்டு மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களும் 141 துணைப் பதிவாளர் அலுவலகங்களும் தனியார் கட்டிடங்களில் உள்ளன. 1979-80ஆம் ஆண்டில் ரூ. 5 இலட்சம் செலவில் பத்திரப் பதிவுத் துறைக்கான சில அலுவலகங்கள் கட்ட ஒப்புதல் அளிக்கக் கருதப்பட்டுள்ளது.

(2) பத்திரப் பதிவு சட்டத்தின் 16 (3)-வது பிரிவின்படி மாநில அரசு பத்திரப் பதிவு தொடர்பான ஆவணங்களைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்வதற்காக தக்க ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். இதற்காக ரூ. 3.06 இலட்சம் செலவில் 15 அலுவலகங்களில் புதிதாக பதிவறைகள் கட்டவும் ஏற்கெனவே உள்ளவற்றை விரிவாக்கவும் அரசு ஒப்புதல் அளிக்கக் கருதியுள்ளது.

1979 மார்ச் 24]

5. தமிழ்நாடு 1961ஆம் ஆண்டின் சீட்டு நிதிகள் சட்டம் 1964ஆம் ஆண்டு ஜூலை மாதம் 8ஆம் நாளிலிருந்து தமிழ்நாடு 1961ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம் கன்னியாகுமரி திருநெல்வேலி, பாளையங்கோட்டை ஆகிய பதிவு மாவட்டங்களில் முதன் முதலாகக் கொண்டு வரப்பட்டது. அதன் பிறகு 1969ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1ஆம் நாளிலிருந்து தமிழ்நாடு மாநிலம் முழுவதிலும் நீட்டிக்கப்பட்டது. சென்னை பத்திரப் பதிவுத் துறைத் தலைவர் சீட்டு நிதிகளின் இயக்குநர் ஆவார். பத்திரப் பதிவு அலுவலகங்களின் ஆய்வாளர் பதவித் தரத்தில் சீட்டு நிதிகளின் கூடுதல் இயக்குநர் ஒருவரும், மாவட்டப் பதிவாளர் பதவித் தரத்தில் ஆய்வு அதிகாரி ஒருவரும் இவருக்கு உதவி புரிகின்றனர். ஒன்றுக்கு மேற்பட்ட பதிவு மாவட்டங்களின் அதிகார வரம்புடைய 21 சீட்டு நிதிப் பதிவாளர்கள் (புலனாய்வு வழக்கு தொடர்தல்) சீட்டு நிதிகள் ஆய்வு அதிகாரி அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர். அனுமதி பெறாத சீட்டுகள் அனுமதி பெற்ற சீட்டுகளின் மோசடி ஆகியவற்றைக் கண்டறிவதும், சீட்டு நிதிகள் சட்டத்தின்கீழ் நீதி மன்றங்களில் புகார் கொடுப்பதில் சீட்டுப் பதிவாளர்களுக்கு உதவி புரிவதும் அவர்களது முக்கியப் பணியாகும்.

(i) 1978ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட சீட்டுகளின் எண்ணிக்கை.	6,417
(ii) 1978ஆம் ஆண்டு டிசம்பர் இறுதியில் செயல்படுகின்ற சீட்டுகளின் எண்ணிக்கை.	16,690
(iii) 1978ஆம் ஆண்டு இறுதியில் செயல்படுகின்ற மொத்தச் சீட்டுத் தொகை ரூபாய்.	11,00,48,363

6. துறையின் வருமான வாயில்கள்.

பத்திரப் பதிவிற்காகச் சமர்ப்பிக்கப்படும் பத்திரங்கள்மீது விதிக்கத்தக்க பதிவுக்கட்டணங்கள், தேடுவதற்கான கட்டணங்கள், வில்லங்கச் சான்றிதழ் முதலியவற்றை வழங்குவதற்கான கட்டணங்கள் ஆகியவை பதிவுத் துறைக்கு முக்கிய வருமான வாயில்களாகும். பத்திரங்களின் மீது விதிக்கப்படும் பதிவுக் கட்டணங்களை சீரமைக்கும் நோக்குடன் 1978ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1ஆம் நாள் முல்த பதிவு கட்டணம் சொத்து மதிப்பில் ஒரு சதவீதம் என திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. இதனால் ரூபாய் 1,000-த்திற்குக் குறைவான மதிப்புடைய பத்திரங்களுக்கான பதிவுக் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது. 1978-79ஆம் ஆண்டில் ஆதாவது 1978ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1ஆம் நாளிலிருந்து டிசம்பர் திங்கள் 31ஆம் நாள் வரை பதிவு செய்யப்பட்ட பத்திரங்களின் எண்ணிக்கை 7,86,543. கடந்த ஆண்டு இதே கால அளவில் பதிவு செய்யப்பட்ட பத்திரங்களின் ண்ணிக்கை 6,30,272 தமிழ்நாடு 1961ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்தின் கீழ் சீட்டுகளைப் பதிவு செய்வதன் மூலமும் வமானம் கிட்டுகிறது.

[1979 மார்ச் 24

7. வரவு-செலவு.—1973-74 முதல் 1978-79 (1978 டிசம்பர் முடிய) துறையின் வரவு-செலவு விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

ஆண்டு.	பதிவு செய்யப்பட்ட பத்திரங்களின் எண்ணிக்கை.	வரவு.	செலவு.
(1)	(2)	(3)	(4)
		(ரூபாய் இலட்சத்தில்.)	
1973-74 ..	11,05,658	392.00	142.00
1974-75 ..	11,72,763	330.30	118.86
1975-76 ..	9,69,553	383.12	158.16
1976-77 ..	7,78,961	307.06	183.41
1977-78 ..	8,54,359	352.37	205.80
1978-79 .. (1978 டிசம்பர் முடிய).	7,86,543	378.84	173.42

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-II

[76ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

1979-80ஆம் ஆண்டிற்கான கூட்டுறவுத்துறையின் கொள்கை விளக்கம்.

கூட்டுறவு இயக்கம் தமிழ்நாட்டில் மக்களின் பல்திறப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளுக்கு உதவுகின்றது. குறிப்பாக, விவசாயக் கடனுதவி, விவசாய இடுபொருட்கள் வழங்கல், விளைபொருட்களை விற்பதற்கு வசதி செய்தல், இன்றியமையா நுகர் பொருட்களை விநியோகித்தல் ஆகிய துறைகளில் கூட்டுறவு இயக்கம் பெருந்துணையாக நிற்கின்றது.

2. *1977-78இல் ஏற்பட்ட முன்னேற்றம் குறித்த சுருக்க ஆய்வுரை.*—*1977-78-ல்*, குறுகிய கால, மத்திய காலக் கடன்களாக *127.13* கோடி ரூபாயும், நீண்டகாலக் கடனாக *12.28* கோடி ரூபாயும் வழங்கப்பட்டன. அதற்கு முந்திய ஆண்டில் முறையே *125.12* கோடி ரூபாயும், *19.14* கோடி ரூபாயும் வழங்கப்பட்டன. *1977-78*இல் *54.84* கோடி ரூபாய் மதிப்புள்ள விவசாய விளை பொருட்கள் விற்கப்பட்டன. அதற்கு முந்திய ஆண்டில் *35.72* கோடி ரூபாய் மதிப்புள்ள விவசாய விளை பொருட்கள் விற்கப்பட்டன. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் *1976-77*ஆம் ஆண்டில் *147.23* கோடி ரூபாய் மதிப்புள்ள பண்டங்களை விற்பனை செய்திருக்க, *1977-78*இல் *139.47* கோடி ரூபாய் மதிப்புள்ள பண்டங்களை விற்பனை செய்துள்ளது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1979 மார்ச் 24

3. வளர்ச்சித் திட்டங்களுக்கான செலவு.—ஐந்தாவது திட்ட செலவு, நடப்பாண்டிற்கான மதிப்பீடுகள் ஆகியவற்றின்

திட்டங்களின் விவரங்கள்.	1974-75 ஆம் ஆண்டில்.
(1)	(2)
அ. மாநிலத் திட்டப் பணிகள்—	
1. கடன் கூட்டுறவுச் சங்கங்கள்	259.61
2. விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்கள் ..	2.84
3. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் ..	15.98
4. ஏனைய வகை கூட்டுறவுச் சங்கங்கள்	..
5. கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி ..	0.32
மாநிலத் திட்டப்பணிகளின் மொத்தம் ..	278.75
ஆ. மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள், மத்திய அரசுத்துறைத் திட்டங்கள், தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் நிதியுதவி அளிக்கும் திட்டங்கள்.	95.30
பெரு மொத்தம் ..	374.05

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1979 மார்ச் 24]

காலத்தில் கூட்டுறவு வளர்ச்சித் திட்டங்களுக்கான மொத்தச் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

செலவு.			1978-79 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு.	1978-79 ஆம் ஆண்டில் எதிர் பார்க்கப் படும் செலவு.
1975-76 ஆம் ஆண்டில்.	1976-77 ஆம் ஆண்டில்.	1977-78 ஆம் ஆண்டில்.		
(3)	(4)	(5)	(6)	(7)
(ரூபாய் இலட்சத்தில்.)				
544.26	735.33	1,095.40	432.79	459.94
21.93	26.37	6.53	6.38	10.62
9.52	12.67	30.62	24.84	161.13
7.71	15.79	19.87	16.04	44.97
..	..	10.86	..	0.13
583.42	790.16	1,163.28	480.05	676.79
221.90	245.04	266.72	211.76	323.51
805.32	1,035.20	1,430.00	691.81	1,000.30

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1979 மார்ச் 24

கூட்டுறவுக் கடனுதவி

குறுகிய கால, மத்தியகாலக் கடன்கள்.

4. முகவுரை.—கிராம விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள், இம்மாநிலத்தில் உள்ள கூட்டுறவு இயக்கத்தின் மைய அமைப்புகளாக உள்ளன. இம்மாநிலத்தில் 4,740 சங்கங்கள், குறுகிய கால, மத்திய காலக் கடன்களை அளிக்கின்றன. விவசாயம் குறித்த தேசிய ஆணைக்குழு, இம்மாநிலத்தில் குறுகியகால, மத்திய காலக் கடன் தேவைகள் கிட்டத்தட்ட 310 கோடி ரூபாயாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. அத்தொகையில் 40 சதவீதத்தை 1977-78இல் கூட்டுறவு சங்கங்கள் வழங்கியுள்ளன. ஆறாவது திட்ட இறுதியில் இது 60 சதவீதமாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

5. கடன் வழங்குதல்.—1973-74இல் கொடுக்கப்பட்ட குறுகியகால, மத்திய காலக் கடன்கள் 78.82 கோடி ரூபாயாகும்; அது, 1977-78இல் 127.13 கோடி ரூபாய் என்ற அளவுக்கு உயர்ந்துள்ளது. ஆனால், நடப்பு ஆண்டில், இச்சீரான முன்னேற்றத்தை நிலை நிறுத்தவும், 145 கோடி ரூபாய் என்ற இலக்கை எய்தவும் இயலாது. 1978 டிசம்பர் இறுதிவரை 77.50 கோடி ரூபாய் மட்டுமே கடன்களாகக் கொடுக்கப்பட்டுள்ளன. விவசாயிகள் கொடுக்க வேண்டிய பாக்கித் தொகைகளை திருப்பிக் கொடுக்காமலிருப்பதன் விளைவாக, மத்திய வங்கியிலும் தொடக்க சங்கங்களிலும் தவணை கடந்த கடன்கள் அதிகரித்து வருவதே கடன்கள் கொடுப்பதில் ஏற்பட்டுள்ள இந்த வீழ்ச்சிக்கான முக்கிய காரணம் ஆகும். ஆனால், வரும் மாதங்களில் தவணை கடந்த கடன்களை வசூலிப்பதில் முன்னேற்றம் இருக்கும் என்ற நம்பிக்கையுடன் 1979-80 ஆம் ஆண்டில் வழங்கப்படும் குறுகியகால, மத்திய காலக் கடன்களுக்கான இலக்கு 160 கோடி ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

6. விவசாயிகளைக் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாக ஆக்குதல்.—இம்மாநிலத்தில் சாகுபடியின்கீழ் உள்ள விவசாய நில உடைமைகள் 53.14 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. அதில், 40.32 இலட்சம் நில உடைமைகளை வைத்துள்ளவர்கள் (இது சுமார் 76 சதவீதமாகும்), 1978ஆம் ஆண்டு டிசம்பர் இறுதி நிலவரப்படி விவசாயக் கடன் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்கள் ஆகி உள்ளனர். சிறு விவசாயிகளும் ஓரளவு நிலம் வைத்திருக்கும் விவசாயிகளும் சாகுபடிசெய்யும் நில உடைமைகளின் எண்ணிக்கை, 42.05 இலட்சமாகும்; அதில் 30.64 இலட்சம் நில உடைமைகளை வைத்துள்ளவர்கள் (அது சுமார் 73 சதவீதமாகும்) டிசம்பர் 1978 இறுதி நிலவரப்படி விவசாயக் கடன் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களாகியுள்ளனர். இந்த சதவீதங்கள், நடப்பாண்டின் இறுதிக்குள் முறையே 80 சதவீதமாகவும், 75 சதவீதமாகவும் உயருமென எதிர்பார்க்கப்படுகின்றன.

REPORTING SECTION

சாகுபடியின் கீழ் உள்ள நில உடைமைகளை வைத்திருப்பவர்களை குறிப்பாக, சிறு விவசாயிகளையும், ஓரளவு நிலம் வைத்திருக்கும் விவசாயிகளையும் அதிக அளவில் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் உறுப்பினர்களாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

7. நலிந்த பிரிவினர்களுக்குக் கடன் வழங்குதல்.—தமிழ் நாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் நலிந்த பிரிவினரின் தேவைகளைக் குறித்து போதிய கவனம் செலுத்தி வருகின்றன. இந்திய ரிசர்வ் வங்கியின் வழிமுறையின்படி மொத்தக் கடன் தொகையில் 20 சதவீதம் நலிந்த பிரிவினருக்குக் கொடுக்கப்பட வேண்டும். ஆனால், சொந்தமாகவோ அல்லது குத்தகையின் அடிப்படையிலோ ஐந்து ஏக்கர் நிலத்திற்கும் குறைவாக சாகுபடி செய்கின்ற நலிந்த பிரிவினருக்கும், கூட்டுறவுச் சங்கங்கள் 61.91 கோடி ரூபாயை (அதாவது 49 சதவீதம்) கடனாக வழங்கியுள்ளன. இதை 1979-80ஆம் ஆண்டு இறுதிக்குள் 54 சதவீதத்திற்கு உயர்த்தக் கருதப்பட்டுள்ளது.

8. இழப்பு நிதி (Risk Fund).—நலிந்த பிரிவினருக்கு அதிகமாக கடன்களை வழங்குவதில், விவசாயக் கடன் கூட்டுறவுச் சங்கங்களையும் மத்திய கூட்டுறவு வங்கிகளையும் ஊக்குவிக்கும் பொருட்டு, அவைகளின்இழப்பு நிதிக்கு (Risk Fund) அரசு நிதி வழங்கி வருகிறது. நலிந்த பிரிவினருக்குக் கொடுக்கப்பட்ட கடன்களில் வராத கடன்களையும், சந்தேகக் கடன்களையும் தள்ளுபடி செய்வதற்காக இந்த நிதி பயன்படுத்தப்படும். 1978ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30ஆம் நாளில் விவசாயக் கடன் கூட்டுறவுச் சங்கங்கள் மத்திய கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றின் இழப்பு நிதிகளில் முறையே 312.10 இலட்ச ரூபாயும், 112.70 இலட்ச ரூபாயும் இருந்தன. 1979-80இல் இந்நிதிகளுக்கு 27.08 இலட்ச ரூபாய் வழங்க அரசு கருதி உள்ளது.

9. உள்நிதி வசதிகள்.—மேன் மேலும் அதிக அளவில் கடன்கள் வழங்க ஏற்ற வகையில் ,விவசாயக் கடன் சங்கங்கள், மத்திய கூட்டுறவு வங்கிகள், மாநிலக் கூட்டுறவு வங்கி ஆகியவற்றின் நிதி வசதிகள் போதுமான அளவிற்கு வளர்க்கப்பட்டுள்ளன. 1977-78ஆம் ஆண்டின் இறுதியில் 54.43 கோடி ரூபாயாக இருந்த அவற்றின் மொத்த பங்கு மூலதனம் (அரசு பங்கு மூலதனம் நீங்கலாக) நடப்பு ஆண்டின் இறுதிக்குள் 60 கோடி ரூபாயாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. அவற்றின் மொத்த வைப்புத் தொகை 206.67 கோடி ரூபாயிலிருந்து சுமார் 30 கோடி ரூபாயாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2979-80ஆம் ஆண்டு இறுதிக்குள், அவைகளது பங்கு மூலதனம் 19கோடி ரூபாயாகவும், வைப்புத் தொகை 260 கோடி ரூபாயாகவும் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

10. அரசு பங்கு மூலதனம்.—கடன் கூட்டுறவுச் சங்கங்கள் போதுமான அளவு கடன் வாங்குவதற்குத் தகுதியுடையதாக இருப்பதற்கு, இவைகளின் பங்கு மூலதனத்தை அரசு வலுப்படுத்தி

[1979 மார்ச் 24

வருகிறது. நிலவள வங்கிகள், நகர வங்கிகள் உட்பட கடன் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு மூலதனத்தில் அரசின் மொத்த முதலீடுகள் 1978ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாளன்று 19.42 கோடி ரூபாயாக இருந்தன.

11. நடப்பு ஆண்டில் 150 இலட்ச ரூபாய் முதலீடு செய்ய கருதப்பட்டுள்ளது. இதற்கான கடன் அனுமதி இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. அரசு, இந்திய ரிசர்வ் வங்கியின் துணையுடன் 1979–80ஆம் ஆண்டிலும் தொகை வழங்கும்.

நீண்டகாலக் கடன்.

12. அமைப்பு.—மாநில நிலவள வங்கியுடன் இணைந்துள்ள 223 தொடக்க நிலவள வங்கிகள் மாநிலத்தில் உள்ள விவசாயிகளின் நீண்டகாலக் கடன் தேவைகளை நிறைவு செய்து வருகின்றன. இதுவரை, சிறு பாசனத்திற்காகக் கடன்கள் அளிப்பதே இவ்வங்கிகளின் முக்கிய பணியாக இருந்தது. ஆனால், பின்னர், நிலத்தடி நீர் நிலைமை பெருமளவில் குறைந்து வருவதன் காரணமாக, வங்கிகள் தங்களுடைய கடன் கொடுக்கும் நடவடிக்கைகளை வேறு துறைகளுக்குத் திருப்பியுள்ளன.

13. கடன் கொடுத்தல்.—நிலவள வங்கிகள், 1976-77ஆம் ஆண்டில் 19.14 கோடி ரூபாயும், 1977-78ஆம் ஆண்டில் 12.28 கோடி ரூபாயும் கடனாக அளித்துள்ளன. தவணை கடந்த நிலுவைகளின் சதவீதம் அதிகமாயிருந்ததன் விளைவாக வங்கிகளால் அதிக கடன் வழங்க இயலவில்லை. எனவே 1978–79ஆம் ஆண்டில் 16 கோடி ரூபாய் கடன்களாக கொடுக்கப்பட வேண்டும் என்ற திட்டம் நிறைவேற வழியில்லை. ஆயினும், கிட்டத்தட்ட 12 கோடி ரூபாய் கடன்களாக கொடுக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. 1978ஆம் ஆண்டு டிசம்பர் முடிய 7.33 கோடி ரூபாய் அளவிற்குத்தான் கடன் வழங்கப்பட்டுள்ளது. தவணை கடந்த நிலுவைகள் வசூலிக்கப்பட்டு அதன் விளைவாக நிலுவைகள் கணிசமான அளவிற்குக் குறைந்தால், 1979-80இல் நீண்டகாலக் கடன்களாக 17 கோடி ரூபாய் (8.50 கோடி ரூபாய் இயல்பான திட்டங்களின் கீழும், எஞ்சியவை விவசாய மறுநிதி வளர்ச்சிக் கழகத்தின் உதவிபெறும் திட்டங்களின் கீழும்) வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. சிறு பாசனத் திட்டங்களுக்குக் கடன்கள் வழங்குவதற்கான வாய்ப்புகள் குறைந்து வருவதால், நிலவள வங்கிகள், வணிகப்பயிர்களான தென்னை, முந்திரி, காபி, ஏனைய தோட்டப்பயிர்களின் சாகுபடி, பட்டுப்புழு வளர்த்தல், டிராக்டர், இயந்திரக் கலப்பைகள் வாங்குதல், பண்ணை வீடுகள், கால்நடைக் கொட்டகைகள் அமைத்தல், பாற்பண்ணைத் திட்டம் போன்ற இதர நோக்கங்களுக்குக் கடன்கள் வழங்கவும், மின்வாரியத்திற்கும், மீன் வளக் கழகம், தமிழ்நாடு உணவுப் பொருள்கள் வழங்கு கழகம் போன்ற ஏனைய அரசு நிறுவனங்களுக்கும் முன்

1979 மார்ச் 24]

பணம் கொடுக்கவும் முயற்சி செய்து வருகின்றன. நில உச்ச வரம்புச் சட்டத்தின் கீழ் உபரி நிலம் ஒப்படைக்கப் பெற்றவர்கள், தங்கள் நிலங்களை மேம்படுத்தி பலன் அடைய ஏதுவாகும் பொருட்டு அத்தகைய நிலங்களின் பேரில் கடன்கள் வழங்குவதற்காக, அந்த நிலங்களை அடைமானம் வைக்க அரசு அனுமதித்துள்ளது. தவிர, உபரி நிலங்கள் ஒப்படை செய்யப்பட்ட நிலமில்லாதவர்கள் மேம்பாட்டுக் கடன்களைப் பெறுவதற்காக நிலம் ஒப்படை செய்யப்பட்டவர்களிடமிருந்து நிலங்களை அரசு திரும்ப எடுத்துக்கொள்ள நேரிட்டால், அக்கடன்களைத் திருப்பிக் கொடுப்பதற்கான உத்திரவாதத்தை அரசு தந்துள்ளது. உபரி நிலங்கள் ஒப்படைக்கப்பட்டவர்களுக்குக் கடன் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சுமார் 85,000 ஏக்கர் நிலம் ஒப்படைக்கப் பெற்றுள்ள சுமார் 50,000 சிறு விவசாயிகள் இதனால் பயனடைவர்.

14. <u>விவசாய மறுநிதி வளர்ச்சிக் கழகத் திட்டங்கள்.</u>—1968–69ஆம் ஆண்டிலிருந்து விவசாய மறுநிதி வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் திட்டங்களை வகுப்பதன் மூலம், விவசாய வளர்ச்சிக்குக் கடன் வழங்குவதற்காகப் பகுதிவாரியான வளர்ச்சிப்பற்றி திட்டமிடப்பட்டது. 38.32 கோடி ரூபாய் செலவிலான 51 சிறு பாசனத் திட்டங்களும், 12.43 கோடி ரூபாய் செலவிலான 36 சிறுபாசனமல்லாத பிற திட்டங்களும் தற்போது நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

15. 4,056 மின்சார விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுப்பதற்காக மாநில நிலவள வங்கி, தமிழ்நாடு மின்வாரியத்திற்கு 1976-77-லிருந்து இதுவரை 189.54 இலட்ச ரூபாய் கடன் வழங்கியுள்ளது.

16. <u>கடனீட்டுப் பத்திரங்களுக்கு அரசு நிதி வழங்குதல்.</u>—மாநில நிலவள வங்கி கடனீட்டுப் பத்திரங்கள் வெளியிடுவதன் வாயிலாக நிதி திரட்டுகிறது. மாநில, மத்திய அரசுகள், விவசாய மறுநிதி வளர்ச்சிக் கழகம், இன்னும் பிற நிறுவனங்கள் இப்பத்திரங்களை வாங்கி நிதி வழங்குகின்றன. இவ்வகைப் பத்திரங்களின் பேரில் மாநில அரசு நிதி வழங்கி, 1978ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாளன்று நிலுவையாகவுள்ள தொகை 18.30 கோடி ரூபாயாகும். நடப்பு ஆண்டில் மாநில அரசு நிதி வழங்குவதற்காக 110 லட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளது. 1979-80ஆம் ஆண்டில் வரவு-செலவுத் திட்டத்தில் 123 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

17. <u>புதிய கிணறு வெட்டுவதற்கான உதவித் தொகை.</u>—புதிய கிணறு வெட்டுவதற்காகும் செலவில் 25 சதவீதம் அல்லது 500 ரூபாய் இதில் எது குறைவானதோ அத்தொகையை உதவித் தொகையாக தொடக்க நிலவள வங்கிகள் மூலம் சிறு விவசாயிகளுக்கு அரசு வழங்கி வருகிறது. நடப்பு ஆண்டில் சுமார் 1,000 சிறு விவசாயிகள் இத்தகைய புதுக் கிணறு உதவித் தொகை பெறுவர். இதற்காக வரவு-செலவுத் திட்டத்தில் 5 இலட்ச

ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், 1,000 சிறு விவசாயிகளுக்கு, ஒரு கிணற்றுக்கு 500 ரூபாய் வீதம் உதவித் தொகை வழங்க, 1979-80ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்திலும் 5 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

18. இயற்கைப் பேரிடர்களிலிருந்து நிவாரணம்.—1977-78 ஆம் ஆண்டில் வெள்ளத்தாலும் புயலாலும் ஏற்பட்ட மிகப் பெரிய சேதம் காரணமாக, விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் 28.11 கோடி ரூபாய் அளவிற்கு குறுகிய காலக் கடன்கள் மத்திய காலக் கடன்களாக மாற்றப்பட்டன. இதைத் தவிர, 1976-77ஆம் ஆண்டில் மத்திய காலக் கடன்களாக மாற்றப்பட்ட கடன்களில் 19.25 கோடி ரூபாய் அளவிற்கு தவணைகள் மாற்றியமைக்கப்பட்டன. நிலவள வங்கிகளும் கடந்த நான்கு ஆண்டுகளில் 32.87 கோடி ரூபாய் அளவிற்கு, ஆண்டுத் தவணைகள் வசூலிப்பதைத் தள்ளிவைத்து அதற்கேற்ப கடன் தவணைகளை மாற்றியமைத்தன.

19. விவசாயக் கடன் உறுதி (Stabilisation) நிதி.—இயற்கையின் பேரிடர்களால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அளிக்கப்பட்ட நிவாரணம், பல்வேறு மட்டங்களில் பராமரிக்கப்படும் விவசாயக் கடன் உறுதி நிதியிலிருந்து, கூட்டுறவுச் சங்கங்களால் சரிக்கட்டப்படுகிறது. குறுகியகாலக் கடன் வழங்கும் அமைப்பில், மத்திய அரசால் வழங்கப்படும் கடனிலிருந்தும், உதவித் தெகையிலிருந்தும் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் வங்கிகளின் நிகர இலாபத்திலிருந்து அளிக்கப்படும் தொகையினாலும் இந்த நிதி உருவாக்கப்படுகிறது. மத்திய அரசானது, இதுவரை, மாநிலக் கூட்டுறவு வங்கியின் விவசாயக் கடன் உறுதிநிதிக் கணக்கில் 475.75 இலட்ச ரூபாய் வழங்கியுள்ளது. குறுகியகாலக் கடன் அமைப்பில் கிடைப்பதுபோல, மாநில நிலவள வங்கியும் தொடக்க நிலவள வங்கிகளும் பராமரிக்கும் இந்நிதிக்கு மத்திய அரசிடமிருந்து உதவி கிடைப்பதில்லை. நீண்டகாலக் கடன் வழங்கும் வங்கிகளின் இந்த நிதி அவ்வங்கிகள் தங்களுடைய ஆண்டு நிகர இலாபத்திலிருந்து வழங்கும் தொகையினாலும், அவ்வப்போது மாநில அரசு வழங்கும் தொகையினாலும் சேர்க்கப்படுகிறது. மாநிலத்தில் சில பாகங்களில் 1974-75 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து மூன்று ஆண்டுகள் நிலவிய கடுமையான வறட்சி காரணமாகவும் 1977-78 ஆம் ஆண்டில் புயலாலும் வெள்ளத்தாலும் ஏற்பட்ட சேதம் காரணமாகவும் நிலவள வங்கிகள், கடந்த நான்கு ஆண்டுகளில் 32.87 கோடி ரூபாய்க்கு ஆண்டுத் தவணைகள் வசூலிப்பதைத் தள்ளிவைத்து கடன் தவணைகளை மாற்றி அமைத்துள்ளன. குறுகியக்காலக் கடன் அமைப்பில் கிடைப்பதுபோல இக்காரியத்திற்காக, இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து எந்தவித உதவியும் கிடைக்காததால், மாநில நிலவள வங்கி, தொடக்க நிலவள வங்கிகள் ஆகியவைகளின் நிதிவசதிகள் கணிசமான அளவிற்குப்

1979 மார்ச் 24]

பாதிக்கப்பட்டுள்ளன. எனவே, அரசு நிதி உதவியுடன் மாநில நிலவள வங்கியின் நிதியை வலுப்படுத்துவது அவசியமாகியுள்ளது. இதற்காக, மாநில அரசு நடப்பு ஆண்டில் 40 இலட்ச ரூபாயை இந்த நிதிக்கு வழங்கியுள்ளது. 1979-80 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இதற்காக 50 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

20. விவசாயக் கடன் நிவாரண (Relief) நிதி.—விவசாயக் கடன் கூட்டுறவுச் சங்கங்கள் குறுகியகாலக் கடன்களை வழங்குவதில் ஏற்படக்கூடிய எதிர்பாராத இழப்புகளைச் சரிக்கட்ட விவசாயக் கடன் நிவாரண நிதி அமைக்கப்பட்டுள்ளது இந்நிதியில் 87.51 இலட்ச ரூபாய் உள்ளது. இந்நிதியை வலுப்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது. இதற்காக, அரசு 1979-80ஆம் ஆண்டில் 10 இலட்ச ரூபாய் வழங்க உத்தேசித்துள்ளது.

21. தவணை கடந்த நிலுவைகள் குறித்த பிரச்சனை.—கடந்த மூன்று ஆண்டுகளில் தவணை கடந்த நிலுவைகளின் சதவீதம் அதிக அளவில் பெருகி வந்துள்ளது. இது, கூட்டுறவுச் சங்கங்களின் கடன் வழங்கும் வசதியைப் பெரிதும் பாதித்துள்ளது. மத்திய கூட்டுறவு வங்கிகள், தொடக்க நிலவள வங்கிகள் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் தவணை கடந்த நிலுவைகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

காலம்.	கேட்பு.	வசூல்.	நிலுவை.	கேட்புத் தொகையில். தவணை கடந்த நிலுவையின் சதவீதம்.
(1)	(2)	(3)	(4)	(5)
				(ரூபாய் கோடியில்.)
மத்திய கூட்டுறவு வங்கிகள் :				
30—6—1974-ல் ..	86.81	80.59	6.22	7
30—6—1975-ல் ..	103.77	94.77	9.00	9
30—6—1976-ல் ..	121.24	108.00	13.24	11
30—6—1977-ல் ..	134.13	114.51	19.62	15
30—6—1978-ல் ..	184.96	139.90	45.06	24

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1979 மார்ச் 24

காலம்.	கேட்பு.	வசூல்.	நிலுவை.	கேட்புத் தொகையில் தவணை கடந்த நிலுவையின் சதவீதம்.
(1)	(2)	(3)	(4)	(5)
				(ரூபாய் கோடியில்.)
தொடக்க நிலவள வங்கிகள் :				
30—6—1974-ல் ..	22.63	18.56	4.07	17.9
30—6—1975-ல் ..	14.94	9.00	5.94	39.6
30—6—1976-ல் ..	26.15	16.59	9.56	36.3
30—6—1977-ல் ..	28.90	14.59	14.31	49.5
30—6—1978-ல் ..	48.25	15.87	32.38	67.1

கடன்கள் உரிய நேரத்தில் திருப்பிச் செலுத்தப்படாவிடில், வங்கிகளின் நிதி வசதிகள் கணிசமான அளவிற்கு பாதிக்கப்படும். அதனால், கடன் வழங்கு ஓடைகள் உலர்ந்துவிடும். உண்மையில், மொத்தமுள்ள 223 தொடக்க நிலவள வங்கிகளில் 120 வங்கிகள், 30-6-1978 ஆம் நாள் நிலவரப்படி தவணை கடந்த நிலுவைகள் மிகுதியாக இருந்ததால், புதிதாகக் கடன்களை வழங்குவதற்குத் தகுதி உடையவை இல்லாமல் ஆகிவிட்டன. மாநில நிலவள வங்கி, விவசாய மறுநிதி வளர்ச்சிக் கழகத்துக்கும் மாநில அரசுக்கும் திருப்பிச் செலுத்த வேண்டிய தொகையை உரிய நேரத்தில் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் உள்ளது. மாநில நிலவள வங்கி தனது நிதி இடர்பாட்டிலிருந்து விடுபடும் பொருட்டு 7 கோடி ரூபாயை முன்பணமாக மாநில அரசு வழங்கியுள்ளது. நாட்டிலேயே அதன் வகையில் முதன்மையான வங்கிகளில் ஒன்றாக இதுவரை கருதப்பட்டு வந்த இந்த வங்கியைப் புதுப்பித்து அமைக்க வழி வகைகளைக் கூறுமாறு பணிக்குழு ஒன்று அரசால் நியமிக்கப்பட்டுள்ளது.

22. இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள்.—சிறு விவசாயிகளுக்குப் பொதுவான பாசன வசதி அளிக்க 327 இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இச் சங்கங்களில் 101 சங்கங்கள், 3.38 கோடி ரூபாய் முதலீட்டுச் செலவிலும், 13,200 ஏக்கர் நிலம் பயன்பெறும் வகையிலும், 872 யூனிட்டுகள் அடங்கிய சிறுபாசனத் திட்டங்களை நிறைவேற்றி வருகின்றன. இச்சங்கங்களுக்கு நிலவள வங்கிகள் நிதியுதவி செய்கின்றன. இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிர்வாக உதவித் தொகையை மாநில அரசு வழங்குகிறது.

1979 மார்ச் 24]

23. விவசாயிகள் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள்.—விவசாயிகளுக்கு, குறிப்பாக சிறிய குறைந்த நிலமுள்ள விவசாயிகளுக்கு ஒரே அமைப்பின்கீழ், ஒருங்கிணைந்த கடன் • வசதி-விவசாயப் பணிகளுக்கு வகை செய்வதற்காக, சிறு விவசாயிகள் மேம்பாட்டு நிறுவனம், மாநில அரசு ஆகியவற்றின் உதவியோடு, 1976-78இல் விவசாயிகள் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் 26 அமைக்கப் பட்டுள்ளன.

நுகர்வுக் கடன்.

24. கடன் நிவாரணச் சட்டம் இயற்றப்பட்டதாலும், அதன் விளைவாக நிறுவன அமைப்பில்லாத தனியார்களிடமிருந்து கடன் கிடைப்பது குறைந்ததாலும் ஏற்பட்டுள்ள நிதி வசதிக் குறைவை முடிந்த அளவு தீர்ப்பதில் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் முக்கிய பங்கு வகித்து வருகின்றன. 839 விவசாயக் கடன் சங்கங்களும், மாநில-மத்திய கூட்டுறவு வங்கிகளின் 337 கிளைகளும், 128 கூட்டுறவு நகர வங்கிகளும் தற்போது நகைக்கடன் வழங்குவதில் ஈடுபட்டுள்ளன. இவ்வமைப்புகள், 1975-76-ல் 22 கோடி ரூபாயும் 1976-77இல் 40.10 கோடி ரூபாயும் நகைக் கடனாக வழங்கியிருக்க, 1977-78இல் 50.77 கோடி ரூபாய் வழங்கியுள்ளன. நடப்பு ஆண்டு முழுவதற்கும் உள்ள இலக்கு 60.00 கோடி ரூபாயாக இருக்க, டிசம்பர் 1978 முடிய 60.10 கோடி ரூபாய் அளவிற்கு நகைக்கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. 1979-80ஆம் ஆண்டில் வழங்கப்படவிருக்கும் நகைக் கடனுக்கான இலக்கு 70 கோடி ரூபாய் ஆகும். இத்துறையில் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களை ஊக்குவிக்கும் பொருட்டு, இரும்புப் பெட்டகங்களை வாங்குவதற்காக கடன் வழங்குவதன் மூலம் இவற்றிற்கு, மாநில அரசு உதவி செய்து வருகிறது. பெட்டக அறைகளைக் கட்டுவதற்காக மத்திய வங்கிகளின் கிளைகளுக்கும் உதவித் தொகையாகவும் கடனாகவும் அரசு நிதி உதவி செய்து வருகிறது. இவ்விரு காரியங்களுக்காக 1978-79ஆம் ஆண்டில் 17.50 இலட்ச ரூபாய் நிர்ணயிக்கப் பட்டுள்ளது. 1979-80ஆம் ஆண்டில் 17.38 இலட்ச ரூபாய் உதவியளிக்கப்படவிருக்கிறது.

நகர்ப்புறக் கடன்.

25. நகர்ப்புற மக்களுக்கும், ஓரளவு நகர்ப்புறத்தைச் சேர்ந்த மக்களுக்கும் கடன் வசதிகளையும் வங்கி வசதிகளையும் 131 கூட்டுறவு நகர வங்கிகள் அளித்து வருகின்றன. அவை, 1977-78 ஆம் ஆண்டில் 48.38 கோடி ரூபாய் குறுகிய கால மற்றும் மத்திய காலக் கடன்களை வழங்கியுள்ளன. 1976-77 ஆம் ஆண்டில் வழங்கிய கடன்களின் அளவு 37.38 கோடி ரூபாயாகும். குடிசைத் தொழில் மற்றும் சிறு தொழில்களுக்கு நிதி உதவி செய்யும் திட்டத்தின்கீழ் இவ்வங்கிகள் 1977-78 ஆம் ஆண்டில் 84.54 இலட்ச ரூபாய் கடனாக வழங்கியுள்ளன.

[1979 மார்ச் 24

1976-77ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட கடன்களின் அளவு 46.40 இலட்ச ரூபாய் ஆகும். நடப்பு ஆண்டில், 1978 டிசம்பர் வரையில் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன் தொகை 74.93 இலட்ச ரூபாயாகும்.

கூட்டுறவு விற்பனை, பதப்படுத்துதல் மற்றும் கிடங்கு வசதி.

26. அமைப்பு.—மாநிலத்தில் 116 தொடக்க நிலை கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் உள்ளன. இவை, மாநில அளவில், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தோடு இணைந்துள்ளன. திருவாரூரில் உள்ள தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் மாவட்ட அளவில் உள்ள ஒரே கூட்டுறவு விற்பனைச் சங்கமாகும். விற்பனைச் சங்கங்கள், தங்களது உறுப்பினர்களின் விவசாய விளைபொருட்களை விற்பனை செய்வதில் உதவி செய்து, அதன் வாயிலாக நியாயமான விலையைப் பெறுவதற்கு அவர்களுக்குத் துணை புரிகின்றன.

27. விவசாய விளைபொருட்களை விற்பனை செய்தல்.—1976-77 ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்ட விவசாய விளைபொருட்களின் மதிப்பு 35.72 கோடி ரூபாயாயிருக்க, 1977-78ஆம் ஆண்டில் 54.84 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 1978 டிசம்பர் வரையில் விற்பனை செய்யப்பட்ட விவசாய விளைபொருட்களின் மதிப்ப 43 கோடி ரூடாயாகும். 1979-80இல் 50 கோடி ரூபாய் மதிப்புள்ள விளை பொருட்களை விற்பனை செய்ய திட்டமிடப் பட்டுள்ளது.

28. இரசாயன உரங்களின் விநியோகம்.—இரசாயன உரங்களை விநியோகிப்பது கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் முக்கிய நடவடிக்கையாக உள்ளது. குறிப்பாக, 1973 ஆம் ஆண்டில் இரசாயன உர மையக் களஞ்சியத்திலிருந்து உரங்களை விநியோகிப்பதை இத்துறையிடம் அரசு முழுதாக ஒப்படைத்ததிலிருந்து, இது இத்துறையின் பெரும்பணியாக அமைந்துள்ளது. தஞ்சாவூர், நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக ஏனைய மாவட்டங்களில் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையமும், தஞ்சாவூர் மாவட்டத்தில் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையமும், நீலகிரி மாவட்டத்தில் நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கமும் இரசாயன உர மையக் களஞ்சியத்திலிருந்து கிடைக்கும் இரசாயன உரங்களையும் வெளி அங்காடியில் கிடைக்கும் இரசாயன உரங்களையும் (Pool and Non-pool Fertilizers) வாங்கி, சில்லரை விற்பனை நிலையங்களாகச் செயல்படும் 4,377 விவசாயக் கடன் சங்கங்கள் மூலமும் 106 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலமும் வழங்கி வருகின்றன. விவசாயக் கடன் சங்கங்கள்

1979 மார்ச் 24]

உறுப்பினர்களுக்குக் கொடுக்கும் பயிர்க் கடன்களில் ஒரு பகுதியாக இரசாயன உரங்களை வழங்குகின்றன. ரொக்க விற்பனை உறுப்பினர்களுக்கும், உறுப்பினர் அல்லாதாருக்கும், செய்யப்படுகிறது. கூட்டுறவுச் சங்கங்களால் வழங்கப்பட்ட இரசாயன உரங்கள் குறித்த விவரம் பின்வருமாறு :—

ஆண்டு.	வழங்கப்பட்ட இரசாயன உரங்கள்.		
	அளவு (இலட்சம் டன்களில்).	மதிப்பு (கோடி ரூபாயில்).	மாநிலத்தில் பயன்படுத்தப்பட்ட மொத்த இரசாயன உரத்தில் சதவீதம்.
(1)	(2)	(3)	(4)
1973-74 ..	3.23	34.18	48
1974-75 ..	2.83	54.08	58
1975-76 ..	3.05	55.07	54
1976-77 ..	3.03	49.20	51
1977-78 ..	3.48	56.34	52

நடப்பாண்டில், 65 கோடி ரூபாய் மதிப்புள்ள சுமார் நான்கு இலட்சம் டன் உரங்களை வழங்குவதற்குக் கூட்டுறவுச் சங்கங்கள் திட்டமிட்டுள்ளன. 1979-80ஆம் ஆண்டில், 72 கோடி ரூபாய் மதிப்புள்ள 4.50 இலட்சம் டன் உரங்களை வழங்க கூட்டுறவுச் சங்கங்கள் திட்டமிட்டுள்ளன. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் ஆகியவை உரங்களைக் கொள்முதல் செய்து வினியோகம் செய்வதற்காக அவற்றுக்குத் தேவையான தொடக்க நிலைத்தெகை (Margin Money) அளிக்கும் பொருட்டு இந்த இரண்டு நிறுவனங்களுக்கும் அரசு, பங்கு மூலதனமாக 2.11 கோடி ரூபாய் நிதியுதவி அளித்துள்ளது.

29. <u>அரசுப் பங்கு மூலதனம்.</u>—கூட்டுறவு விற்பனைச் சங்கங்களை மேம்படுத்துவதற்காக 114 சங்கங்களின் பங்கு மூலதனத்தில் அரசு பங்கு கொண்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1977-78 வரையில், 117.35 இலட்ச ரூபாயை அரசு முதலீடு செய்துள்ளது. நடப்பாண்டில் 2.25 இலட்ச ரூபாய் முதலீடு செய்யப்படும். 1979-80ஆம் ஆண்டில் 0.26 இலட்ச ரூபாய் முதலீடு செய்ய வரவு-செலவுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

[1979 மார்ச் 24

30. விலை ஏற்ற இறக்கச் சிறப்பு நிதி.—உறுப்பினர்களுடைய விவசாய விளைபொருட்களை நேரடியாக பெருமளவில் கொள்முதல் செய்வதற்காக கூட்டுறவு விற்பனைச் சங்கங்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், சங்கங்களின் விலை ஏற்ற இறக்க சிறப்பு நிதிக்கு அரசு உதவியளிக்கிறது. 1977-78 வரையில் 31 விற்பனைச் சங்கங்களின் விலை ஏற்ற இறக்கச் சிறப்பு நிதிக்கு 10.32 இலட்ச ரூபாய் அரசு வழங்கியுள்ளது. நடப்பாண்டில் 2 இலட்ச ரூபாய் வழங்கப்படும். 1979-80ஆம் ஆண்டில் 2 இலட்ச ரூபாய் வழங்க வரவு-செலவுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

கூட்டுறவுத் துறையில் பதப்படுத்துதல்.

31. பதப்படுத்தும் பிரிவுகள்.—பங்கு மூலதனமாகவும் கடனாகவும் அரசு அளிக்கும் உதவியுடன் தோல் நீக்கும் ஆலைகள் நெல் அரைவை ஆலைகள், எண்ணெய் ஆலைகள், மரவள்ளிக் கிழங்கு, அன்னாசிப்பழம் ஆகியவற்றைப் பக்குவப்படுத்தும் பிரிவுகள் போன்ற பதப்படுத்தும் பிரிவுகளைக் கூட்டுறவுச் சங்கங்கள் அவற்றின் இணை அமைப்புகளாக நிறுவியுள்ளன. கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்குச் சொந்தமான வெவ்வேறு வகைப்பட்ட 85 பதப்படுத்தும் பிரிவுகள் உள்ளன.

32. உரமணித் தொழிற்சாலை.—மன்னார்குடிக்கு அருகிலுள்ள பாமணியில் 27.22 இலட்ச ரூபாய் செலவில் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் நிறுவியுள்ள உரமணித் தொழிற்சாலை மனநிறைவளிக்கும் வகையில் செயல்பட்டு வருகிறது. இது பல்வேறு தரங்களில் கலவை உரமணிகளைத் தயாரிக்கிறது. இவ்வாலை 1977-78 கூட்டுறவு ஆண்டில் 34,939 டன்கள் உரமணிகளையும், நடப்புக் கூட்டுறவு ஆண்டில் 1978 டிசம்பர் வரையில் 15,087 டன்கள் உரமணிகளையும் தயாரித்துள்ளது.

33. பூச்சிக்கொல்லி மருந்துகள் உற்பத்தி.—துடியலூர் கூட்டுறவு விவசாய பணிச் சங்கம் 1977-78 கூட்டுறவு ஆண்டில் 103.62 இலட்ச ரூபாய் மதிப்புள்ள பூச்சிக்கொல்லி மருந்துகளையும் நடப்புக் கூட்டுறவு ஆண்டில் 1978 டிசம்பர் வரையில் 48.54 இலட்ச ரூபாய் மதிப்புள்ள பூச்சிக்கொல்லி மருந்துகளையும் தயாரித்துள்ளது.

34. சூரிய காந்தி விதை எண்ணெய் ஆலை.—தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள விருத்தாசலத்தில், 61.06 இலட்ச ரூபாய் செலவில் சூரியகாந்தி விதை எண்ணெய் ஆலை ஒன்றை தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் நிறுவியுள்ளது. போதுமான சூரியகாந்தி விதை கிடைக்காத காரணத்தால், கடலை எண்ணெய் உற்பத்தி செய்வதற்கான உரிமத்தை இவ்விணையம் பெற்றுள்ளது. 1977-78 கூட்டுறவு ஆண்டில் 667 டன் கடலை எண்ணெயை இவ்விணையம் உற்பத்தி செய்துள்ளது.

1979 மார்ச் 24]

35. கடலை எண்ணெய் ஆலை.—வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள திருவண்ணாமலையில் 62 இலட்ச ரூபாய் செலவில் கடலை எண்ணெய் ஆலை ஒன்றைத் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் நிறுவி வருகிறது. அங்கு இயந்திரங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. நடப்பாண்டில் அவ்வாலை செயல்படத் தொடங்கும்.

36. அரிசி ஆலைகளை நவீனப்படுத்தல்.—1976ஆம் ஆண்டின் அரிசி அரைவைத் தொழில் (முறைப்படுத்தலும்—உரிமம் வழங்கலும்) திருத்த விதிகளின்படி பழைய அரிசி ஆலைகளை நவீனப்படுத்தவேண்டும். ஆலைகளை நவீனப்படுத்துவதற்காக பங்கு மூலதனமாகவும் கடனாகவும் நிதி உதவி அளிக்கப்படுகிறது. 1977-78 ஆம் ஆண்டில் 5 ஆலைகளை நவீனப்படுத்துவதற்காக 101 இலட்ச ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் ஒரு ஆலையை நவீனப்படுத்த நிதி உதவி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 1979-80இல், 10 ஆலைகளை நவீனப்படுத்துவதற்காகவும், 2 ஆலைகளுக்கு அனுமதிக்கப்பட்ட தொகையில் கொடுக்கப்பட வேண்டிய தொகைக்காகவும் 2.67 இலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

37. விதை மேம்பாட்டுத் திட்டம்.—கோயம்புத்தூர் மாவட்டத்தில், துடியலூர் கூட்டுறவு விவசாய பணிச் சங்கமும், 9 கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும் சேர்ந்து 170.50 இலட்ச ரூபாய் செலவில் நெல், பருத்தி, வேர்க்கடலை, தானியங்கள் பயிறுவகைகளின் தரமான விதைகளைப் பெருக்குவதற்காக விதை மேம்பாட்டுத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்தி வருகின்றன. 11 இடங்களில் 23,000 ஏக்கர் நிலத்தில் 25,000 டன் விதைகள் இத்திட்டத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும். துடியலூர் கூட்டுறவு விவசாயப் பணிச் சங்கமும், 5 விற்பனைச் சங்கங்களும் சேர்ந்து 93.50 இலட்ச ரூபாய் செலவில் இத்திட்டத்தின் முதற் கட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றன. 1976-77-லும் 1977-78-லும் அரசுப்பங்கு மூலதனமாக 9.35 இலட்ச ரூபாயும் கடனாக 32.73 இலட்ச ரூபாயும் வழங்கப்பட்டன. நடப்பு ஆண்டில் கடன் தொகையில் எஞ்சியுள்ள 32.73 இலட்ச ரூபாயும் சங்கங்களுக்குக் கொடுக்கப்படும். 6 பிரிவுகளின்கீழும் கட்டிடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. திட்டத்தின் முதற்கட்டம் 1979 ஜூனில் முடிவடைந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1979-80இல் கடனாகக் கொடுக்கப்பட 53.55 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கிடங்கு வசதி.

38. கிடங்குகளைக் கட்டுதல்.—விவசாய உற்பத்தி வளர்ந்து வருகின்ற சூழ்நிலையில், கிடங்கு வசதிகள் மிகவும் இன்றியமையாதனவாகும். விவசாயக் கடன் சங்கங்களுக்கும், விற்பனைச் சங்கங்களுக்கும், கிடங்குகள் கட்டுவதற்காக அரசு உதவித்

தொகையாகவும் கடனாகவும் நிதி உதவி அளிக்கிறது. தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம், செலவில் 60 சதவீதத்தை, மாநில அரசுக்குக் கடனாக வழங்குகிறது. மீதி உள்ள 40 சதவீதம் மாநில அரசால் உதவித் தொகையாக வழங்கப் படுகிறது. 1974-75 முதல் 1977-78 வரை ஒவ்வொன்றும் 150/120 டன்கள் கொள்திறனுடைய 750 கிராமக் கிடங்கு களும் ஒவ்வொன்றும் 1,000 டன்கள் கொள்திறனுடைய 23 விற்பனைக் கிடங்குகளும் கட்டுவதற்கு நிதி உதவி அளிக்கப்பட் டது. மேலும், 1977-78 ஆம் ஆண்டில், வறட்சிப் பகுதித் திட்டத்தின் கீழ், 30 கிராமக் கிடங்குகளுக்கு நிதி உதவியளிக்கப் பட்டது. நடப்பு ஆண்டில், 200 கிராமக் கிடங்குகளும், 10 விற் பனைக் கிடங்குகளும், வறட்சிப்பகுதி திட்டத்தின்கீழ் 32 கிராம கிடங்குகளும் கட்டுவதற்கு நிதி உதவி அளிக்கப்படும்.

39. இருநூறு கிராமக் கிடங்குகளையும் 5 விற்பனைக் கிடங்கு களையும் கட்டுவதற்காக 1979-80-ல் நிதி உதவி அளிக்கப்பட விருக்கிறது. இதனால், 1979-80 ஆம் ஆண்டு இறுதியில், நிதி யுதவி அளிக்கப்பட்ட கிராமக் கிடங்குகள், விற்பனைக் கிடங்கு கள் ஆகியவற்றின் மொத்த எண்ணிக்கை முறையே 3,496-ம் 253-ம் ஆக அதிகரித்து, கட்டி முடிக்கப்பட்ட கிடங்குகளின் மொத்தச் சேமிப்புக் கொள்ளளவு 5 இலட்சம் டன்னாக இருக்கும். 1979-80-ல் அரசு 95 இலட்சம் ரூபாய் நிதி உதவி அளிக்கும்; இதில், எஞ்சிய பணிகளை நிறைவேற்றுவதற்காகும் 50 இலட்ச ரூபாயும் அடங்கும்.

நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்.

40. அமைப்பு.—நுகர்வோர் கூட்டுறவு அமைப்பானது மூன்று வித நிலைகளைக் கொண்டதாகும். அதாவது, மாநில அளவில் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையமும் மாவட்டம் அல்லது அதன் ஒரு பகுதி அளவில் 12 மாவட்டக் கூட்டுறவு வினியோக விற்பனைச் சங்கங்கள் உட்பட 29 கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளும் கிராமம் அல்லது நகர அளவில் 1,764 தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகளும் உள்ளன. இந்தத் தொடக்கப் பண்டக சாலைகளில், மாணவர்களுக்குப் பாட புத்தகங்கள், குறிப்பேடுகள், மற்ற எழுது பொருட்கள் வழங்கும் 810 கல்லூரி/உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் கூட்டுறவு பண்டக சாலைகளும், மகளிருக்கு மட்டுமேயான 20 பண்டக சாலைகளும், தொழிற்சாலை, மலைத் தோட்டத் தொழிலாளர் களுக்கென்று 271 பண்டக சாலைகளும் உள்ளன. தொடக்கப் பண்டக சாலைகள் இல்லாத அல்லது தொடக்கப் பண்டக சாலைகள் செவ்வையாகச் செயல்படாத இடங்களில் மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் சில்லறை விற்பனைக்காக 628 கிளைகளைத் தொடங்கியுள்ளன. தொடக்கப் பண்டக சாலைகளும்

1979 மார்ச் 24]

நுகர்வோரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் 379 கிளைகளைத் தொடங்கியுள்ளன. நுகர்வோர் சங்கங்களின் வளர்ச்சித் திட்டத்தின்கீழ், இம்மாநிலத்தில் 20 சிறப்பங்காடிகள் செயல்பட்டு வருகின்றன. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் வணிகத்தைப் பெருக்க சிறப்புச் சிற்றங்காடிகள் எனப்படும் 90 நவீன சிற்றங்காடிகளை கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டக சாலைகள், நன்கு செயல்படும் தொடக்கப் பண்டகசாலைகள் ஆகியவை திறந்துள்ளன. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் 1977-78ல் செய்த சில்லறை விற்பனையின் மதிப்பு 139.47 கோடி ரூபாயாகும்.

41. மத்திய அரசிடமிருந்து நிதி உதவி.—வேலை வாய்ப்பு வசதிகளை அளிக்கக்கூடிய மற்றும் வளர்ச்சி வாய்ப்புள்ள நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் தீவிர வளர்ச்சிக்காக மத்திய அரசு பொறுப்பேற்கும் நுகர்வோர் திட்டத்தின்கீழ் மத்திய அரசு 1971-72 முதல் நிதி உதவி அளித்து வருகிறது. திருப்பூரில் பனியன்கள் தயாரிக்கும் பிரிவு ஒன்றை அமைக்கும் பொருட்டு கோயம்புத்தூர் மாவட்ட கூட்டுறவு-விநியோக விற்பனைச் சங்கத்திற்கும், மதுரையில் கிளை வினியோக நிலையம் ஒன்று அமைப்பதற்காகத் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்திற்கும் 1971-72 முதல் 1977-78 ஆம் ஆண்டு காலத்தில், இத்திட்டத்தின்கீழ் நிதி உதவி அளிக்கப்பட்டது. கீழ்க்காணும் திட்டங்களுக்கும் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது:—

(i) ஆறு சிறப்பங்காடிகள் அமைத்தல்.

(ii) சிறப்பங்காடி ஒன்றின் விரிவாக்கம்.

(iii) சிறப்பங்காடிகளின் 7 கிளைகளை நிறுவுதல்.

(iv) பெரிய அளவிலான 32 சில்லறை விற்பனை அங்காடிகளை அமைத்தல்.

(v) பெரிய அளவிலான சில்லறை விற்பனை அங்காடி ஒன்றை விரிவுபடுத்துதல்.

(vi) தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தால் விருத்தாசலத்தில் பீங்கான் பாண்ட பிரிவு ஒன்றை அமைத்தல்.

(vii) கோயம்புத்தூர் மாவட்ட கூட்டுறவு வினியோக விற்பனைச் சங்கம், கோயம்புத்தூரில் மண்டல நுகர்பொருள் வினியோக நிலையம் ஒன்று அமைத்தல்.

(viii) பல்கலைக்கழக, கல்லூரி மாணவர்களுக்கென்று 36 பொதுச் சமையற் கூடங்கள் அமைத்தல்.

(ix) நலிந்த பிரிவினர், தொழிற்சாலைத் தொழிலாளர் முதலியோருக்கென்று 6 சிறு கிளைகள் அமைத்தல்.

(x) மாநகர்களிலும், நகர்களிலும் உள்ள குடிசைப் பகுதியில் வாழ்கின்ற நலிந்த பிரிவினர்களில் மிகவும் நலிந்தவருக்கென்று 34 மிகச் சிறு கிளைகளை ஏற்படுத்துதல்.

(xi) தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் சென்னையில் பாலிதின் பைகள் செய்யும் பிரிவு ஒன்று அமைத்தல்.

சென்னை, திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவுச் சங்கம் திறக்க இருக்கும் பெரிய அளவிலான சில்லறை விற்பனை அங்காடிகள் 20, பொது சமையற்கூடம் 9, பாலிதின் பைகள் செய்யும் பிரிவு ஒன்று ஆகியவைகள் தவிர, மேற்சொன்ன அனைத்து பிரிவுகளும் திறக்கப்பட்டுள்ளன. இப்பிரிவுகள் விரைவில் தொடங்கப்படும். மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின்கீழ் இந்த நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் 1977-78ஆம் ஆண்டில் 47.31 இலட்ச ரூபாய் அளவிற்கு நிதி உதவி பெற்றன.

42. <u>பல்பொருள் அங்காடிகள் (சிறப்பங்காடிகள்) மற்றும் பெரிய அளவிலான சில்லறை விற்பனைக் கடைகள் (சிறப்புச் சிற்றங்காடிகள்).</u>—பல்பொருள் அங்காடிகள், நவீன விற்பனை முறைகளையும், சிறப்பான வணிக நடை முறைகளையும் செயல்படுத்தி ஒரே இடத்தில் பலதரப்பட்ட பொருட்களும், வசதிகளும் கிடைக்கச் செய்வதன் மூலமாக நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்திற்கு ஒரு புதிய வடிவமைப்பை அளித்தன. மத்திய அரசிடமிருந்து நிதி உதவி பெறப்பட்டவுடன் 1978-79 ஆம் ஆண்டில் திருவண்ணாமலையிலுள்ள சிறப்புச் சிற்றங்காடியை சிறப்பங்காடியாக மாற்றவும், பொன்னமராவதி, ஜெயங்கொண்டான் ஆகிய இடங்களில், பெரிய அளவிலான சில்லறை விற்பனை அங்காடிகளை புதிதாகத் திறக்கவும், குடியாத்தம், அறந்தாங்கி ஆகிய இடங்களில் தற்போதுள்ள கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்களின் கிளைகளை பெரிய அளவிலான சில்லறை விற்பனை அங்காடிகளாக் மாற்றவும் திட்டமிடப்பட்டுள்ளது.

43. <u>மண்டல நுகர்பொருள் விநியோக நிலையங்கள்.</u>—நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் கொள்முதல் திறனை ஒருமுகப்படுத்தவும், வணிக நிலையைத் திறம்படுத்தவும், கூட்டுறவுச் சங்கங்களின் சில்லறை விற்பனை அங்காடிகளுக்குத் தயாரிப்பாளர்கள் அல்லது உற்பத்தியாளர்களிடமிருந்து சுமுகமாகவும், தொடர்ச்சியாகவும் பொருட்கள் கிடைக்கப் பெறுவதை உறுதி செய்யவும் இரண்டு மண்டல நுகர் பொருள் வினியோக நிலையங்கள் அமைக்க மத்திய அரசு அனுமதி அளித்தது. கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டங்களிலுள்ள நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின்

1979 மார்ச் 24]

தேவைகளை நிறைவு செய்ய மத்திய அரசின் 22.32 இலட்ச ரூபாய் நிதி உதவியுடன் கோயம்புத்தூர் மாவட்ட கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கம், அண்மையில், கோயம்புத்தூரில் ஒரு மண்டல நுகர்பொருள் விநியோக நிலைய்த்தை ஏற்படுத்தியுள்ளது. தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் 72.50 இலட்ச ரூபாய் செலவில் சென்னையில் மற்றொரு மண்டல நுகர் பொருள் விநியோக நிலையத்தை ஏற்படுத்துவதற்கான திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. சென்னை. செங்கல்பட்டு, வட ஆற்காடு மாவட்டங்களில் உள்ள நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் பயன் பெறுவதற்காக இந்நிலையத்தை அமைப்பதற்கு நிதி உதவியின் முதல் தவணைத் தொகையாக 1978-79ஆம் ஆண்டில் 25.00 இலட்ச ரூபாய் மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. இந்த நிலையம் 1-1-1980-ல் நுகர் பொருள் விநியோகத்தைத் தொடங்கும் என எதிர் பார்க்கப்படுகிறது.

44. <u>நலிந்த பிரிவினர்களுக்குக் கூட்டுறவுத் துறையின் உதவி</u>—சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்கள் பின்தங்கிய பகுதிகளிலுள்ளோர் தொழிற்சாலைத் தொழிலாளர்கள் முதலியவர்களின் தேவைகளை நிறைவு செய்ய சிறு கிளைகளை அமைக்கும் கூட்டுறவு

மொத்த விற்பனைப் பண்டக சாலைகளுக்கும், வலுவான தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கும் நிதி உதவி அளிக்கும் திட்டம் ஒன்றை மத்திய அரசு கொண்டுவந்தது. மாநகரங்களிலும், நகரங்களிலும் குடிசைப் பகுதிகளிலுள்ள நலிந்த பிரிவினரில் மிகவும் நலிந்த பிரிவினருக்குப் பணிபுரிய மிகச் சிறு கிளைகளைத் (இம் மாநிலத்தில் மக்கள் அங்காடிகள் என்றழைக்கப்படும் ஜனதா அங்காடிகள்) தொடங்கும் புதிய திட்டம் ஒன்றும் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆறு சிறு கிளைகளையும், 34 மிகச் சிறு கிளைகளையும் தொடங்குவதற்காக நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 6.26 இலட்ச ரூபாய் நிதி உதவி அளிக்க 1977-78-ஆம் ஆண்டில் மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. மேற்சொன்ன அனைத்துப் பிரிவுகளும் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. 35 சிறு கிளைகளையும், 10 மிகச் சிறு கிளைகளையும் தொடங்குவதற்காக, 1978-79ஆம் ஆண்டில் இதுவரை நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மத்திய அரசு 10.15 இலட்ச ரூபாய் நிதி உதவி வழங்கியுள்ளது. இவற்றுள் 34 சிறு கிளைகளும், 10 மிகச் சிறு கிளைகளும் தொடங்கப்பட்டுள்ளன. 1978-79-ஆம் ஆண்டில் 22 சிறு கிளைகளையும், 48 மிகச் சிறு கிளைகளையும் மத்திய அரசின் நிதி உதவி கிடைத்தவுடன் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்தகைய கிளைகள் பலவற்றைத் திறப்பதன் மூலமாக நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் சமுதாயத்திலுள்ள நலிந்த பிரிவினருக்கு நற்பணியாற்ற இயலும் பொருட்டு, மத்திய அரசிடமிருந்து கிடைக்கும் உயர் அளவு நிதி உதவியைப் பயன்படுத்த கருதப்பட்டுள்ளது.

[1979 மார்ச் 24

45. மாநில அளவில் நுகர்வோர் கூட்டுறவு இணையத்தை வலுப்படுத்துதல்.—மத்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கும் நிதி உதவி கிடைத்தவுடன் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தின் தலைமை அலுவலகத்திலும் மதுரையில் உள்ள கிளை மற்றும் விநியோக நிலையத்திலும் வணிகத்தை விரிவுபடுத்தவும், திருச்சியில் ஒரு புதிய கிளை மற்றும் விநியோக நிலையத்தை அமைக்கவும் கருதப்பட்டுள்ளது.

46. நலிந்த நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் புத்துயிர் அளித்தல்.—நலிந்த நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் புத்துயிரளிப்பதற்காக புதிய திட்டம் ஒன்றை மத்திய அரசு கொண்டு வந்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் தற்போதுள்ள நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களை வலுப்படுத்துவதற்கும் அவற்றிற்குப் புத்துயிரளிப்பதற்கும், குறிப்பாக இழப்பு ஏற்பட்டு ஆனால் மீட்பு அடைந்து மேம்பாடு அடைவதற்கு ஆதாரமான அடிப்படை வளத்தையும் வாய்ப்பையும் பெற்றுள்ள சங்கங்களுக்கு நிதி உதவி கிடைக்கிறது. சென்னை, திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவுச் சங்கத்திற்கு அதற்குப் புத்துயிரளிக்கும் காரியத்திற்காக மத்திய அரசு, 1978-79இல் 30 இலட்ச ரூபாய் உதவியளித்துள்ளது. இத்துடன், மாநில அரசின் நிதி உதவியாக 10 இலட்ச ரூபாயும் அளிக்கப்படும். விண்ணப்பிக்கப்பட்ட நிதியுதவித் தொகையை மத்திய அரசு அளித்தவுடன் நீலகிரி கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை, மதுரை மாவட்ட பாண்டியன் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை ஆகியவற்றிற்கும் புத்துயிர் அளிப்பதென்று கருதப்பட்டுள்ளது.

47. மாநில அரசின் நிதி உதவி.—நிர்வாகப் பணியாளர் செலவு, மேசை நாற்காலிகள், போன்றவற்றிற்காக உதவித் தொகையும் நடைமுதல் மூலதனத்தைப் பெருக்குவதற்கும் டிரக்கு வண்டிகள் வாங்குவதற்காகவும், கிடங்குகள் கட்டுவதற்காகவும் பங்கு மூலதனம் மற்றும் கடன் மூலமும் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாநில அரசு நிதியுதவி அளித்து வருகிறது கடந்த மூன்று ஆண்டுகளில் பல்வேறு மாநிலத் திட்டப் பணிகளின் கீழ் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் மேம்பாட்டிற்காக வழங்கப்பட்ட மொத்த நிதியுதவி வருமாறு :—

1975-76		9.52 இலட்ச ரூபாய்.
1976-77		12.67 இலட்ச ரூபாய்.
1977-78		30.62 இலட்ச ரூபாய்.

48. நுகர் பொருள் தொழிற்சாலைகள்.—நுகர்பொருள் தொழிற்சாலைகளை நிறுவவுதற்காக நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களுக்கு மாநிலத் திட்டப் பணிகளின் கீழ், கடன், பங்கு மூலதனம், உதவித் தொகை ஆகியவற்றின் மூலம் நிதியுதவி

1979 மார்ச் 24]

வழங்கப்பட்டு வருகிறது. இது வரையில் 79 நுகர் பொருள் தொழிற்பிரிவுகள் நிறுவப்பட்டுள்ளன. 1976-78-ல் ஒண்டிப் புதூரில் 76.45 இலட்ச ரூபாய் செலவில் கோயம்புத்தூர் மாவட்ட கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கம் நிறுவிய சூரியகாந்தி மற்றும் பருத்தி விதை எண்ணெய் தொழிற்சாலை—சுத்திகரிப்பு ஆலை இதில் ஒன்றாகும்.

49. சிறப்பங்காடிகளும், சிறப்புச் சிற்றங்காடிகளும்.—இம் மாநிலத்தில் ஏழு கிளை சிறப்பங்காடிகளுடன் 20 சிறப்பங்காடி களும் 90 சிறப்புச் சிற்றங்காடிகளும் ஏற்கெனவே உள்ளன. 1978-79-ல் 10 சிறப்புச் சிற்றங்காடிகள் தொடங்க 6 இலட்ச ரூபாய் நிதி உதவி வழங்க இருக்கிறது. 1979-80-ல் இன்னும் 10 சிறப்புச் சிற்றங்காடிகளை ஏற்படுத்துவதற்காக 6 இலட்ச ரூபாய் வழங்கப்படும்.

50. இடவசதியை விரிவுபடுத்தல்.—கிராமப் பகுதிகளில் நுகர் பொருட்களை இருப்பு வைத்துக் கொள்வதற்கும், பகிர்ந் தளிப்பதற்கும் அங்காடிகள் கட்டுவதற்காகக் கிராமப்புற நுகர் வோர் திட்டத்தைச் செயல்படுத்தி வரும் 50 கிராமக் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்களுக்கு, ஒவ்வொன்றுக்கும் 10,000 ரூபாய் வீதம் 5 இலட்ச ரூபாய் 1977-78-ல் அரசு வழங்கியது. நடப் பாண்டில் அத்தகைய 20 சங்கங்களுக்கு ஒவ்வொன்றுக்கும் 10,000 ரூபாய் வீதம் நிதியுதவி அளிக்கப்பட இருக்கிறது.

51. தரச் சோதனை ஆய்வுக் கூடம் அமைத்தல்.—மாநகரிலும் அதற்கருகாமையிலும் உள்ள நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் பயன்பெறும் வகையில் விற்பனை செய்யப்படுகிற உணவுப் பொருட்கள் ஏனைய நுகர்பொருட்களின் தரம் குறித்து முன் சோதனை செய்வதற்காக சென்னையில் தரச் சோதனை ஆய்வுக் கூடம் ஒன்றை அமைப்பதற்கு, தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்திற்கு 0.75 இலட்ச ரூபாய் உதவித் தொகையாக நடப்பாண்டில் அரசு வழங்கியுள்ளது. அதன் மூலம் நுகர் வோர்களுக்குத் தரமான பொருட்களை வழங்குவதற்கு இயலும் மற்றொரு தரச் சோதனை ஆய்வுக் கூடத்தை அமைக்க 1979-80-ல் 0·75 இலட்ச ரூபாய் உதவித் தொகை யாக ஒரு மொத்த விற்பனைப் பண்டக சாலைக்கு வழங்கப் படும்.

52. நுகர்பொருள் தொழிற்சாலைகளுக்கு தேசீய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத் திட்டம்.—இத்திட்டத்தின் கீழ், மதுரையில் 0.28 இலட்ச ரூபாய் செலவில் காப்பிக் கொட்டை அரைவைப் பிரிவு ஒன்றுக்கு அனுமதி வழங்கப்பட்டு, 5-10-1978 முதல் செயல்படத் தொடங்கியுள்ளது.

[1979 மார்ச் 24

53. கிராமப்புற நுகர்வோர் திட்டம்.—விவசாயக் கடன் சங்கங்கள், நுகர் பொருட்களைப் பகிர்ந்தளிப்பதற்கான திட்டம் ஒன்றை தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் 1976-ஆம் ஆண்டில் கொண்டு வந்தது. தமிழ்நாடு தான் இத் திட்டத்தைச் செயல்படுத்த தொடங்கிய முதல் மாநிலமாகும். தேசீய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் இதுவரை இத் திட்டத்தின்கீழ், 1,440 இணைப்புச் சங்கங்கள் சம்பந்தப்பட்ட 66 திட்டங்களுக்காக 88.72 இலட்ச ரூபாய்க்கு அனுமதி வழங்கியுள்ளது. அதன் விவரம் வருமாறு:—

ஆண்டு.		திட்டங்களின் எண்ணிக்கை	இணைப்புச் சங்கங்களின் எண்ணிக்கை	அனுமதிக்கப்பட்ட தொகை.
(1)		(2)	(3)	(4)
				(ரூபாய் இலட்சத்தில்.)
1975-76	..	10	232	13.88
1976-77	..	15	325	21.45
1977-78	..	30	647	39.81
1978-79	..	11	236	13.58
மொத்தம்	..	66	1,440	88.72

1977-78ஆம் ஆண்டு வரை நிதியுதவி அனுமதிக்கப்பட்ட 55 திட்டங்களின் கீழ் 20 முதன்மைச் சங்கங்கள் 1 204 கிராமச் சங்கங்களுக்கு பொருட்களை வழங்கின; அந்தச் சங்கங்கள் 1977-78இல் 505.83 இலட்ச ரூபாய் அளவிற்கு விற்பனை செய்தன.

54. நடப்பு நிதி ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் இம் மாநிலம் முழுவதையும் இத்திட்டத்தின் கீழ் தனித்தியங்கக்கூடிய கிராமச் சங்கங்கள் அனைத்தையும் கொண்டு வரும் பொருட்டு, விரைவுத் திட்டம் ஒன்று வரையப்பட்டுள்ளது. இம்மாநிலத்திலுள்ள 4,740 கிராமக் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்களில் 1,440 சங்கங்கள் ஏற்கனவே இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. தனித்தியங்கக்கூடிய 2,998 கிராமச் சங்கங்கள் சம்பந்தப்படுகிற 131 திட்டங்கள் தயாரிக்கப்பட்டு 322.52 இலட்ச ரூபாய் நிதி உதவி அனுமதிக்காக தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1979 மார்ச் 24]

55. இத் திட்டத்தின் கீழ் ஏற்கனவே உதவி பெற்றுள்ள கிராமச் சங்கங்கள் அனைத்திற்கும், ஒவ்வொன்றிற்கும் 5,000 ரூபாய் வீதத்தில் தொடக்க நிலைத் தொகை (Margin Money) வடிவில் நிதி உதவி தர தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் முன் வந்துள்ளது. இத்திட்டத்தைச் செயல் படுத்தும் 1,430 விவசாயக் கடன் சங்கங்களுக்கு 71.50 இலட்ச ரூபாய் அனுமதி வழங்குவதற்காக தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திற்கு செயற் குறிப்புகள் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளன. இந்தத் தொகைக்கு விரைவில் அனுமதி வழங்கப்படுமென எதிர் பார்க்கப்படுகிறது.

56. ஒரு கிராமத்திற்கு ஒரு அங்காடி.—கிராமப் பகுதிகளில் அரிசி, கோதுமை, கோதுமைப் பொருட்கள், சர்க்கரை, மிளகாய் புளி, கொத்தமல்லி, கடலெண்ணெய் முதலிய இன்றியமையாப் பொருட்கள் நியாய விலையில் எளிதாகக் கிடைப்பதற்கு உறுதியளிக்கும் வகையில் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு நியாய விலை அங்காடி திறப்பதன் மூலம் மாநிலம் முழுவதிலும் மக்களுக்கு இன்றியமையாப் பொருட்களை விநியோகம் செய்ய மாநில அரசு தீர்மானித்துள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக பின்வரும் மாவட்டங்கள் கூட்டுறவுத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன:—

1. செங்கல்பட்டு	6. திருச்சிராப்பள்ளி
2. வட ஆற்காடு	7. புதுக்கோட்டை
3. சேலம்	8. மதுரை
4. கோயம்புத்தூர்	9. இராமநாதபுரம்
5. நீலகிரி	10. கன்னியாகுமரி.

எல்லா மாவட்டங்களிலும் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்கனவே நடத்தி வரும் 5,023 நியாய விலை அங்காடிகளை பல்பொருள் அங்காடிகளாக மாற்றியதுடன் மேற்கூறியவாறு ஒதுக்கப் பட்ட 10 மாவட்டங்களில் உள்ள கிராமங்களில் கூட்டுறவுத் துறையால் 6,025 அங்காடிகள் புதிதாகக் திறக்கப்பட்டுள்ளன. விரைவில் மேலும் 167 அங்காடிகள் திறக்கப்படுவதையும் சேர்த்து மாநிலத்தில் மொத்தமுள்ள 16,000 கிராமங்களில் கூட்டுறவுத் துறையில் 11,215 அங்காடிகள் இருக்கும். எஞ்சிய கிராமங்களில் உணவுப் பொருள் வழங்கும் கழகத்தினால் நடத்தப்படும் அங்காடிகள் இருக்கும்.

கிராமங்களில் புதிதாக ஒரு அங்காடி திறப்பதற்கு அரசு, மேசை, நாற்காலி போன்ற மரச் சாமான்களுக்கும் தளவாடங்களுக்கும் 1,250 ரூபாய் தொடரா இன நிதியுதவியும் பணியாளர் செலவிற்காக ஆண்டொன்றுக்கு 2,400 ரூபாய். தொடரின உதவியும் அளித்துள்ளது.

57. பிற திட்டங்கள்—(i) பொதுச் சமையற் கூடங்கள்.—1977-78 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. அனுமதிக்கப்பட்ட 36 கூடங்களில் 27 கூடங்கள் தொடங்கப்பட்டு விட்டன. எஞ்சியுள்ள கூடங்களையும் திறப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது. கல்லூரி விடுதிகளில் தங்காத சுமார் 4,650 மாணவர்கள் இத்திட்டத்தால் பயனடைகின்றனர்.

(ii) பாடப் புத்தகங்களை வழங்குதல்.—நாட்டுடமையாக்கப்பட்ட பாட நூல்களை வழங்கும் பணி 1976-77-ல் கூட்டுறவுச் சங்கங்களிடம் ஒப்படைக்கப்பட்டு அப்பணி தொடர்ந்து வருகின்றது. தமிழ்நாடு பாட நூல் நிறுவனத்திடமிருந்து கூட்டுறவுச் சங்கங்கள், நடப்பாண்டில், 4.10 கோடி ரூபாய் மதிப்புள்ள 243 இலட்சம் பாட நூல்களை வழங்குவதற்காகப் பெற்றன. இப்புத்தகங்கள், 35,530 பள்ளிகளில் படிக்கும் சுமார் 77 இலட்சம் மாணவர்களுக்கு விற்கப்பட்டன. மேலும் பின் தங்கிய வகுப்பினர், அரிசனங்கள், பழங்குடியினர் ஆகிய வகுப்புகளைச் சேர்ந்தவர்களும் மெட்ரிக் வகுப்பிற்கு முந்திய வகுப்பில் கற்பவர்களுமான மாணவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட படிப்புதவித் தொகையை பாட நூல்களாகக் கொடுக்க வேண்டுமே தவிர பணமாகக் கொடுக்கக் கூடாது என்று அரசு தீர்மானித்துள்ளது. இந்தப் பணியையும் கூட்டுறவுச் சங்கங்களே கவனித்து வருகின்றன.

(iii) கட்டுப்பாட்டு விலைத் துணி.—தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக மட்டுமே விற்கப்பட்டு வருகிற கட்டுப்பாட்டு விலைத் துணியை கிராமப்புற மக்கள் அதிகமாக விரும்பி வாங்குகின்றனர். கட்டுப்பாட்டு விலைத் துணியில் 75 சதவீதம், கிராமப்புறப் பகுதிகளில் உள்ள நலிந்த பிரிவினருக்காக ஒதுக்கப்படுகிறது. 1977-78-ஆம் கூட்டுறவு ஆண்டில், தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் 15,843 பேல் துணிகளை விநியோகத்திற்காக எடுத்துக்கொண்டது. கட்டுப்பாட்டு விலைத் துணிகள் 4,930 சில்லறை விற்பனைப் அங்காடிகள் மூலம் விற்கப்படுகின்றன. இவற்றில் கிராமப் பகுதிகளில் 4,139 அங்காடிகளும், நகர்ப்புறப் பகுதிகளில் 791 அங்காடிகளும் உள்ளன.

(iv) சலுகை விலையில் தாள்களையும், குறிப்பேடுகளையும் வழங்குதல்.—1978ஆம் ஆண்டில் சலுகை விலையில் 720 டன் தாள்கள் நுகர்வோர் இணையத்திற்கு ஒதுக்கப்பட்டன. அவ்விணையம் இந்த தாள்களைக் கொண்டு, பயிற்சிக் குறிப்பேடுகளைத் தயாரித்து, அரசு நிர்ணயித்துள்ள குறைந்த விலையில் மாணவர்களுக்கு வழங்கும். இந்த தாள்களைக் கொண்டு, 5.93 இலட்சம் குறிப்பேடுகள் கூட்டுறவு அச்சகங்களால் தயாரிக்கப்பட்டு, மாணவர்களுக்கு இலவசமாகக் கொடுப்பதற்காக அரிசன நலத் துறைக்கு வழங்கப்பட்டன.

1979 மார்ச் 24]

(v) சிமிட்டி வழங்குதல் — அரசு அண்மையில் மேற் கொண்ட கொள்கையின்படி அரசு நிர்ணயம் செய்த விலையில் பொதுமக்களுக்கு சிமிட்டி வழங்கும் பணியைக் கூட்டுறவுச் சங்கங்கள் 1-1-1979 முதற் கொண்டு மேற் கொண்டுள்ளன.

58. கிராமப்புற மின்சாரக் கூட்டுறவுச் சங்கங்கள் — புது டில்லி, கிராமப்புற மின் இணைப்புக் கழகத்திடமிருந்து நிதி யுதவி பெற்று, இம்மாநிலத்தில் கிராமப்புற மின்சாரக் கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டை அமைப்பதற்குத் திட்டமிடப்பட் டுள்ளது. இவை கிராமப் பகுதிகளில் மின்சாரத்தைப் பரவ லாக வழங்குவதற்கும், மின் இணைப்புக் கொடுப்பதை விரைவுப்படுத்தவும், ஒருங்கிணைந்த பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தவும் உதவும். தஞ்சாவூர் மாவட்டத்தில், கும்ப கோணத்தில் அத்தகைய சங்கம் ஒன்று தொடங்கப்படும்.

நலிந்த பிரிவினருக்கான கூட்டுறவுச் சங்கங்கள்.

59. சங்கங்களின் வகைகள். — தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர்கள், முடிதிருத்துவோர், உப்பளத் தொழிலாளர்கள் பழங்குடி மக்கள் போன்ற சமுதாயத்தில் நலிந்த பிரிவினரின் பயனுக்காகவே பல கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வரு கின்றன. தொழிலாளர்கள் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒப்பந்தப் பணிகளைப் பெறுவதன் மூலம் அவற்றின் உறுப் பினர்களுக்கு வேலை வாய்ப்பளித்து வருகின்றன. பிற வகைச் சங்கங்கள் அவற்றின் உறுப்பினர்களுக்கு பணி வசதிகளையோ அல்லது கடன் உதவியோ அளிக்கின்றன. இச்சங்கங்களுக்குப் பங்கு மூலதனம், கடன், உதவித் தொகை, இலவசமாக துறைப் பணியாளர்கள் சேவை ஆகியவற்றை அரசு அளித்து வருகிறது.

60. நிதி உதவி. — சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர்கள், தங் களுக்கென சொந்த வண்டிகளை வைத்துக் கொள்ள உதவும் பொருட்டு, சென்னையில் ஒன்றும், திண்டுக்கல்லில் ஒன்றுமாக சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டு ஏற்படுத்தப்பட்டுள்ளன.

1979-80-ஆம் ஆண்டில் மேலும் ஒரு சங்கத்தை ஏற்படுத்தி 30 உறுப்பினர்களுக்கு, 30 சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்குவதற்காக 0.51 இலட்ச ரூபாய் நிதியுதவி அளிப்பதற்கு திட்டமிடப் பட்டுள்ளது.

1979-80ஆம் ஆண்டில் மூன்று தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச சங்கங்களுக்கு, ஒவ்வொன்றிற்கும் 0.55 இலட்ச ரூபாய் வீதம் நிதியுதவி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், முடி திருத்துவோர் கூட்டுறவுச் சங்கம் ஒன்றுக்கு நவீன முடிதிருத்தும் நிலையம் ஒன்றை அமைப்பதற்காக 0.21 இலட்ச ரூபாய் வழங்கவும் சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச்

சங்கம் ஒன்றுக்கு நவீன உலர் சலவைப் பிரிவினை அமைப்பதற்காக 0.33 இலட்ச ரூபாய் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. ஒரு உப்புக் கூட்டுறவுச் சங்கத்திற்கு லாரி வாங்குவதற்காக ஒரு இலட்ச ரூபாய் வழங்க நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மேலும் இயந்திரங்களை நவீனப் படுத்துவதற்கும், குறிப்பேடுகள் தயாரிக்கும் பிரிவை அமைப்பதற்கும், கூட்டுறவு அச்சகங்களுக்கு உதவி செய்வதற்காக 16.68 இலட்ச ரூபாய் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

61. பெரிய அளவிலான பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் (LAMPS)— மலைச் சாதியினர் மிக அதிகமாக வாழ்கின்ற பகுதிகளில், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக ஒரே இடத்தில் கடன், விற்பனை வசதிகளுக்கும், ஏனைய ஒருங்கிணைந்த பணிகளுக்கும் வகை செய்ய, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சேலம், தருமபுரி, திருச்சிராப்பள்ளி, வட ஆற்காடு மாவட்டங்களில் மலைச் சாதியினர் வசிக்கும் பகுதிகளில் பெரிய அளவிலான பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒன்பது உள்ளன. தென் ஆற்காடு மாவட்டத்தில் கல்ராயன் குன்றுகளில், மலைச் சாதியினர் வசிக்கும் பகுதிகளில் மூன்று பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. மலைச் சாதியினரின் பொருளாதார நிலையினைக் கருத்தில் கொண்டு, இச்சங்கங்களுக்கு அரசு தாராளமான நிதியுதவி வழங்கியுள்ளது.

தமது கடன் வாங்கும் திறனைப் பெருக்கிக் கொள்வதற்காக, இப்பெரிய அளவிலான பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, ஒவ்வொன்றுக்கும், 50,000 ரூபாய் வீதம் பங்கு மூலதன உதவி அளிக்கப்பட்டுள்ளது. கடன் வசதிகளைப் பயன்படுத்திக் கொள்வதற்காக, பங்குகள் வாங்குவதற்கு மலைச் சாதியினர் ஒவ்வொருவருக்கும் 50 ரூபாய் வீதம் பங்கு மூலதன உதவி அளிக்கப்பட்டு உள்ளது. இப்பெரிய பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைமையிடங்களிலும், கிளைகளிலும் கிடங்கு-அலுவலகம்-சில்லரை விற்பனை நிலையம் கட்டுவதற்காக கடன் பாதி, உதவித் தொகை பாதி என்ற அடிப்படையில் அரசு நிதியுதவி அனுமதித்துள்ளது. சாதாரணமாக, சிறு விவசாயிகளுக்கு 10.5 சதவீதம் வட்டிக்கும், மற்றவர்களுக்கு 12 சதவீத வட்டிக்கும் கடன் கொடுக்கப்படுகிறது. இதற்கு மாறாக, மலை சாதியினருக்கு குறைந்த வட்டி வீதத்தில் அதாவது 4 சதவீத வட்டிக்கு உற்பத்தி மற்றும் நுகர்வுக் கடன்களைப் பெரிய அளவிலான பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்குகின்றன. குறைந்த வட்டி வீதத்திற்கும் இயல்பான வட்டி வீதத்திற்கும் உள்ள வித்தியாசத்தை அரசு ஈடு செய்கிறது. பெரிய அளவிலான பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு வண்டிகளும் வழங்கப்பட்டுள்ளன. நிர்வாக உதவித் தொகை, இழப்பு நிதி (Ri k Fund) உதவித் தொகை, மேசை-நாற்காலி உதவித் தொகை, வண்டிகளின் பராமரிப்புக்கான உதவித் தொகை, விலை ஏற்ற-இறக்க உதவித் தொகை

1979 மார்ச் 24]

போன்ற ஏனைய உதவித் தொகைகளையும் அரசு அனுமதித்து உள்ளது. பெரிய அளவிலான பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் நிர்வாக இயக்குநர்களாகப் பணியாற்றுவதற்கு 9 கூட்டுறவு சார்ப் பதிவாளர் பதவிகளுக்கு அரசு அனுமதி அளித்துள்ளது. இவர்களுக்கான செலவை அரசே ஏற்கிறது. தென் ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த கால்ராயன் குன்றுகளில் உள்ள மூன்று பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் இதைப் போன்ற உதவி அளிக்கப்பட்டுள்ளது. பெரிய அளவிலான பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கல்ராயன் குன்றுகளில் உள்ள மூன்று பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அரசு 1976-77 1977-78-ஆம் ஆண்டுகளில் முறையே 12.15 இலட்ச ரூபாய், 11.85 இலட்ச ரூபாய் உதவித் தொகை வழங்கியது. நான்கு பெரிய அளவிலான பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அரசின் உதவியுடன் எட்டுக் கிளைகளைத் திறந்துள்ளன.

62. ஒன்பது பெரிய அளவிலான பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும், தென் ஆற்காடு மாவட்டம் கல்ராயன் குன்றுகளில் உள்ள மூன்று பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் இதுவரை 13,391 பழங்குடியினரை உறுப்பினர்களாகச் சேர்த்துள்ளன. இச் சங்கங்கள் ஆற்றிய பணிகள் வருமாறு:—

ஆண்டு.		வழங்கப்பட்ட கடன்.	வாங்கப்பட்ட சிறுகாடு பொருட்களின் மதிப்பு.	விநியோகிக்கப்பட்ட விவசாயக் காரியங்களுக்குத் தேவையான பொருட்களின் மதிப்பு.	விநியோகிக்கப்பட்ட நுகர் பொருட்களின் மதிப்பு.
(1)		(2)	(3)	(4)	(5)
		(ரூபாய் இலட்சத்தில்).			
1976-77	..	9.10	0.20	0.06	0.38
1977-78	..	34.23	8.52	1.23	7.70
1978-79 (1978 டிசம்பர் வரை).	..	22.32	6.58	0.63	10.70

[1979 மார்ச் 24

63. தென் ஆற்காடு மாவட்டம், கல்ராயன் குன்றுகளில் உள்ள பல் நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூன்றையும் மசின குடியில் உள்ள மலைச் சாதியினர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தையும் ''தொல் 'பழங்குடியினர்'' திட்டத்தின் கீழ் பெரிய அளவிலான பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களாக மாற்றியமைக்கக் கருதப்பட்டுள்ளது.

கூட்டுறவுக் கல்வியும், பயிற்சியும்

64. அமைப்பு—இம்மாநிலத்தில் கூட்டுறவுக் கல்வி, பயிற்சி விளம்பரம் ஆகியவற்றை தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் கவனித்து வருகிறது. சென்னையிலுள்ள கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி, இடைநிலைப் பணியாளர்களுக்குக் கூட்டுறவுப் பயிற்சி அளிக்கிறது. சென்னையிலுள்ள மத்திய கூட்டுறவுப் பயிற்சி நிலையமும் மாவட்டங்களிலுள்ள ஏழு கூட்டுறவுப் பயிற்சி நிலையங்களும் இளநிலைப் பணியாளர்களுக்குக் கூட்டுறவுப் பயிற்சி அளிக்கின்றன. மாநில அரசு, மத்திய அரசு, மாநிலத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் உதவியுடன், கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரிக்காக சென்னையில் 47 இலட்ச ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் ஒரு கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது.

65. கொள்கைப் பரப்புதலும் விளம்பரமும்.—ஆங்கிலத்திலும் தமிழிலும், மாத இதழ்கள் வெளியிட்டும் விளம்பர காரியங்களுக்காக, ஊர்திகளைப் பயன்படுத்தியும் அகில இந்தியக் கூட்டுறவு வாரங்கள் கொண்டாடியும், நூலகங்கள் நடத்தியும் கூட்டுறவு பற்றிய நூல்களையும் சிறு வெளியீடுகளையும் வெளியிட்டும், மாநாடுகள், கருத்தரங்குகள் முதலியன நடத்தியும் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் தொடர்ந்து கூட்டுறவு இயக்கம் பற்றி விளம்பரம் செய்து வருகிறது. சென்னை வள்ளுவர் கோட்டத்தில் 1978 நவம்பரில் கொண்டாடப்பட்ட அகில இந்தியக் கூட்டுறவு வாரத்தில், சிறந்த முறையில் நற்பணி ஆற்றிய கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கேடயங்கள் வழங்கப்பட்டன. கூட்டுறவுச் சங்கங்களின் தனிச் சிறப்பு வாய்ந்த உறுப்பினர்கள் சிறப்பிக்கப்பட்டனர். மாவட்ட, வட்டத் தலைமையிடங்களிலும், பொதுக் கூட்டங்கள் நடத்தி, இந்த வார விழாக் கொண்டாடப்பட்டது.

66. கூட்டுறவு விளக்கத் திட்டம்.—நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்கள், நிர்வாக உறுப்பினர்கள், உறுப்பினர்களாக சேரக்கூடியவர்கள் ஆகியோர்கள் கூட்டுறவு பற்றி அறிந்து கொள்வதற்கான ஒரு திட்டம் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

1979 மார்ச் 24]

பொது.

67. தேசிய கூட்டுறவுக் கொள்கைத் தீர்மானம்.—1977, டிசம்பரில் புதுடில்லியில் நடைபெற்ற அகில இந்திய மாநில கூட்டுறவு அமைச்சர்களின் மாநாட்டில், 12 அம்சங்கள் அடங்கிய தேசிய கூட்டுறவு கொள்கைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானம், கூட்டுறவு இயக்கத்தை சிறு விவசாயிகள், ஓரளவு நிலம் வைத்துள்ள விவசாயிகள், விவசாய தொழிலாளர்கள், கிராமப்புற கலைஞர்கள், நடுத்தர, குறைந்த அளவு வருமானத் தொகுதியினரைச் சேர்ந்த எளிய மக்கள் ஆகியோருக்குப் பயன் படக் கூடிய தன்னாட்சி யுரிமையுடைய, தன் சார்புள்ள, அரசியல் ரீதியாக நடுநிலை வகிக்கக்கூடிய, ஒரு இயக்கமாக மேம்படுத்து வதற்கான முக்கியமானதொரு சாதனமாகும். இக்கொள்கைத் தீர்மானம், அலுவல்சாரா கூட்டுறவாளர்கள், அலுவல் சார்ந்த கூட்டுறவாளர்கள், மாநில அரசு, மற்றும் கூட்டுறவு நிறுவனங் களுக்கு நல் வழி காட்டுகிறது. இம்மாநில அரசைப் பொறுத்த வரையில் அநேகமாக கொள்கைத் தீர்மானத்தில் கண்டுள்ள அனைத்து அம்சங்களும் தற்போது செயற்படுத்தப்பட்டு வரு கின்றன.

68. தனி நடுவர் மன்றங்கள் அமைத்தல்.—தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 71-வது பிரிவின் கீழ் துறை அதிகாரிகளால் பிறப்பிக்கப்பட்ட சர்சார்ஜ் நடவடிக் கைகளை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்டு, பல்வேறு கூட்டுறவு நடுவர் மன்றங்களில் இது நாள் வரை முடிவு எடுக்கப்படாமல் இருந்த மேல்முறையீடுகள் குறித்து விரைவில் முடிவு செய்வதற் காக, அரசு 1978 மார்ச் திங்களில் சென்னையில் ஒன்றும், மதுரை யில் மற்றொன்றுமாக இரண்டு தனி நடுவர் மன்றங்களை சர் சார்ஜ் நடவடிக்கைகளை எதிர்த்து தாக்கல் செய்யும் மேல் முறையீடுகளை மட்டும் கவனிப்பதற்காக அமைத்தது. 1978 டிசம்பர் முடிய, இந்த இரண்டு நடுவர் மன்றங்களும், 582 மேல்முறையீடுகள் குறித்து முடிவு எடுத்துள்ளன. 31-12-1978-ல் 278 மேல்முறையீடுகள் நடுவர் மன்றங்களில் முடிவடையாமல் இருந்தன.

69. சட்டம்-விதிகள் திருத்தம்;—கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகத்தை ஒழுங்குப் படுத்துவதற்காக கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தையும் விதிகளையும் விரிவான முறையில் திருத்துவது பற்றி மாநில அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது. இது தொடர்பாக முன்னணி கூட்டுறவாளர்களின் கருத்துக்களை அறி வதற்காக 1979 சனவரியில் ஒரு கருத்தரங்கு நடத்தப்பட்டது.

70. தனி விசாரணைக் குழுவின் அறிக்கையின் மீதான தொடர் நடவடிக்கை.—நமது மாநிலத்திலுள்ள கூட்டுறவுச் சங் கங்களில் நடைபெற்ற தவறுகள் மற்றும் முறைகேடுகள் குறித்து விசாரணை செய்வதற்காக 1976-ல் அரசு அமைத்த தனி விசா ரணைக் குழு அளித்த அறிக்கைகளின்படி, 199 இனங்களில் சர் சார்ஜ் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இவற்றுள், 163 இனங்

களில் இறுதி முடிவெடுக்கப்பட்டு விட்டன. எஞ்சிய 36 இனங்களில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 95 இனங்களில் பாதிக்கப்பட்டவர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் வழக்குகளுக்கான தனி நடுவர் மன்றங்களிடம் மேல் முறையீடு செய்துள்ளனர்.

நாற்பத்தொன்று இனங்களில் குற்ற வழக்குத் தொடர்வதற்காகக் காவல் துறையிடம் புகார்கள் தாக்கல் செய்யப்பட்டன. இவற்றில், 17 இனங்களில் காவல் துறையினர் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்துள்ளனர். மூன்று இனங்களில் நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது. ஒரு இனத்தில் குற்றஞ் சாட்டப்பட்டவரை விடுதலை செய்தது. எஞ்சிய இரண்டில் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் தண்டிக்கப்பட்டனர். 14 இனங்களின் மீது நீதி மன்றங்களில் விசாரணை நடைபெற்று வருகிறது.

71. தணிக்கை.—இம்மாநிலத்தில் 1977-78-ஆம் ஆண்டுக்குத் தணிக்கை செய்யப்பட வேண்டிய கூட்டுறவுச் சங்கங்கள் 19,392 ஆகும். 20-1-1979 வரையில், 11,883 கூட்டுறவுச் சங்கங்கள் தணிக்கை செய்யப்பட்டு விட்டன. எஞ்சிய சங்கங்களின் கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டு வருகின்றன.

கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளை நடுநிலைமையுடன் சுயேச்சையாக தணிக்கை செய்ய வகை செய்யும் பொருட்டு மாநிலத்தில் உள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், நூற்பாலைகள் உட்பட எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளையும் தணிக்கை செய்யக் கூட்டுறவுத் தணிக்கைத் துறை ஒன்றை தனியாக ஏற்படுத்துவதென அரசு முடிவு செய்துள்ளது.

72. முடிவுரை.—இவ்வாறாக, பொதுவாக மக்களுக்கு, குறிப்பாக நலிந்த பிரிவினருக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பணிகளை விரிவாக்க அரசு எல்லா முயற்சிகளையும் எடுத்து வருகிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS